





பகவான் குரு ஸ்ரீ ஸ்ரீ காரைச்சித்தர்



சுவாமி ஸ்ரீ காரைசித்தர்



பகவான் குரு ஸ்ரீஸ்ரீ காரைச்சித்தர்

kala-desa-vartamāna
vasitvam
vastu
vega
vibhūti
  vibhūtimat
  vid
  vidya-avidya
vidyut
  vidyut vāhini
vignāna gaṇa
vimarsa
  savimarsa
  nirvimarsa
vipra
Vishnu
viveka
vrill—(Tamil vin)
vādita-avādita
Vāmakesvara Tantra
vān
Veda
  Rik-Sāma-Yajus - Atharva
  vedānta
  vid
vega
yagna
yōga
Yōga sāstra (Gīta)
Yōga sūtra (Patanjali)
yōgah citta-vritti-nirōdah
Yōgās
  rāja yōga
  haṭa yōga
  lampaka yōga
  jampūtaka yōga
  khaṭa yoga
Yōgās in Bhagavad Gīta
  Arjuna viṣada
  Sānkhya
  Karma
  Jnāna
  Karma sanyasa
  Dhyāna
  Gnāna - vignāna
  Akṣarabrahma
  Rājavidyā-rajaguhya
  Vibhūti
  Visvarūpadarsana
  Bhakti
  Kṣetra kṣetragnya-vibhāgha
  Gunatraya-vibhāgha
  Puruṣottama
  Devāsura-sampat-vibhāgha
  Sraddhātraya-vibhāgha
  Sanyāsa
Yōginī-hṛdaya Tantra
Yōga-aṣṭanga (8 steps of yoga)
  yama
  niyama
  āsana
  prāṇāyāma
  pratyāhārā
  dhāraṇā
  dhyānā
  samādhi
Yōga sthānās
  kunḍa
  mūlādhāra
  svādhiṣṭna
  maṇipūra
  anāhata
  visuddhi
  āgnā
  yugmani
  sōma-kanḍa
  lālana
  kāminī kunḍa
  catuṣ patha
  trikūṭa
  kailāsa
  tungastān
  brahma-nāḍi
  brahma-dvār
  kunḍalini
  kula-kunḍalini
  kulā - kula - kunḍalini
  akula-kunḍalini
  vajra-naḍi
  citra naḍi
yug—(to unite)

ஸ்ரீ.

இந்த புக் என்னிடம்
இருந்து தொலைந்து போனால்
எனது விலாசம்
வ: [illegible] குருக்கள்
[illegible]
[illegible] கோவில் - [illegible]
வலங்கைமான் [illegible]
எனது செல் நம்பர் -
9443528067
போன் செய்தால் நன்றி.

கனக வைப்பு

குருபகவான்
ஸ்ரீ காரைச்சித்தர்
144, புளியந்தோப்பு நெடுஞ்சாலை
சென்னை 600 012.
திரு. சக்திவேல் சுவாமிகள்
Cell: 9283104333
9940320642

சமர்ப்பணம்

திருக் கைலாய பரம்பரை என்றும்,
திருநந்தி தேவரது வரன்முறை என்றும்,
சிவ வித்தை என்றும், சாக்த நெறி என்றும்,
தவத்தின் முடிவான சகஜா னுபவத்துள்ள
சகல சித்தர்களுக்கும்
இந்நூல்
பக்தி பூர்வமாய்ச் சமர்ப்பிக்கப் படுகிறது

அட்டவணை

முன்னுரை

பாரத நாடு மிகப் பழைய நாடு, மிகப் பெரிய
நாடு, மிக மிகப் பெருமை வாய்ந்த நாடு: நாம் இந்
நாட்டவர்கள்; இதன் புகழில், பெருமையில், பண்
பாட்டில் பரம்பரையான பாத்யதை உடையவர்கள்.
இவ்வுரிமையை நாம் என்றும் மறந்துவிடக் கூடாது;
எனவே, பாரதியார் :—

> பாரத நாடு பழம் பெரும் நாடு
> நீர் அதன் புதல்வர் இந் நினைவு அகற்றுதீர்

என்று நம்மைத் தட்டி எழுப்புகிறார்.

சரி; இப்பழம் பெரும் பெருமை என்ன? அதன்
சிறப்பியல்பு யாது? மற்றை நாட்டு வரலாறுகளில்
மகா மன்னர்களைப் பார்க்கிறோம், மகா வீரர்களைக்
காண்கிறோம்; அரண்மனைகள், கல்லறைகள்,
கோட்டைக் கொத்தளங்கள், போர்க்களங்கள் முத
லியவற்றைச் சந்திக்கிறோம். ஆனால், நம் நாட்
டிலோ, உலகத்துக்கெல்லாம் உச்சியாக உயர்ந்த
இமயமலை இருக்கிறது.

> மன்னும் இமய மலை எங்கள் மலையே
> மா நில மீது இது போல் பிறிது இலையே

என்று பாரதி பாராட்டுகிறார். இமயமலையைப்
போலவே உண்மைத் தேட்டத்தில் உன்னதங்களுக்
கெல்லாம் உன்னதமான வேதங்களும், உபநிடதங்
களும் இருக்கின்றன.

> பன்னரும் உபநிட நூல் எங்கள் நூலே
> பார் மிசை ஏது ஒரு நூல் இது போலே

என்று பாரதியாரும் பெருமிதம் கொள்ளுகிறார்.

ஆம்: இந்நாட்டின் பெருமை தனிப்பட்டது;
வேறு எங்கணும் காணாத வியப்புடையது; இங்குந்
தான் மன்னர்களும், போர் வீரர்களும் இருந்தனர்;
ஆனால், அவர்களோடு அவர்களது அரண்மனைகளும்,
கல்லறைகளும், அரண்களும், போர்க்களங்களும் அடி

யோடு மறைந்து விட்டன எனி அவர்கள் கட்டிய ஆலயங்கள் அழியவில்லை; ட்டவனது திரு உருவங்களும், அவற்றைப் பாடிவர்களின் திருப் பாடல்களும்; அவ்வாலயங்களைந்த தர்ம சாலைகளும், தவச்சாலைச் சின்னங்களும்சாதன - அ அறநெறித் தூபிகளும் இன்றும் நம் நாகரிகத்தின் ஆணி வேர்களாய்த் திகழ்கின்றன. இவ்வாலயங்களுக்கும், அறச்சாலைகளுக்கும், ஆஸ்ரமங்களுக்கும் தானம் வழங்கிய வகையிலுள்ள செப்பேடுகள், சிலா ஸாஸனங்கள் முதலியவற்றின் மூலமாகவே, பெரும்பாலும், நம் நாட்டு மன்னர்களையும், அவர்களது வீரதீர வெற்றிகளையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

வேறு வார்த்தையில், இந் நாட்டுப் பண்பாடு வேந்தனையோ, வீரனையோ சிறுமை செய்யவில்லை; எனினும், வேதாந்தியை, துறவியை, ஞானியைப் பெருமை படுத்துகிறது: ''துறவிக்கு வேந்தன் துரும்பு'' என்று துணிந்து கூறுகிறது. இது கர்ம பூமி மட்டுமல்ல, 'தர்ம க்ஷேத்ரம், குரு க்ஷேத்ரம்', ஞான பூமி, தவத்தின் பிறப்பிடம், பக்தியின் இருப்பிடம், சித்திகளின் சேமநிதி, முக்திக்குக் கருவூலம். வேதங்கள், உபநிடதங்கள், தர்ஸனங்கள், இராமயண, மகாபாரத இதிஹாஸங்கள், ஸ்மிருதிகள், தர்ம ஸாஸ்திரங்கள், ஆகமங்கள், தந்திரங்கள், புராணங்கள் யாவும் மேற்கூறிய உண்மைகளின் அத்தாட்சிகளே யாகும். இந்நாடு வேத ரிஷிகள் முதல் மகாத்மா காந்தி வரையில் ஆயிரக்கணக்கான வருஷங்களாக அடுத்தடுத்து மகான்களையே உற்பத்தி செய்து வந்திருக்கிறது.

கண்டு அனுபவிக்கும் உலகம் பெரிதுதான்; எனினும், இதற் காதாரமான காண முடியாத கடவுளைக் காண்பதே வாழ்வின் பெரு நோக்கம். அக் கடவுட் காட்சியோடு இவ்வுலகத்தைக் காணும் போது இவ்வுலகமே சைதன்யமாக மாறிவிடுகிறது. ''நேதி-நேதி''—எனக் ''கண்டனவெலாம் அல்ல என்று கண்டனை செய்து கருவி கரணங்கள் ஓய'', தன்னில் தானே தன்னையே 'அஹம் ப்ரஹ்மாஸ்மி; 'ஶிவோஹம்', 'ஸோஹம்', 'ஸாஹம்' என்று

'ஸ்வாத்மாவை ஸர்வ பூதாத்மா'வான ஈஸ்வர சைதன்யமாகக் கொண்டு, அத்தெய்விகக் காட்சியிலே ''கண்டனவெலாம் மோன உரு வெளியது ஆகவும் கருதி''; 'அவன் நான், நான் அவன்' என்னும் ஐக்ய பாவத்திலே, அருட்பெரும் ஜோதி வள்ளலாரைப் போலவே,,

சிற்சபையும் பொற்சபையும் சொந்தமென தாச்சு
தேவர்களும் மூவர்களும் பேசுவதென் பேச்சு
இச்சமய வாழ்விலெனக் கென்னையினி ஏச்சு
என்பிறவித் துன்பமெலாம் இன்றோடே போச்சு

என்னும் மகா ஞான சித்தர்கள் இந் நாட்டில் எப் போதும், எங்கோ அங்கு மிங்குமாக இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுள் மிகச் சிறந்த ஒருவரே நம் காரைச் சித்தர்.

அடியாள், ஞான ஏணியின் அடியிலே, மண் ணிலே, காலை வைத்துக் கொண்டு அகண்டமான தெய்விக வானை அறிவற்றும் ஆவலோடு அண்ணாந்து பார்த்து வியந்து நிற்கும் சாதாரணமான ஒருத்தி; இரக்கம் கொண்டு எவரேனும் ஒரு பெரியவர் ஈஸ்வர சைதன்யத்திற்கு என்னைத் தூக்கிவிட மாட்டாரா என்று ஏங்கிப் பகற்கனவு காணும் பேதை. காரைச் சித்தரின் கனக வைப்பு என்னும் ஞான நூலுக்கு முன்னுரை வழங்க எனக்கு எள்ளளவும் தகுதி கிடை யாது. பொதுவாகச் சித்தர்களின் தமிழ் நடையே விசித்திரமானது; வெறும் வார்த்தை அகராதி களுக்கு வசப்படாதது; பரி பாஷைகள் மிகுந்தது; சிலேடைகள் செறிந்தது.

''வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசனி பூத்தது''

என்று ஞான சாதனத்தைப் பற்றித் திருமூலர் குறிப்பிடுகிறார்; இந்நூலிலும் இத்தகைய ''சூன்ய சம்பாஷணை''கள் (cypher language) அங்கங்கே வரத் தான் செய்கின்றன. எனினும், இந்நூலுக்கு முகவுரை எழுதும்படி என்னைப் பணித்தருளிய பெரியவர் மீதே முழுப் பாரத்தையும் போட்டுவிட்டு, அப் பணியை என்னால் இயன்ற அளவு நிறைவேற்ற முயல் கிறேன்.

இந்நூலுக்குச் சித்தர் நூல்களில் தேர்ந்த பயிற்சியுடைய பால பாரதி ச. து. சு. யோகியார் ஆங்கிலத்தில் நீண்டதொரு விளக்கத்தைத் தந்துள்ளார்கள். பேராசிரியர் பாஸ்கரன் அவர்கள் காரைச் சித்தரது ஜீவியக் குறிப்புகளுடன் கூடிய ஒரு சிறப்புரையையும் அளித்துள்ளார்கள். மற்றொரு ஞான சித்தராகிய சித்திலிங்க மடத்துப் பரம ஹம்ஸ ஞானானந்தகிரி ஸ்வாமிகளது ஆசியையும் பெற்றுள்ளது இந்நூல். இவற்றிடையே என்னுடைய முகவுரை 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெற்ற' தெனப் பயனுடையதாய்த் திகழும் என்று அடியாள் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

பக்தன், ஞானி, சித்தன்—பரிபூர்ண நிலையில் இம்மூவரும் முக்தர்களே. சாதாரண மனிதனது ஆசை தன்னையும், தன் குடும்பத்தையும் சுற்றியதாய்த் தீர்ந்து விடுகிறது; மனம் ஒன்றைவிட்டொன்றைப் பற்றியதாய் உழல்கிறது. ஆனால், பக்தனோ, ஞானியோ, சித்தனோ ஆசையற்றவர்கள்.

பக்தன் ஆண்டவனைத் தேடி ஆடிப்பாடி அரற்றிக் கடைசியில் அமைதி பெறுகிறான்; ஞானி நித்யா நித்ய விசாரணை செய்து, முடிவிலே, வேதாந்த வெளியிலே, ஜீவ ப்ரஹ்ம ஐக்யத்திலே சமாதி யடைகிறான்; சித்தனோ யோக நெறியிற் சென்று, ஆதாராதி முடிச்சுகளை யெல்லாம் கழற்றி, அகண்டாகாரமான ஸஹஸ்ரார சிகரத்திலே, அருளம்மையோடு ஒன்றாய், ஆண்டவனோ ஆண்டவனாய், ஸர்வ சித்திகளும் கைவரப்பெற்ற ஞான சித்தனாய் ஆனந்த நடராஜனைப் போல் அருட் செயல்கள் புரிந்து விளையாடுகிறான்; கண்ணனைப் போல் கருணை லீலைகள் செய்கிறான்.

சித்தி எனில் பயிற்சி முழுமை, திறல், விறல், வலிமை, சாத்யம், வெற்றி என்றெல்லாம் கூறலாம். சித்திகளில் பல வகை யுண்டு—மந்திர சித்தி, தந்திர சித்தி, யந்திர சித்தி, கரு மருந்து, சூனியம், ஜால வித்தை, கண்கட்டு வித்தை, சொப்படு வித்தை, எக்காள வித்தை, மோடி வித்தை, வஸ்யாதி அஷ்ட

கர்ம வித்தை—இத்யாதி எவ்வளவோ; இவைகள் யாவும் கர்ம வித்தைகள், வர்ம வித்தைகள்; இவைகளும் சித்திகளே என்றாலும் இவற்றைப் பயின்றவர்களெல்லாம் சித்தர்களல்ல, எத்தர்கள், தகிடு தத்தர்கள், கருமப் பித்தர்கள்—அவ்வளவே. பொதுவாக அஷ்டமா சித்திகள் என்னும் அணிமா, மகிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசத்வம், வசித்வம் என்பனவற்றையே நாம் சித்திகள் என்கிறோம். இவற்றையே சாஸ்திரங்களும் சித்திகள் என்கின்றன.

தானே அணுவும் சகத்தும் தன் நோன்மையும்
மாணுக் ககனமும் பரகாயத் தேகமும்
தானா வதும்பர காயம்சேர் தன்மையும்
ஆனாத உண்மையும் வியாபியு மாம்எட்டே

என்று சித்த முதல்வரான திருமூலர் எண் சித்திகளையும் விளக்கியுள்ளார். இவைகள் யாவும் கைவர வேண்டுமெனில் ஈசனருள் இல்லாமல் முடியாது; அதிலும் ஈசத்வமும் வசித்வமும் பரிபூர்ண ஞானியால் மட்டுமே அனுபவித்துக் காட்ட முடியும். அத்தகைய ஞான சித்தரே நம் காரைக் கோட்டை ஸ்வாமிகள்.

சிற்சில சில்லரைச் சித்திகள் கைவந்ததுமே சிலர் பெரிய ஞானிகளைப் போல் வேஷம் போடுகின்றனர். அத்தகையோரைப் பார்த்துத்தான் போலும் தாயுமானார்:—

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம் ஒரு சிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தணலி லிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம் அரிது.

என்றதோடு மட்டும் அமையாது,

> சினமிறக்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும்
> மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே

என்றும் எச்சரிக்கை செய்துள்ளார். நம் காரைச் சித்தரோ சித்தத்தை அடக்கிச் சிவத்திலே நிற்கும் பரிபூர்ண ஞான சித்தர்; லீலா மாத்திரையில் மட்டுமே சித்து விளையாட்டு விளையாடுபவர்.

> குரவன் அருளிற் குறிவழி மூலம்
> பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்
> தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
> பெரிய சிவகதிப் பேறெட்டாம் சித்தியே

என்ற திருமூலர் வாக்குப்படி சிவகதியில் நின்று 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்று திருவிளையாடல் புரிபவர். எதிலும் பற்றற்று, எப்போதும் புன்முறுவலுடன், தன்னுடைய சாந்நித்ய விசேஷத்தாலேயே சர்வமும் நடப்பதை சாக்ஷி பூதமாய் நின்று பார்த்துக் களிக்கும் ஸகஜ ஞானி.

'சித்திகள் சித்திக்கச் சிவனருள் வேண்டும்'; அருள் என்பது சக்தி, அவளருள் பெற்றார் அனைத்தையும் பெற்றார்.

> சித்திகள் எண்சித்தித் தானாத் திரிபுரைச்
> சக்தி அருள்தரத் தானுள ஆகுமே.

ஆம்; எல்லாப் பதவிகளினும் பெரிய பதவி அழியும் யாவற்றிற்கும் அப்பாலுள்ள அழிவற்ற அன்னையின் அருள். அவ்வருளின் நிதர்ஸனமான ஸாந்நித்யமே நமது ஸ்வாமிகள்.

இம்மஹான் 1918-ஆம் ஆண்டு திருவனந்தபுரத்திற் பிறந்தார்; எனினும் இவரது சொந்த ஊர் கும்பகோணத்தை அடுத்து, குடமுருட்டி ஆற்றின் கரையிலுள்ள நாகரஸம்பேட்டை என்னும் ஒரு சிற்றூராகும். சிறு வயதில் அவர் மன்னார்குடியை அடுத்த காரைக் கோட்டையிலுள்ள தம் அத்தை அகத்தில் வளர்ந்தார். அவரது தந்தை திரு கிருஷ்ணமாசாரியார், பெரிய படிப்பாளி; குடும்பத்தைரா இருந்தும் அதி வர்ணாஸ்ரமியாக வாழ்ந்தவர்.

அவருக்கு ஆண்கள் நால்வர், பெண்கள் இருவர் என ஆறு குழந்தைகள் பிறந்தனர்; அவர்களுள் இரண்டாவது புதல்வரே நமது ஸ்வாமிகள். இவரது அண்ணர் துறவியாக எங்கோ போய்விட்டார்.

சிறு வயதிலேயே நமது ஸ்வாமிகள் பலப் பல சித்துகள் விளையாடினராம். அவருக்குப் படிப்பு வரவில்லை, படிப்பில் ஸ்ரத்தையும் விழவில்லை. "விட்டகுறை தொட்ட குறை"—என்பது போல் சிறு வயதிலேயே சிவ சித்தராகும் சின்னங்கள் தோன்றிவிட்டன. ஸ்வாமிகள் சேகேறின வலுவுள்ளவர்; மல் யுத்தத்தில் விருப்பமோடு ஈடுபட்டவர்; அந்தணரா யிருந்தும் யாவருடனும் சரிசமானமாய்ப் பழகியவர்; எப்போதும், எல்லோருடனும் இன்முகமாகப் பேசுபவர்.

அவர் தமது பன்னிரண்டாவது வயதிலேயே வீட்டை விட்டு வெளியேறினர்; வட இந்தியாவில் இமயமலை வரையில் சுற்றித் திரிந்தார். மூன்று வருடங்கள் கழித்துத் திருப்பதி மலைக்காடுகளில் ஒரு வருஷம் கழித்தார். பின்னர் வீடு திரும்பினர்; தாயார் வேண்ட செள. சுலோசனு என்னும் ஒரு பெண்மணியை மணந்து கொண்டார். அவ்வம்மணி வள்ளுவருக்கு வாசுகி போலவும், வசிஷ்டருக்கு அருந்ததி போலவும், அவரது தெய்விகத்திற்கேற்ற தேவியாகத் திகழ்ந்தாள், திகழ்கிருள். இத்திருமணத்தின் மூலம் நம் ஸ்வாமிகளுக்கு ரேணுகா தேவி, ரவி குமாரன் என ஒரு மகளும், மகனும் உண்டு. மற்றவர்களைப் போலவே அவரது குடும்பத்தாரும் அவரது உண்மை நிலையை அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுகின்றனர்.

அவர் சிறிது காலம் அரசாங்கப் படைக்கலச் சாலை (arms factory) யில் வேலை செய்தார். ஆனால், ஒரு இடத்தில் கட்டுப்பட்டு அவரால் இருக்க முடியாது; மலையா, சிலோன், நாடுகளிற் சென்று சுற்றினர்; வட இந்தியாவைப் பல முறை வளைய வந்தார். அப்போது இமயமலையில், லக்ஷ்மண் ஜூலாவில் தமது குருநாதரைக் கண்டு உபதேசம் பெற்றார்; அன்று முதல், உலகிலிருந்தும் உலகத்தோடு ஒட்டாது உயர் நிலையில் நிற்கும் உத்தமச் சித்தராய், தமது அபார

என்றதோடு மட்டும் அமையாது,

> சினமிறக்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும்
> மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே

என்றும் எச்சரிக்கை செய்துள்ளார். நம் காரைச் சித்தரோ சித்தத்தை அடக்கிச் சிவத்திலே நிற்கும் பரிபூர்ண ஞான சித்தர்; லீலா மாத்திரையில் மட்டுமே சித்து விளையாட்டு விளையாடுபவர்.

> குரவன் அருளிற் குறிவழி மூலம்
> பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்
> தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
> பெரிய சிவகதிப் பேறெட்டாம் சித்தியே

என்ற திருமூலர் வாக்குப்படி சிவகதியில் நின்று 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்று திருவிளையாடல் புரிபவர். எதிலும் பற்றற்று, எப்போதும் புன்முறுவலுடன், தன்னுடைய சாந்நித்ய விசேஷத்தாலேயே சர்வமும் நடப்பதை சாக்ஷி பூதமாய் நின்று பார்த்துக் களிக்கும் ஸகஜ ஞானி;

'சித்திகள் சித்திக்கச் சிவனருள் வேண்டும்'; அருள் என்பது சக்தி, அவளருள் பெற்றார் அனைத்தையும் பெற்றார்.

> சித்திகள் எண்சித்தித் தானாத் திரிபுரைச்
> சக்தி அருள்தரத் தானுள ஆகுமே.

ஆம்; எல்லாப் பதவிகளினும் பெரிய பதவி அழியும் யாவற்றிற்கும் அப்பாலுள்ள அழிவற்ற அன்னையின் அருள். அவ்வருளின் நிதர்ஸனமான ஸாந்நித்யமே நமது ஸ்வாமிகள்.

இம்மஹான் 1918-ஆம் ஆண்டு திருவனந்தபுரத்திற் பிறந்தார்;எனினும் இவரது சொந்த ஊர் கும்பகோணத்தை அடுத்து, குடமுருட்டி ஆற்றின் கரையிலுள்ள நாகரஸம்பேட்டை என்னும் ஒரு சிற்றூராகும். சிறு வயதில் அவர் மன்னார்குடியை அடுத்த காரைக் கோட்டையிலுள்ள தம் அத்தை அகத்தில் வளர்ந்தார். அவரது தந்தை திரு கிருஷ்ணமாசாரியார், பெரிய படிப்பாளி; குடும்பஸ்தரா க இருந்தும் 'அதி வர்ணாஸ்ரமியாக' வாழ்ந்தவர்.

அவருக்கு ஆண்கள் நால்வர், பெண்கள் இருவர் என ஆறு குழந்தைகள் பிறந்தனர்; அவர்களுள் இரண்டாவது புதல்வரே நமது ஸ்வாமிகள். இவரது அண்ணார் துறவியாக எங்கோ போய்விட்டார்.

சிறு வயதிலேயே நமது ஸ்வாமிகள் பலப் பல சித்துகள் விளையாடினராம். அவருக்குப் படிப்பு வரவில்லை, படிப்பில் ஸ்ரத்தையும் விழவில்லை. "வீட்டுகுறை தொட்ட குறை"—என்பது போல் சிறு வயதிலேயே சிவ சித்தராகும் சின்னங்கள் தோன்றிவிட்டன. ஸ்வாமிகள் சேகேறின வலுவுள்ளவர்; மல் யுத்தத்தில் விருப்பமோடு ஈடுபட்டவர்; அந்தணனு யிருந்தும் யாவருடனும் சரிசமானமாய்ப் பழகியவர்; எப்போதும், எல்லோருடனும் இன்முகமாகப் பேசுபவர்.

அவர் தமது பன்னிரண்டாவது வயதிலேயே வீட்டை விட்டு வெளியேறினர்; வட இந்தியாவில் இமயமலை வரையில் சுற்றித் திரிந்தார். மூன்று வருடங்கள் கழித்துத் திருப்பதி மலைக்காடுகளில் ஒரு வருஷம் கழித்தார். பின்னர் வீடு திரும்பினர்; தாயார் வேண்ட சௌ. சுலோசனு என்னும் ஒரு பெண்மணியை மணந்து கொண்டார். அவ்வம்மணி வள்ளுவருக்கு வாசுகி போலவும், வசிஷ்டருக்கு அருந்ததி போலவும், அவரது தெய்விகத்திற்கேற்ற தேவியாகத் திகழ்ந்தாள், திகழ்கிருள். இத்திருமணத்தின் மூலம் நம் ஸ்வாமிகளுக்கு ரேணுகா தேவி, ரவி குமாரன் என ஒரு மகளும், மகனும் உண்டு. மற்றவர்களைப் போலவே அவரது குடும்பத்தாரும் அவரது உண்மை நிலையை அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுகின்றனர்.

அவர் சிறிது காலம் அரசாங்கப் படைக்கலச் சாலை (arms factory) யில் வேலை செய்தார். ஆனல், ஒரு இடத்தில் கட்டுப்பட்டு அவரால் இருக்க முடியாது; மலயா, சிலோன், நாடுகளிற் சென்று சுற்றினர்; வட இந்தியாவைப் பல முறை வளைய வந்தார். அப்போது இமயமலையில், லக்ஷ்மண் ஜூலாவில் தமது குருநாதரைக் கண்டு உபதேசம் பெற்றார்; அன்று முதல், உலகிலிருந்தும் உலகத்தோடு ஒட்டாது உயர் நிலையில் நிற்கும் உத்தமச் சித்தராய், தமது அபார

மான கருணைத் திறத்தால் யாவருக்கும் அன்பு காட்டி அருள் செய்யும் ஆண்டவராய், விருப்பு வெறுப் பற்று விளையாடும் வேதாந்த மகரிஷியாய் விளங்கு கிறார்.

அவர் அருளிய நூல் இது; இப்பாடல்களைப் படித்த பின் நம் உள்ளத்தில் தோன்றுவது யாது? நமது கண்முன் நிற்பவர் யார்? வெறும் மனிதரல்ல; உலகத்தினூடேயும், உலகத்திற்கு அப்பாலும் உள்ள உண்மை ஜோதியின் உருவகம் இது; அஞ்ஞான மாகிய அந்தகாரத்தை ஒழிக்கவந்த ஞான சூரியன் இது; காணமுடியாத கடவுளை நாம் காணும்படியாக முன்னிற்கும் தெய்வமிது. அவரைக் கண்டதும், அவரதுமொழிகளைக் கேட்டதும், அவரது பாடல் களைப் படித்ததும் 'தெய்வம் மானுஷ ரூபேண' என்ற படி மனித உருவில் வந்துள்ள தெய்வமாகிய அவரை வணங்கி வழிபடவே தோன்றுகிறது; அவரை வழி பட்டு, அவரது அருளில், அவ்வருளின்படி நிற்போமாக.

மேரு, சென்னை
5—9—1960.

எஸ். அம்புஜம்மாள்.

—

காப்பு

1

ஓமென்னு மைங்கரத்து முதலோன் பாதம்
உயர்பரனுக் குருவாம் குமரன் பாதம்
ஊமென்ன முன்னிற்கு முமையாள் பாதம்
ஊமையெழுத் துள்ளுயிராம் சிவனார் பாதம்
காமனையே பெற்றெடுத்த திருமால் பாதம்
கனகமணிச் சிரக்கோயிற் கவினைக் கண்டே
சேமமுறுஞ் சித்தர்பதம் போற்றிக் காரைச்
சித்தன்யான் வைப்புமுறை செப்பு வேனே.

2

ஊனெடுத்த பிணிபலவு மோடுங்கி யோடும்
உத்தமனே என்சித்தி யாவுங் கூடும்
மோனெடுத்த முப்பூவின் முறையுண் டாகும்
முன்வினையின் தொல்லையெலாம் முழுதும் போகும்
தானெடுத்த யோகநெறி தழைந்துண் டாகும்
தன்னைத்தா னறிந்திடவும் ஞானங் கூடும்
காணடுத்த சித்தர்பலர் கவடு சொன்னார்
காண்போர்க்கு வெட்டவெளி யிந்த நூலே.

3

சிந்திதரு சிறுவல்லி சிவகாமித்தாய்
சேகரத்தே மீகரத்தே சிறந்து நிற்பாள்
புத்தியினிற் கால்வைத்தாள் போதத் துற்றாள்
போக்குவர வில்லாத பூரணத்தாள்
பத்தினியாள் பழங்கிழவி யென்றென் றைக்கும்
பத்துவய தாகநிற்பாள் பரந்த வேணி
சித்தர்கள்தாய் சித்தமணிப் பீடத் துள்ளாள்
தேனியவள் வாலைப்பெண் காப்பே காப்பு.

———

குரு பரம்பரை வைப்பு

குருபகவான்
ஸ்ரீ காரைச்சித்தர்
144, புளியாந்தோப்பு நெடுஞ்சாலை
சென்னை 600 012.
திரு சக்திவேல் சுவாமிகள்
Cell: 9233104333

4

அப்பாடா முதற்குருநா னீச னீசன்
அதற்கப்பால் மாமாயன் வேதன் வேளே
ஒப்பான கணபதியே வேலோன் தானே
உருவான நந்திசன் இந்திரன் வாசர்
இப்பாரி லேமனுவாம் மதியாம் சந்த்ரன்
எத்தனையும் வைத்தகுபே ரன்ன கஸ்த்யன்
கொப்பான க்ரோதபட் டாரன் துர்வன்
கோத்தமும் மூர்த்தியுருத் தத்தாத் ரேயன்

5

மாஸ்பரசு ராமன்ஸ்ரீ ராமன் கண்ணன்
வளையான ஸ்ரீசக்ரன் லோப முத்ரை
கோல்கொண்ட மாதங்க னெனவே வந்த
குருநாதர் பரம்பரையைப் போற்றி போற்றி
எல்தவத்தா ரிருபத்தி யேழு சித்தர்
எண்ணறியா ரதியரே சந்த்ர சேனர்
வேல்தவத்து விசாரதர்கோ மங்கா பாலி
வினையறுத்த மந்தர்மாண் டவ்யர் பாதம்

6

பாஸ்கரனே சூரன்மணி கோஷன் சம்பு
பண்புறுசாத் விகன்லங்கன் நாளா னந்தன்
மிஸ்காரிந் திரன்கபிலன் வ்யாடி நாகன்
விருசுரா னந்தனுடன் நாக போதி
வாஸ்கரயா சோதர்கண்டர் காமா ஸிகர்
வராயிரர் கோவிந்தர் ஹரிலம் பன்னும்
ஸ்ரீஸ்வாமே கண்டராஸ வாத சித்தர்
ரேவடிக னோகப்பாய்ச் செப்பு வேனே.

7

செந்தமிழின் சித்தர்கணம் செப்பப் போமோ
சிவனுமையாள் நந்தனுடன் சேர்ந்தார் சித்தர்
அந்தரிலக் குப்பமுனி மகத்தி யன்தான்
அருமையுள்ள கருவூரர் ரவர்தான் போற்றி
விந்தையுள புலத்தியரின் பாதம் போற்றி
[illegible] பாதம் போற்றி
கந்தர்சிரன் கொங்கணவர் பாதம் போற்றி
நாமனை ஜேயகண்டி பாதம் போற்றி

8

விரும்பியதோர் சங்கரன்தாள் சந்தி ரன்தாள்
விரைமலராம் தேரையன்தா ளிடைக்கா டன்தாள்
குதம்பைமுனி யக்கோப்புப் புண்ணாக் கீசன்
குருபாத மென்நம்பி நம்பி யாழ்வார்
அரும்பரமும் நக்கநா ஏர்த்தி யாண்டான்
ஆவடிய சறுபந்தி மூவர் பாதம்
பெரும்பெரியா ரகப்பேயார் யருளின் ஜோதிப்
பேச்சறியாக் கோதமனார் மருளை நீக்கும்

9

பாம்பாட்டிச் சித்தர்பதம் சிரமேல் வைத்தேன்
பதுநீக்கும் கடுவெளியார் கமலன் கைலே
விம்பாக்கும் வான்மிகன் நவகண்டத் தான்
விறியதா தாந்தர்ஜம தங்கை நாதந்
கூம்பாக்கும் நாதமுனி பரிமின் சோதர்
குருபுகண்டர் சுதாமுனி நதம்பைச் சித்தர்
ஆம்பாக்கி யங்கள்தரும் போகர் மச்சர்
அதிசட்டர் ரோமரிஷி ராம தேவர்

10

நந்தீசர் திருமூலர் நம்மை யாண்டான்.
நாடரிய காலாங்கர் நவிமா லாங்கள்
தொந்தமறும் தன்வந்திரி சுதமா னந்தின்
தொல்லைதரு மல்லைகற் றிங்கல் லாடர்
பந்தமறுங் கல்லுளியார் விளையாட் டகர்
பரநின்ற கோரக்கர் அழுகண்ணி ணிச்சர்
விந்தைதமிழ் தந் மாமுனியார் பதஞ்ச லிப்பர்
வியாக்கிரப் புடிமுனி ஈசு தேவர்

11

புலிப்பாணி மருணகிரி பட்டி னத்தர்
புனையற்ற வெணணியுடன் நாயு மாறும்
கேலிமான சித்தமருந் காசிப காசிபம்
கேடியாக வேலவர்தம் கவ்யு கேதத்தும்
தெரிவியல சித்தர்க ளாட்டம் மாறும்
துக்கமுறும் தெய்வங்கள் தேவி மார்கள்
வலிமான தேவதைகள் யந்த்ரம் தந்த்ரம்
மந்திரங்க ளனையாவும் போற்றி போற்றி

வேறு

ஆதியிலே தில்லைநக ரதனிலே திருமூலர்
அழகர்மலை ராமதேவர்.

ஆனந்த சயனத்தி லேகும்ப மாமுனிவர்
அருணையி லிடைக்காடரே

வாதவைத் தீஸ்வரன் கோயிலிற் றன்வந்த்ரி
வான்மீக ரெட்டிக்குடி

வாகான மாயூர மதிலேகு தம்பையயர்
வடகாசி நந்திநாதர்

பாதசெங் கமலைதிக ழாரூரில் கமலமுனி
பழனியிலே போகதேவர்

பரங்குன்றி லேமச்ச முனிவேங்க டத்திலே
பார்புகழும் கொங்கணர்தாம்

சேதுரா மேஸ்வரம் தன்னிற் பதஞ்சலி
திருப்போரூர் கோரக்கரே

திருமதுரை யிற்சுந்த ரானந்தர் கடையூரில்
சிறந்த பாம்பாட்டியே

வேறு

பாரறியக் கருவூரிற் கருவூர்ச் சித்தர்
பலப்பலவாத் தலந்தோறும் மூர்த்தி தீர்த்தர்

சிருநவாய்த் தெய்வமெனத் தேவி யென்ன
நிகழ்வேதா கமத்தினுரைச் செவ்வி யென்ன

நேருநவாய் நிறையுநவாய் நிலைக்குந் தூக்க
நிலையுநவாய் அனைவரையும் வாழ்விக் கந்தான்

ஆருநவா யானந்த மயமாய்ச் சித்தர்
அருளுநவாய் வந்தார்கள் அவர்தம் பாதம்

14

பற்றறியாப் பற்றகப் பற்றிக் கொண்டோம்
பாரறியாப் பூரணத்தின் முற்றிக் கொண்டோம்

ஒற்றியூர்ப் பட்டினத்தா ரொன்றி நிற்கும்
உயர்குருவாம் சிவலிங்கத் தொளியைப் பெற்றோம்

10

நெற்றிக்கு நேராகப் பிடறிக் கண்ணின்
நிலையான ஜோதிநித்ய தீபங் கண்டோம்
அற்றற்றேரும் சித்தர்களைப் பணிந்து கொண்டோம்
அண்டாண்டத் தாந்தாளைப் போற்றி போற்றி.

———

பீட வைப்பு

15

அகமிருந் தவர்கந் நகமெரிந் திலரே
அகமகிழ்ந் தவர்கந் நகமெரிந் தவரே
அகநிறைந் தவதன் னகமதே தங்கம்
அகிலம்யா வுஞ்சொந் தம்மெனும் பொங்கம்.

16

தீரமுள் ளோர்க்கே வீரமது கட்டும்
வீரமுள் ளோர்க்கே பூரமது தட்டும்
வாரமில் லார்தே வாம்மின் வாரம்
காரமில் லார்க்கே சாரமது சாரம்.

17

ராதரஸ விந்து சிலையுங் கவிந்து
பாதரஸ காந்தம் பார்க்கமிக சாந்தம்
வாதமது சொந்தம் தாதுமிக மந்தம்
வேதமிதை ஓதி வாதமிக ஆது.

18

தாகமதை வெட்ட நாகமதைக் கட்ட
வேகமிக எட்ட விரியும் ஒட்டப்
பாகமதை நாட்டப் பத்திரமுங் காட்ட
யாகமதை வேட்டு காகமதைக் கூட்டே.

19

நாடியது நீடும் பாடியது கூடும்
பாடியதும் ஆடும் ஆடியது மூடும்
சாடியதும் ஓடும் நாடு நடு நாடும்
வீடுமது தேடும் மதிநிலை நாட்டே.

வேறு

காயமும் தங்கத் தலமதும் சிக்கத் தயவே காக்க
ஞானமே மிக்கக் ககனமே சொக்க நடுமுனே துக்கப்
பக்கமே ஓடப் போக்கவே [illegible] போக்கத்
தக்குத கூக கூதகூ தக்கூ தக்குதக் கூகூ.

2

வேறு

4 உப்புக் கூடு முப்புக் கேடு மப்புக் காடு
அப்புப் பூடு ஆநிக் காடு ஆப்பைக்கோடு
தப்புத் தேடு தகிடுந் தோடு தக்கை மூடு
டப்புட் டாடு டகடட் டுடு டடுட் டுடு.

வேறு

காட்டு மலர் தொட்டுக் கான் தொட்டி லாட்டி
வாட்டி மலர் சூட்டி வா ளமுரி கூட்டி
ஏட்டி லவள் திட்டி எற்றி யது காட்டி
கூட்டி னுளே கண்டார் கூற் றினையும் வென்றர்

வேறு

இயம்புகிறேன் செங்பொன்னுக் கோவ்ப தாகும்
இணைந்துவருந் தோழிக்கு வயது நாற்பான்
நயம்புதிய குடத்தலையான் பூசை ளத்துள்
தாடிவடிந் திட்டதுவே வாத மாதும்
அயம் பொன்னும் ராதந்தின் பதத்தைப் பார்த்து
ஆக்கியளித் திடுவோரை அவனி யுள்ளோர்
இவன்பெரியன் மிதஞானி வாதங் கண்டோன்
எனப்போற்றிப் பாதத்தில் வணங்கு வாரே

வேறு

இலங்கைபா ளியோமா ளிலக்கமே ராமன்
ராமனுர் பாதம் ரஸலோசம் வீரம்
சவ்விரம் சவ்வாது சார்ந்துவரும் கோக்கள்
கோக்களிடைக் குன்றோறும் கோமகனும் பாலன்
பாலனவன் பாடிபதோ காலமி லங்கம்
[illegible] வேலன்
ன்னென்னும் முடியேறி மன்மகிழ வைதே.

வேறு

வேதமறி யொளிசுருதி விதிநியது பாதி
பாதிமதி பதஞ்சலி பணிநதியின் சேதி
தாதியவள் தாளில்வீழ்த் தருவள்மிகு மதி
கோதிவிலை கூறிவிடு கூத்தியவள் ஜாதி

26

சாதிமிகச் சோதியுண்டு ஓதிவந்தார் பண்டு
ஏதில்வங்க மதில்வழுதி யிலைப்பாதி யுண்டு
நாதியெனும் நாரணன்தான் நமக்கார முண்டு
காதமிலாச் சோதியதைக் காணுதே கண்டு.

வேறு

வரநெறி யறியா வானரங்கள்
 வைகடம் தேடி யலைவதுமேன்?
புலநெறி யறியாப் புரிமாந்தர்
 போக்கிடம் தேடிப் புலம்புவதேன்?
உளநெறி யடக்கி யாண்டல்லோ
 உயர்வை யாத் துறுவதெலாம்?
வெறுநெறி விட்டால் வேதையெலாம்
 விந்துத் தன்னை விளையாடும்.

வேறு

தத்துவங்க ளறியாத தறுதலைகள்
 துறைதேடி யலைவார் வினை
உத்தியுறுந் தவமில்லா உயிர்ச்சலங்கள்
 உலைவதற்கு முடிவார் கோடி.

29

கணநாதர் நாமத்தினையார் குணநாத மில்லாதார்
 கயவர் கோடி.
மனிதருக் கடுகட்ட மணிகட்ட லிங்கத்
 மடையர் கோடி.

வேறு

எச்சிலை நாடும் பச்சிளம் பாலர்
பச்சிலை நேடுவதேன் ?
மச்சுமே லேறி யுச்சிமேல் நிற்பார்
வச்சிர ஞானியரே.

31

ஊன்நிலை மாறித் தான்நிலை கண்டார்
உயர்தவம் செய்தாரே
வான்நிலை கண்டே மன்நிலை நின்றே
வானவ ராவாரே.

32

வழியறி யாதார் குழிவிழுங் குருடர்
கழிபடும் மாந்தர்களோ
கழிபடும் மாந்தர் அழிவதை எண்ணிக்
கருணைகொள் வதுமேறே ?

வேறு

படித்தே ஒளித்து மறைத்தே பதுக்கி
மனத்தே ஒடுங்கி நின்றாலும்
துடித்தே உணர்ச்சி துளித்தே கிளர்ச்சி
துணித்தே வெறித்தும் அடங்காது
வடித்தே புலனை விடுத்தே பிறையவர்
பிடித்தேன் பிடித்தேன் என்றாலும்
அடுத்தே யெவையும் தொடுத்தே இயற்றும்
அலைத்தே மாயை யறியாயோ.

வேறு

பவ மற்றவர்
நவமுற்றவர்
அவ மற்றவர்
சிவமுற்றவர்

35

போக மற்றவர்
போகமுற்றவர்
சோக மற்றவர்
சோகமுற்றவர்

வேறு

காம மற்றதே காயம்
நேமமற்றதே நேயம்
வாம முற்றதே வானம்
ஓம முற்றதே ஞானம்

வேறு

ஊன மற்றதே உன்மனி யாகும்
மோன முற்றதே முன்மனி யாகும்
வான முற்றதே மன்மனி யாகும்
கோன நந்ததே துருமனி யாமே.

வேறு

மனமுருகி மெய்விளக்கிக் கண்ணீர் மல்கி
மதிவிளக்கி மதியமிர்தத் தருந் ராகி
புனமுருகப் புன்முறுவல் பூத்தேன் வெம்மைப்
புதிராய்ப் புவிமிதில் நவலோ கத்தும்
கனமுருகும் கன்னிராய்க் கன்னி ராகிக்
ககனமெலாம் கதிருருட்டும் ஒளிநீ ராகும்
தனையுருகத் தமக்குள்ளாம் உன்னி யென்றே
தானவனைப் புணர்ந்திட்டான் தானே யோகி

39

வல்லவினைத் தொல்லையெலாம் மாற்றப் போக
வழிவகுத்தான் கும்பமுனி மகத்தி மந்தான்
வல்லதொரு போகநத்தும் போக மாக
மாகித்தான் போகமுனி யார்க்கும் தொன்றுக்
வல்லமையாம் சொல்லுக்குள் சொல்லை வைத்த
வனநவமும் [illegible]
வல்லதொரு மூலத்தைப் பாலம் போட்டு
வகைசெய்தான் திருமூலச் சித்தன் தானே.

40

தாமென்றும் தனதென்றும் தனக்குள் ளாகத்
   தனையடக்கித் தண்டவிடும் தகுதி யுள்ளோர்
வாமென்றும் வாமியபி ராமி யென்றும்
   வாதமில்லா வேதமதை யோதிக் கண்டார்
ஓமென்றும் உட்பொருளி னுளவைக் கண்டார்
   ஊமையெழுத் துக்குள்ளாம் உணர்வைக் கண்டார்
தாமென்ன வாதமிடச் சாத மாகும்
   தனதனவென் றேதங்கத் தழலு மாகும்.

41

அந்தானே அதிலதிலே யனைத்து மாகும்
   அத்திப்பா லரைக்கிரை வித்தைத் தள்ளிச்
சத்தார மதைச்சொன்னேன் தாமம் சொன்னேன்
   தான்சுத்த ஜலம்சொன்னேன் தழைவும் சொன்னேன்
முத்தார மண்டபிண்டச் சுன்னம் சொன்னேன்
   முப்பூவின் முறைசொன்னேன் முழுதுஞ் சொன்னேன்
சித்தான திருமூலச் சிறப்பும் சொல்வேன்
   செப்பரிதாம் மெய்ப்பொருளைச் செப்பு வேனே.

42

கடைய னென்றே கழறிடுவே னுயி னேனே
   கடைவிரித்த கடையெல்லாம் கடையாய்ப் போகக்
கடையிலே காலன்வந்து கதுவர் முன்னம்
   கடையெழுத்தா மூமந்நான் கருவைக் கண்டேன்
கடையிலே பிரமாண்டக் கூடத் தப்பால்
   கடைநின்றார் சதகோடிச் சித்தர் கூட்டம்
கடையனேன் வளர்தமக்கு னொருவ னாகக்
   கரைநகர்ப் பீடத்தைக் கட்டி னேனே.

ஆன்ம வைப்பு

43

மாளாத சக்தியடா மனிதன் சக்தி
   மலிவாகக் கிடக்குதடா மனத்துக் குள்ளே
மீளாத மார்க்கமடா மின்றுத் தானே
   மேவியுனக் குட்காணும் வேதை மார்க்கம்
ஆளாக வென்றேனு மெப்போ தேனும்
   அனைவர்க்கும் கிட்டுமடா ஞானப் பேறு
தூளாகக் காமத்தைத் துரத்தி விட்டே
   துணையாகக் கம்பத்தே தூங்கு வாயே.

44

தூங்குவாய்ச் சாமத்தே விழித்துக் கொண்டு
   தூங்காமல் தூங்கிவெறுந் தூக்கம் தன்று
நீங்காமல் நியமத்தே நிறைந்து நின்று
   நிலமான சமத்தைச் சுத்தம் செய்தே
ஆங்காரச் சாதியெலா மகற்றிப் போடு
   அன்பாக வாதித்தே விரட்டிப் போடு
பாங்காக ஆதித்தன் துணையாய் நிற்பான்
   பண்பாகப் போதித்தேன் சாதிப்பாயே.

45

குப்பையிலே பூத்திருப்பாள் மின்மி னுக்கிக்
   கோலத்தே பொன்மேனி கொண்டு நிற்பாள்
தர்ப்பையிலே சிவப்பான தழலைப் போல்வாள்
   தனக்குள்ளே சர்ப்பந்தான் சரண்புக் காடும்
அர்ப்பையடா சகவாசம் அணைந்து தொட்டால்
   அனைத்தையுமே யரித்திடுவான் சலித்துக் கொல்வாள்
கர்ப்பையிலே தான்பிரித்துக் கன்னி வைத்தே
   கனவாதம் செய்திட்டார் சித்தர் பல்லோர்.

வேறு

பற்று வரவுக் கணக்கேது?
பாரில் சித்தர் செய்கைக்கே

விற்று முதலாம் விளைவேது?
வின்னுறுஞ் சித்தர் விறலுக்கே

வற்றிப் பாயும் வழக்கேது?
வளமாஞ் சித்தர் வழிகளிலே

நிற்கி நினைத்தல் [illegible]
நினை வற்றுமிலா போதமடா.

வேறு

சித்தர்மனம் மலர்ந்திட்டா லதுவே போதும்
  செத்துவெறும் விளையாட்டும் சித்தி யாகும்
சுத்திஎனும் பனைத்துத்தி மிலையின் சாற்றில்
  சுரிசுறுத்துந் தவஞ்செய்வர் தவத்தின் போக்கில்
வித்திதெனும் விந்துவுடன் நாதங் கூட்டி
  வேதமுழுங் கிடனுளை விறு கொண்டே
சுத்தமறந் தாறெறிந்கத் தூய்மை பெற்ற
  சுப்புறவே சித்திக்காம் துறவு கோலே.

48

ஓமென்று மோரெழுத்தோன் ப்ரம்ம ஞானி
  ஓர்ந்துகொளு மறுவழிக ஞானக்கக் கேளாய்
ஓமென்ன வோதுகின்ற ரேது விப்பான்
  ஓமென்ன வேலேட்பான் வேட்மிப் பானே
ஓமென்ன வேயிவான் ஏற்பான் பின்னே
  ஓயல்விந்த் துலகோம்பி யுண்மை கூறி
ஓமென்னப் பகளைர்ப்பான் மனத்துக் குள்ளே
  ஓமென்ன ஓங்கிநிற்பா றென்றே யாவான்.

வேறு

நாவற் கடுக்காய் நெல்லிக்காய்
நல்லா லாட்சி யுடன்நாவ்ற்றி
மேலைக் கொடுப்பாய் நாத்தியடா
மென்மேல் முத்தக் காசித்தி
கோலக் துளிமந் துளிமேனி
கொள்ளுங் காய கல்பமிதே
தேவக் நலமா லமுதமிதே
திருவு ற்றிநற் சேதியிதே.

வேறு

நாக்குளம் விட்டு நாலன்றை பெற்றே
  தலைமுடை மீச அடியாறிநல் வேண்டும்
மிக்குயரும் பழச்சாற்றி லேகுளிந்து விட்டே
  வில்வந்தி அடியிலிலை விருந்துண்ணா வேண்டும்

3

ஆக்கமுறப் பற்றுவிட லோடுதவம் பற்றல்
அருள்நினைவாம் முக்குணங்க ளவையமைய வேண்டும்
பாக்கியமாம் திருக்கோயி லவைபணிதல் மற்றும்
பரமவுப காரமெனும் நயையுடனே தானம்.

வேறு

பயனில்லாச் சொல்லகற்றிப் பயனே கூறல்
பயனதையு மினிதான பழமாய்ச் செப்பல்
நயனில்லாக் கடுவழிக ளவைவிட் டோடல்
நாட்டமெலா மருள்நாட்ட மாகக் கொள்ளல்
அயனில்லா தேவையுந்தா னுகக் காணல்
அத்துணிதத் தாலின்பச் சித்தம் பேணல்
இவையெல்லா மருங்குணமா மிசற் கன்பாம்
இடர்நீக்கிச் சுடர்காட்டும் நியமந் தானே.

வேறு

குருவினடி யல்லாமல் கருவுந்தான் தருவாகா
மருவிலருள் அல்லாமல் உருவுந்தான் திருவாகா
உருவேதான் தருவானு லுளதெல்லாம் சித்தேகாண்
மருவுண்டே பிறவித்தை மருவில்லான் தருவேகாண்

53

அகமதினை நினைத்திட்டா லங்கதுவே யகன்மாவாம்
அகமதிலே காணுக்கா லகிலமதில் யாதுமங்கே
அகமதிலே கண்டாக்கா லகிலமெலாம் மாயையடா
அகமின்றிப் புறமொனு மிகமதுமே பெரிதாகும்.

வேறு

ஏகமதில் ஜெகமெல்லாம் பலவாத் தோன்றும்
யூகமதி லான்மாவோ வொன்றாய் நிற்கும்
போகமதி லருளில்லை யருளு மில்லை
யோகநிதித் திருவான்மா வொன்றே யென்றும்.

16

55

தன்னையறி யாவிறைவன் தன்னைக் காணான்
தண்ணியிலாத் தாமரையும் சாம்பிப் போகும்
தண்ணீரிலாத் தாமரையும் சாம்பல் போலத்
தன்னையறி யான்போகத் தவழு மாகும்.

56

சாகாத கால்வேகாத் தலையுங் காணு
மேகாத மோனத்தே விளங்கு மான்மா
போகாதே வாராதே புசித்தி டாதே
ஆகாதே யழியாதே அனைத்து மான்மா.

57

தாமித்ரி சேதித்ரி சாதித் தல்லோ
காயித்ரி சாவித்ரி வேதித் தல்லோ
மாயித்ரி மாலத்ரி வாதித் தல்லோ
ஆயத்ரி காலத்து மனைவை தான்மா.

58

ஆதிநடு முடியில்லா வநாதி யாகி
வேதமொழி யதுகாணு வேத மாகி
பேதமபே தங்கடந்த போத மாகி
நாதமுடி நாதமதாம் மோன மான்மா.

59

நினைவினிலே நினைவுநாம் நினைவு மாகும்
நினைவொன்றும் நினையாத நினைவு மாகும்
நினைவின்முடி நிலையந்தே நிறைவு மாகும்
நினைவுந்தனை தனையவனை நெறியு மாகும்.

வேறு

புழுக்குன்றம் தோல்போர்த்த புன்மை யாக்கைப்
பொய்யிருக்கன் மெய்யாகும் பொற்பே யான்மா
அழுக்குன்றும் பேய்மனத்தி னுபா சத்தே
அழுக்கில்லா குறியில்லா தனைத்த தான்மா
பழிக்குன்றப் பாவியுள்ளும் சாட்சி யாகப்
பார்த்திருக்கும் காத்திருக்கும் பதியே யான்மா
[illegible] கதியாம் சதும்
கலமாற் தனிநிற்கு கதிரே யான்மா.

61

ஆதியுட னந்தமா யந்த யாதி
யாதுமிலாச் சோதியா யநாதி யாகி
ஓதியுரை காறவுள் ளொளியு மாகி
ஒன்றாகி யொன்றென்றி லொன்றென் றாகி
வேதமுறும் வேள்வியிலே விண்ணும் மண்ணும்
விரிவாகி யாதுமை நீக்கி யாகின்
போதநெறி கொண்டவளச் சிமை யுள்ளோ
பூரணமாங் காரணமாய்ப் பொலிவ தான்மா.

62

எண்குணங்கள் வேண்டுமடா யிறைவன் றன்னே
என்றென்று மான்மாவோ டிணைப்ப தற்கே
விண்குணங்கள் வேண்டுமடா விளக்க மாக
வெளியிநட்டி லான்மவொளிக் களியுள்ள டாகப்
பெண்குணமா மனுஜையிடம் பிரியம் வேண்டும்
பெருந்சாந்தி யுடன்சௌசப் பெருமை வேண்டும்
உண்குணங்கள் உருவாகி ஒளியாய் நின்றே
உயர்வாகி வெளியாகு லான்மா சித்தி.

மணி வைப்பு

[illegible]
மணியைக் கண்ட பின்னன்றோ ?
மணியின் நாதம் கேளாமல்
மணியுள் மணியைக் காண்பாரோ ?

64

உட்பொரு ளான மெய்ப்பொருளின்
உண்மை கண்ட பின்னன்றோ
பொய்ப்பொரு ளான லோகத்தின்
பொன்பொருள் காண வல்லாரே ?

வேறு

சித்தரெலாம் உண்மைதனை மறைத்தா ரென்றே
செப்பிமனம் பல்துடிக்க வேண்டாம் சொன்னேன்
சித்தர்மொழி நூலதனைத் தொட்டபோதே
சித்தரெலா மொற்றெனச் சேர்ந்து நிற்பார்
சித்தமுறுங் குணநிறைவில் நாட்டம் கொள்வர்
சிறிதழுக்கைக் கண்டாலும் விலகிப் போவர்
சித்தநிறை வுள்ளவர்க்கே சித்தி தோன்றும்
சித்தமிலார் வித்தையெலாம் சிரிப்பே கண்டீர் !

66

விந்துவுடன் நாதமதும் சேர்ந்த வேதை
விந்தையதே வாதம்செய் வித்தை யாகும்
கந்தமுறும் வாலைரசம் வாதத் திற்காம்
கட்டுடைய தாதுரசம் போகத் திற்காம்
பந்தமறப் பூநாக லவணச் சுன்னம்
பரிதிமதி வன்னியெனும் முப்பூக் கூட்டிச்
சிந்தையுற வங்கமென்றும் சிங்க மென்றும்
சிவாசி தனையடக்கிச் சுழுனை நாட்டே

67

நாட்டுநவச் சாரமெனும் சாலந் தன்னை
நவநாத சித்தாக்கி நாதொன் றேறிப்
பூட்டிநிற்கும் தனையறிந்து போத முற்றால்
[illegible]

ஊட்டிநிற்கும் உப்பிலிடக் கட்டிப் போகும்
உவர்களத்தில் மூன்றுவகை உப்பும் கட்டி
மூட்டுதழல் தனிற்சாய வெரித்து மூட்டி
முடைநீக்க முப்பூவின் தனிமைக தானே.

68

வாசிபெறும் பரியதனை யிழுத்து வாங்கி
வாயில்நடு வேசெலுத்தி மனக்குதம் ஏகி
மாசறியா வெளியுடன் மதனைப் போகம்
மாண்டதென்று நுகத்தார் பாடை கட்ட
ஊசிவிழும் ஊனுடலம் நீக்க மாகி
உம்பருல கோடுறவாம் நகை மரக்கத்
தேசொளியாம் சித்தாந்த நிருவே கண்டீர்
செப்பரிதா மாகாய கமனம் கண்டீர்.

வேறு

ககனமதில் நடனமிட வேணுமெனி வேண்டும்
கருதிச்சை யாங்கடலைக் கடந்துலா வேண்டும்
அகமுகமும் அறநெறியின் அருளுற வேண்டும்
அவைமுடிய முடியிலாரும் அதையுரைசெய் கின்றேன்.

வேறு

திறையுடனே சொல்லுகிறேன் மடம் கேளாய்
தெறியறிந்து தக்கபடி நூட்டைப் பூட்டே
குறையறியாப் பூரணத்தைக் குறையில் வாசக்
கோத்தெடுத்தும் குறையாத மிகுக் காட்டி
சிறையறியா வசிநனை மிட்டு போட்டுச்
செய்தினுனே போகமூ ரத்தை வாங்கி
மறையறியாப் பத்துவகை நாதம் கேட்டுப்
பற்றிடுவாய்க் ககனமணிக் குளிகை தானே.

வேறு

சகசன வேண்டும் ககனம வேண்டும்
சற்குரான் டானக்கள் பலவே

சதிமதி யென்றும் விதிகதி யென்றும்
சதிசெய்கா மிண்டர்கள் பலபேர்

உளதில தென்றும் உருவரு வென்றும்
உளறிடும் உலுத்தர்கள் பலபேர்

உங்குவங் கென்றும் அங்குசங் கென்றும்
உத்திசொல் லெத்தர்கள் பலபேர்.

72

சண்டிகா முண்டி தண்டியுந் தண்டி
சர்சவா விடுபவர் பலபேர்

தண்டிகை மானம் குண்டிகை கொண்டே
குண்டிகோ வணமிலார் பலபேர்

கண்டிகை காவி முண்டியுத் தூளி
காசுநாக் கள்ளர்கள் பலபேர்

வேண்டா! யிவர்கள் தின்றுமுண் டெல்லாம்
வேரொடும் களைபவர் சித்தர்.

வேறு

இங்கே பொறுமை யில்லானுக்
கிடமே யில்லை யிடருண்டு

கங்கைக் கருணை யில்லானேல்
கருமங் காணுக் கனலுண்டு

எங்கே பிறரைத் தாழ்ப்பா
ரங்கே பாவக் களநுண்டு

பொங்கே நன்றி பொய்யாக்கும்
புன்மைக் குன்றே யமருண்டு.

வேறு

மந்திரம் யந்திரம் தந்திரம் யாவுஞ்சு
தந்திர மல்லவே சந்திரனே

அந்தர வானத் தந்தர மானவ
கந்தர மானத ராதரமே.

75

நாத்திரம் சூத்திரம் கோத்திரம் யாவையும்
காத்திர மற்றதோர் பேய்த்திறனோ
ஆத்திரமும் கோளும் நேத்திரமும் தூய
பாத்திர மல்லவின் சூத்திரமே

76

சோத்துந் துருத்தியை மூத்திரப் பையினைச்
சோத்திர மென்பதென் பித்திறமே
ஆத்திக மானதோர் சேத்திர மானபின்
சாத்திர மாமிதே மித்திறமே.

77

அட்சர முகி மொழிச் சொற்சுர மும்கவி
நைச்சர மில்லதோ யாருகனே
மெய்ச்சாந் தருமசன் னுட்சரந் தேதின்று
சொர்க்கம் காண்பைநீ வச்சிரனே.

வேறு

அரியைப் பாடி யுயர்ந்திட்டா ரறுபத்து மூவர்
அருளைப் பாடி மிகுந்திட்டா ரருட்பெருஞ் ஜோதி
அரியைப் பாடிச் சிறந்திட்டார் ஆறிரண் டாழ்வார்
அருளைப் பாடி நிறைந்திட்டார் அறுமூன்று சித்தர்
கருவைப் பாடி விளைபாடிக் கத்தட்டு மென்றே
கவியைப் பாடிக் கலைபாடிக் கவிபாட லில்லை
கருவைப் பாடிக் குருகாட்டிக் காப்பதற் காகக்
கருணைப் பாடிக் களிபாடிக் களித்திட்ட வாறே.

வேறு

கார்முகிலின் வண்ணமெனக் கழறுவதுன் மேனி
சுந்தரனியின் காந்தமெனக் காட்டுவது மாரன்
[illegible]
மின்னும்வலம் புரிவாகி யோகமதே நாதம்.

வேறு

குப்பை மேனிச் சாற்றினிலே
கொழித்து வெடிக்கும் வெடியுப்பே
இப்பே துலசி [illegible]
இதுதான் நாமா [illegible]
கொப்பே செம்புக் கிடைநாகம்
கொடுத்தே [illegible]
மப்பே யில்லே மாநக
வைத்தா லாகும் [illegible]

வேறு

கன்னிமைப் போதிலே கருவான [illegible]
கானலூறுங் கானல் தனிலே
தன்னுமையாளவிலே [illegible]
தலைமாறி வந்த நாளிலே
என்று மெழுத்திலே பண்ணுந் [illegible]
ஏனிமே ஓச்சி தனிலே
கண்ணுத கன்னிலே எண்ணுத [illegible]
காணுத காட்சி வானே.

82

வானிலே வான் பெற்ற ஊனிலே [illegible]
மாமணியி னுள்ளுறையிலே
நானிலே நான் பெற்ற நலிலிலே [illegible]
நடையிலே கடையிலே தான்
தானிலே தானற்ற தனியிலே தனியற்ற
தவமிலாத் தவநெறியிலே
மீனிலே மின்னிலே மின்னிலா வெளியிலே
வெளியிலாக் கனியினுள்ளே

வேறு

சாடு மடு கூடு விடு [illegible]
ஆடு படு தேடு கோடு [illegible]
[illegible]
வீடு நடும் நாத நடு விந்து தேடு

வேறு

ஐந்துபத மான வேதம் அதனைக் காணப்பல காதம்
[illegible]
[illegible]
[illegible]

வேறு

மூலமட [illegible] பந்துக் கோயி லன்றே
மூர்த்திய [illegible]ன் முதலாம் லிங்கம் கண்டாய்
ஆலயடா முருகேசும்பும் பேறு மார்க்கத்
தண்டபடா அகிலாண்டத் தகண்ட உயிர்க்
கோலமடா வரிமுனியின் தர்ம மோனக்
கோபுரத்தின் மேலேறக் கைலா சத்தின்
ஞாலமடா சதகோடிச் சன்மத் திற்றும்
சான்மதயம் லய சித்தித் தழுவு தாமே.

86

சகாந்த [illegible]வன்னிலே சகமாகி
சமுத்[illegible] மனிதநக்கும் சட்ட நின்று
மாகந்[illegible] கலைதேறி வகைகள ருமச்
சமை[illegible] கோசித்தால் நானந்தைக் கரு
சோகாந்த [illegible] சத்திக சமைய் சூட்டி
துக்க[illegible] துக்கத்தைத் தூங்கி நின்று
ஆகாந்த சாந்தி அங்க அப்பால்
ஆனந்த மயமின் பாக்கை கொண்டே.

87

சிக்கலுறும் போகமது சிச்சிக்கை
தேருங்கால் சுதிகாட்டிச் சேரும் தக்கை
வாழ்க்கையது பொய்ப்பொய்கை ஆய்வு செய்கை
வாசியை [illegible]பிடித்தே வழியா ருற்றல்
தாக்கமும் தாக்கமெலாம் தூக்க மாகும்
தாமையும் மாக்கமெலாம் மோன மூலம்
[illegible]
போதாந்தச் சித்தர் போன்று மாய்ந்த

88

வர்க்கமெலாம் பணிவர்க்கம் சித்தர் வர்க்கம்
வானவரும் தாளிற்றிழ வளரும் வர்க்கம்
சர்க்கரையும் தேன்பால்முக் கனியும் சாறுத்
தனிச்சுவையாம் மதியமிர்தம் தழைக்கும் வர்க்கம்
அர்க்கமுறு வாதமலை யகத்திற் கண்டே
அந்தணனாய் வேதாந்தத் தமைந்த வர்க்கம்
சர்ப்பத்தைக் கழுகைக்கோ லதற்கு ளாட்டிச்
சாவாமல் செத்தவரே சித்தர் கண்டீர்.

89

காந்தன்முடி மேலுற்றான் ககன முற்றான்
காந்தமிக வேயுற்றான் கருணை யுற்றான்
சாந்த மௌனமே நின்றான் சாகாக் காலின்
சந்திநின்றான் வேகாத தலையை வென்றான்
ஏந்துமதி ரவிசுடரின் வெப்பம் கொண்டான்
இப்புவிமேல் யாவினுமே பாகங் கொண்டான்.
வேந்தனவன் வாதமறை மயமாய் நின்றான்
சிவை கொண்டான் சிவனானான் அவனே சித்தன்.

90

கருவுரைப்பேன் காசினிக்கிக் கருவைச் செப்பேல்
கர்மிகளே இளக்கிடுவர் கனகம் தன்னை
மருவின்றிப் பத்தரையாம் மாற்று மாகும்
மன்னவனே சினமில்லா மனம்போற் சீலே
கருவதனைக் குறுக்கிமதிக் குழியிற் போட்டுக்
கனலேற வேயெரித்துக் கலந்து பார்க்க
வருவதுகா ணொருக்கம்பூ வண்ண மாக
வாதமிலா வாதமதன் கருக்கம் சொன்னேன்

21

91

காட்டுநவ பாஷாணச் சரக்குக் கூட்டி
கனசாரங் கட்டிநவா சாரம் தூக்கிப்
பாட்டியவை சேர்த்தூட்ட கனியின் பைந்நாட்
பச்சிலையைத் தானரைத்துக் கவசஞ் செய்து
கூட்டியுடன் வெங்காரத் தைல மிட்டு
கோப்பான வேதைசெயக் கொழித்துப் பொங்கி
நீட்டியதோர் செம்பினிடைத் தோட்டி யுள்ளே
நிறையொளியாம் பாட்டிக்கே சொந்த மாகும்.

92

கலக்கமின்றிக் காட்டிவிட்டேன் கனக மார்க்கம்
கலங்காதே கர்விகளைக் கலந்து டாடேல்
இலக்கமிலா இலக்கியத்தி லிலக்கு வைத்து
இரக்கமிலார் தமைவிட்டே யெடுக்கும் பூசை
உருக்கமுட னுட்கலந்தே குருக்கள் பாதம்
உண்ணுடிக் கண்ணுடிக் குள்ளே வந்த
அருக்கனுடைக் கதிர்போற்றி அங்கை தன்னுல்
அணைப்பதெலாம் பொன்னுகும் இதுவே வாதம்.

வேறு

ஓடிக் கெடாத மூலிகையே கூடக் காய மது சித்தி
பாடுந் தொடாத காடியதே பாயடி முடியா மதி யடா
நாடிக் கொடாத நாடி மது நாடிய நிட்டை யோகமடா
தேடப் படாத வெடியுப்பே சேர்மதி சூத நாதமடா

94 .

தேடி விடாத நாடி விடக் கூடியா முக்திக் கோமளமே
ஆடி யடாத தேவடியா ளம்மை யவள்வெடி யுப்பிதுவே
மாய வடாத மாமலரோ மாய மிலாத மாயமணியே
காடுகொடாத காடியிலே காமினி கன்னிக் காணகமே

வேறு

அரியை அறிந்த பின் னல்லோ
அருளைத் தேடிப் பெறவேண்டும்

அரனை யறிந்த பின்னல்லோ
குருவைப் பேணிக் கொளவேண்டும்

புரியை யறிந்த பின்னல்லோ
புதைபொருள் காணப் புகவேண்டும்

புரியின் புதையல் கண்டல்லோ
பொன்னைப் புடமிட வேவேண்டும்.

வேறு

தேடுதிட மில்லாதா ரிடத்தைக் காணச்
சிக்கலாம் பல இடர்கள் தோன்றும் தோன்றும்

வேடமதி யில்லாதார் தடத்தைக் காண
வெட்டை வெட்ட வெட்டை பல சடர்கள் தோன்றும்

பாடமதி யில்லாதார் ஓடந் தேட
பார்க்கின்ற வாதடங்கள் மிகவே வேண்டும்

மாடமதி யில்லாதார் மாடங் கூட
மகுடமன்னர் மகுடங்கள் சாய்தல் வேண்டும்.

வேறு

மகுடத்தா னிடப்பாகம் வைத்தான் பெண்ணை
மாமுனிவர் கண்டுவந்து கரங் குவித்தார்

சகடத்தான் அரிகரியான் சக்தி யங்கே
சதுமறையான் முப்பாட்டன் சார்பு மங்கே

நகடந்தான் குருநமச்சி வாய மங்கே
நாடியாரும் மூதாக்கள் நடப்பு மங்கே

அகடத்தான் விகடத்தான் மாயை யங்கே
அரஹரா யாவைக்கும் யாவை யங்கே

வேறு

குரு வரக் கூடயிருந்து தருவது பெரிய மருந்து
குரு பரன் நாடும் விருந்து தனித் தகை யமுத மருந்து

குரு பதிக் கோணம் வரைந்து குரு நிலை தன்னை யறிந்து
குரு பதம் குறைவிலா திருந்து [illegible] மருந்தே.

வேறு

சாபங்கள் தான்திரக் கன்னிப் பாலைத்
　தான்சுரக்கத் தான்கறந்து தழலேமூட்டி
ஓமங்கள் தான்முடிய உள்வாய் சூடி
　உத்தமனே கல்லுப்பைக் கனல மிட்டு
தாபங்க ளனைவோடக் கல்லா லின்றிற்
　தனையான மல்லுப்பு மலமுங் கூட்டிக்
நோபங்கள் கொள்ளாமல் வேதை செய்யக்
　குறையறியாத் தென்னுப்புச் சோதி யாமே.

வேறு

சோதி மிகவே வருதனையாம்
　சோகம் மிகவே வேதனையாம்
ஓதிய ரஸகாந் தந்தனையே
　ஊதிட வோல நிந்தனையாம்
பாதிய தேகமி திப்பிலியாம்
　பாலிர லப்பு வின்னொடியாம்
சாதி லிங்கமது கட்டியதாம்
　சாந்து மௌனியிற் கெட்டியதாம்

வேறு

கெட்டி வையநாள நோத நட்டி லிங்கப் பட்டி மகன்
　எட்டியன்றிம் எட்டி யனைந் தட்டிவிடக் கட்டி யொளத்
திட்ட முடன் சுட்டு மிதா தட்டியதில் முட்டை யுடன்
　கொட்டி மு யிட்ட அுடன் கட்டி பது மிட் டொளியும்

வேறு

உரசுந்தான் பேர்நடன மாடிப் பாடி
　உயர்ந்தவன் உலகத்தி லுடனு டாடி
விரக்தான் விஸ்விஜயன் தேகந் போட்டு
　வெற்றிபெற்றுத் திக்குவிட்டக் கொடியை நாட்டி
காரத்தான் கைளத்தான் வேதைத் தாக்கி
　கரைந்தான் உருகத்தான் உறையப் போட்டு
பாகத்தான் உத்தமப் புஷ்பம் பற்றி
　மகத்தான் கனிந்தான் பதுமங் கட்டே

103

கூட்டப்பா சரக்கிறேறு மர்ம மூலி
கொழுவுக்குள் கோகொழுவைக் கொழுத்த மூலி
வாட்டப்பா எமனையும் ஜயித்த மூலி
வளமப்பா நாரனார் கண்ட மூலி
ஆட்டப்பா முந்நான்கு திங்கள் சாற்றை
ஆரம்ப தினம்பார்த்த ரஸத்தைச் சொல்வேன்
பூட்டப்பா பூர்ணலிங்கம் வடித்துக் கண்ட
புகழப்பா வாலைரஸப் போக்கம் தானே.

104

பொங்கி வரும் பூரணமா லிங்கந் தன்னில்
போந்துறையும் வாலைரஸம் தன்னை வாங்கப்
பங்கமுன்று பன்னிநகை வேலோன் பாதம்
பணிந்துதுணை யாக்கொண்டு பங்கம் நீங்கிச்
சங்குகொண்டே தாரையதில் ஊதிக் கொள்ளச்
சர்வலோ கங்களெலாம் வசிய மாகும்
தங்கமுறத் தடையில்லை என்று நந்தான்
தாரணியி லிதைச்செய்து முடிப்பா நன்றோ'

105

கங்கைகொண்டான் மூலியது கனக வைப்பாம்
கர்மமெலாம் போக்கிவிடும் கருவூலங் காண்
சங்கையில்லா தெயரிந்தனைச் சாற்று கின்றேன்
சாத்திரங்கள் காணாத சேதி சொல்வேன்
பந்துகொளப் பயங்கரமாய்ப் பாயும் வித்தை
பாமரர்க்குக் கூறாதே பரம வித்தை
உங்களென்ன உலகமெலாம் நடுங்கும் வித்தை
உத்தமனே உனக்குநா னுரைக்கின் றேனே.

106

வேங்கையடா சிவக்கரந்தை வேரைக் காண்பாள்.
வெப்பான சிவப்பாகும் வேற்கண் மாதா
விங்கிநிற்கும் மார்பகத்தின் விலக்கை நீக்கி
விலகிநிற்கும் மாயைதனை வெருட்டிப் போக்கி
ஓங்கிநிற்கும் விமலனுடைப் பாதங் கண்டு
உன்மத்த மாயொடுங்கிப் போக வேண்டாம்
வாங்கிநிற்கு மென்னம்மை வளத்தைக் கொண்டே
மலர்விழிகள் விழித்திருக்கக் கண்டு வாயே

107

கண்டிடவே வித்தையெலாம் பலித்துப் போச்சு
சுருக்கமடா எவருக்குங் கூறா தேநீ
பண்டமடா பாவங்கள் பலவே செய்வார்
பரமனடி காணாதார் பச்சை மோகம்
கொண்டிடுவார் போகத்தின் கூற்றைக் காண
கூட்டங்க ளாய்வந்தே குலவி நிற்பார்
மண்டையடா பத்தியங்கள் பலதே கூறி
வாகான வைத்தியமே போவென் பாயே

108

ஊமத்தான் வித்ததனை ஊறப் போட்டு
உரகத்தான் உதகத்தாய் உறவைக் கூட்டு
காமத்தான் சாறதனால் கரைய வைத்துக்
கருவைத்தான் உருவைத்தான் கலந்து கொண்டு
எமத்தா விரும்பியோடைச் சமமாய்த் தூக்கி
இழையத்தா லிருக்கத்தான் [illegible]ய் போதும்
வாமத்தான் சோதியிது சும்மார் [illegible]ன்
வாமத்தான் வளஞ்சும்மா வளமே கண்டாய்

109

சும்மாத்தான் அம்மாத்தான் சுகத்தே நின்றான்
சொக்கிவிழுஞ் சும்மாக்கள் பலவே கண்டோர்
உம்மாத்தான் உம்மாச்சி உறங்குகின்றான்
[illegible]

எம்மாத்திரன் எம்மாவைக் கேட்டா லுந்தான்
  எதுரைப்பாள் வாய்மூடி யிருப்பாள் வாளாய்
பொம்மாத்தான் பொம்மக்காள் புவன மெல்லாம்
  பொம்மையவள் ரூபமடா பணிந்து கொள்ளே.

110

தேவாரம் வாசகந்தான் திகழக் கூட்டித்
  திருவாயின் மொழியெல்லா முருவாய்ச் சேர்த்து
போவாரைப் போகாரைப் புலம்ப வைத்து
  போக்கற்றோர் தமக்குமொரு போக்குக் காட்டி
கோவாரம் பூவாரம் கொழிக்க விட்டு
  கோலமுறச் செய்தாலும் குவல யத்தின்
பூபாரம் குறைந்திடுமோ குறைக்கொண் ணாது
  புகன்றிட்டே னவள்போக்கைப் புகன்றிட் டேனே !

மை வைப்பு

111

மெய்யான மைசொல்வேன் பொய்யே யில்லை
மேலான திடமிதற்கே ஐய மில்லை.
உய்யென்றே உய்விக்கும் மையே கண்டீர்
உலகையெலாம் வசமாக்கு முண்மை கண்டீர்
நெய்யாகும் வெண்ணையது மறைந்தா லன்றோ
நெறியாகும் தனைமறந்து நின்றா லன்றோ
பொய்யான உலகுண்மை புதைந்தா லன்றோ
பொய்மெய்ம்மை வாய்மையுடன் போக உண்மை.

112

கருவான மைசெய்யச் சித்தர் கோடி
கலையாக வேயுரைத்தார் துறைகள் கோடி
உருவான மைசெய்யச் சித்தர் கோடி
உலகத்தை யேசுற்றி உளுத்துப் போனார்
குருவான ஒருமையைக் கண்டா ரில்லை
கூத்தாடிக் கூத்தாடி யலுத்துப் போனார்
அருவான புழுவினத்தை மருவுக் குள்ளாம்
அச்சுளா கருவினத்தை நாடி னாரே

113

அடடாடா பயங்கரந்தா னப்பா யிஃதை
யாருக்கும் செப்பாதே விழலாய்ப் போகும்
விடடாநீ விசித்ர விசித்தி ரந்தான்
வேறெவர்க்கும் தெரியாத வித்தை கண்டாய்
கொடடாநீ வேதமதைப் பூசை செய்து
கொள்ளாதே நீதிகதிக் குறைக ளெல்லாம்
எடடாநீ ஞானித்தான் ஓதிக் கோதி
எவ்வுலகும் போற்றுமொரு மையைத் தானே.

114

தேரோடித் தெருப்புழுதி யொருகை தூக்கிச்
செப்புகிறேன் பிறர்செய்யாச் சேதி தன்னை
வேரோடும் மருதுளசி மடியில் வைத்து
விளைவான சாறுபடி யிறுத்துக் கொண்டு
ஏரோடிக் கொழுவிட்டே யிருப்புச் சட்டி
எரியோடக் காய்ச்சியபின் னெடுத்துக் கொண்டு
பாரோடுங் காலிவத் தகட்டி ஊற்றிப்
பதமுட வேயாற்றிக் கொள்ளு வாயே.

115

ஆறிவிட்ட கணமதிலே சரக்கைச் சொல்வேன்
அருந்தீசிலையின் வீரரசக் கெந்த லிங்கம்
ஈறிவிட்ட வராகனெடைச் சமமாய்த் தூவிக்
ஔறிவிட்ட சாம்பனுடைப் பிராணி தாக்கி
ஏறிவிட்ட ரவியதிலே உலர்த்தி விட்டே
எட்டிரண்டு நாட்கழித்தே எடுத்தி டாயே
கூறிவிட்டேன் கருந்துளசிப் பேயின் தும்பைப்
குருக்கிடவே குப்பையுடை மேனிச் சாறு
வீறிவிட்ட குருந்தொட்டி வேருங் கூட்டி
விரிந்திட்ட செம்பருத்தி யதையுஞ் சேர்த்து

116

சுண்டிட்ட மையரைத்துச் சீலை வாங்கிச்
சுணையிட்டுச் சாணளவாம் திரியுண் டாக்கி
பண்டிட்ட சக்கரமா மறுகோ ணத்தில்
பசுநெய்யா மகலேற்றிப் பார்த்தி டாயே
மண்டிட்ட தழலேறுங் கரிதா னன்ற
மண்முட்டச் சுரண்டிட்ட கருவி னோடு
கொண்டிட்ட சவ்வாதும் புனுகும் தானே
கொழித்திட்டுச் சமமாகக் குழைத்தி டாயே

117

ஆமப்பா மால்நாம மாயி ரந்தான்
அப்பனே ஜெபித்திட்டுப் புரண்[illegible] யங்கும்
வாமப்பா மைவாங்கி வைத்துக் கொ[illegible]ல்
மண்ணுலகம் முழுவதுமுன் வசமாய்ப் போகும்
தாமப்பா இதுபோலத் தருவே யில்லை
[illegible]
காமப்பா காமனைகள் யாவுங் கூடும்
காணப்பா காமனையும் வெல்ல லாமே.

118

திட்டமிட்ட திடமான மந்திரந் தான்
திருவான மந்திரந்நின் திருமு மாகும்
எட்டுமெட்டா மந்திரமு மிதுவே யாகும்
எண்ணியதாற் றெட்டுந்தந் திரமு மஃதே
வட்டமிட்ட வைரவிமோ கினியாள் தேவி
வாலைஷடா க்ஷரியுமையாள் மாரி வீரி
கட்டுதிட்ட முறக்காவல் காத்து நிற்பாள்
காலகண்டி யவள்பாதம் பணிந்திட் டேனே

119

அன்னமிடும் மின்னிடையா ளகண்ட சக்தி
ஆங்காலம் போங்கால மனைத்து மாவாள்
பின்னமிலைப் பயமில்லைப் பேத மில்லை
பேச்செல்லாம் செயலெல்லாம் வெற்றி கண்டாய்
இன்னினியா ளிலக்குவனின் சேவை கொண்டாள்
என்சேவை யிலக்கணமு மிவளே கண்டீர்
மன்னினியாள் வாலைப்பெண் மாதா சக்தி
மனோன்மணிகங் காளிமகா மாயி யாத்தாள்.

120

வட்டமதி முகத்தினிலே திட்ட வட்ட
மாமாயப் பொட்டுடையாள் மணிப்பி டத்தாள்
சுட்டறியாக் குமரியிந்தச் சுந்த ராங்கி
சோகமற்றுள் யோகமுற்ற சொகுசுக் காரி
கட்டறியாள் காலிணையிற் கனகச் செம்பொன்
காணிக்கை யேதந்தாற் கனிந்து நிற்பாள்
விட்டறியாள் விடுதலையின் வீடு கொண்டால்
விரைமலர்த்தா ளிசனருள் புரிவாள் கண்டீர்.

121

காஷாயங் கொள்ளுவதேன் கச்சா யந்தான்
கண்ணாக வந்தகஷா யத்தைச் சொல்வேன்
பாஷாண மவைவேண்டாம் பலதும் வேண்டாம்
பாம்புகடித் தாலந்த விடத்தை நீக்க
வேஷாதி வேடிக்கை விறலு மேனோ
விட்டகுறைத் தொட்டகுறை விதிகள் ஏனோ
ஓஷாதி பலவுண்டே யுயிரைக் காக்க
ஓடத்தால் மாய்கடலைக் கடக்க லாமோ?

வேறு

இருமூன்று துப்பு ளடக்கி அருகான பட்டை யிடித்து
கருமூன்று கானல் முடக்கி கருவாவின் பட்டை பொடித்து
அருமூன்று பாவம் மடக்கி அறமூன்றும் அகத்து ளொடுக்கி
தருமூன்று வடிவ மகற்றி தவமூண்டு காய்ச்சு துடக்கி

வேறு

காய்ச்சியிறக் கிட்டகஷா யத்தை யோர்காற்
கணைத்திற்கோர் முறைகண்ணிற் கலிக்கம் போட
காய்ச்சலுடன் பேய்ச்சுரங்கள் கணைகள் வெப்புக்
காமாலைக் கருமேகம் குணமே தங்கள்
விழ்ச்சிதரும் குட்டங்கள் குறைகள் சோகை
வித்தழிக்கும் வெப்புநரை திரையாம் சூப்பாம்
தாழ்ச்சியெலாம் தவிடுபொடி யாகும் ச [illegible] ட்
தவக்கமின்றிக் கஷாயத்தைத் தூ [illegible] மாயே.

124

அப்புலிங்க மதைந்தொப்பு ளதனில் வைத்து
அடைவாகச் சம்புலிங்க மகத்துள் வைத்து
தப்பில்லாச் சாதிலிங்க மதைமெய் யோட்டித்
தழைவான சோதிலிங்க மொளித்துக் கொண்டு
மப்பில்லா வைத்திலிங்கம் துணையாய் நிற்க
மாவயிற்று லிங்கமதிற் சூடுண் டாக
கொப்பான கும்பலிங்கம் வேறாய்ப் போக
குணலிங்கம் தோன்றும்நவ நீதந் தானே.

வேறு

அறவே பெறவே இறையே பொறையே
அணையில் தரையாம் சிறையேது?
அறைமா மறையே விரையே கரையே
அகலப் பவமாங் கறையேது?
குறையே நிறையே பறையே நிறையாய்க்
குணமே குலவத் துறையேது?
துறையே துறவே பிறையே பிணையே
தறவே கொளவே நரையேது?

வேறு

கலைதாங்கும் நிலைஓங்கத் தலைவாங்கும் துணையாரு?
இலையேங்கும் இடைதூங்க முலைவிங்க விலைகூறு
தொலையேந்து குலைசாய்ந்து மலைபாய்ந்த வினையாறு
அலையோய்ந்துள் ளுலைதிய்ந்த தலையேய்ந்த பனையேறு.

வேறு

வேல்விழியாம் மடமாதர் வினைகொலையாந் சுடுகாடு
பால்விழியாம் குடமாதர் பாய்கலையாம் துணைநாடு
சேல்விழியாம் விலைமாதர் சேர்குலையாம் படுமேடு
ஆல்விழியாம் தடமாதர் தாள்துணையே யரும்பாடு.

27

வாத வைப்பு

128

வேதநெறி யறியாத மாந்தர் தங்கள்
  வித்தைபலிக் காதுரஸ வாதம் வாதம்
மாதர்மனக் குறைகொண்ட மடையர்க் கெல்லாம்
  வாதமது இல்வாதம் முடக்கு வாதம்
ஓதுகுறை யேதுமிலாக் குருவின் பாதம்
  உற்றவர்க்கே வாதப்ர லாதம் போதம்
கோதுறுமோ ரிச்சையிலாக் குணவா னுக்கே
  கோதில்லா வாதவித்தைக் குணமாம் கண்டீர்

129

படைப்பினிலே பலவிதமாம் பேதங் காணப்
  பண்புடையா ரவர்தமக்கே வாதம் சித்தி
நடிப்பினிலே மனங்கோணி நாணங் கொள்ளும்
  நல்லவர்க்கே நாட்டுரஸ வாதம் சித்தி
உடப்பினிலே உள்ளிருக்கும் மோனம் கண்டார்
  உறைப்பினிலே நிறைக்குமடா வாதம் சக்தி
வெடைப்பினிலே வேதத்தின் வித்தை கொண்டார்
  விளைப்பினிலே வெடிக்குமடா வாதம் முக்தி

130

சரியுள்ளஞ் சரியான சரிவுப் பாதை
  தனையுரைப்பா ரறிவுள்ளார் தமக்குத் தானே
பரிவுள்ளம் கொண்டசித்தர் பிரிய மாகப்
  பண்புள்ளோர் வாழ்வதற்கே வாதை சொன்னார்
பிரிவுள்ளம் கொண்டதனால் மரிப்புள் ளோராம்
  பேதையரே என்வார்த்தை பிசகா தப்பா
தரிவுள்ள வேதைதனைத் தருவார் சித்தர்
  தகையுள்ள திறப்புவழி தன்னைச் சார்ந்தால்

வேறு

வரிப்புள்ளே சிலை செய்து சிரிப்புள்ளே சிலை வாங்கி
  அரிப்புள்ளே அரிதா ரத்தை மரிப்புள்ளே வெங்கா ரத்தை
தரிப்புள்ளே துகையின் நாக தெரிப்புள்ளே ரசமதை யோக
  எரிப்புள்ளே யாமங் காணும். பொரிப்புள்ளே செந்தூரந்தான்

வேறு

விதிவசத்தால் மதிகெட்டே அதிதி யோடே
வேதமுனிக் காசிபனும் புணர்ந்த காலம்
கதிவசத்தால் கதிருநட்டும் அருண னன்றோ
கடல்வருண னடைக் கலமாய்ப் புகுந்த காலம்
மதிவசத்தால் மறிகடலும் மதியங் கண்டே
மருண்டரண்டு புரண்டுருண்டே யலைத்த காலம்
வதிவசத்தா லதிதிமகன் விதியின் போக்கில்
மனமாறத் துதிசெய்ய வந்தான் காலன்.

133

காலத்தான் காலனவன் நெய்யை வாங்கி
கனிவாசக் கந்தகத்தைக் கசக்கிப் போடு
மாலத்தான் மால்கிரந்தி முடிச்சைக் கூட்டி
மகிழுந்தான் மசியத்தான் மசக்கிப் போடு
ஆலத்தான் ஆலினுடை விழுது கொண்டே
ஆழத்தி லேபுதைத்துப் புடத்தைப் போடு
சாலத்தான் காலின்கீழ்ப் படியும் பாரு
சார்ந்திட்ட கந்தகமும் கட்டிப் போமே.

134

நாயடக்கி பேயனை நாட்டம் பாரு
நயனத்தை யேமூடிக் கவனம் பாரு
வாயடக்கி யேயன்னம் புசித்துப் பாரு
வழிமடக்கி வாரியதை வசித்துப் பாரு
மாயடக்கி மதியமதைக் குடித்துப் பாரு
மனைகட்டி யேதெருவில் படுத்துப் பாரு
நோயடக்கி நொடிநூறுக்க நாற்றம் தேடு
நுரையடக்கித் தயிர்கடையப் பாலாம் தேரு

135

காய்ச்சியதோர் நறும்பாலில் சீனி சேர்த்துக்
கற்கண்டுப் பொடிதூவிக் கலப்பீ ரோடே
ஆச்சியவள் முலைப்பாலி னருமை கூட்டி
அதனோடே குங்குமப்பூக் கமகம் கூட்டித்
தாய்ச்சியவள் காத்தாயி உமையாள் என்னை
சாவித்ரி காயத்ரி சகல மாதா
பாய்ச்சியவள் பாதந்தே பணிந்திட் டாயேல்
பாகமடா பகற்கனவும் பலிக்கும் பாரே.

136

வேசியென்று தள்ளாதே வினைமூ ளாதே
வித்தையடா தாசியவள் தாயின் ரூபம்

பாசியென்று பகராதே ப்ரம சோதிப்
பராபரத்தின் வாசியவள் மாயா ரூபம்

போசியென்று புகலாதே போகம் யோகம்
புரைசொல்வார் நாசிவழிப் புகைந்து போகும்

காசினியில் மாசியிலே மாசில் லாதாள்
கருணையடா ஒசியெனக் கழித்தி டாதே

137

மாசிக்காய் மருவெடுத்து மலரப் போட்டு
மாசாதிக் காய்த்தோலை மழித்துப் போட்டு

காசிக்காய் உளவெடுத்தே யூசிக் காயின்
கருவூல மாங்கருளி லூறப் போட்டு

நாசிக்கா நேசிப்பாள் வேசிப் பெண்தான்
நவநாத சித்திதரும் நடனக் காரி

காசுக்கா சொல்லிவைத்தேன் யோசித் துள்ளே
கங்காளி முசுமுசுக்கே கருது வாயே

138

கருணையுடன் வாலைப்பெண் கனகப் பாதக்
கழல்பணிவார் கொண்டபர போதம் வேண்டும்

சுரணையுடன் பெண்கள்மல ரடியில் வீழ்ந்து
சுகரூப மாய்ப்பணிவார் பேதம் வேண்டும்

சரணமெனச் சகஜமுடன் சிரிக்கும் நல்ல
சற்குணராம் மாதரிடும் சாதம் வேண்டும்

மரணமிலா மதிப்பென்று ளாகா யப்பூ
மலரணைப்பா ளன்பெனும்ம்ப்ர ஸாதம் வேண்டும்.

139

சாத்விக முடன்பிறந்து தழைக்க வேண்டும்
சத்துருக்கள் சங்கரா மிழைக்க வேண்டும்

ஆத்மீக ஞானவுடல் கொழிக்க வேண்டும்
யாவினுளும் ரீங்காரம் செழிக்க வேண்டும்

பித்தான பேயுலகை மறக்க வேண்டும்
பேரின்ப வாசலதும் திறக்க வேண்டும்

வேத்தான வித்தையெலாம் துறக்க வேண்டும்
வேதாந்த சித்தாந்தம் சிறக்க வேண்டும்,

140

பந்தமுறும் பாசமெலாங் குலைக்க வேண்டும்
  பரமான கோசமதே நிலைக்க வேண்டும்
மந்தமுறும் புன்முறுவல் விளைக்க வேண்டும்
  மானமறத் தானமெலாம் கிளைக்க வேண்டும்
சந்ததமும் மதிகதியை நாட வேண்டும்
  சார்ந்திட்ட சுருதிநதி போட வேண்டும்
விந்தையுறும் விதிசதிகள் மாற வேண்டும்
  வினையறுக்கும் சிவசதியின் வீறு வேண்டும்

141

உயசித்தர் உலகத்தின் உண்மைத் தந்தை
  உதறிடவே பலவாறாய்ப் பாடிச் சென்றார்
பயசித்தர் ஊமைத்தான் வேரைத் தேடி
  பாரெல்லாம் சுற்றிவந்தே பாழாய்ப் போனார்
வயசித்தர் வாகடங்கள் பலவுந் தேடி
  வாதமென்றும் வைத்யமென்றும் வாடி னாரே
கயசித்தர் தந்தமது சித்தம் காணார்
  கருவான தத்துவங்க ளறியார் தானே.

142

பத்தியங்கள் பலசெய்வார் பழமை கண்டே
  பச்சிலைகள் பலதேடிச் சாறு செய்வார்
நித்தியமும் துதிசெய்வார் நியமம் செய்வார்
  நிலையான சத்தியத்தைக் கண்டா ரில்லை
வித்தைகளும் பலகண்டார் வேதங் காணார்
  மெத்தியமாம் மத்தியத்தை வென்ற ரில்லை
வத்தியமா வைத்தியந்தான் வைத்தி யந்தான்
  வாத்தியத்தி னிசைகாணார் வாழ்வ தெங்கே

143

எத்தனையோ நெறியெல்லாம் எடுத்து ரைத்தேன்
  என்மகனே என்சொல்லைக் கேட்பா ரில்லை
பத்தரைக்கும் குறையாத மாத்துக் கண்டாய்
  பன்னிருகை வேலனவன் பாதந் நன்றில்
சித்திரோட சித்தினையும் சித்த மாக்கிச்
  [illegible] சொர்க்கி லேறி நிற்கும்
வித்தறிவாய் விதிவிலகும் வினையும் போகும்
  வேதாந்த சித்தாந்த வெளியுண் டாகும்

144

விழியப்பா மொழிகண்டு முழியுங் கண்டே
விழித்தல்லோ வினையெல்லாம் கழித்தல் வேண்டும்
அழியப்பா வழிகண்டு சுழியுங் கண்டே
அழித்தல்லோ நலையுச்சிச் சுழித்தல் வேண்டும்
வழியப்பா பழிகண்டு பயனுங் கண்டே
வழித்தல்லோ புதுபழிதான் வகுக்க வேண்டும்
கழியப்பா கழியுமுன்னே தோழி யான
கனகுருவின் நாழியதைத் தழைத்தி டாயே

145

தழைத்திட்ட குலமெல்லாம் கடலின் மீதே
சலித்திட்ட நுரையின்நுண் டுளியே கண்டீர்
மழைத்திட்ட மதுவேதான் விந்து நாதம்
மணத்திட்ட விநங்கள் கூட்டிக் கூட்டிக்
கழைந்திட்ட சுவையேற்றிக் கன்னிப் பாலைக்
கறந்திட்டுக் குடித்தவர்க்கே வாதம் சித்தி
விழைத்திட்டம் விழலுக்கே இறைத்த நீறும்
விழித்திட்டால் தங்கத்தின் கட்டி யாமே.

———

யோக வைப்பு

குருபகவான்
ஸ்ரீ காரைச்சித்தர்
144, புளியாந்தோப்பு நெடுஞ்சாலை
சென்னை 600 012.
திரு [illegible] சுவாமிகள்
Cell: [illegible]

146

கந்தகத்தைக் கட்டுதற்கே யொருநூல் போதும்
கயிறு திரித் திடவென்றால் பலநூல் வேண்டும்
அந்தகத்தைக் கட்டவொரு பெருநா ணுண்டு
அந்தரத்தை யேகட்டு மருநா ணுண்டு
சிந்தகத்தைச் சித்தத்தைக் கட்ட வென்றே
சிவக்கயிற்றின் திருநாலைச் சித்தர் சொன்னார்
விந்தகத்தைக் கட்டியேமே லேறிச் சென்று
வேதாந்தங் காணவைக்கும் சிவநூல் தானே.

வேறு

பாரில்லேன் பார்த்தே னில்லை பாவங்கள் புரிந்தே னில்லை
பதறினேன் மனம் தளர்ந்தேன் பருகினேன் பலநூல் சாரம்
ஊரில்லேன் காணி யில்லேன் உறவுமற் றொருவ ரில்லேன்
ஊசியாம் காந்த வுச்சி ஒளியிலே கண்ணன் தன்னைக்

143

காருள்ளே கதிராய்ப் பொங்கும் கண்மணி வண்ணன் தன்னை
காற்றிலே காற்றாய் ஜீவக் கதி யென்னும் ரதத்தை ஓட்டிப்
ஏருள்ளே எந்த னுள்ளே என்னகச் சொந்த னாக
எம்பிரா னிருப்பான் காப்பான் இல்லையேற் காத்தி டானே

149

நினைத்ததைச் செய்தே னில்லை நிர்ப்பதும் வாத மில்லை
மனத்தினால் மாயை போக்கி மதியினால் மதித்து வானா
தனித்துணைத் தவத்தி லேறித் தன்மய முனையைப் பற்றிக்
கனத்துளே கதி கலங்கும் கதியுளேன் கதியு ளேனே,

150

பனித்துளித் துள்ளி கொண்டே பலப்பல கருவுண் டாக்கி
நினைத்துளி நிதியங் கொண்டே நீர்த்துளி சுரந்து போக்கி
அனைத்துளி கருக்கைக் கொண்டே யரித்துணை நாடி னேனே
வினைத்துளி வினையே கண்டேன் விழித்துமென் பழியே கொண்டேன்

வேறு

சித்தரெலாம் கூடிநின் றெங்கே யெங்கே
பக்தரெலாம் கண்டோடிப் பார்த்தா ரங்கே
வித்தகர்கள் வழி காட்டும் வித்தை யெங்கே
புத்தகங்க ளேபுரட்டிப் புலம்ப லங்கே

31

152

உத்தமர்கள் உனைக்கண்டே உருகிப் பொங்கி
உடல்கருக்கிக் கண்டரஸ வாத மங்கே
சித்தமில்லா அநுவழியைச் சீச்சீ யென்றே
சிவவழியோர் வழிகூறு வீரே சங்கே

153

தனக்குள்ளே தனைப்பார்த்துத் தானும் வானும்
தவத்துள்ளே தனைத்தானே தனிமை கண்ட
உனக்குள்ளாம் உழக்குக்குள் கிழக்கும் மேற்கும்
உற்றகனக் கோடுவழக் கேது முண்டோ

154

முன்னுக்கைப் பின்னுக்கி யுன்னுக் கிட்டே
மோஹமற மனஞ்சினுக்கா மோனம் காண்பீர்
மின்னுக்கி வெளியாக்கி மேவா ஞானி
மேதினியி லவர்க்குநிக ரவரே கண்டீர்.

வேறு

காசர வீர மெலாம்வாசிக்
கயிற்றைக் கொண்டே கட்டிடலாம்
வாசர பூரண நித்தியமே
மனதைக் கொண்டே கட்டிடலாம்.

வேறு

தேரான மனமதை நேராக வேதிலே
சேர்த்துவது ஞானமாகும்
வேரான விண்ணிலே போரான விணையிலே
வில்விஜயன் யோகமாகும்.

வேறு

கண்ணிலே யுன்னைக் கண்டே உன்னிலே கண்ணைக் காண
மண்ணிலே விண்ணைக் கண்டே என்னிலே உன்னைப் போன்றே
தன்னிலே தானைத் தன்னத் தனியனாய்த் தனித்துத் தானே
தன்னிலே நன்மை நாடி நடப்பதே யோக மாகும்

வேறு

உப்பினத்தை யேதேடி யுழலா மற்றுன்
உள்ளமதி லேதெளிந்தா ருதும் தாரை
சப்பினமாம் பகைநட்பும் சமமாய்ப் போகச்
சாவினத்தின் கப்பியெலா மகற்றிப் போடு
தப்பறியாத் தவச்சாலி தன்னைக் கொண்டே
சகஜநிலைத் தாள்திறந்து சமாதி கூடு
ஒப்பறியாக் குருநாதன் துணையாய் நிற்க
உத்தமனே யோகநிலை கிட்டும் பாரே.

வேறு

மரிப்பதேது? தெரிப்பதேது? மணப்பதேது?
பிரிப்பதேது? விரிப்பதேது? பிணைப்பதேது?
சிரிப்பதேது? பொரிப்பதேது? குறிப்பதேது?
வுரிப்பதது வளர்ப்பதது யிருப்பதோது?

160

தடப்பதது கொடுப்பதது தடுப்பதஃதே
படுப்பதது பிடிப்பதது விடுப்பதஃதே
அடுப்பதது அணைப்பதது தொடுப்பதஃதே
நடுப்போதுவில் நடிப்பதநன் நினைப்புயோகம்.

வேறு

லோகமெலாம் யோகமெனக் கண்டார் தங்கள்
போகமெலாம் யோகமெனப் பொங்கும் பொங்கும்

162

யாகமெலாம் யோகமெனக் கண்டார் தங்கள்
பாகமெலாம் த்யாகமெலாம் யோகம் யோகம்

163

ஊகமெலாம் நாகமதை யூதிக் கட்ட
நாகமற நிற்பதுவே யோகம் போகம்

164

யோகமெலாம் ஞானத்தே யொடுங்கி நின்றல்
யோகமதே யோகமுறும் யோக யோகம்

வேறு

ஊறுசுவை யொளிநாற்றம் ஒளியே யென்ன
உலகத்தி லேதிரிந்து கடலிற் புக்கு
விறுதிரை நுரைசுழி விளையாட் டார்ந்து
விளைவிதிகள் விளைவெறிகள் வேகந் தேய்ந்து
ஆறுவரக் குருவருளை யணைந்து பொங்கி
அண்டாண்ட சாரத்தை யறிந்து கொண்டே
சாறுகொளச் சிந்தனையுங் குவிந்து நிற்கும்
சகஜநிலை யேயோகச் சமாதி கண்டீர்

166

சிந்தித்தா லதுபாவம் சிணுங்கி னாலோ,
சேருவது காமமடா தங்கித் தங்கிச்
சந்தித்தால் சங்கமடா சங்க மத்தில்
சாருமடா சங்கடங்கள் சங்கிப் பங்கி
வந்தித்தால் வாதமடா விண்வி வாதம்
வாகான யோகமடா மங்கிப் பொங்கி
நிந்தித்தால் நாசமடா நினைவுப் புந்தி
நிலையமடா மாயையதன் மயக்குத் தானே.

167

வருந்தித்தான் சொல்வதிலேன் வலுவுண் டாமோ ?
வழுந்துவதாற் பலங்குறையும் மௌனம் போகும்
அருந்தித்தான் பருகிடுவான் ருசியைக் காணான்
அமுதப்பால் குடித்தவனே அமர னாவான்
துருந்தித்தான் பசியறியான் வாணி யானை,
சோபையுறுந் தேனியனை விலக்கி யப்பால்
பொருந்தித்தான் திருந்தினவன் பொருந்தி நிற்கும
போக்கமதே யாசனமாம் யோகங் கண்டீர்.

168

ஊனிக்கில் யோகியுயிர் போகும் போக்கில்
ஒளித்துள்வெளி யாயிருக்கும் நாதம் நாதம்
யோனிக்கும் விருந்தாஞ்சை யோகம் யோகம்
உலகத்தில் யாவைக்கும் கருவாம் சோகம்
ஞானிக்கும் இதுவேதான் போகம் போகம்
நாரணியாள் வைபோக நடப்பு மாகும்
வானுக்கும் மண்ணுக்கும் பாலம் போட்டே
வாழுகின்ற தாழ்வில்லா வளமே யோகம்.

169

காணியதைக் காணாமல் கோணிக் கேதான்
காடுமே டாய்ச்சுற்றி யலைவார் வீணே
மாணியதைக் கொள்ளாமல் யோனிக் கேதான்
மாதாவின் குலந்தேடி யலைவார் வீணே
சாணியதைப் பூசாமல் சுத்தம் செய்யச்
எண்ணித்தான் சுடுகாட்டுச் சாம்பல் தன்னை
பூணுவதைக் காணாமல் தேனீப் போலப்
புட்பங்கள் பலதேடிப் புலம்பு வாரே.

170

தோண்டகாணாத் தேனெடுக்கும் துய்ய மார்க்கம்
சோனகனை யேதழுவிச் சொந்தம் பாடிக்
குடமாடும் குசவனுடன் உறவு கொண்டே
கும்மாள மாயிடைய னோடே கூடி
மடமான மடையனுடன் சடையன் தன்னை
மால்குடைய னொடுவிலக்கி மடைய னாகி
கடமான குப்பத்துக் கள்ளிப் பாலை
கரந்துசுரந் துண்பதுவே யோக மாகும்.

171

யோகத்தின் நேரமதைக் கோழி கூவும்
யோகத்தின் வேகமதைக் கூர்மம் செப்பும்
யோகத்தின் நாடியதை உரகம் கூறும்
யோகத்தின் பிடியதனை உடும்பு சொல்லும்
யோகத்தின் பின்னாக்கைத் தாரை திட்டும்
யோகத்தின் உண்ணாக்கைத் தேரை காட்டும்
யோகத்தின் அடிமுடிதான் மூலஞ் சேர்த்து
யோக தண்ட மேஞ்ச்சிக் குடும்ப னாமே.

172

பிடியிலே பிணங்கிநிற்பாள் பெண்ணும் வாலை
நொடியிலே கூடிநிற்பாள் நுண்மைக் காரி
அடியிலே விழித்திருப்பாள் அங்கா ளம்மை
குடியிலே மறைந்திருப்பாள் கோம ளாங்கி
கொடியிலே மின்னிநிற்பாள் கும்ப மார்பாள்
துடியிலே துடிப்படக்கும் சொர்ணப் பாவை
முடியிலே முப்பாழும் கடந்தப் பாலாம்
மோனத்தே மதியமிர்த மோஹனத் தாய்.

173

கோடியிலே ஒருத்தியடா குலப்பெண் ணுத்தான்
குவலயத்தின் கோடியிலே குடியாய் நிற்பாள்
ஓடியுளே பிடிக்கவென்று லோடிப் போவாள்
ஒருவருக்குஞ் சிக்காம லொளித் திருப்பாள்
மாடியிலே யெழுமாடிக் கப்பால் மாடி
மச்சினிலே உச்சிமுடி மனைக்குள் ளேதான்
காடியிலே நாடியிலே கண்ட ஞானக்
கட்டினிலே கனிகைதனைக் கட்டி டாயே

174

கட்டித்தான் தழுவிடவே கன்னித் தாயார்
கைப்பிடியி னிடையுடையாள் கனிந்த நோக்கக்
குட்டியவள் மின்வேகக் குமரிப் பாவைக்
குவலயத்தி லவள்பாதப் பொன்னைக் காண்போம்
வட்டினிலே மடியிருத்தி யணைத்துக் கொண்டால்
மலர்விழிகள் அவைகுளிந்தே அமுத வெள்ளம்
கொட்டிடுமே பாசபந்தக் குறைகள் நீங்கும்
குறைவற்ற மெய்ஞ்ஞான யோக மோங்கும்.

175

முடிநனைய வேயமுதப் பொய்கை யாட
முச்சகத்தான் கதிரவனு மச்சங் கொள்வான்
கடிநழுவக் காலந்தான் கதுவுங் காலம்
காலனுமே நிலைமாறிக் கவலை கொள்வான்
மடியகற்றி மதனப்பூ மார்க்கம் நீங்க
மாரனவன் மதிகலங்கி மாண்டு போவான்
குடியிருப்பான் முடிதரிப்பான் குவல யத்தைக்
கோத்திருப்பான் பார்த்திருப்பான் கர்ம யோகி

176

காரப்பா கலவாத காற்றைக் கொண்டான்
  கண்ணுறக்கம் காணாத கங்குல் கண்டான்
வேரப்பா வேறொருவர் காணா விந்தை
  வெற்றியடா வெற்றிடமே மேவான் மேவான்
பாரப்பா பாரிடமே பகையில் லாமல்
  பற்றிடமே பரவாமல் பற்றற் குணை
ஓரப்பா ஓரிடத்தே நிலையாய்ப் பற்றி
  உற்றதுவே யுற்றதுணைப் பக்தி யோகம்.

177

அங்கமெலாம் பங்கமிலாத் தங்க மாக
  அழிவற்றுப் போமமுத நிலையுண் டாகச்
சங்கையிலாச் சங்கத்தின் நாதம் ஓங்கத்
  தத்துவமாம் தமனிகள்ரீங் காரஞ் செய்ய
பொங்கிவரும் பொறிபுலன்க ளையம் நீங்கிப்
  போக்கற்றுப் போக்குவர வாகி நிற்க
எங்கணுமே மங்காத ஜோதி யுள்ளே
  இருப்பதுவே ராஜாங்க யோக மாகும்.

178

பாருலகி லான்மாவின் ஞானம் தேடப்
  பலநூல்கள் கற்றறிந்தும் தெளிவில் லாமல்
நேரியலும் நதியதன்நீர் துளியார் தேத்து
  நெட்டிடுநீர் கடந்திடுவார் நெறியைக் காணார்
ரியலும் பற்றற்ற நீரைக் காணார்
  தேக்கிவந்து சிதறியநீர்த் தேக்க முண்பார்
ஆரறிவார் அடடாடா அடடா டாடா
  அடயோகத் தவலநிலை யதனைத் தானே.

179

தலைவேறு கால்வேறாய்ப் பிரிந்து நிற்பார்
  தலைகீழாய்த் தருதலையாய்த் தனித்து நிற்பார்
கலைவேறு கணைவேறாய்க் கழற்று வார்கள்
  காண்பதுவே வீரமெனும் யோகந் தன்னில்
மலைபோலக் கருவபல வாகக் கொள்வார்
  மதமண்டிப் பால்குறைந்து மகிழ்வா ரப்பா
[illegible]லைபோலச் சிரங்கீழாய்க் கால்தூக் காமல்
  சேகரத்தி லேகரமாம் கடயோ கந்தான்

180

இல்லறமே நல்லறமா மென்று சொன்னால்
இன்பமெனப் பள்ளியறைக் குள்ளாகாதே
தொல்லறமே துறவறமே தனது வண்ணம்
துறந்திடடா பற்றறவே துறந்தி டாமல்
சொல்லறமே யுலகமெலாம் கண்ணின் றுபம்
சொர்ணமய மாம்சொர்க்கம் சுகவை போகம்
கல்லறமே கனகமணிப் பூஷ ணங்கள்
கமலத்தைக் காத்திடுவான் பத்ம யோகி

181

பெற்றவர்கள் தங்கடனைத் தீர்க்க வேண்டும்
உற்றவர்கள் உறுகதியைப் பார்க்க வேண்டும்
பற்றுவர வத்தனையு முடிக்க வேண்டும்
பற்றில்லாப் பாமரரைக் காக்க வேண்டும்
செற்றபுலன் பொறியடக்கிச் சேர வேண்டும்
சித்தமுறச் சிவபூசை செய்யத் தானே
கற்றவர்க்கே பலயோகம் கனியும் பாரே
கல்லாதார் யோகமெலாம் பொல்லா யோகம்

182

யுகமாறிப் போச்சுதடா கலியு கத்தில்
யோகி யவன் நிலைமாறிப் புரண்டு போவான்
ஜகமாறிப் போச்சுதடா ஜகத்தி லுள்ளோர்
தமைமறந்தார் பொருள்நினைத்தே தவிக்க லுற்றார்
அகமாறிப் போச்சுதடா காமம் கோபம்
அறுவகையாம் பேய்க்குணங்க ளதிக மாச்சே
புகல் மாறிப் போச்சுதடா மனிதற் குள்ளே
பூரணர்கள் மறைந்துள்ளா ரவரைக் காணே.

—

நீர்நிலை வைப்பு

35

வேறு

பொன்னுருகும் வெய்யிலிலே மின்னுருகும் மழையினிலே
தன்னுருகும் தனியினிலே தனையுருகக் கண்டேனே

184

கண்ணுருகும் வெளிதனிலே கதிருருகும் வளிதனிலே
விண்ணுருகும் தெளிவினிலே வினையுருகக் கண்டேனே

185

உய்யுருகும் களியினூடற் பையுருகும் வெளியினிலே
ஐய்யுருகும் அளியினிலே மெய்யுருக நைந்தேனே

186

அடியுருகிக் கொப்பளமே அங்கமெலா மப்பளமே
முடியுருகும் பாலையிலே மோகமுறும் தாகமதே

187

தாகமுறு வேட்கையிற்த டாகமொன்று கண்டேனே
மோகமுறத் தள்ளாடி முன்னைபள்ளி நின்றேனே

188

தாவியகைத் நீரதுதான் ஆவியெனப் போனதுவே
பாவியவன் இன்பமுறப் பட்டதுயர் கொஞ்சமதோ

189

இன்புறவே யள்ளியநீர் துன்புறவே வெள்ளிடையாம்
அன்புறவே கொப்பளத்தை வன்புறவே யுண்ணுதற்காய்

190

கப்பெனவே கவ்விடவே கொப்பளமே அப்பளமாய்
சிப்பியிலே முத்துமிலைச் சப்பிடவே சத்துமிலை

191

வம்பிதுகாண் நம்பிடவே கம்புநரக் கம்பரிலைக்
கம்பரிலாக் காரணமே வம்பரெலாங் கூடினரே.

193

கற்பதுவும் கேட்பதுவும் சொற்பனமா மற்பமடா
நிற்பதுவும் நெறியிலடா அற்புதமாங் குறியிலடா

194

இருப்பதுவே நருத்திருறும் பொருப்பதுவே பொறுப்படா
குருப்பொருளே இருப்பதடா இருப்பதுமே தருப்பதடா.

8

195

தாணமிலா மோனமடா நாமறவே நாமமடா
வாணமிலா வானமடா வாணலியா நல்குமடா

வேறு

நல்கு நீ நடவுலகு நடையுநீ நடலையறு
நலமு நீ பலமும் நீயே
அல்கு நீ அல்குல்தரு மலருநீ யலருநெடு
மமுத நீ குமுத நீயே
பல்கு நீ பலகலையின் பயனும்நீ பயனடையும்
பகுதி நீ விகுதி நீயே
புல்கு நீ புணர்வரும் புலவுநீ புலவுதரும்
போக நீ யோக நீயே

196

நாதநீ நாதாந்த வேதநீ வேதாந்த
பாதம் நீ போதம் நீயே
கோதுநீ கோதகலும் குணமுநீ குணமுடைய
குருவும் நீ கருவும் நீயே
பேதநீ பேதமறு நீதநீ நீதமறு
மென்மை நீ வன்மை நீயே
சூதநீ சூதமறு சூன்யநீ சூன்யமறும்
ஜோதி நீ ஆதி நீயே

கனக வைப்பு

குருபகவான்
ஸ்ரீ காரைச்சித்தர்
144, புளியந்தோப்பு நெடுஞ்சாலை
சென்னை 600 012.
திரு சக்திவேல் சுவாமிகள்
Cell: 92 [illegible]

197

கேளப்பா மறுமுறையும் வெட்கம் விட்டே
கிளத்துகிறே னெருவாதக் கிளர்ச்சி தானே
மூளப்பா யிரதவசம் இருகால் மேனி
மூறையப்பா துருக்முறை முறையுஞ் சொல்வேன்
நாளப்பா மன்னிரக் கவசம் நான்கே
நாலுக்கா ருகரஸ நயப்பும் சேர்த்தே
ஆளப்பா முக்கான்சா ரதையுங் கூட்டி
அடடாநீ புடம்போட வடடா டாடா!

198

போட்டகஜ புடமதையே புரட்டிப் போடு
போட்டெனவே சுன்னமது பொன்போற் பொங்கும்
வாட்டமறப் பொசுக்கியதோர் செம்பே மூக்கே
வகையொன்றாய்ப் பொருத்திடவே வாதம் காணும்
வேட்டமுற வெள்ளியாம்பின் பொன்னும் வேதை
வேறுள்ள வேதையெல்லாம் வீணும் வேதை
ஆட்டமுற வாசியென்னும் பூநா கத்தை
ஆட்டிவிடப் பாரெல்லாம் ஆடும் பாரே

199

பாரப்பா பூநாகம் பொங்கும் பொங்கும்
பதமப்பா ஐங்கோலக் கருவின் மையில்
சேரப்பா பொன்னுகும் கன்னி யோடே
செறிவப்பா அமுரியெனும் தேற்றன் வித்தே
நேரப்பா மணத்திட்ட கானிப் பாலே
நெறியப்பா பேய்த்துமட்டிக் குமட்டிச் சாறு
தேரப்பா கிழவேம்புக் கதலிக் கல்லில்
சேகரமாம் ரஸமணியின் திகழ்வு தானே.

200

திகழ்வென்னே வாசியுடன் கூடி நின்று
சிதைவில்லா வாலேரஸம் தன்னை விட்டு
இகழ்வென்னே மால்துளசி பிரம தண்டி
எம்பெருமான் சிவவேம்புக் கட்டும் கட்டி
அகழ்வென்னே பச்சைசமோ கினியாள் பிச்சை
யாமமறைத்து மாமுகத்துக் காந்தச் செப்பில்
மகிழ்வென்னே பாதிபுடம் பாலை யூற்றிப்
பாலேறும் கோபுரத்தில் பதகம் செய்யே

37

201

கரும்பொன்னுக் கோராரும் வங்கச் சாறு
கருநொச்சி விளநச்சிக் கலிக்கம் போடு
அரும்பென்ன வேயண்ட மூலி கூட்டி
ஆகாசக் கருடன்பா லறைத்து மூடு
இரும்பென்னே தகத்தகமாம் பொன்னும் பொன்னும்
இனியென்னே சிரையோட்டில் காந்த லிங்கம்
வரும்பின்னே வாசியெனும் வளத்தி மூட்டி
வாசித்தால் உலகமெலாம் வேதை காணே

202

வாசியிலாப் பூசையுளான் வாதங் காணான்
வாகுறவே சொல்வதெலாம் வாசி மார்க்கம்
வாசியிலார் நேசித்தென் யோசித் தென்னே
வாதமது பலிக்காது பலிக்கா தப்பா
காசினியி லேசிடுவார் கசட ரென்றே
கன்னியவள் மூக்கனுங் கயிறு கட்டி
வாசித்த னேயென்ன வேதை யாகும்
வரசித்தித் தாசியவள் போனைப் போதும்.

ஞான வைப்பு

38

203

காலநெறி யாதையுரைப்பேன் கேளாய் கேளாய்
காணவரு மாயிரமா வருடத் துள்ளே

பாலமடா வானத்துக் கேறப் பாதை
பகனவெடி ககனவெடி பண்ணு வார்கள்

சீலமுறும் வர்ணதர்மம் சிதைந்து போகும்
சீச்சீச்சீ வரன்முறைகள் மாறிப் போகும்

கோலமுறுங் குவலயமே சட்ட திட்டம்
கூறுமடா கோதிக்குமடா கோபம் தாபம்.

204

திராத புயல்களெலம் திடுக்கென் றடும்
திக்கக்கு எரிமலைகள் சிரிப்புக் கூடும்

தேராத நோய்களெலாம் தினமுண் டாகும்
திசைகலங்கும் பூகம்பத் திறமே சாடும்

நேரான நெறியெல்லாம் நடுங்கி யோடும்
நெறியல்லா நெறியெல்லாம் நிறைந்தா டாடும்

போராகக் குருதிகோப் பளித்துப் பொங்கும்
புகையாகப் புவனவளம் புகைந்து போகும்

205

தெய்வமெலாம் விண்ணேறிப் போகும் போகும்
தீமையெலாம் மண்ணகத்தின் தெருக்கூத் தாகும்

உய்யுமுண்மை யுளத்துண்மை யோடிப் போகும்
உலகவுண்மை விஞ்ஞானம் கூடி வேகும்

ஐயமில்லை யெனவகங்கா ரந்தான் துள்ளும்
ஐயையோ அகிலமெலாம் கள்ளம் கள்ளம்

துய்யநெறி காட்டிநின்றோர் சித்தர் சித்தர்
நூலநெறி காட்டுகின்ற ரேத்தர் ரேத்தர்.

206

நிண்டாடு வார்மக்கள் வறுமைப் பேயின்
தீநிழலிற் புழுப்போலத், தீவார் தீவார்

துண்டாடு வார்மக்கள் தம்மைத் தாமே
துய்யான சாந்தமெனச் செப்பு வாரே

வண்டாளுஞ் சோலையென மதி மருண்டே
மதவேளுக் கடிமைகளாய். மக்கிப் போவார்
கொண்டாடும் நகரமெலாம் நரக மாக
கூற்றுவனை வரவேற்கும் கூத்துக் காண்பார்

207

சண்டாளக் கலியுகமாங் கால மிஃதே
சாதனையே வேதனையாஞ் சதிரு மிஃதே
கண்டான தேகாட்சிக் காணா தில்லை
கனவுகளும் கற்பனையும் பொய்யாம் பொய்யாம்
கொண்டான தேகோலம் புலனுக் கின்பம்
கூத்தான மின்னணுக்கள் கூட்டம் கூட்டம்
பண்டான மார்க்கமெலாம் பாழாம் பாழாம்
பாவையவன் மோஹமதே மோக்கம் மோக்கம்.

208

காரிரவில் வண்ணமெலாம் சிறைப்பட் டேகும்
காலையிலே வண்ணமெலாம் சிறப்புற் றோங்கும்
சேரிரவும் பகல்வரவும் விதியே கண்டீர்
தீமைநலன் யாவுமதன் செறிவே கண்டீர்
பாருடனே நீரெரிகால் வானும் பூதப்
பண்புறுதன் மாத்திரையாம் பழமை காணீர்
வேரறியார் வித்தறியார் விளைவாய் வந்து
விளையாடு மனுக்கள்நெறி மேவி னாரே.

209

இருப்பதுபோ லில்லையென்பா ரில்லை யானல்
இருப்பதிலே பயனேது மில்லை யில்லை
இருப்பதெலா மணுவென்பான் இல்லை யென்பான்
இணையென்பான் பிணையென்பான் எல்லாம் வேகப்
பொருப்பதனல் விளைவென்பான் வேக மேற
பொருளெல்லாம் கனக்குமென்பான் வேகந் தீர
கருப்பொருளாய்க் கற்றுமென்பான் கணக்குஞ் சொல்வான்
கருத்தறியான் விஞ்ஞானக் கருமான் தானே.

210

அணுவென்பா னணுவுக்கு ளணுவே யென்பான்
அணுவுக்கு ளக்கினியைக் கான்பான் காண்பான்
அணுமைய்பத் திறலென்பான் அதிக மென்பான்
அகிலமெலா மழித்திடவே வல்லே னென்பான்
கணுவென்பான் கணுநெறியைக் கண்டே னென்பான்
காண்பதெலாம் மின்காந்தக் கதியே யென்பான்
கணுவறியான் கணுவுக்குக் கணுவாய் நிற்கும்
காரணத்தைக் கண்டறியான் விஞ்ஞா னத்தான்

211

தரணிநிலை தானறிவான் தன்னைக் காணான்
தாவியவான் மேற்செல்வான் தன்வான் காணான்
மரணவகைப் பலவிளைப்பான் மதியே னென்பான்
மண்ணிலுயிர் பிறக்குமந்தத் தூக்கங் காணான்
கரணையுடன் சுழல்பொறிகள் பலவும் கண்டான்
கரணமுடன் பொறிபுலன்செய் சுந்தைக் காணான்
இரணமுறும் வைத்தியங்கள் பலவும் செய்வான்
இச்சையெனும் நோய்தீரா திடரே கொள்வான்

212

மண்ணறிவான் வானறிவான் தனக்குள் நின்ற
மதியறியான் விதியறியான் மர்மம் காணான்
எண்ணறிவா னெண்ணாத கோடி யெண்ணி
எண்ணமுறு மெண்ணத்துக் கெண்ணம் காணான்
ஒண்ணொளிக ளொளிநிழல்கள் ஒலிகள் மின்னல்
உவசிமுலைக் காந்தநெறி தாது வித்தை
கண்ணுரலா யனம்பூத பௌதி கங்கள்
கண்டறிவான் தனக்குள்வாம் காட்சி காணான்.

213

காரியத்தை யேகணிப்பான் கனவிஞ் ஞானி
காரணத்தி லேதிருப்பான் கனிமெய்ஞ் ஞானி
சாரியத்தி லேசரிப்பான் சடவிஞ்ஞானி
தாரியத்தி லேயிருப்பான் சரிமெய்ஞ்ஞானி

சோரியத்தி லேசுகிப்பான் தோடுவிஞ்ஞானி
   தூரியத்தி லேமிருப்பான் சுடர்மெய்ஞ்ஞானி
ஆரியத்தி லாணவத்தி லடவிஞ்ஞானி
   அம்பரனின் பூரணத்தில் அமரன்ஞானி

214

விஞ்ஞான விதியெல்லாம் வேகம் வேகம்
   வேகமினல் தாமத்தின் வித்தை வித்தை
அஞ்ஞான விதியெல்லாம் போகம் போகம்
   அடடாடா கயிறறுந்த பொம்ம லாட்டம்
செய்ஞ்ஞானக் கதியெல்லா மாண வத்தின்
   செயலன்றி வேறில்லை சென்மம் சென்மம்
மெய்ஞ்ஞான விளைவெல்லாம் யோகம் யோகம்
   மின்னுன சக்தியுடன் சாகம் சோகம்

215

ஆகாச கமனமடா அப்பா லப்பால்
   அகிலாண்ட கோடியெலாம் வசமாய்ப் போகும்
ஏகாச நெறியெல்லா மினைந்து கொஞ்சம்
   எண்ணுத எண்ணமெலாம் திண்ண மாகும்
மூகாச மூலமடா யெவைக்கும் மூலம்
   மூலத்தி னுதார மூலா மூலம்
சோகாச மவைதிர்க்கும் சோகா சோகம்
   தூக்கமடா துக்குமத்தின் தூக்கம் நூக்கம்

216

கட்டாத கட்டதுவாம் கட்டற் நேர்க்கே
   காணுத காட்சியடா கண்ணுள் ளோர்க்கே
எட்டாதே எட்டுமடா ஏகாந் தந்தே
   இசையாதே இசைக்குமடா பரநா தந்தே
வெட்டாத சக்கரங்காண் வேதாந் தந்தே
   விளையாதே விளையுமெல்லாம் போதாந் தந்தே
கிட்டாதே கிட்டுமடா சித்தாந் தந்தே
   கிட்டிநிற்பா ரொட்டிநிற்பார் சித்தா சித்தர்

217

வித்தென்பான் முளையென்பான் மின்விச் சென்பான்
வெப்பென்பான் காந்தத்தின் கப்பே யென்பான்
வித்தையடா விண்ணெல்லாம் சுழலும் மார்க்கம்
விந்தையடா ஆகர்ஷண வியப்பே யென்பான்
வெத்தறிவாம் கனியறியான் மேற்றோ லுண்பான்
விஞ்ஞானி யவனறிவைப் பழிக்க வில்லை
சித்தறிவான் சத்தறிவான் சித்தன் சித்தன்
சிந்தத் திலேசிருட்டிச் சித்தங் காண்பான்

218

அடடாடா விஞ்ஞானி யறையக் கேளாய்
யாவைக்கும் காரணத்தை அறிவா யோநீ
அடடாடா வகிலாண்டக் கவர்ச்சி யேனோ?
அணுவுக்குள் மின்காந்த மமைந்த தேனோ?
கெடடாடா நேர்திரையான் விண்க ளேனோ?
குவிந்திணைந்து பிரிந்தரஸா யனமு மேனோ?
விடடாடா யிவையெல்லா மென்னே யென்னே?
விளக்கிடுவாய்க் களக்கமறச் சொன்னேன் சொன்னேன்

219

காந்தமென்னே? மின்னென்னே? கவர்ச்சி என்னே?
ககனத்தி லேமின்கள் புரள்வ தென்னே?
ஏந்துமுயிர் வருவதென்னே? போவ தென்னே?
இறந்துபிறந் தெப்பொருளு மிலங்க லென்னே?
மாந்தருளம் பிறப்பதெங்கே? வாழ்வ தெங்கே?
மன்றுறங்க மறைவதெங்கே? மலர்வ தெங்கே?
சேர்ந்திணையும் காலமெங்கே? தேச மெங்கே?
சீறிவரும் கதிரடியும் முடியு மெங்கே?

220

அண்டங்கள் கண்டமுறு மகண்ட மென்னே?
அணுவுக்குள் ளணுவாகும் நுண்ட மென்னே?
நுண்டங்க ளவைகூடும் துணைய லென்னே?
தோய்ந்துபல வாய்மாறும் நுக்க மென்னே?

பண்டங்க ளவைகாண்பண் டார மெங்கே?
  பாயொளியி லேழுவண்ணப் பாய லேறே?
எண்டிசையும் நிற்பதெதன் மேலே சொல்லாய்?
  இயல்மேதை விஞ்ஞானத் தவனே சொல்லாய்?

221

ஏரியதன் நீர்மாறி மாரி யாகும்
  மாரியதன் நீர்கொட்டி ஏரி யாகும்
நீருடனே கனல்கூட ஆவி யாகும்
  நீர்குளிர வேபனியாக் கட்டிப் போகும்
பாரினிலே ஒவ்வொன்றும் மாறும் மாறும்
  பண்பினிலே யவைசேரும் கூடும் ஊடும்
தேரினிலே விஞ்ஞானி யிவற்றைச் சொல்வான்
  சேருவதேன்? மாறுவதேன்? செப்பி டானே

222

ஆதாரம் பலகாட்டும் விஞ்ஞா னந்தான்
  ஆதார மூலத்தைக் கண்ட தில்லை
ஆதார மானநிரா தார மொன்றே
  அதையறிவா னவனேதான் சித்தன் சித்தன்
ஆதார மூலத்தை யறுகோ ணத்தை
  அப்பாலைக் கப்பாலாம் லிங்கந் தன்னை
மீதார துக்கத்தை மின்னல் மேனி
  வெட்டவெளிக் குமரிதனை மேவி றனே?

223

நானென்னு மோரகந்தை பிறப்ப தெங்கே?
  நானுடனே கோள்பலவும் நடப்ப தெங்கே?
வானென்ன வேயகண்டம் வனைவ தெங்கே?
  மாகாரும் மின்காந்தம் புனைவதெங்கே?
மீனென்னக் கவ்விடுமெலாம் விளைவதெங்கே?
  மேவுரசா யங்கள்தரும் வித்தை யேறே?
கோனென்ன யிவை மூலம் கண்டான் சித்தன்
  கோப்புச்செய லறிவான்விஞ் ஞான வேந்தன்

41

224

வண்ணமெலாம் வளமெல்லாம் வான மெல்லாம்
வருவதெலாம் போவதெல்லாம் மணப்ப தெல்லாம்
விண்ணகத்துக் காந்தமெலாம் கவர்ச்சி யெல்லாம்
மின்னலெலாம் விண்ணலெல்லாம் விளைவ தெல்லாம்
துன்னுளவே பாய்கதிர்கள் சுடர்க ளெல்லாம்
தோன்றிமறைந் தாடுராசா யனங்க ளெல்லாம்
விண்ணகத்து விண்ணகமாம் வேத வைப்பாம்
வித்தையெனும் சித்தமதன் விளைவே கண்டீர்

225

சத்தசத்தும் சித்தத்தின் சாரங் கண்டீர்
தத்துவமெல் லாம்சித்தத் தவழுவேகண்டீர்
வித்தெல்லாம் விளைவெல்லாம் சித்தச் செய்யுள்
வேதாந்தம் போதாந்தம் சித்தாந் தந்தான்
சித்தசித்துச் செறிவெல்லாம் சித்தச் சேப்பு
திகழ்காந்த மின்கவர்ச்சி சித்தக் கோப்பு
தத்துகனற் சுடர்யாவும் சித்தத் துள்ளே
தரணியெலா மரணியெலாம் சித்தத் துள்ளே

226

ஆயிரமாக் கதிர்கோடி யணைந்து டாடும்
அண்டாண்டக் கோடியெலாமுளைந்து டாடும்
பாயிரமா மனுக்களெலாம் பிறக்கும் சாகும்
பார்நீர்தீக் கால்வெளியாப் பரந்து நீடும்
மாயிரமா விண்வேகம் மின்வே கந்தான்
மதிவேகம் மனவேகம் கனவே கந்தான்
சேயிரமாப் பலவேகம் சிறிப் பொங்கும்
சித்தமெனும் சாகரத்தின் செறிவே கண்டீர்

227

அவையவையு மவையாகி யிருக்கும் சித்தே
அவையவைக்கு ஏகமாகி யிருக்கும் சித்தே
எவையெவைக்கும் மெவையாகி யிருக்கும் சித்தே
எவையெவைக்கு மேவமாகி யிருக்கும் சித்தே

கலைகலைக்கும் கலையாகிக் களிக்கும் சித்தே
கலைகலைக்கும் களிறாகிக் கதிக்கும் சித்தே
நலைநலைக்கும் நலையாகி நடக்கும் சித்தே
நலைநலைக்கும் நவமாகி நடிக்கும் சித்தே

228

அண்டமெலா மகண்டமெலா மாட்டும் சித்தை
அகச்சித்தாய் அகத்தினிலே யளைந்தான் சித்தன்
கண்டமெலா மவன்கைப்பந் தெனவே யாடும்
ககனமெலா மவனநுகண் ணுக்குள் ளோடும்
மண்டுதழல் மின்காந்தக் கதிர்க ளெல்லாம்
வைப்பெல்லா மவனகத்து வைப்பே யாகும்
திண்டுமுண்டாம் விஞ்ஞானச் சேதி யெல்லாம்
திசைமாறிப் போகுமடா சித்தன் கையில்

229

வெத்துலக விதியெல்லாம் வெப்பம் தட்பம்
விஞ்ஞான விதியெல்லாம் சேர்ப்பும் கூர்ப்பும்
செந்துலக விதியெல்லாம் யாதம் கூதம்
சீவனுடல் விதியெல்லாம் காமம் கோபம்
சத்துலக விதியெல்லாம் ஸகஜம் சாந்தம்
தான்தானுத் தன்மயமாத் தழைவே தாந்தம்
சித்துலக விதிசத்தி னோடு சித்தாய்ச்
சேரனந்தத் தானந்தச் சீராம் வேராம்

230

வேரறியா விளைவறியும் விஞ்ஞானந்தான்
வேரறிந்தே விளையாடும் மெய்ஞ்ஞானந்தான்
சார்பறியுஞ் செயலறியும் விஞ்ஞானந்தான்
சார்புதருஞ் சாரமதே மெய்ஞ்ஞானந்தான்
ஈரறியு மீர்மையெலாம் விஞ்ஞானந்தான்
இருமையெலா மொருமையுறும் மெய்ஞ்ஞானந்தான்
பாரறியும் பேதநெறி விஞ்ஞானந்தான்
பரமறியும் போதநெறி மெய்ஞ்ஞானந்தான்.

231

42

ஆணவமே பொய்ஞ்ஞானத் தடிப்பீடங்காண்
  ஆசையுறும் பாசமதே யஞ்ஞானந்தான்
ஊணவமே பற்றி நிற்கும் மதஞானந்தான்
  ஊரவத்தை யேதேடும் புகழ்ஞானந்தான்
வினைகமாம் வெற்றறிவாம் விஞ்ஞானந்தான்
  வேதாந்தத் தெள்ளறிவாம் மெய்ஞ்ஞானந்தான்
தாணுவெனும் தூணதன்மேற் றாவி நிற்பாள்
  சத்துசித்தா னந்தசக்தி சித்தர் ஞானம்

232

பெண்ணாந்தாள் பெண்ணோடே புணர்ந்தா ளன்னை
  பெற்றெடுத்தாள் சிவமென்னும் பேயன் தன்னை
விண்ணோடே விளையாடும் வேதத் தாயாய்
  வேதாந்தச் சிவனிதய மகளாய் வந்தாள்
கண்ணோடே கருத்தோடே காத்து நின்றாள்
  காலமில்லாச் சிவனுக்கே மனைவி யானாள்
எண்ணோடே சித்தமுடி யேறிப் பார்த்தால்
  யாவுமவள் செய்யுமிந்த்ர ஜாலங் கண்டாய்

233

வாணியென வேவேதன் வாக்கில் நிற்பாள்
  வானமெலாம் வையமெலாம் படைப்பாளன்னை
ராணியென வேமாயன் மார்பில் நிற்பாள்
  ரமக்ஷநரும் லக்ஷ்மியாய் ரக்ஷிப் பாளே
வேணியெனச் சிவனிடத்தே பாகங் கொண்டாள்
  வேதாந்த மோனத்தின் வியப்பாய் நிற்பாள்
மாணியெனும் லிங்கத்தை யணைந்து தாங்கி
  மாணிக்க மணிப்பீடச் சோதி யன்னை

234

உச்சியிலே யுன்மனியா யுயர்ந்தா ளன்னை
  உச்சிஷ்டக் கணபதியைக் களிப்பா ளன்னை
விச்சுவத்தை வேற்சுடரோ முனைமேல் வேலோன்
  விறல்காட்டி யமுதத்தேன் தெளிப்பாளன்னை

அச்சுதனு மறுசோணச் சக்ர பாணி
அவன்பின்னும் தங்கையெனத் துளிப்பா ளன்னே
இச்சகத்துள் யாவுமவ ளாட்டம் பாட்டம்
இவளுடனே யிணங்குவதே சித்தர் மார்க்கம்

235

மூலமடா காரணத்தை முற்றுங் காண
மூதாந்த முநிபவர்கள் துணையே வேண்டும்
காலமடா காலத்தைக் கடந்த சாக்ஷிக்
காலகண்டி யவள்கணவன் கங்கைச் சாமி
காலனையும் வென்றுகொளச் சாக்ஷி யானுன்
கருதுசிவ னேடிணைந்த மார்க்கண் டேயன்
காலனிடம் வரம்பெற்றுள் விதர்ப்ப கன்னி
கௌரியவள் விரதத்தால் காலம் வென்றுள்

236

காலனிடம் தான்சென்றுன் நாசி கேதன்
காலமிலாக் காலத்தின் கருவைக் கண்டான்
காலனவ னைக்கடந்தா னுஞ்ச னேயன்
கன்னியவள் சீதைமொழிக் கருணை கொண்டே
காலமடா தேசமடா கலந்து பொங்கும்
கர்மமடா வர்மமடா விஞ்ஞானிக்கே
காலமிலாக் காரணியாள் பூர ணத்தின்
கருவினிலே திதப்ரக்ஞன் சித்தன் சித்தன்

237

மண்சித்தி மனசித்தி மதியும் சித்தி
மண்புனல்தீ மாருதம்வான் யாவும் சித்தி
கண்சித்திக் கலைசித்திக் கனவும் சித்தி
கதிசித்தி விதிசித்திக் கதிரும் சித்தி
விண்சித்தி வெளிசித்தி விரிவும் சித்தி
வினைசித்தி நாட்டோன்க ளனைத்தும் சித்தி
எண்சித்தி எட்டெட்டாய் சித்தி யாவும்
எட்டிநின்றுள் கட்டிநின்றுள் சித்தன்தானே.

238

அணுவுக்கு ளணுவாகக் குறுகி நிற்பான்
அணுவுக்கு ளணுவுயிரா யமைவான் சித்தன்
அணுநேராய்ப் பிரகாச விந்து வானன்
அணுநிரையாய் விமர்ஸமுறும் விந்து வானன்
அணுவுன்திர் நிலையணுவாம் மிஸ்ர விந்து
அவைகள்வட் டாடுங்கற் பனையு மானன்
அணுவுக்குள் நாற்பத்து மூன்று கண்ணும்
அவைகாட்டும் ஸ்ரீசக்ரம் தானே யானன்.

239

அண்டாண்ட மகிலாண்டம் யாவுந் தாண்டி
அகண்டத்துக் கேயகண்ட மாகி நிற்பான்
கண்டாண்ட பூதமெலாம் கலியத் தானே
ககனந்த காரத்துக் கதிராய் நிற்பான்
கோண்டாண்ட ரவிமதிவான் கோள மெல்லாம்
கோத்தாண்ட மூதாண்டத் தப்பால் நிற்பான்
விண்டாண்ட வானகத்து விண்மீன் யாவும்
விரிவாண்ட மகிமாவின் மகிமைச் சித்தன்.

240

வெளியழுந்தம் தனையழுத்தி மேலே சென்று
விண்ணாகிக் காற்றாகி வெளியாய் நின்று
வளியழுத்தத்தால்லேசாய் வானத் தேறும்
வன்மையுளான் லகிமாத்தான் வாய்ந்த சித்தன்
துளியழுத்தக் கடுகையொரு மலையைப் போலத்
தூக்குநிறை யிற்கனமாய்க் காட்ட வல்லான்
அளியழுத்தத் தாலேவைக்கு மழுத்த மில்லா
தகமழுந்தாம் கரிமாவை யணைந்த சித்தன்.

241

நினைத்ததெலாம் நினைத்தபடி பெறுவான் ப்ராப்தி
நெறிகண்டான் குறிகண்டான் நிறைவான் சித்தன்
நினைத்ததெலாம் நினைத்தபடி செயும்ப்ரா காம்ய
நிலைநின்றுள் தலைநின்ற வவனே சித்தன்
நினைத்ததெலாம் நினைத்தபடி வியன் செய்வான்
நினைவுநடத் தும்வசித்வ நிலையங் கண்டான்
நினைத்ததெலாம் நினைத்தபடி படைப்பான் காப்பான்
நீக்கிமறைத் தேயருள்வா னீசத்வத்தால்.

242

அற்புதத்தான் சிற்பாத்தா னாசை யற்றான்
  அதிசயத்தான் விதிமறுத்தான் வினையை வென்றான்
கற்பகத்தான் காயகற்பன் கவலை யில்லான்
  கதிகண்டான் மதிகொண்டான் ககன மாள்வான்
அற்பகத்தான் விஞ்ஞானத் தனுவித் தைக்கும்
  அப்பாலா மனுவானா னகண்ட மானான்
சிற்பரத்தான் சித்திவரியாள் தன்னைப் பற்றிக்
  சிவனானான் செய்யாத செயல்கள் செய்வான்.

கடவுள் வைப்பு

243

காலமிலாக் கடவுளுடன் கலந்தான் சித்தன்
கடவுளே யில்லையென்றாற் கால மேது ?
காலமென வேதில்லாக் கதிதா னேது ?
கணுவேதிங் கணுவேது கருத்து மேது ?
ஓலமுறு முலகேதங் குயிர்க ளேது ?
ஓங்கிய விஞ்ஞானத்தி னுயிர்ப்பு மேது ?
சிலமுறு வேதுபவச் செயல்களேது ?
சிச்சிச்சி நாயாவான் தெய்வமில்லான் ?

244

நாயதுவும் நட்பதனுல் மேன்மை கொள்ளும்
நயமறியா மானுடனே நலிந்து சாவான்
பேயதுவும் மந்திரத்தால் வசப்பட் டுப்போம்
பேயாமைப் பித்தரடா மனித வர்க்கம்
தாயதுவா மீசனுக்கே கோயில் நோயில்
தலைவணங்கான் தான்தோன்றித் தயவற் றேனே
நாயறியும் பேயறியும் நாய கன்பேர்
நாரணனுர் பாதத்தை நம்பு வோமே.

245

நீதியெல்லாம் நெறியெல்லாம் நீங்கிப் போக
நிண்ணயங்க ளவைமாறி நிலைகெட் டோடச்
சாதிமத பேதமெலாம் தான்மிக் கோங்கத்
தர்மமெலாம் கர்மமெலாம் தனையற் றேங்க
ஓதுறுமந் தணரொழுக்கம் உருந்துச் சாக
உலகமெலா மகங்காரத் தோடுங்கி வேக
ஆதரவா மாத்திகமும் மறைந்து போகும்
அப்பப்பா நாத்திகந்தான் வெறிகொண் டாடும்.

246

ஆத்திகந்தான் மறைந்திட்டா லினி யுள்ளோர்
ஆணவத்தி லுகெட்டுப் மனுசா சுரா
ஆத்திரமாங் கொடுங்காமம் க்ரோதம் லோபம்
ஐயையோ கடுமோஹம் மதமாச் சர்யம்

நித்திறமே வாழ்வெல்லாம் செயற்கை யாகும்
ஜெனனத்தை யுந்தடுக்கச் செப்பும் கய்யும்
சூத்திரந்தான் கலியாட்டும் பொம்ம லாட்டச்
சூக்கமதைக் கண்டுமுறு வலிப்பர் சித்தர்.

247

மண்மீது நிற்கையிலே மலைமிக் கோங்கும்,
மலையுச்சி மேல்நிற்க மண்தான் வீங்கும்
என்பதவி யேணியிலே யுச்சம் பெற்றேன் ?
இரக்கமிலார்க் கிசனரு ளில்லை யில்லை.
கண்மணியின் கண்மணியாம் கடவுள் பாதம்
கண்டுமறு பிறப்பொழிக்க வல்லா ரில்லை
விண்முழுதாள் வேதநெறிச் சித்தர் சொன்னார்
விஞ்ஞான மதற்குந்தான் விளக்கம் சொன்னார்

248

ஒன்றொன்றாய் மாறுமெனில் மாற்றி னூடே
ஒன்றாகி யூடுருவிச் செல்லும் தெய்வம்
அன்றின்று யப்பாலாம் காலத் தூடே
என்றென்று மின்றாகி யிருக்கும் தெய்வம்
மன்றென்றும் நாடகங்கள் பலவாம் சாட்சி
வண்ணங்கள் பாத்திரங்கள் வந்துபோவார்
மன்றதுதான் நாடகந்தான் நடிப்பவர்தான்
வண்ணங்கள் பார்ப்பவர்கள் யாவு மீசன்

249

கண்ணுக்குக் கண்ணுவான் காட்சியாவான்
காண்பவனும் காண்பதுவு மவனே யாவான்
எண்ணுக்கு வொன்றுவா னெண்ண மாவான்
எண்ணுபவ னெண்ணுபொருள் யாவு மாவான்
மண்ணுவான் தண்ணுவான் மாந்தி யாவான்
வளியாவான் வெளியாவான் வண்ண யாவான்
பெண்ணுவான் ஆணுவான் பேடி யாவான்
பேச்சாவான் பேச்சற்ற பெரியோன் தானே.

250

அதனதனு ளதுவதுவா யதனுக் குள்ளாய்
அப்பாலா யப்பாலைக் கப்பா லப்பால்
இதுவிதன திதுவிதுவே யிதனுக் குள்ளே
இப்பாலைக் கிப்பாலா யிப்பா லிப்பால்
எதுவெதன தெதுவெதுவாய் என்று ஆந்தான்
எல்லாமாய் யல்லாதாய் எங்கு மாகி
கதிவிதியைக் கடந்துநின்ற கார ணத்தின்
காரணத்தால் கதிவிதியும் கடவுள்தானே.

251

சுத்தமுறத் தவஞ்செய்வா ரில்லை யில்லை
சொருபமுட னுருபமதைக் கண்டா ரில்லை.
சித்தசித்துத் தத்துவத்தைத் தேர்ந்தா ரில்லை.
செப்புமரிச் சந்திரனாய்ப் பிறந்தா ரில்லை
சத்துருவை மித்துருவைக் கூர்ந்தா ரில்லை
சகரவிக ரக்கருவை யோர்ந்தா ரில்லை
சத்தசத்தை பிரித்தென்றும் சதுரரில்லை
சட்டுவத்திச் சாதனையைச் சார்ந்தாரில்லை

252

எத்தனைதா னிருந்தாலு மென்னே யென்னே
இருக்குமிட மிருப்பிடமா யில்லை யென்றால்
எத்தனைதான் சிந்தித்தும் பயன்தா னென்னே
இறையளவும் மோனநிலை யில்லை யென்றால்
எத்தனைதான் வந்தித்தேன் நிந்தித் தென்னே
ஈசனரு ளாங்கவச மில்லை யென்றால்
அத்தனையும் பாழாகும் நந்த னென்பாய்
அவனருளால் பாவமெலாம் விலகிப் போமே.

253

ஆமப்பா காமத்தை யகற்றிப் போட்டு
ஆ[illegible] [illegible]ழுவார்க் கச்ச மில்லை
தாமப்பா கருத்தின்றிக் கடவுள் பாதம்
தான்பணிவான் கணவனிலாத் தவ்வை யொப்பான்

46

நாமப்பா மருக்கொழுந்து மணத்தைக் கட்ட.
நவசிவய மாந்தொடர்தூற் றெட்டும் காணே
வாமப்பா வாமியபி ராம வல்லி
மர்மத்தே தர்மத்தை வளர்க்கின் றனே.

254

நீதிமான் கைக்கூலி பெற்று நீதி
நியமத்தை யேயுதைத்து நெறியைக் கொல்வான்
வாதிமான் வக்கிலும் பீசுக் காக
வாதிப்பான் பொய்மெய்யா வாதிப் பனே.

கோதுவான் கோமான்கள் கோனின் வேந்தர்
குத்திரத்தார் குவலயத்தைக் குமைக்கின் றரே
ஆதிவா ஞன்டவனர் பாதம் போற்றி
அறநெறியி லேநிற்பார்க் கனைத்து மாமே.

255

அபாயமடா மர்மமுறும் கர்ம மார்க்கம்
அச்சமடா துச்சமடா உலகத் தோர்க்கே
சபாயமடா வீண்பேச்சு வாயாரட்டல்
தரணியுளோர் தலைவனெனச் சாற்று வாரே
உபாயமடா உனக்குள்நீ உண்மை கண்டால்
உலகத்தின் கோட்டமெலா மொன்று மில்லை
சிவாயமடா சிவசக்தி விளையாட் டாதல்
சிவசிவா யாவுமுந்தன் வசமாய்ப் போமே

———

இல்லற வைப்பு

47

256

தனையின்றன் தன்னுடனே தாய ரைவர்
தாய்வாணித் திருவுமையாள் வாலை ராணி
தனையின்றன் தன்னுடனே தந்தையைவர்
தனையின்று வயனரியே ருத்ர னீசன்
தனையேன்ற மூலிகையே சுழனைத் தும்பைத்
தழைதுத்தித் தூதுவளைத் துளசி யைந்தே
தனையேன்ற மந்திரந்தா னைந்தெழுத்தே
தனையோத வைந்துவகைக் கற்பம் காணே

வேறு

வல்லார் தமக்கும் அல்லார் தமக்கும்
நல்லார் தமக்கும் நல்லாரை
கல்லார் தமக்கும் எல்லார் தமக்கும்
கனிவான கற்பம் வல்லாரை

258

ஒரு வேளை போகி யிருவேளை யோகி
ஒரு மூன்று வேளை யவன் ரோகி
உருவான போஜி யுடனுன போகம்
உடல் கூடவென்றும் தளராது

259

பசிவந்த போது புசியைக் களைந்து
புசியேன்ற போது மது யோகம்
புசி கண்டபோது பசியைக் களைந்து
புசி யேன்ற போதமது சோகம்.

வேறு

இறையவன் கோயில்கான இறைதன மறியவேண்டும்
இறையவன் ஞானமென்று மென்றென்றும் சுயம்ப்ரகாசம்
இறையவன் சக்தியெங்கும் இணைந்திணை யாதுநிற்கல்
இறையவன் வலியெவைக்கும் பாவையுழ் தாங்கும்விறு

261

கர்த்தனே கட்டில்லாதான் கற்பனை கற்பிப்பானே
அர்த்தனே யெவையுமுந்தா னசைவிலான் மாறன்றித்யன்
கர்த்தனே வைஜத்தானே தர்மகர் மங்கள்வேண்டான்
திர்த்தனே திர்ந்தமில்லா நிமலறு னந்தசத்யன்

262

வேண்டல் வேண்டாமை யில்லான் விருப்பிலான் விருப்பினுள்ளே
வேண்டினுர் தவத்தினுள்ளே விச்சையா மிச்சையாவான்
வேண்டிய பரிதாகங்கள் விதிகாண் மாணத்திற்கே
வேண்டுத லற்றயில்லோன் வாழ்வினில் விளக்கமாவான்

263

வாழ்பவன் வாழ்விப்பானே வாழ்விலர் வாழவாழ்வான்
வாழ்விலே வலிமைகாண்பிர் வாசியே வாழ்வின்வீறு
வாழ்வதே யிறையின்வாழ்வாய் வாழ்மனைத் தரையேமன்னுய்
வாழ்மனைக் கூரைவானுய் வாழவே வழிசொல்வேனே

வேறு

அப்பனே பொன்நகட்டின் நடுவிலேதான்
அழியாத சுழிவட்ட மதனைப்போடு
செப்பினே னடியொட்டி மதியில்நின்றே .
சேர்த்தறுபத் தறுகோணச் செப்பிடாயே
ஒப்புமா றங்குலந்தான் கோணக்காட்சி
உற்றதரை யங்குலந்தான் சூலநீட்சி
கொப்புடன் காத்தாயி யவள்தம் நாமம்
கோப்பேகாட் சரத்திவெழுத் தாணிபூசை.

265

எழுத்தாணிப் பூசையதற் கிளநீரொன்றை
எடுத்துவந்து தோலகற்றிக் குடுமிநீக்கி
மழுத்தான துளைசெய்தே யெழுத்தை நாட்டி
மற்றென்னே யிளநீரா லாட்டிப் போற்றி
கழுத்தாணி மங்கலத்தான் தூபங்காட்டக்
கண்ணுணி யாக்கொண்டே கண்ணிலொத்தி
வழுத்தாணிச் சக்கரத்தைச் சுற்றிவேத
மறையெழுத்தை யேயெழுதச் சத்துசித்தாம்

266

சத்தான சிவமயமே சித்தாம் விஷ்ணு
சித்தான விஷ்ணுமயம் சத்தாமீசன்
முத்தான ரேபமிட்டுச் சிவன்மால்மாறி
முன்பின்று யிடவலமாய் வாலிற் சேர்த்து

48

கொத்தான வாமியபி ராமியன்னைக்
கூத்தான வெழுத்தெல்லாம் கோணங் கோணம்
வைத்தேதான் வாலைதனைப் பூசைசெய்தால்
வாழ்வெல்லாம் தாழ்வில்லா வளமாய் பாரே

267

தேவியடா திரிசடையாள் தெய்வத்தாயார்
ஸ்ரீமாதா திரிபுரைதான் லலிதாவுக்கே
ஆவியடா முன்றா று மதனைச் செப்பு
அப்பாலா யிரத்தெட்டை நேர்மா றுகப்
பாவியடா பாவித்தால் பாவம் போதும்
பாக்யமடா ஸ்லாக்யமடா யோக்யம் பாக்யம்
மேவுமடா மேவாதும் மேவும் மேவும்
மேன்மையடா வாய்மையடா விரைந்து செய்யே

268

மனைவியிடம் பொய்யன்றி மெய்யாய் நின்று
மண்ணகத்துக் கடியான தர்மம் செய்து
அனைவருடன் இனிதான மொழிகள்பேசி
யாவருக்கு முபகார மாகநின்றல்
அனைநிறுரு மருளாகக் கலந்து நிற்பாள்
அகண்டபர மேல்வழியு மருள்வாள் உந்தன்
மனைவாழ்வில் மங்கலமே பெருகியோங்கும்
மாதாவைப் பூசிப்பார்க் கிடரேயில்லை.

269

கோணமுனைக் குலத்து முகமைந்தாகக்
கோடிட்டே யைந்தெழுந்தோ டோமினைத்த
தானுவினை நேர்நிரையாய் மாற்றிப்போட்டு
தன்மனையா ளுடன்கோப தாபம் நீங்கி
வேறுமடா கோதான முடன்பல் தானம்
விரைந்தாற மறுபதுக்கும் வேறு வேறாய்
பேறுமடா கொளுந்த ரெழுத்தெட்டுக்கும்
பெம்மானுங் குமரனுடை யெழுத்தாறுக்கும்

270

கோசாரப் பசுபதியி னெழுத்தைந்துக்கும்
  தலைபதியாங் கணபதியி னெழுத்து நான்கும்
பீசாக் கோபதிக்கு பீஜம் பின்னும்
  மேவியுடன் சங்கங்கேள் றேற்றியின்ப
மாசாத் திருமகட்கே யோமென்றேறி
  மாறிவந்து பூசைசெய மதியாங் கண்டீர்
ஆசாரம் பூசார மனைத்தின் சாரம்
  அப்பப்பா யிவ்வார்வான் நல்வாழ்வானே

271

கோட்டையடா ஸ்ரீவனைகள் கோட்டம் போட்டே
  கோட்டையுறும் வயிலெட்டுக் கோணத்தன்னில்
வாட்டமற வாயிலிலே காவலாக
  மாதாகா யித்திரிய வித்தியன்னோ
கேட்டையெலாம் நிக்கிடுவள் கேட்பதெல்லாம்
  கேடியான நொடியினிலே கிடைக்கச் செய்வாள்
கூட்டிடுவாள் கூடாத யன்களெல்லாம்
  கூட்டுவியாள் நாட்டுவிப்பாள் கோமளத்தாய்.

49

மந்திர வைப்பு

272

ஓங்காரக் மூலக் கணபதியை ஓங்கியளந்துச் சிட்டமுழும்
   ரீங்கார மோனக் குண்டலியை ராங்கார ரேகைக் குள்ளோட்டி

பாங்கான நெற்றிக் கோயிலிலே பண்பான லால றவெளியின்
   மீங்கான கைலை மேலேற விண்ணுன மந்திர மோஹனமே

வேறு

ஓமென்னும் ஓரெழுத்தே எவைக்கும் மூலம்
   ஓமுக்குள் மூவெழுத்தாம் ஊமையொன்றும்

ஆமென்னும் அகரமடா பரமானந்தை
   அகண்டபரி பூரணமாம் ஆட்சியாகும்

ஊமென்னு முகரமடா உருவமாகும்
   உயிர்ப்பாகி எட்டிரண்டா யோடும் ராடும்

மாமென்னும் மகரத்தின் மெய்தான்நின்ட
   மாயாத மாயையென வளரும் கண்டாய்.

274

ஊமையெழுத் தொன்றுளதாம் உள்ளுக்குள்ளே
   உண்மையெழுத் தேயதுவாங் குருவைக்கேளு

ஆமையெழுத் தாயடங்கி மடங்கியப்பால்
   ஆணவமா மலஞ்சுட்டே யாறதாரந்

தூமையெழுத் தைம்பானென் றனமாத்ரைத்
   துரிசறுத்துக் கோடிமணிக் கோயிலுள்ளே

வாமையெழுத் தானமனேன் மணியென்றுத்தான்
   வைரவியைப் பணிந்திட்டால் சித்தம் சித்தி

275

ஓம்மூன்று பதம்பூமி புவனம் ஸ்வாஹம்
   ஓமேதான் தத்தாகும் சத்துமாகும்

ஓம்தத்சத் ஸவிதுர்வ ரேண்யம் ஓம் ஓம்
   ஓம் பர்க்கோ தேவஸ்ய திமஹிம் ஓம்

ஓம்தியோ யோநப்ர ஜோதயாத் ஓம்
   ஓம்ஏழு புவனத்தால் வாசியேற்றி

ஓங்காரக் காயத்திரி மூடிபோட்டு
   ஓடபோ ஜ்யோதியென வாசிமாற்றி .

50

276

ஒன்றதனை மூலத்தி லோடவிட்டு
ஒன்றிரட்டி ஸ்வாதிட்டத் தூடேதாக்கி
ஒன்றென்றென் றென்றுமணி பூரத்தோட்டி
ஒன்றெட்ட னாஹதத்தி னுள்ளே விக்கி
ஒன்றிரண்டெட் டதைவிசுத்தி யாற்றி யப்பால்
ஒன்றீரெட் டிரட்டியதை யாக்ஞைக் கேற்றி
ஒன்றெட்டெட் டதைநாதத் தோச்சிக் கும்பத்
தூற்றவனைக் காயத்ரி யுநவிட்டேபின்

277

ஒருமிச்சம் தனையுச்சிச் சிகரத் தேற்றி
ஓயாம லோய்ந்துநின்றே ஜெப முடித்தால்
கருமிச்சம் கனலுடைய கண்டம் கண்டம்
கருத்தென்னும் சுடர்ப்பரிதிக் கண்டம் கண்டம்
அருமிச்ச மாஞ்சோமத் தமிர்த கண்டம்
அப்பாலாம் மின்கொடியின் கண்டம் கண்டம்
தருமிச்ச மலைதாண்டித் தாரை தாண்டி
சர்வரி பூரணத்தைக் கூட லாமே.

278

அத்தனனே காயித்ரி யமைப்பைக் காண்பான்
அதற்குள்ளே ஸாவித்ரி யொளியைப் பூண்பான்
அந்தமுறுஞ் சரஸ்வதியின் முடிமே லேறி
அநிருந்த மாமாத்யா தன்னைப் போற்றும்
இந்தவித மிதைச்செய்வா னுலகந் தில்லை
இதுசெய்தால் சித்தனடா சித்தன் சித்தன்
தொந்தமிலாத் தூயனடா ப்ரஹ்ம ஞானி
துன்பறுசந் த்யாதேவிச் சூக்கந் தானே.

279

சூக்கமடா சூக்கத்தின் சூக்கம் சூக்கம்
காயத்திற் சுலபமடா அஜபை யென்றும்
ஆக்கமுயர் காயத்ரி யதனைச் சொல்வேன்
ஆதியந்த முங்கடக்கு மமர வித்தை

நோக்கமடா பீடறிக்கண் நுதற்கண் நோக்க
நுணுக்கமடா வுண்ணுவி லன்று வான
தூக்கமடா தூங்காமற் தூங்கி ஞானச்
சுடரொளியாம் சகஜநிலைப் ப்ரம ஹம்சம்

வேறு

இயமத்திரு நியமத்திரு இடரற்றிட வேதான்
தயமுற்றிந தருமத்திரு ஸகஜத்துற மேலும்
இயலுற்றுள பதுமத்திரு இழையிற்கிழை மின்னல்
வயமுற்றிடு நெருவிற்செல வசிபற்றிடு வாயே

வேறு

வசிசிவ வாசி வசங்கொள வேதான்
உசிதம தூசி முனைச்சுழ லைக்கே
நிசிதவுஸ் வாசநிஸ் வாஸநி ரோதம்
இசிபசி நசிமசி யிளைவயிலை யாமே

282

மதிவளை மதிபதி மதமுறு மமுதம்
துதிபெறு சிவநதி யதுபெற கிடவே
கதியுறும் சதிசெயும் விதிவினை யறுமே
அதிசய முறுசிவ வதியருள் தருமே

233

சிவவசி வசிசிவ வசிகண பதியே
சிவசிவ சிவைசிவை யருளயன் விதியே
சிவதிரு வசிமக ளுடனரி யருளே
சிவநெறி குறிநிறி நுநிரை நிசையே

284

சிவைமக சிவனொளும் கணமுறும் வசியே
சிவைசுதி சதசித் கதிகொளும் புரியே
சிவைநத ரதவினு சிரமதி சிகரம்
சிவைதரு மஜுமையின் திருமணி வகரம்.

51

வேறு

சோகந்தவிர் வேகங்கொள சோகம் மதுசோகம்
சாகம் சிறைவயோகம் பெரும்சோகம் சிவயோகம்

மோகந்தவிர் மோகங்கொள்வி மோகம் மதயோகம்
ஆகந்தனி லேகந்தனி யாகுஞ்சய் யோகம்

286

சாகாத்தலே வேகாக்கலே சாராநடு வாகும்
ஏகாக்கிர மாஜாக்கிர வாகரக்ரம ராகம்

போகாப்புனல் புகுதாக்கனல் மீகாச்சுட ராகும்
ஆகாவளி மோகாக்களி யானந்தவை போகம்

வேறு

ஒருகாலு மொருகாலும் மறுகாலி லேற
ஒருகையு மொருகையும் மறுகாலி லேற

இருபாலும் எதிர்பாலும் சரியாத தண்டம்
குருநாடி மினலுடு குருநாத விந்தம்

வேறு

ஹம்ஸமடா ஸோகம்டா ஹம்ஸஸ் ஸோகம்
அகந்தையகன் றிடும்பரமா ஹந்த யோகம்

ஹம்ஸமடா ஸாகமடா ஹம்ஸஸ் ஸாகம்
அம்பகனு மம்பிகையும் அணைவை போகம்

ஹம்ஸமடா பரமஹம்ஸ ஹம்ஸஸ் வாஹம்
அனந்தநவா னந்தபரா னந்த யோகம்

த்வம்ஸமடா பாவமெலாம் ஸ்வம்ஸ ஸ்நேகம்
ஸ்வம்ஸமடா ஸகஜமடா ஹம்ஸ நாகம்

289

ஸங்கென்றே பூரித்து வாசி வாங்கி
ஹங்கென்றே ரேசித்து வாசி நீக்கி

அங்கென்றே கும்பித்து வாசி வீங்கி
உங்கென்றே யூசிமுனைக் குள்ளே யோங்கி

மங்கென்றே மதிப்பாலுன் மந்தம் நீங்கி
வங்கென்றே நாதமுடிக் கப்பா லோங்கிச்
சிங்கென்னச் சிவமாகும் சக்தி யாகும்
சிவசக்தி யாம்நம்மைத் தேல்லாம் சித்தி

290

சித்தியெலாம் சித்தியடா அம்பலம் லோகம்
சிகரத்தி லோகத்தில் சிவசம் யோகம்
அத்துவித மாயிருக்கும் ஆன்ம போகம்
அன்னையநா னாலுள்ளத் தேகிவோ ரும்
சித்தத்தி லோகம்சத்தி வாகம்
தத்தோத்த தத்துவத்தின் தலைமை ஏகம்
மித்தையெலாம் நீங்கவரும் மேல்வை போகம்
மின்கழியாய் மின்பிறையாய் விளைவம் போகம்

291

ஒருநூற்று நாற்பத்தி யொன்றே கோடி
உற்றிருமாம் பத்துமூன் றுன லக்ஷம்
ஒருமேதநற் பன்மூவை யிராயிரத்தி
தசையுறுபா புராயிதோர் மண்டலந்தான்
இருபத்தொன் றயிரமுநாற் றதனைமூலத்
தேற்றியிரட் டித்திரட்டித் ததன்மேன் மேலே
திருமூலர் மந்திரட்டம் மணிகற் பூரம்
திருமுறை நதர்விசுத்தி யாக்குரு யாரே

21600

292

அப்பாலே லாலறுப் பிறையைப் பற்றே
அதற்கப்பால் சதுரஸ்த்ர திடையே விந்தாம்
முப்பாலே முக்கூடத் துள்ளே நாதம்
மூர்ச்சனையாம் ரோதினியைப் பற்றிக் கொள்ளே
உப்பாலே மாறதிரியாம் ரோபம் ரேபம்
மாத்தி லேநந்நாம் பௌதிக கால்
மெய்ப்பாலே ஸ்நங்கடமாய் கைலா சந்தான்
மின்னுன என்வாலைப் பொன்னும்வீடே

52

293

பொன்றான வீட்டினிலே போத யோனி
புகலிதாம் மணிலிங்க மான்ம ஜோதி
என்றுறு ளவளே நா னெனவு மானுன்
என்னுள்ளே யானுன் எனையு முண்டே
நன்றானன் தானான் தனிமை யானன்
தனிமலான் சித்தத்தே சத்தோ நிற்பான்
மின்றான னெனையுந்தான் சிவமாச் செய்தான்
மேவுமக ண்டக்களியாய் மிளுக்க லானுன்

294

சித்தியடா சித்தினியன் சித்த வாசி
சிப்பியிலே முத்தமடா முத்தித் தாயர்
பித்தியடா பித்தமெலாம் போக்கும் பேயன்
பித்தனெனைப் பித்தாக்கிச் சித்த றுக்கி
மத்தியடா மதனைப்புக் கனிந்து சொக்கும்
மத்தனுடன் விளையாடும் வாலைப் பெண்தான்
சக்தியடா பத்தினியான் சர்வ லோகத்
தாசியடா வேசியடா வாசிக் கன்றான்

295

முதாக்கேறும் தண்டென்னும் மத்தைக் கொண்டு
முன்பின்னும் வாசியெனும் கயிற்றி னலே
முதுநயிராம் பழவினைகள் கடைந் தெடுத்த
முத்தியெனும் வெண்ணெயினால் புதுமை தன்னி
விதியதுவாம் காலனையும் உதைத்து மேலே
விண்ணுரை வேதாந்த வெளியைக் காண
இதமுடைய தாமஜபா மந்திரம்போல்
இவ்வுலகில் வேறேது மில்லை யில்லை

296

இல்லையில்லை சாவுமில்லை தாழ்வுமில்லை
இல்லையில்லை நோயில்லை நேடியுமில்லை
இல்லையில்லை தொல்லையில்லை துயரமில்லை
இல்லையில்லை நோக்கியில்லை துன்பமில்லை

இல்லையில்லை விதியுமில்லை விளையுமில்லை
இல்லையில்லை யாதுமில்லை யேதுமில்லை
இல்லையில்லை யென்றுகழித் திட்ட எல்லை
இல்லையில்லை யென்றிருக்கு மிருப்பே ஞானம்

297

காலனவன் நடப்பதெந்தக் காலினாலே
கால்வாசி யாங்காலே காலன் காலாம்
காலினையன் றுக்குண்ணுக் கேற்றிக் கப்பி
கல்லினையும் தேரையங்கே கால னில்லை
காலினையும் மெய்யத்தே வாலைத் தூக்கி
கண்ணையதோ முகம்வைத்த பாம்பைந் தாக்கி
வேலினையும் தண்டினிலே செலுத்தி விக்கி
வேலகரம் பிடறிக்கண் றாடே தூக்கி

298

காலமிலாக் கோடிவட்டக் ககனத் துள்ளே
காலனையே விழ்த்திவிட்ட கைலா சத்தின்
வாலையுடன் விளையாடித் தெய்வ மாகும்
வழிவாசி யாமஜபா மந்த்ர மார்க்கம்
காலதைநா லெட்டென்னும் கதியில் வாங்கி
கணக்கதனை யிரெட்டுக் கதியில் நீங்கி
காலதற வேமதியின் பிறையில் விங்கி
காலமற்ற பிந்துமணிப் பிடத் தோங்கி

299

வாசியதை நிலைநிறுத்தி ஹம்ஸ மாக்கி
வாகான பரமஹம்ஸ மிதுனத் தோச்சி
மாசறுமெய்ஞ் ஞானத்தி லேக மாகி
மாதாவின் சித்தமணி வைப்பில் நின்று
ஈசனென வேயட்ட சித்தும் மாடி
[illegible]
பாசமறுத் தெக்காலும் நிட்ட னாகிப்
பாருலகி லேசரிப்பா னவனே யோகி

300

மூவேழா யிரத்தறுநூ றுக நித்தம்
முயல்பவ னிரறுபானுண் டுலகில் வாழ்வான்
மூவெட்டா யிரமுப்பான் கொண்டா னாகில்
மூவறுபான் வருடங்க ளுலகில் வாழ்வான்
ஈரேழா யிரநானூ றுக வாசி
ஏறிடுவான் மூவறுபான் வருடம் வாழ்வான்
ஒரேழா யிரத்திருநூ றுக நிற்கில்
உத்தமனே யாயுள்முன் னூற் றறுப தாகும்
ஒரேழா நூற்றிருபான் வாசி யுண்பான்
ஒருமூவா யிரத்தறுநூ றுமூலன் காண்

301

வாசியினைப் பிறையார விட்டோன் வாழ்க்கை
வயதிரெட் டாயிரமாம் வளமை காணே
வாசியினை பிந்துமணி யாக்கிக் கொண்டான்
வயதறுபத் தாயிரமாய் வயங்கு மென்பார்
வாசியினை நாதாந்த வசமாக் கிட்டான்
வயதுகணக் கில்லையடா வாழ்வான் வாழ்வான்
வாசியினை யுன்மணிக்கே வாத்தா னப்பா
வானமரன் நித்யசிரஞ் சீவி தானே

302

சோகமடா சோகமெலாம் நீநம் நீநம்
சாகமடா சாகாத தலைமைக் கேதும்
போகமடா சிவபோகம் சக்தி யோகம்
போதாந்த வேதாந்தம் புதுமை போகம்
யோகமடா ஊமத்தா னுமையாள் யோகம்
உன்மணியின் சையோக முமை யோகம்
ஏகமடா ஏகாந்தத் தேறி யீசன்
இன்பமடா அநுபாவி யியல்பைச் சொன்னேன்

303

[illegible] மகிமை [illegible]
[illegible] மார்க்கம்
மாயோட்டும் சிவயநமச் சூக்கம் சூக்கம்
மற்றென்னே சிவயசிவம் காரணந்தான்

பேயோட்டும் சிவயசியம் மனுவாம்தாரம்
பெயருக்கு விச்சகர மிகர மிவ்வா
நாயோட்டும் மந்திரந்தான் பூரணங்காண்
நாலேழெட்டும் முச்சிகரம் நாதம் பிந்து.

304

அஞ்சக்க ரத்திறுடை யுளவு சொன்னேன்
அந்நுடனேம் கூடிவரு மாறெழுத்தே
அஞ்சக் கரத்தானுக் கெட்டெழுத்தே
அதுநானும் நமநாரா யண மென்றேதே
அஞ்சக்க ரத்தனுடை யோமைம் மௌம்லம்
ஆமின்றி தான் நமசு மாராயண்றிம்
விஞ்சங்த லச்சரவ னுயபவ வோம்
விறல்பாவும் சக்திதநம் வியப்பே கண்டீர்

305

சக்தியடா சத்துசித்தா னந்த மாதா
சர்வமடா நர்வமடா சகஜந் தாயர்
சித்தியடா சித்தமெனுங் கோயிலுள்ளே
சிந்தையெனும் நிலினுள்ளே சிரசின்மேலாம்
சிந்தமணி பீடத்தே சித்தத்துள்ளே
சித்தாந்த மாந்திவத்தி விதபப்பூவில்
பந்துமாம நாகவந்த பாலே யாத்தாள்
பத்தைதபடா பரிபூர்ணப் பயனுந் நேர்க்கே

306

காலமெலாம் தேசமெல முனவாக் கொண்டு
காலத்தை யுன்றுமிழ்வான் கால காலி
காலனுக்குங் காலனடா கன்றுஞ் சாமிக்
காதலேனப் பெற்றெடுத்தாள் தங்கை பாதுள்
காலனைக்கொல் காலனுக்கே மகளாய் வந்தாள்
கைவராயக் கனைவனைக் கலந்து கொண்டாள்
வையைக் காலமெலாம் காலும் நிற்பாள்
கனமேலாம் பெற்றெடுத்தும் கன்னி யாவாள்

307

கணபதிக்கு வல்லபையாய்ப் புத்தி சித்திக்
கன்னியராம் கணபத்ய மாளு என்னை
குணநிதியாங் குமரனுக்கு வள்ளிதேவ
குஞ்சரியாங் கௌமாரி யாளு என்னை

வணமுகப்புப் பிரமனுடை நாவில நின்றே
வாணியென வேதத்தைப் படைத்தா ளன்னை
பணமுகப்பிற் பள்ளிகொண்டான் மாலின் நெஞ்சப்
பதுமத்தில் வைணவியாய் நின்ற ளன்னை

308

உக்ரமிக்க ருதிரத்தான் ருத்ரனுக்கே
உக்கார ரௌத்திரியா யுற்ற ளன்னை
விக்ரமத்து மாகேசன் நெற்றிக் கண்ணின்
விக்ரமியாய் மாகேசி யாளு என்னை
அக்ரமத்த நிக்ரமித்த சதாசிவத்தின்
ஆள்முடி மனோன்மணியாய் நின்ற ளன்னை
எக்ரமத்து மெட்டாஉள் மணிக்குள் ளேதான்
எகராக ரந்தாண்டி யிருப்பா ளன்னை

வேறு

கதிரச்சி மதிமச்சி சேச்சி மாச்சி
கனகக்கு நச்சிகுக் ரச்சி பேச்சி
விதுரச்ச விச்சிய வச்சி வாச்சி
மேடமிட பச்சிமித்து வச்சி யலவன்
சதுரச்சி செயச்சி கன்னி கைச்சி
சரந்து லச்சிநே ளச்சி வில்லில்
அதிரத்து மாச்சிமக ரச்சி கும்பத்
தப்பிச்சி மீனச்சி தப்பிச்சியே

310

அங்கங்கு மிங்கிங்கும் தங்கச்சியே
அல்லல்ரு மெல்லெல்லாம் கங்கச்சியே
அங்கங்க ளங்கங்கே ளக்கச்சியே
அஞ்சம்பு மஞ்சம்பி ளம்பச்சியே

வங்கங்கள் வங்கிட்ட வங்கச்சியே
வானங்கள் மீனங்கொள் கங்கச்சியே
எங்கெங்கு மாய் நிற்கும் துங்கச்சியே
யாவுள்ளு மென்னுள்ளும் பொங்கச்சியே.

311

அந்தங்க ரும்பள்ளி யம்படச்சி
அதனோடு பாசாங் குசத்திமச்சி
விந்தமலை வேடச்சி யாடகச்சி
விண்ணிமய மாமலைம லைச்சியச்சி
சந்தப் பறச்சி வான்பம்பரச்சி
சப்பரச் சதுரச்சி பப்பரச்சி
அந்தரத் தம்பரத் தாசரிச்சி
அப்பிச்சி குப்பிச்சி சுப்பிச்சியே.

312

வாணிச்சி யான்ம விலை வாணிபச்சி
மத்த மாயஞ்சா கவுண் டச்சியே
ஊணிச்சி யூமச்சி ஓம் வலைச்சி
உற்றசிவ மதுரத் துழத்தி கைலை
மாணிச்சி யவ்வள்ளு வச்சி ஞான
வடுகச்சி யேகச்சி வக்கச்சி விண்
காணிச்சி கர்ம வண்ணாத்தி திக்கின்
சேணிச்சி சிகரச்சி வகரச்சியே

313

சிரகச் செட்டிச்சி மாகலைச்சி
திருவள்ளி யாங்குறத்திக்கு மாமி
மாரகத் தொட்டிச்சி மாமறத்தி
மாலிதய மேறும் துரைச்சி சித்தத்
தேரகத் தொட்டச்சி சிரமணிச்சி
எவருமறி யாதொளிரும் மின்னிடைச்சி
காரகக் கொட்டச்சி கண்மணிச்சி
கமலச்சி விமலச்சி அமலச்சியே

314

மூலச்சி மூலத் துருக்கச்சிமும்
  மூலக்க ருச்சிசம் மூல வாச்சி
காலக்க ளிச்சிசக லச்சி மூன்று
  கண்ணிச்சி கோங்கைச்சி கற்பகச்சி
வேலச்சி மேலச்சி வெளி இடைச்சி
  வேதாந்த மானபாப் பாந்தி கன்னிக்
கோலச்சி யைம்பிள்ளைத் தாச்சிரும்ப
  கோணச்சி மாணிச்சி யம்மணச்சி

315

குலச்சியரு லச்சிகோ லாகலச்சி
  குலாகுலக் கொங்கணைக் கோமளச்சி
பிலச்சியே பிந்தம் பிலேச்சு பூஜை
  பெற்றுக் களிச்சியுள் ளத்தோளிச்சி
கலச்சிநா தாந்தமுடிக் காரணச்சி
  கட்டளைக் கடகச்சி கங்கணச்சி
மலச்சிமன மற்றமலை வாழ்மணிச்சி
  வாலச்சி வெள்ளிதய மாலச்சியே

316

சித்தர்பல ரிருந்திட்டா ரின்றுமுள்ளார்
  சித்திமிகப் பலசெப்பிச் சேர்ந்தார் நின்றார்
சித்தரிலே கடைச்சித்தன் யானும் வந்தேன்
  சித்தாந்த மணிமுடியின் சிரத்தே நின்றேன்
அத்தனைக்கும் தாயாவா ளெவைக்கு மன்னை
  அடியேனை யாட்கொண்டா ளனைத்து மானாள்
சித்திவிளையச் சிவன் முதலாச் சித்தரெல்லாம்
  சேவித்த மறையாவுஞ் செப்புவேனே

317

[illegible] [illegible] [illegible] வித்தை
  ஓம் தந்சத் தேனச்சிவதா ரணியின் வித்தை
ஓம் சந்தித் தேனச் சிவமா ளரியின் வித்தை
  ஓம் சச்சி தானந்தச் சிவமா வித்தை

ஓம் ஃஸ்ரீம்க்ரீ மௌச் சிவமோ ஹ்ஸிரீயின் வித்தை
ஓளமம் மைம் மௌச்சிவ வாணிக்காம் வித்தை

ஓம் கம் கம் மௌச்சிவ ப்ராஹ்ம் மணியின் வித்தை
ஓம் சங்சங் கௌச்சிவசங் கரியின் வித்தை

318

விம்லயமாம் கம்முதயம் லிங்க சூக்கம்
வம் முதலா ஹம் வரையே பூத சூக்கம்

அம்மா மிம் மிமதுவே மிதுனத் தூக்கம்
உம் ஊ மெம் மேமதுவே யோனி யாக்கம்

ஐம்முடனும் மோமதுவே வாக்கின் தூக்கம்
ஔமஃக மதுஞானத் தமுதத் தேக்கம்

இம்மாத் தான் உயிரெழுத்தின் வர்க்கம்பொங்கும்
இதன்மேலே மெய்யெழுத்தின் இயல்பைச் சொல்வேன்

319

ககரத்தின் வரிசையெலாஞ் சிருட்டி மார்க்கம்
ஙகத்ரதின் வரிசையெலாம் யார்ண ரந்த்ரம்

சகரத்தின் வரிசையெலாம் சையோ கந்தான்
ஞகரத்தின் வரிசையெலாம் ஞானப் போக்கம்

டகரத்தின் வரிசையெலாம் டங்கா நாதம்
ணகரத்தின் வரிசையெலாம் டண்ணுகந்தான்

தகரத்தின் வரிசையெலாம் தகர வித்தை
நகரத்தின் வரிசையெலாம் நமனங் கண்டீர்

320

பகரத்தின் வரிசையெலாம் பகத்தின் சூன்யம்
மகரத்தின் வரிசையெலாம் மாயா மாயம்

யகரத்தின் வரிசையெலாம் யகத விகதம்
ரகரத்தின் வரிசையெலாம் ரம்ரம் மக்னி

லகரத்தின் வரிசையெலாம் லம்லிம் மண்ணோ
வகரத்தின் வரிசையெலாம் [illegible] சக்தி

ழகரத்தின் வரிசையெலாம் த்ருங் ழுங்கதம்
ளகரத்தின் வரிசையெலாம் காளம் கூளம்

56

321

றகரத்தின் வரிசையெலாம் கூபம் யூபம்
ணகரத்தின் வரிசையெலாம் ணன்ணன் ஞமம்
ஷகரத்தின் வரிசையெலாம் ஷட்ஜம் சக்ஷு
ஸகரத்தின் வரிசையெலாம் ஸம்ஸம் ஸாம்பம்
க்ஷகரத்தின் வரிசையெலாம் க்ஷரா க்ஷராந்தான்
ஹகரத்தின் வரிசையெலாம் சிவமாம் சிவன்
ருகாத்தே ருகாரம் ரம்மோங் காரம்
லுகாத்தின் லூகாரம் லூட்யோட் யாணம்

322

அகரமுத லாமஹா வாரா யிலக்கம்
அஹமென்றும் அஹங்காரத் தகந்தை யாகும்
ஓகரமுத லூர்பவமாம் பரமா னந்தை
ஊர்த்வமுக மாத்நனை மார்க்கங் கண்டாய்
தகாமுத லாத்தமையும் குகையின் வித்தைத்
தாரகமே சிவாமத் தன்மை யாகும்
சிகாமுதற் சிவசிவையாம் தேவ தேவிச்
சின்மயமா மானந்தச் சித்தி யாமே

323

ஹ்ரீம் ஹ்ரீம் ஹ்ரீம் பரமாயா மந்த்ரம் யந்த்ரம்
ஹ்ரீம் சிம் ஸ்ரீம் ஸிவஸஹ்ரீம் சிவஹ்ர் கேந்த்ரம்
ஹ்ரீம் ஸ்ரீம் ஸ்ரீம் ஸிவவைஷ்ண வியின் தந்த்ரம்
ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஸிவநாரா யணியின் சந்தம்
ஹ்ரீம் ஸ்ரீம் க்ரீம் ஸிவகாளி மாதா விந்தம்
ஹ்ரீம் க்ரீம் க்ரீம் பரகாளி நாலினந்தம்
ஹ்ரீம் ஐம் க்ரீம் பரப்ரஹ்ம ணிக்துச் சொந்தம்
ஹ்ரீம் ஹௌஸஃப் பரப்ரேதப் பரம ரந்த்ரம்

324

க்ரீம் ஹ்ரீம் க்ரீம் குககாமேஸ் வரியின் கோலம்
க்ரீம் ஐம் க்ரீம் குகவாகேஸ் வரியின் லோலம்
க்ரீம் ஸ்ரீம் க்ரீம் கு[illegible]மேஸ் வரியின் [illegible]
க்ரீம் சௌம் க்ரீம் குகுராமேஸ் வரியின் ஜாலம்

க்ரீம் க்லீம் க்ரீம் குகராமேஸ் வரியின் நீலம்
க்ரீம் ஹௌங்ரீம் குகப்ரேதேஸ் வரிமாய் மாலம்

க்ரீம் த்ராம் த்ரீம் குகபிமேஸ் வரியின் மூலம்
க்ரீம் க்ரீம் க்ரீம் குகராத்யா குணனி சாலம்

325

ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஐம் க்லீம் சௌம் க்ரீம்
ஆமுன் பின்னேும் பாலா பவ நவாக்கம்

326

ஓமைம் ஹ்ரீம் ஸ்ரீமைம் க்லீம் நம: ஓம்தானே
உமைபுவ னத்திரிபுரையின் ஒன்பானக்கம்

ஓமைம் ஹ்ரீம் ஸ்ரீவமம் க்லீம் சௌமைம் க்ரீம் ஓம்
உச்சிதபா லாம்பிகையி னுளவு கண்டீர்

ஓம் க்ரம் க்ராம் ஓம் க்ரீம் க்ரீம் ஓம் க்ரும் க்ரூம்
ஓம் க்ரீலம் க்ரீலம் ஐம் க்ரேம் க்ரைம் ஓம் க்ரோம் க்ரௌம்

ஓம் க்ரஹ க்ரீம் ஸ்ரீமாத்யா யைநம: ஓம்
ஊர்த்வா முகப் பராஹந்தா னந்த கந்தம்

327

ஓம் க்லம் க்லாம் எனவரியிட் டழைக்கும் காலே
உற்றருள்வான் காம்யமுகம் கனிந்த ஆத்யா

ஓம் ஹௌஹௌஹௌம் ஓம் த்ரம் த்ராம் ஓம் ப்ரம் ப்ராம்
ஓம் ஓம் ஓம் எனவருவான் மகா கணேசி

ஓம் க்ரீம் க்லீம் ஹௌம் ஹௌம் ஹௌம் ஸ்ரீம் சௌம் ஸ்ரீம்
ஓம் நம ஓ மென வருவாள் கௌமா ரித்தாய்

ஓம் முதலா ஓம் வரையா யுறுபல் பீஜம்
உற்ற சிவ சக்திமித் துனத்தைக் காணே

328

ஓமம்மம் மமிர்தேஸ்யை நம ஓம் ஓம்
ஓமாமா மானந்தின் யை நம ஓம் ஓம்

ஓ மீம் மீம் மித்ராஸ்யை நம ஓம் ஓம்
ஓ மீ மீம் ஈஸான்யை நம ஓம் ஓம்

57

ஓ மும் மும் உமா தேவ்யை நம ஓம் ஓம்
ஓ மூ மூம் ஊர்த்வகேஸ் யைநம ஓம் ஓம்

ஓம் ரும் ரும் ருத்திரா யைநம ஓம் ஓம்
ஓம் ரூம் ரூம் ரூஷாண்யை நம் ஓம் ஓம்

329

ஓம் லூம் லூம் லூகாரிண்யை நம ஓம் ஓம்
ஓம் லூம் லூம் லூகாரிண்யை நம ஓம் ஓம்

ஓ மே மேம் ஏகபதா யைநம ஓம் ஓம்
ஓ மை மைம் ஐஸ்வர்யை நம ஓம் ஓம்

ஓ மோ மோ மோங்கார்யை நம ஓம் ஓம்
ஓ மௌ மௌம் ஔஷத்யை நம ஓம் ஓம்

ஓ மம் மம் அம்பாயை நம ஓம் ஓம்
ஓ மஹதா வக்ஷராயை நம ஓம் ஓம்

330

ஓம் கம் கம் காளராத்ரி யை நம ஓம் ஓம்
ஓம் கம் கம் கண்டிதா யை நம ஓம் ஓம்

ஓம் கம் கம் காயத்ரி யை நம ஓம் ஓம்
ஓம் கம் கம் கண்டதா ரிண் யை ஓம் ஓம்

ஓம் ஙம் ஙம் ஙார்ணு யை நம ஓம் ஓம் ஓம்
ஓம் சம் சம் சாமுண்டா யை நம ஓம்

ஓம் சம் சம் சத்ரிகா யை நம ஓம் ஓம்
ஓம் ஜம் ஜம் ஜய தாயை நம ஓம் ஓம்

331

ஓம் ஜும் ஜும் ஜங்காரிண் யை நம ஓம்
ஓம் ஞும் ஞும் ஞானரூப் யை நம ஓம் ஓம்

ஓம் டம் டம் டங்க ஹஸ்தா யை: நம ஓம் ஓம்
ஓம் டம் டம் டங்காரிண் யை நம ஓம் ஓம்

ஓம் டம் டம் டாமர்யை நம ஓம் ஓம்
ஓம் டம் டம் டங்காரிண் யை நம ஓம் ஓம்

ஓம் ணம் ணம் ணாமிஸ் யை நம ஓம் ஓம்
ஓம் தம் தம் தாமஸ்யை நம ஓம் ஓம்

332

ஓம் தம் தம் தங்காரிண் யை நம ஓம் ஓம்
ஓம் தம் தம் தயா ரூப்யை நம ஓம் ஓம்

ஓம் தம் தம் தாத்ரியை ஓம் நம ஓம் ஓம்
ஓம் நம் நம் நாதின்யை நம ஓம் ஓம்

ஓம் பம் பம் பார்வத்யை நம ஓம் ஓம்
ஓம் பம் பம் பட்காரிண் யை நம ஓம் ஓம்

ஓம் பம் பம் பந்தின்யை நம ஓம் ஓம்
ஓம் பம் பம் பந்ராயை நம ஓம் ஓம்

333

ஓம் மம்மம் மஞ்ஜாயை நம ஓம் ஓம்
ஓம் யம்யம் யசஸ்வின்யை நம ஓம் ஓம்

ஓம் ரம் ரம் ரமராம்யை நம ஓம் ஓம்
ஓம் லம் லம் லாவண் யை நம ஓம் ஓம்

ஓம் வம்வம் வரதாயை நம ஓம் ஓம்
ஓம் ஸம் ஸம் ஸ்ரீமத்யை நம ஓம் ஓம்

ஓம் ஷம் ஷம் ஷண்டிகா யை நம ஓம் ஓம்
ஓம் ஸம் ஸம் ஸரஸ்வத் யை நம ஓம் ஓம்

334

ஓம் ஹம் ஹம் ஹம்ஸவத்யை நம ஓம் ஓம்
ஓம் ளம் ளம் ளாகின்யை நம ஓம் ஓம்

ஓம் க்ஷம் க்ஷம் க்ஷமாவத்யை நம ஓம் ஓம்
ஓமென்றே மாத்ருகையை உள்ளே வாங்கி

ஓம் நமவென் றேநிறுத்தி யுயிர்ப்பு வீங்கி
ஓமோமோ மென்றைந் தொன்பானே நாமம்

ஓமென்றே பதச்சிரமா மாறி மாறி
உற்று வர மாத்ருகைகள் சித்தி சித்தி

335

அப்பனே யப்பாலே சிரசி லாத்யா
அம்பிகையென் வாலைப்பெண் ணமர்ந்துள் ளானே

செப்பினே னவள்தானே சித்தர்க் கெல்லாம்
சித்திகளாம் பத்துவை [illegible]

ஒப்பவே மூதுரு நடுத் தண்டுக் குள்ளே
ஒரிழையாய் மூவிழையா யோடும் ரந்த்ரக்
கப்பிலே மூவிரண்டாம் கமல வைப்பின்
காண்முனைக ளாறுவரையும் கண்டு கட்டி

336

கட்டுமுதல் வேதித்துப் பந்தம் செய்து
ககனமுடிக் காத்தாயி கவினைக் காண
விட்டமுதல் வாசி நெறி ஐயயோ தந்தான்
விளையாட மந்திரங்கள் மறைகள் சொல்வேன்
எட்டுசித்தி எட்டுமடா மண்ணும் பொன்னும்
என்மகனே சுழுனைமுடிக் ரந்தி யாவும்
வெட்டிடடா கட்டிடடா மேலே சென்றே
வேதாந்த வாலைபதம் பற்று வாயே

337

ஓ ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் க்ரீம் க்ரீம் க்ரீம் ஹூம் ஹூஅம்
ஓம் ஸ்வாகா வெனமூலக் கணேசி தன்னை
ஆமெனவே பேதித்தங் வனு வியத்தை
அய்யாலே ஸ்வா திட்டத் ததனிற் தாக்கி
ஓ ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹம்ஸஸ் ஸோகமம் மாம்
ஹௌங் கென்றே வேதன்முடி யவிழ்த்து மேலே
ஓ ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹம்ஸஸ் ஸோக மிம்மீம்
ஹௌங் கென்றே மாலின் முடிப் பேதம் செய்து

338

ஓ ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹம்ஸஸ் ஸோக மும் மூம்
ஹௌங் கென்றே ருத்ரமுடி யதனூடுற்று
ஓ ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹம்ஸஸ் ஸோக மே மைம்
ஹௌங் கென்றே மகேசன் முடியைப் பற்றி
ஓ ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹம்ஸஸ் ஸோக மோ மௌ
ஹௌங் கென்றே சதா சிவனின் ருகங் கொண்டு
ஓ ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஸம்ஸஸ் ஸோக மம் ஹம்
ஹௌங்கென்றே ஸாவனத்தின் முடிமே லேறே

348

மனம்வெட்ட வெளியானால் மதி வெறுமைப் பாழானால்
புனமென்னும் பொறிபுலன்கள் போக்குவெறும் போக்காகும்
சினங்குலையும் சிரத்துச்சித் சித்தமெனும் வானத்தே
தனங்குலவும் நமனறியா நாயகியின் நாயகமே

349

உலகத்துக் கேசவமாய் உலகமெலாம் ஊடாடும்
கலகத்துக் கேசாக்கிக் கன்றாகக் கண்காணுத்
தலமுற்று நாவகற்றித் தானான சித்தத்தே
இலகுற்றுச் சித்தினியாள் இயலுற்றன் சித்தனடா

350

அஹந்தையெனும் பாத்திரத்தி லிகந்தையெனும் நெய்வார்த்து
உஹந்தஜபா வாசியெனும் ஒழுக்கிட்ட வேதையடா
மஹந்தபர மாஹந்த வன்னியிலே ஓமஞ்செய்
தஹந்தஹமா வாலைப்பெண் தானணைவாள் சத்தியமே

351

சவமானா லன்றியுனைச் சிவமாகக் கொள்ளானே
தவமானா லன்றியுமைச் சதிரிட்டு நில்லானே
அவமான பற்றல்லா லவன்நேசம் கூடாதே
சிவனோடே சிவமானன் சித்தனடா சித்தனடா

352

ஒரு வார்த்தை உலகத்தார்க் கொன்றாத வார்த்தையடா
இரு வார்த்தை உணவறியார் சிச்சிச்சீ பேசுவார்கள்
குருவார்த்தைத் தந்திரத்தான் குருமுடிமேற் கால்வைத்தே
கருவார்த்தத் தாமுடனே கலையடா கலையடா

353

தாயானவள் தந்தைசிவன் தனைக்காட்டி யவனுக்கே
சேயானவள் சித்தத்தே சேவையா ளாய்ந்திராள்
மையாவான் எனச் சொன்ன பெரியவனைப் போகத்தே
ஸ்ரீயானவள் சிவன்சித்தன் தேவியடா சித்தினியே

வேறு

மன்னே மடக்கி வின்னே விளக்கி
  உன்றனை விட்ட வின்றனம்
கன்னே மடித்துட் கன்னே விழித்துக்
  கன்றனை முத்திக் கின்றனம்
கன்னே யிசைந்து வன்றனைகத்துப்
  புன்னே வெறுக்கும் தின்றனம்
பென்னே எனக்கும் பென்னே எவைக்கும்
  பென்றனை வாலைப் பெற்றனே.

355

காலுற்ற பாம்பை மேலுற்று வீசி
  மாலுற்ற தோகை வளமாச்சே
வேலுற் றணைத்த தாலிற் பணைத்து
  சேலுற்ற கோட்டைக் குளமாச்சே
பாலைக் குடித்துப் பாலைக் கறக்கப்
  பாலற்ற பாலந் தனையாச்சே
காலற்ற மேனி வாலைப் பெறுக்குக்
  காழுற்ற காதற் கதி யாச்சே

356

சொத்துப் புலன்க ளத்தத்தை விட்டு
  வித்தைப் புலன்க ளவையாமே
மித்தைப் புலன்ம லந்தைச் சேர்ந்து
  புத்திப் புலன்க ளவை போமே
சித்தப் புலத்தில் வைத்திட் டகத்தைச்
  சிந்திக்க வேதிச் சிவையாமே
சித்தத் தசித்து சத்துற்ற சித்து
  தத்துற்ற சக்தி சிவம் தாமே

சித்த வைப்பு

குருபகவான்
ஸ்ரீ காரைச்சித்தர்
144, புளியந்தோப்பு நெடுஞ்சாலை
சென்னை 600 012.
திரு. சக்திவேல் சுவாமிகள்
Cell: 9283104333

61

சாற்றுவேன் சாரவேதம் சத்யசற் குருவைப்போற்றி
ஏற்றுவேன் நித்யஜோதி யிடையிலாப் பூரணத்தைப்.
போற்றுவேன் வாலைபாதப் போதமாஞ் சித்தர்பாதம்
சாற்றுவேன் வேதைவாதம் சாந்தமெய்ஞ் ஞானநாதம்

358

உள்ளங்கை நெல்லிபோலே யுற்றகைப் பாகம்செய்கை
உள்ளங்காண் சாரங்கட்டி யுருமுப்பான் வாதமெட்டி
உள்ளங்கே யறையிற்செய்யும் யுமையன்னைக் கானபூவை
உள்ளந்தா னறியச்சொல்வேன் உண்மைக்கு முண்மையாமே

வேறு

எட்டியுடைக் கொட்டையிலே தைலம் வாங்கி
எட்டிவே றுள்ளியெடைக் கெடையாய்ச் சேர்த்து
அட்டியிலாத் திருதுகள்ளிச் சாற்ற லாட்டி
அதனுடனே வராகனெடைத் துருசுங் கூட்டி
கெட்டியுற வேரசகற் பூரம் தன்னிற்
கெடியாகக் கற்பலந்தான் கலந்து கொண்டு
வட்டித்த தைலத்தை அனுபா னந்தான்
மாறுமல் நிழலுலர்த்தி வாங்கிக் கொள்ளே

360

மலையிலிருந் தேவிழு மருவி போல
மன்னவனே தைலத்தை வாங்கிக் கொண்டு
அலைகடலி னோரத்தே காரி லத்தே
அற்புதமாம் பூநீறுப் படிதா னறு
தலைகிழாம் வெளவாலின் புழுக்கை கூட்டி
தாவிவரும் தக்குடத்தின் மலமுங் கூட்டி
சிலைநாகக் குடமதிலே வெவ்வே றகச்
செறிகின்ற நீர்ப்புழுக்கை மலமுஞ் சேர்த்து

361

மத்தியிலே சுண்ணாம்புக், கவச மிட்டு
வைத்திட்டுத் துரிசு கட்டிக் குழியில் மூடிச்
சித்தியிலே வைத்தோன்பான் றினமே லப்பா
தூயசொரு நந்நாளில் தூபங் காட்ட

வத்தியநிற் கோடியதும் வழிந்து நிற்கும்
வளக்கட்டி யாந்துரிசும் சுத்தி யாகும்
சுத்தியுறுந் துரிசதனை எடுத்துக் கொண்டு
துய்ய சிவ னார்வேர்புக் கவசம் செய்யே

362

இப்படிக்கே யேழுமுறைக் கவசம் செய்தே
இலுப்பையிலைச் சாற்றலே யாட்டி யாட்டி
அப்படிக்கே யேழுமுறைப் புடமும் போட்டே
அடடாடா தகத்தகமாங் கனக மாமே
கோப்படிக்காக் குருபூசை செய்து பாரு
கோழியான ரஸமதுவும் விரைந்துப் போதும்
சொப்படிக்கா வித்தையில்லை ஜால மில்லை
துய்யபெரும் வாதமிதன் பெருமை கோடி

வேறு

வாதமுறு வேதைபல வாயுரைத் திட்டார்
நீதமுறு மாமுனிவர் நேர்மையுறு சித்தர்
வாதவழி தேடுவதி லேதுமில்லை சித்தி
வேதவே தாந்தமெனு வழியையது சக்தி

364

பேதமுறு வாதனைகள் வேதனைகள் பலவே
கேதமுறு மாண்டியர்க ளேபொருள் பறிக்க
எதமுறு சாதனைக ளோதுவது போதும்
வேதமுறு சாதனைய தேவிண்ணவி லேறும்

365

உலைதளர்ந் தார்பூலி யோஷதிகள் தேடி
உலைதளர்ந் தாரெரியி லோதுவதை நாடி
நிலைகுலைந் தார்தத்தம தேறியலைந் தாரே
கலையுணர்ந் தார்பாதம் கண்டுநில் லாரே.

366

வேத நெறி யோர்குருவின் பாதம் பணிந்தே
போத நெறி யேநிற்கில் வாதமொடு ஞானப்
பாதை வழி யாகும் பல பேத வழி சாகும்
நாதமறி நாதரவர் வேதை யுநவாமே

வேறு

பித்தமது தலைக்கேறி வாதம் மாறிப்
  பிழையுறும் நாடியது ஸ்லேத்ம மாகும்
சுத்தமுறுந் தவமறியார் மந்த ராவார்
  சொக்கியுட லின்பத்தே மக்கிப் போவார்
கர்த்தபங்கள் கத்துவதே சகுனமென்பார்
  கண்டகண்ட நூல்கண்டே மயங்குவார்கள்
உத்தமருக் கேயுரைத் தேனிந்த நூலை
  உண்மையாட வுறுதியடா உள்ளிப் பாராய்

368

பொய்யுடனே புரட்டுமிகும் சூதும் வாதும்
போந்துருளும் புவிதனிலே பொய்கள் மங்கி
மெய்யுறவே விளக்கதுதா னிருளைப் போக்கி
மேதினியைக் காட்டுதல் போல் அஞ்ஞானந்தை
ஐய்யறவே தான்நீக்கி யகண்ட ஞானத்
தனந்தசச்சி தானந்தத் தோனி விளக்காய்
உய்யுறவே தானுரைத்தே னிந்த நூலை
உவந்துபணிந் தறிந்துமகிழ்ந் துய்யு விரே

வேறு

அறியத் தெளிந்து சொன்னேனே
அறமாம் பெரிய மெய்ஞ்ஞானம்
தெரியப் புரிந்து கொள்வீரே
அறமாம் தெய்வத் திருவழியே

370

வாசல் திறக்கும் மாசில்லா
வாசான் பக்க லிருந்தாலே
தேசா மொழியிற் கூசாமே
தேவித் தாயருள் தருவாளே

371

நனவைக் கனவென் றேபோக்கிக்
கனவை நனவென் றேநீக்கி
நினைவை நினையா நினைவாக்கில்
நிலைகொள் ளவையும் சித்திக்கும்

372

கல்லா லின்கீழ் நால்வர்க்கும்
கருணை செய்தான் முக்கண்ணன்
வில்லாலின் கீழ் சித்திரியாள்
வெற்றி தருவாள் சித்தியிதே

373

சித்தம தேதான் சித்தியுற
சித்தப்போக்கே சிவன் போக்காம்
பித்தமெ லாந்தான் தீர்ந்திடுமே
பேரின் பந்தான் சார்ந்திடுமே

374

வந்தனை யும்வழி பாடுகளும்
வாகுற வேமுன் னம்பலவே
சிந்தனை யேசுழி முனைநாடி
சேர்ந்திட வேமுக் கண்ணுடும்

375

நிந்தனை யும்பழி யும்நீங்க
நிறைமதி யின்சுட ரதுமோங்க
எந்தனை யும்படைத் திட்டவனே
இத்தனையு மெழுந் தித்தவனே

376

எல்விட முஞ்சென் றேயமரும்
ஈஸ கிரமற் றேனியாய்
செவ்விட மோன்றே சேர்ந்திட்டால்
சித்தர்கள் ஞானச் சித்தியதே

377

படியிற் குருநா தன்துணையே
பரவச மானு பவிவிடையே
கொடிய விடமும் நொடியளவில்
குடியோ டிப்புற மாகிடுமே

வேறு

பிந்து நாத மறுதி கலா கலா
வந்த மூல குலாதி யுலா துலா
முந்து மாறு கறுதி பலர் பலா—வெகு வேறுந
கெந்த மார ஸஜோதி பளா பளா
மந்த்ர ரூப மசோதி தளா தளா
விந்து ராஜ ஸவேதந யுளே யுளே—மலை ஜாதி
ஐந்து யான விபாக மதே யதே
சொத்த மாம நிருத மிதே யிதே
தந்த வாலை ப்ரசாத நிதே நிதே—மக மாயி
அந்த மான கைலாச முடி முடி
சந்தி மாறு முலாச மடி மடி
சிந்து ராதி விலாசம் நொடி நொடி— அவளேதான்

வேறு

கருவச்சி மலைமச்சின் மாடிக்கு ளத்தமுதின்
உருவச்சி யருவச்சி வளமைக்கும் அத்தையவள்
மருமச்சி மருகச்சி வாறுற்ற மித்தையுடன்;—வருவாளோ
குருமச்சி களபச்சி மாகற்ப வித்தையவள்
குமரச்சி யபரச்சி கெளுற்ற சக்தியவள்
அருவிச்சை யயனிச்சை ஞானத்தி: வித்துமவள்-கலைவாணி

பருவச்சி திருமெய்ச்சி மாலுக்க கத்தியெழில்
சிரதச்சி சிவனுச்சி மேலுற்ற ணைத்தநதி
பரமச்சி பரமத்தை பாகத்தி ணைத்தசிவை— அபிராமி

கருமச்சி கலையுச்சி காலக் கணக்குதவும்
கருவச்சி வருமச்சி சாமத்தி சைந்தஅனை
கருநொச்சி கவசச்சி காமுற்ற பொற்புதவும்-- எமதாயே

வேறு

காமத்தை விட்டிடடா கலகத்தை வெட்டிடடா
கருநொச்சிக் கவசத்தில் காமினியைக் கட்டிடடா
ஊமைக்கும் அத்தையடா உலகோர்க்கு நத்தையடா
உரையெல்லாம் மித்தையடா உனக்கவளே வித்தையடா
சாமத்தைக் கண்டிடடா சமத்தை வென்றிடடா
சகலத்தை யுந்தழுவும் சத்தியத்தில் நின்றிடடா
வாமத்தி யருளாலே வாதத்தி லேவெற்றி
மண்ணெல்லாம் பொன்னாகும் மார்க்கத்தைக் கண்டிடடா

வேறு

மூலத்தின் கனலதனை மூட்டி மூட்டி
மூதண்ட முப்பூவின் பாத்திரத்தில்
சீலத்தின் கீழ்நெல்லிச் சாற்றைக் காய்ச்சிக்
கிறிகொண்ட சூதத்தில் நாதம் வாங்கிச்
சாலத்தான் நீர்மேலே நெருப்பைப் போட்டே
சாரத்தான் மலைதாங்கிக் குள்ளே யோட்டி
ஆலத்தா லமுதைத் தான் விழுதை நாட்டி
ஆறத்தா லமரத்தா லனைத்து மாமே

382

ஆமப்பா வறு கோண மதற்கப்பாலே
யாரப்பா சொல்லிடுவார் ப்ரம்மதண்டி
வரமப்பா மையத்தி ஓமத்தன்காய்
வளமப்பா விந்துஜய நீரின் பூசை
காமப்பா சதிர்க்கூடச் சதுரக்கள்ளி
காணப்பா முக்கோணப் புளியங்காயே
[illegible]
தன்மையாம மின்மையாத் தழலாஞ் சோதி

383

வெப்பெல்லாம் தீர்ந்துவிடும் வித்தை கண்டாய்
விளையெல்லாம் போக்கிவிடும் விறலே கண்டாய்

அப்பப்பா நவகோடி லிங்கம் தோன்றும்
அவற்றின்மே லாடுகின்ற வென்னை யன்னை

துப்பெல்லாம் துரிசெல்லாம் சுத்தி சுத்தி
சொக்குமடா கைலாசச் சொக்க லிங்கம்

கப்பெல்லாம் நீங்குமடா காம தேனு
கறக்குமடா காயத்ரிக் கனிவாம் க்ஷீரம்

384

போகரஸம் பேட்டையிலே பெண்ணேடேசம்
போகரஸக் கோட்டையிலே புண்ணுகாமல்

யோகரஸம் பேட்டையிலே யுயிரோடேசை
யோகரஸக் கோட்டையிலே யுணர்வு கொண்டே

ஏகரஸம் பேட்டையிலே எந்தா போடே
இன்பரஸக் கோட்டையிலே புக்கே எந்த

நாகரஸம் பேட்டையிலே நான்கண் டுய்ந்த
ஞானரஸக் கோட்டையினை நாட்டு வேனே.

வேறு

சேஷனைவைக்கும் மிச்சனடா
சேர்குரு வுங்க ணேச னடா

சேஷக ணேச புரத்தினிலே
சிந்தரு ஊெத்தரி சிந்தேனே.

வேறு

திருவான சேனையடா பஞ்ச சாரம்
திகழ்தெய் வமுஞ் சாரம் தேவிசாரம்

உருவான க்ஷேத்திரமும் சாரம் சாரம்
உற்றதொரு புஷ்கரணி யதுவும் சாரம்

கருவான மானமதும் சாரம் சாரம்
கண்ணுன சாரமதைக் கண்டேன் கண்டேன்

குருவான [illegible] கோபுரம் கண்டேன்
கோக்கனக மஞ்சாரக் கோதிப்புங் கண்டேன்

387

பஞ்சமெலாம் போக்குமடா பஞ்ச சாரம்
பஞ்சாஜம் பஞ்சகவ்யம் பஞ்ச மேதி
பஞ்சாம்லம் பஞ்சமித்ரம் பஞ்சம் ருத்தை
பஞ்சான்னம் பஞ்சாக்கம் பஞ்ச பூதம்
பஞ்சமூத்ரம் பஞ்சரத்னம் பஞ்ச காரம்
பஞ்சலவ ணம்லோகம் பஞ்ச ஸ்ருங்கம்
பஞ்சாயம் பஞ்சகந்தம் பஞ்ச காந்தம்
பஞ்சாக்னி யேயஞ்சாம் ருதமா னந்தான்

388

சாரைக்கோட் டைக்குள்ளே சாரம் சாரம்
சார்ந்தநவ சாரக்கற் பூரம் பூரம்
கூரைக்கோட் டைக்குள்ளே கோரம் கோரம்
கொள்ளாமற் சிவயோகிக் குள்ளாம் வீரம்
விரைக்கோட் டைக்குள்ளே விந்துப் பூவை
வேதாந்த முப்பூவாய் விண்ணும் நிரம்
காரைக்கோட் டைக்குள்ளே வந்த சித்தன்
காரையாட யண்டாண்டம் பூண்ட பக்தன்

389

பக்தனடா சித்தனடா பரம யோகி
பார்பிழைக்க வேயிந்நூல் பகருகின்றேன்
பித்தனடா பித்தியவன் சித்தந் தாலே
பேயன்யான் பேத்தலிதைப் பேணிப் பார்ப்பீர்
வித்தனடா வேதனடா வேதாந்தத்தின்
வித்தையுறும் வேதையெலாம் விரிவாச் சொன்னேன்
இத்தரையி லிந்நூலைப் போலே யில்லை
இதுகண்டார் வாதமுடன் வேதை கண்டார்

390

ராசமன்னர் க்ஷேத்திரத்தில் வந்ததாலே
ரங்கென்ன ராவிருளைப் போக்க வேதான்
ராசகோ பாலனவன் செல்வ மீந்தான்
ராமநாதன் வாக்கின் வித்தை தந்தான்.
ராசலக்ஷ்மி தான்வளர்த்தா ளிந்தப் பிள்ளை
ராகவனே காரைநகர்ச் சித்தன் ஆனேன்
ராசரஸ வாதவித்தை யோக வித்தை
[illegible]

சுபம்

65

குறிப்புரை

இந் நூலில் உள்ள பாடல்களில் பல பரிபாஷைகள் மிகுந்திருப்பதால் பொருள் விளங்குவது கடினமென்றும், அவைகட்கு விளக்கம் தேவை என்றும் பல நண்பர்கள் கருதினர். எனவே, அடுத்து வரும் பக்கங்களில் பொதுவாக எல்லாப் பாடல்களுக்கும், முக்கியமாகச் சிலவற்றிற்கும் பொழிப்புரைகளும், குறிப்புரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. சித்தர் வாக்குக்குச் சிவமே பொருள்; எனினும் அடியார் என்ற முறையில் அடியேன் இக் குறிப்புரையை வழங்குகின்றேன். நவை யுளதேல் நவம் பொறுக்க.

காளிதாஸர்.

காப்பு

1. வழக்கப்படி கணபதி, முருகன், அம்பிகை, சிவன், திருமால் முதலிய தெய்வங்களை வணங்குவதோடு, வழக்கமற்ற வகையில், தெய்வங்களுக்கு ஒப்பச் சிரக் கோயிலின் சீர்கண்டு தெய்விகம் பெற்ற சித்தர்களையும் சேவித்து இந்நூல் காப்புப் பெறுகிறது.

2. இப்பாடலைத் தற்சிறப்புப் பாயிரம் எனலாம்; முதல் ஆறு வரிகள் 'பல சுருதி'யாகும்; பிணிகள் தீரும், சித்திகள் சேரும், முன்வினைத் தீமைகள் நீங்கும், வாத வைத்திய முப்பூவின் வகைகள் விளங்கும்; யோக நெறியில் வெற்றியுண்டாகும், தன்னிலே தானாய்த் தானே ஈஸ்வரனாகும் சமாதியும் கூடும். அடுத்த இரு வரிகளில் மற்ற சித்தர்கள் மறைவாகச் சொன்னதை நான் வெளிப்படையாகக் காட்டுகிறேன் என்று நம் சித்தர் உறுதி கூறுகிறார்.

3. இப்பாடலே சித்தர்களுக்குச் சிறப்பான ரக்ஷை. சித்திதரும் சிவகாமி, சேகரத்துச்சியின் மேல் சிருற்றவள், புத்தியில் கால் வைத்தவள், பத்திக்கு அப்பாலாம் போதத்தில் போக்குவரவில்லாத பூரணத்தாள், பழங் கிழவப் பாட்டி, பத்து வயதுப் பாவை; பரமனது ஒரே பத்தினி, பக்தனது ஒரே பரத்தை, சித்தர்களின் தாய்; சித்தமென்னும் ரத்ன சிங்காதனத்தின் சிங்காரியாகிய தேவதேவி வாலாம்பிகையின் ரக்ஷையே ரக்ஷை; அவளது காப்பே காப்பு என்று தமக்குக் காப்பிட்டுக் கொள்ளுகிறார் நம் சித்தர்.

முப்பூவின் முறை-இம்முறை பல படித்தானது; வைத்திய முப்பூ, வாத முப்பூ, யோக முப்பூ எனப் பலவாம். இந்நூலில் பெரும்பாலும் பேசப்படுவது மூல்வது முப்பூவேயாகும். இவற்றை உவர்நிலப் பூநீறு, எண்ணெய் நீரோடைக் கரையில் மன்னலரும் மூவண்ண மலர், உடலில் அக்னி, சூர்ய, சோம மண்டலங்களாய் இதழ்கள் விரியும் செந்தாமரை என்றும் கூறலாம். மூன்றுவதைக் குருமுகமாகத்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

குரு பரம்பரை வைப்பு

(4-5) "மகேஸ மாதவ விதாத்ரு மன்மத ஸ்கந்த நந்தி இந்த்ர மனுஸ் சந்த்ர குபேர அகஸ்த்ய துர்வாச க்ரோத பட்டாரக"—என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ராக்ஷரியில் வரும் சாக்த தர்ம குரு பரம்பரையைச்சித்தர் தர்ம குரு பரம்பரையாக, ஈஸ்வரன், மகாவிஷ்ணு, ப்ரஹ்மா, மன்மதன், கணபதி, முருகன், நந்தி, இந்திரன், மனு, சந்திரன், குபேரன்,

அகஸ்தியன், தூர்வசன், தத்தாத்ரேயன், பரசுராமன், ஸ்ரீராமன், ஸ்ரீ கிருஷ்ணன், சுதர்ஸனன் (சக்கரத் தாழ்வார்), லோப முத்ரா, மாதங்க முனி என்று விரிவாக வரிசைப் படுத்தி வணங்குகிறார்.

(5-6) அடுத்தபடி வடநாட்டு ரஸ சித்தர்கள் 27 பேர்களுக்கும் வணக்கம் செலுத்துகிறார். அவர்கள் ஆதிமர், சந்திரஸேனர், விசாரதர், கோமுகர், கபாலி, மத்தர், மாண்டவ்யர், பாஸ்கரர், சூரர், ரத்ன கோஷர், சம்பு, ஸாத்விகர், லங்கணர், நரவாகனர், இந்திரர், கபிலர், வ்யாடி, நாகர், சுரானந்தர், நாகபோதி, யசோதரர், சுண்டர், காபாலிசர், பிரமர், கோவிந்தர், ஹரி, லம்பகர் எனப் பெரும்பாலும் வடமொழி ரஸ நூல்களில் உள்ளபடியே வரிசைப்பட்டுள்ளனர். லங்கா-லங்கணர், கோமன்=கோமுகர், லம்பன்=லம்பகர்.

(7-11) முதற்கண் ஸ்ரீ வித்யா குரு பரம்பரையையும், இரண்டாவதாக ரஸவாத சித்தர்களையும் போற்றியவர், கடைசியாக ஞான சித்தர்களாகிய தென்னாட்டுச் சித்தர்களை வணங்குகிறார். எடுத்த எடுப்பிலேயே "செந்தமிழின் சித்தர் கணம் செப்பப் போமோ"—என்று பெருமை பாராட்டுகிறார்; "சிவ னுமையாள் கந்தனுடன் சேர்ந்தார் சித்தர்" என்று அவர்களது தெய்விகம் பாடுகிறார். பதினெண் சித்தர்கள் காலப் போக்கில் பலப் பல சித்தர்களாயினர்; நம் சித்தரது வாக்குப்படி ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆசார்யர்கள், பக்தர்கள், ஞானிகள் யாவருமே சித்தர் கணத்தில் சேர்ந்து விடுகின்றனர்; அகத்தியர், கருவூர்த் தேவர், புலத்தியர், வள்ளுவர், சுந்தர், மச்சர், கொங்கணர், ஜெயகண்டி, சங்கரர், சந்திரர், தேரையர், இடைக் காடர், குரும்பை முனி, யக்கோப்பு, புண்ணாக்கீசர், இராமானுஜர், நம்பியாண்டார், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆண்டாள், தக்கணாமூர்த்தி, அகப்பேயார், இராமலிங்கர், கோதமர், பாம்பாட்டி, கடுவெளியார், கமலமுனி, வான்மீகர், நவகண்டர், நாதாந்தர், ஜமதக்னி, நாதமுனி, அஸ்வினி தேவர், காகபுஜண்டர், சதுரமுனி, குதம்பை, போகர், மச்சமுனி, சட்டைமுனி, ரோமரிஷி, இராமதேவர், நந்திசர், திருமூலர், நமது ஸ்வாமிகளின் குருநாதர், காலாங்கர், மாலாங்கர், தந்வந்திரி, சுகுமாரர், கல்லாடர், கல்லுளியார், விளையாட்டீசர், கோரக்கர், அழுகண்ணிசர், ஜெயமுனியார், பதஞ்சலி, வியாக்கிரர், யூகிமுனி, வாமதேவர், புலிப்பாணி, அருணகிரி, பட்டினத்தார், மௌனி, தாயுமானவர் எனத் தமது குருநாதரையும் சேர்த்து 136 சித்தர்களை நம் சித்தர் கணிக்கிறார். இவ்வரிசையில் வடநாடு தென்னாடு பேதமின்றி ஞான சித்தர்கள் யாவரும் இடம் பெற்றுள்ளனர். சங்கரன்—ஆதி சங்கரர், குருபரனும் என் தம்பி—இராமானுஜர்; நம்பி - நம்பியாண்டார் நம்பி; பிரான் - (மச்சர்) மச்சேந்திரர்; பரியன் சோதர் - அஸ்வினி தேவர்; நவகண்டத்தான் - கஞ்சமலையார.

(11-13) அடுத்தபடி நமது கோயில்களெல்லாம் சித்தர்களது வைப்பு க்ஷேத்திரங்களே, சமாதிகளே, தெய்விக விலாசங்களே என்றும்; எந்தெந்தச் சித்தர் - எந்தெந்த ஸ்தலத்தில் சாந்நித்யமாயுள்ளனர் என்பதையும் கூறுகிறார் : திருமூலர், ராமதேவர், அகத்தியர், இடைக்காடர், தன்வந்தரி, வான்மீகர், குதம்பை, நந்திநாதர், கமலமுனி, போகதேவர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, கோரக்கர், சுந்தரானந்தர், பாம்பாட்டி, கருவூர்த்தேவர் என்னும் சித்தர்கள் முறையே தில்லை, அழகர் மலை, அனந்தசயனம், திருவண்ணமலை, வைத்தீஸ்வரன் கோயில், எட்டிக்குடி, மாயவரம், உத்தரகாசி, திருவாரூர், திருப்பழனி, திருப்பரங்குன்றம், திருவேங்கடம், இராமேஸ்வரம், திருப்பொயூர், திருமதுரை திருக்கடையூர், திருக்கருவூர் என்ற க்ஷேத்திரங்களில் சமாதி மூலம் ஸாந்நித்யமா யுள்ளனர். அவற்றிலுள்ள தெய்வங்கள், தேவிகள், யந்திரங்கள், மந்திரங்கள், தந்திரங்கள், ஆகம அமைப்புகள், வேத விளக்கங்கள், வினைதீர்க்கும் வினையாட்டுகள் யாவும் மேற்சொன்ன சித்தர்களின் திருவருள் விலாசங்களே யாகும். மற்றுள்ள சித்தர்களின் வைப்பு ஸ்தலங்களைப் போகர் ஐந்நூற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம். கும்பகோணம், பாபநாசம், ஆவுடையார் கோயில், நெடுங்குன்றம், மேலைச்சிதம்பரம், சீர்காழி, ஸ்ரீரங்கம், திருக்கோணமலை, திருக்காளத்தி, திருநாகை, திருவிடைமருதூர், திருக்கருவைநல்லூர், திருவானைக்கா, திருக்கோடிகாவல், திருக்கோடித்துறை, திருக்கண்ணங்குடி, திருஞ்ஞாலம், திருத்துவாரகை, திருநணு, திருச்சேறை, திருவுருத்திரகிரி, திருப்பெருங்காலூர், திருக்கழுக்குன்றம்; திருவாவடுதுறை, திருக்காஞ்சி, திருவாஞ்சியம், திருக்குடையூர், திருப்பனந்தாள், திருவையாறு, திருக்கதிர்காமம், திருச்செந்தூர், திருத்தணிகை முதலிய யாவும் சித்தர்களின் சேமநிதிகளே.

(14) இப்பாட்டின் மூலம் சித்தர்களைப் பணிந்து, சித்தியலைப் பற்றறப் பற்றிப் பரிபூர்ணமாய் முற்றி, குருவருள் பெற்று, அண்டாண்ட கோடி, அகிலாண்ட நாயகியைப் போற்றிச் சித்தரான சிறப்பைப் பூடகமாய்த் தெரிவிக்கின்றார். ஒற்றியூர் - சீவனை சிவனோடு ஒன்றுவிக்கும் ஊர்; பட்டினத்தார் சமாதி, குருலிங்க க்ஷேத்திரம்.

பீட வைப்பு

இப் பகுதி இந்நூலின் அடிப்பீடம், தோற்றுவாய், பொதுமைச் சூழல் ; பின்வரும் பகுதிகளைத் தெளியும் வண்ணம் தரப்பட்டுள்ள அடிப்படைச் சூத்திரங்கள் - பரிபாஷைகள் கூடியவை.

(15) அகம் - அகங்காரம், ஆணவம் ; கந்தகம் - ஒரு வாத வைத்தியச் சரக்கு ; கந்து + அகம் = கந்தகம் - கட்டுப்பட்ட அகம், பசுத்தன்மை, ஜீவான்மா ; உள்ளகம் - ஆன்மா, தெய்விக சைதன்யம். அகங்காரம் மிகுந்தவர்கள் கந்தகத்தை அறியாதவர்கள் : தன்னகத்தே கந்தகத்தைக் கண்டு களிப்பவர்கள் கந்தகமாம் ஜீவ தரிசனம் பெற்றவர்கள் ; அகமாகிய அகந்தை விரிந்து நிறைந்து பூரணமானவர்

களது உள்ளகமே ஈஸ்வர சைதன்யமென்னும் ரஸவாத சித்தி யாகும். அச்சித்தியால் அகில லோகங்களும் சொந்தமாய் வசப்பட்டுப் போகும்.

(16) வாரம் என்பது அளவை; நாள் முதலிய வார மாகிய "காற்றைப் பிடிக்கும் கணக்கு'' அறியாதவர் பாரா யணம் பண்ணும் தேவாரம் வெறும் வாரமே யாகும். பூரம் என்பது புருவ மையத்துப் பேரொளி, வீரம் உடையவர் களுக்கே இப் பூர தரிசனம் தட்டும்; வெறும் வீரம் வெறி யாகும், எனவே வெறியைக் கட்டி வீரமதைத் திரமாக்க வேண்டும்; காரம் என்பது காமக்ரோதாதிக் காழ்ப்புகள்; ஒரு வார்த்தையில் வாரமுற்று, வீரம் கட்டி, திரம் பெற்றுப் பூரம் கண்டு, காரம் நீங்கியவற்கே சாரத்தில் சாரமான சத்யானுபவம் கிட்டும்.

(17) ராத - ரத, ரதன, சையோகம், அல்லது இணைப் புறு கூட்டம்; ராத ரஸ விந்து - சுக்ரம்; சிலை - யோனி, கலன், கோணம், இங்கு சிர மையத்திலுள்ள முக்கோணமாகிய த்ரிகூடம். சுக்லமாகிய ரேதஸை ஊர்த்வ ரேதஸாக்கி, திரி கூடக் கவிப்புக்குள் தாக்க அதுவே காந்த மயப் பாதரஸ மாய் வாத நெறியைச் சொந்தமாக்கும்; வேதமாகிய வித்தை கண்டாரே வாதம் கண்டார்.

(18) தாகம் - ஆசாபாசம்; நாகம் - குண்டலினி; வேகம் - மின்மயம்; வீரியம் - வின்; பாகம் - பலம்; பாத் திரம் - கபாலம், யாகம் - அக்னியோகம்; காகம் - இருகண் ஒரு பார்வை, இருமையும் ஒருமையுறும் ஈஸ்வரத் தன்மை. தாகம் வெட்டி நாகத்தை வீரியங் கூடிய வேகத்தோடு பாகம் பெறப், பாத்திரத்தில் யாக மூலம் ஏற்றி ஒருமை ஞானம் பெறல்.

(19) நாடி - நரம்புகள், நாளங்கள்; காடி - மதி அமிர் தம்; பாடியது - பத்து வித நாதங்கள்: ஆடியது - உடல் புருவ மத்யமான ஆக்ஞையின் ஆணைப்படி அசைந்தாடும் ஆடுதுறையாகிய உடல்; மூடும்: அடங்கிப் போகும்; சாடி யது - குண்டலினி: நாடி நடு - சுழுனை: வீடு சுழுனை முடி; காடு - மூளையின் பிறைப் பின்னயல் (cells)

(20) தர்மம் காக்க தானத்துக்குத் தக்க தவம் செய்து: கானமாகிய தசவித நாதங்கள் சொக்கி மறைய நடுமுனையாம் சுழுனைமுடி மேல் ஓங்கி, பக்கமாகிய பகுதி விகுதிகள் ஒன்றிப் போன பொக்கத்திலே புக்குப் பவங்கள் நீங்க; கு - குகை, ரந்திரம், முடிச்சு, துளை; கூ - குகரக் குகையின் நீட்சி: எனவே குக்குகூ, கூகூ, கூகுகூ, குக்கூ, குக்குக், கூ. கூ என ஏழு வியாஹ்ருதிகளாகிய குகைகளூடு குண்டலினி செல்லும் மார்க்கத்தைக் காட்டுகிறது. குக்கூ ஸப்தத்தின் நுண் பொருளைக் குரு முகமாகக் கேட்டறிக.

(21) உப்புக் கூடு - உடல். முப்புக் கேடு - மூப்பாகிய கேடு, மப்புக் காடு - மப்புற்ற மயக்கமாகிய காடு; இவை

மூன்றும் உடல், புலன் பொறி, உள்ளம்) : இனி அப்புப் பூடு - (அப்பு - நீர்) சுக்ர - சோணித நீரில் விளைந்த பூண்டு (இதுவே உடல் உற்பத்திக்கு உருவ வித்து) : ஆதிக்காடு - ஆதிக்கு + ஆடு — ஆதி அசைவால்வந்த ஆட்டம்: (இது யாது?) ஆப்பைக்கோடு - கோடிட்ட அகப்பை போன்ற ஜீவ ரேணு (sperm) தப்பு - தப்பட்டமாம் பெண்: (பெண்ணைத் தேடி மணந்த விளைவான குடும்பத்தைக் காக்க) தகிடுத்தோடு - தகிடுதத்தம் பொருந்திய உலக வாழ்க்கை : தக்கை மூடு - (இவை யாவற்றையும்) தவமாகிய தக்கைபோட்டு மூடிவிடு: இவ்வாறு மூடிவிட்டால் 'டப்புட் டாடு டகடட் டுடு டட டட் டுடு' - (க் ச் ட் த் ப் - என்னும் ஐந்து மெய்யெழுத்துக் களும் ஒலி ஒடுங்கும் ஒலிகள்: இவற்றின் நடுவிலிருப்பது டகர மெய். முந்திய பாட்டில் 'குக்கூ' வென்று மூலாதாராதி குகை ரந்திரங்களில் நுழைந்து செல்லும் வழியைக் கூறினர்: இதில் அந்த ரந்திர முடிச்சுகளை அடக்கி முடிச் செல்லும் டகர மார்க்கத்தைச் சொல்லுகிறார். முன்னது தகர வழி, பின்னது டகரம்: ''தகர டகர வழிச்சென்று நலையாம் பனையிற் கள்ளிறக்கி'' — என்றார் கொங்கணரும்.

(22) காட்டுமலர் - எருக்கன் பூ, மூலாதார முக்கோணம்: தொட்டி லாட்டி - வாசிக் கயிற்றால் ஆட்டப்படும் நாடி நரம்பு நாளக்கூடு: வாட்டி மலர் - வாள் + தி = வாட்டி = வாள் போன்றெரியும் தீ, யோகாக்னி மலரும் இன்னம், வாளமுரி = மதியமிர்தம்: காட்டு மலரின் கனலும் சக்தியை வாசித் தொட்டிலி லாட்டாமல் வாளாய் மேலே செல்லச் செய்து. மதியமிர்த முன்பதைச் சித்தர்கள் ஏட்டில் தீட்டி வைத்தனர் : இதனைத் தத்தமக்குள்ளேயே காண்பவர் கள்-அமுதமுண்பவர்கள் - எமனையும் வெல்வர், ''சாகா வரம்'' பெறுவர்.

(23) இதில் பொன்வித்தை புறமுகமாகவும், அகமுகமாகவும் கூறப்படுகிறது. ஒரு பங்கு இரும்புக்கு ஒன்பது பங்கு ரஸமும், நாற்பது பங்கு மர்ம மூலியும் சேர்த்து 'புதிய குடத்தலையான் பூஷணை'மான திசைமுகக் காந்தச்செப்பில் எரித்து வடிக்க இரும்பு பொன்னாகும்; இனி அகமுகம் பார்ப்போம். அடிக் கண்டத்திலுள்ள கரும் பொன்னாம் கருவை ஆதாரம் ஆறும், அப்பால் ருக்மணி, சோமகுண்டம், லாலனு என்னும் ஒன்பது ஸ்தானங்களுடும், குலகுண்டலினியாம் குமரியோடு இணைந்து, ஸ்தானம் ஒன்றுக்கு நாலு கலையாக அவள் வளர, பத்தாமிடமான சதுஷ்பதத்தில் ஏறும்போது அவளுக்கு நாற்பது வயதாக, (வயது கலை) 'நயமான புதிய குடத்தலையான் பூஷணை, மென்னும் சகஸ்ரார வட்டில் யோகாக்னி கொண்டு ஏற்றி எரித்து வடித்தவனுக்கு தொட்ட மாத்திரத்தில் அயம் பொன்னாம். இவ்விரு வகையில் எவ்வகையில் பதமறிந்து பொன் செய்தாலும் அவ்வாறு செய்பவரை மிகப் பெரிய ஞானி, என்று உலகோர் போற்றுவர்.

(24) இப்பாட்டு புதுரகமானது; வரி அந்தாதித்து வருவது. ராமன், கண்ணன் - இவர்களது அவதாரச் சிறப்பும்

வேதவேனனுகிய சாதகனது சாதனைச் சிறப்பும் ஈண்டு கூறப் படுகின்றன. இலங்கையானுன இராவணனது இளையானுன வீடணனுக்கு லட்சியம் ராமன் : அதிலும் ராமனது பாத ரஸனை : அதிலிருந்து (ராமாவதாரத்தால்) சவ்வீரம், சவ் வாது என்னும் சாம்யமுக வீரமும் தர்மமும் கோக்களாகிய ஜீவர்களிட முண்டாயின. அப்பால், கோக்களிடையே, (பசுப்பிராய ஜீவர்களிடையே) ஞானக் குன்றேறி நின்ற பாலனுகிய கண்ணன் தோன்றினுன் : அவன் காலமில+வங் கம் ஆகிய காலமற்ற கடலாம் கடவுள் நெறியைக் கீதை மூலம் பாடினுன். வேனன் ஞானவழி சென்று முக்தி யடைந்தான்.

சவ்வீரம்-தர்ம சமனமான வீரம்; சவ்வாது-வாத விவாத மற்றிணைந்த சாமீப சாயுஜ்யம்; கோ-பசு, பசுப்பிராய ஜீவன்; குன்று-ஞானக்குன்று, கோவர்த்தனகிரி, இந்திரிய நாதனுன இந்திரனை வெற்றிகொண்ட அதீந்திரிய நிவர்த்தி மார்க்க சிகரம் ; காலமிலவங்கம்—காலமில+வங்கம்—கால தேச வர்த்தமானங் கடந்த கடவுட்கடல்; லவங்கம்-ல+வங் கம்: ல-மண் (லம் ப்ருதிவி), வங்கம்-கடல், லவங்கம், கடல் சூழ்ந்த உலக வாழ்வு, மமகாரம்; லங்கணம்-உப்பு; மின்-மின் திறல்; சங்கம்-வாசிக்குழல்; மணி-உன்மணி; வேனன்-வித்தை பயிலும் சாதகன்; ன்-தமிழ் நெடுங்கணக்கின் கடை எழுத்து; 'ன்'னென்னும் முடி சிரத்தின் உச்சி, "சிகாய மத்யே பரமாத் மா வ்யவஸ்திதா" என்ற ஜீவ ப்ரஹ்ம ஐக்ய ஸகஜ ஸ்தானம்; கைலாசம்.

(25-26) வேத மதி-வேதாந்தம்; பகுதி-வேதம், விகுதி-வேதாந்தம்; பாதி மதி பதமூலி-பரனும் பரையும் இணைந்த அமிர்த சஞ்சீவியாம் பாதத்தினை; பர ஞானம் பெறப் பரை யருள்வேண்டும். அப்பரை தாதி. தாதி-சேவகச்சி, தோழி, வினைச்சி; தாது+இ=வேர்ச் சக்தி, ஆதார வின்; மிகு மீதி-மிருதி மிகுதியென்று மேலும் மேலும் சென்று அப்பால் மீதமாயுள்ள அகண்ட நிறைவு; கோதி-நேதி நேதி என்று யாவற்றையும் பிரித்து விலக்கல்; கூத்தி-அண்ட பிண்ட சரா சரங்கள் யாவற்றையும் கூத்தாட்டும் அன்னை: அவளது ஜாதி (மிகு)-மிகுந்தது, ஜோதி மயமானது; வங்கம்-கடல்; வழுதி-வள்ளல்; இலைப்பாதி-பாங்கற்ற பங்கு, அதாவது உபநிடதம் கூறும் 'பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்துப் பூரணத் தை மிச்சங் காட்டும்' பரிபூரண வித்தை; ஏதில்-குற்றமற்ற; நாதி-புகலிடம். இவ்வித்தைக் கேற்ற புகலிடம்; காதமிலாச் சோதி-கணக்கற்ற ஜோதி; காணுதே கண்டு-புறத்தே காணு மல் அகத்தே கண்டு.

(27-32) இப் பாடல்கள் எளியவை; பண்பற்றவர் வாத. வேத, மோட்சப் பயன்களும் தேடுவது பயனற்றது எனக் காட்டுகின்றன. கணநாதர்-கணபதி, குரு; மணிநாதக் கரு-நாதாந்த மூலம்; மச்ச-சிரத்தின் உச்சி.

(33) இம்மை துறந்த ஈசனைப் பிடித்தாலும் மனத்தை ஒடுக்காமல் மனத்தில் ஒடுங்குவார்க்கு மாயையே மிச்சமாகும்.

(34-37) பவமும் அவமும் அற்றவரே தவமும் சிவமும் உற்றவர்; போக மற்றவர் யோகம் பெற்றவர்; சோகம்-துன்பம்; சோகம் ச+அ்கம்-அவன் நான் என்னும் சோகம் பாவனை, சோக மிறந்தால் சோகம் வாய்க்கும்; காமம் கட்டந்ததே காய கல்பம்; நேமம் (நியமங்கள்) அகன்றதே நேயம்; வாமம்-அருள்; அருளாலேயே அகண்ட வான் கிட்டும்; 'ஓம்' மயமாவதே ஞானம்; ஊனமாகிய உடல் கடந்தது உச்சமாகிய உன்மணி; மோனத்தில் விளையும் முன்னும் மணியாம் நாதாந்தம்; வானமாகிய அகண்டமே என்றும் மன்னி நிலையான மன்மணி; கோன்-அரசன்) நாயகன்; குருமணியை அகத்தில் கொண்டவன் கோனாகிறான்.

(38) அரு நீர்-அருமையாம் அமிர்த நீர், அருள் நீர்; பூநீர்-தேன்; நவலோகத்தும் கனமுருகும் நன்னீர்-லோக வேத த்ரவம், ரஸ ரஸனா காந்தம்; உண்ணீர்-உள்ளத்தினுள்ளத்தின் உள்ளுள்ள வெளிநீர்; தானவளைப் புணர்ந்திட்டான்-சிவையோடு ஒன்றியவனே யோகி.

(39) வினை நீங்க வித்தை சொன்னான் அகஸ்தியன்; மாயையாம் காம போதைக்கும் போதம் காட்டினான் போகன்; அ தா வ து "பெற்ற சிற்றின்பமே பேரின்பமாயங்கே முற்றிவரும்" பெருமையைக் கூறினான்; வல்லமையால் மர்மத்துக்கெல்லாம் மர்மமான மார்க்கத்தை சொல்லுக்குள் சொல்லை வைத்துச் சூத்திரம் காட்டினான் வள்ளுவன்; காரண காரியங்களைப் பாலம் போட்டுக் கடந்த கடவுளைக் காண வழிசெய்தான் திருமூலனாகிய சித்தன்.

(40) அகங்கார மமகாரங்களை அடக்கி, தன்னுள் தன்னை நீக்கி, வாமியாம் அபிராமி வாத வேதமான வாலாம்பிகையோடு ஒன்றாகி, ஓமின் உளவையும், ஊமை எழுத்துணர்வையும் கண்டவர் சகலத்தையும் வேதித்துத் தங்கமாக்க வல்லவர். ஊமை எழுத்து-குருமுகம்.

(41) அத்தானே-அதுதானே; அத்திப்பாலரைக் கிரை-சுக்ர சூக்ம ஜீவரேணுக்கள்; சத்தாரம்-சத்தான உச்சம், தாமம்-தரிப்பு, காந்தம்; ஸகஸ்ரார மின்கூட ஆகர்ஷணத் திறல்; தான்-ஈசன்; சுத்த ஜலம்-வின் அமிர்தம், முத்தாரம்-முத்துமாலை; அண்டபிண்டச் சுண்ணம் - முத்தாரங்கள் போலுள்ள அண்டபிண்டங்கள் யாவும் சுட்டெரித்த விபூதி; முப்பூ-(பாடல்-3); இவை யாவும் சொன்ன சித்தர் சித்துக்களுக்கெல்லாம் சேகரமான குரு மூலிகையையும் சொல்லப் போகிறார்; சொல்லுதற்கரிய வாக்கு மனம் கடந்த வாசாமகோசர மெய்ப்பொருளைக் கூறப்போகிறார். குரு மூலி-யோக முறையில் சுழுனைச் செடி; அல்லது ஊமத்தான் கரு.

(42) கடை-கடைசி, முடிவு, இழிவு, இறுதி. பொருள்கள் விற்பனைக் கடை; கடையன்-கடைசியான்; கடந்தவன்; கழறிடுவேனாயினேனே-கழறுதல்-சொல்லுதல், கழறிடுவேன் + நாயினேனே; கழறிடுவேன் + ஆயினேனே; நாயினேன்-நாயைப்போன்று இழிவானவன் என்பது அவை அடக்கம், நாயினேன்-நாயோட்டு மந்திரமாம். ஆதி மகாமனுவை அறிந்த ஞானி. ஆயினேனே-கழற முடியாத கடவுளைக் கழறலானேன். கடையெழுத்தாம் ஊமத்தான் கரு-யாவுக்கும் அப்பாலுள்ள ஊமை எழுத்தின் கரு-(குருமுகம்) சிருட்டிக்கு அப்பாலுள்ளவர்கள் சித்தர்; அங்குள்ள சதகோடிச் சித்தர்களில் ஒருவனாக நானும் காரைநகர்ப் பீடமான இப்புதுச் சித்த பீடத்தைக் கட்டுகிறேன்.

ஆன்ம வைப்பு

பொதுவில் இப்பகுதி எளிதானது; 43 முதல் 48 வரை சித்தான்ம தரிசனம்; சம்மேளன வகையில் அந்தணர் ஒழுக்கமாய்ப் பேசப்படுகிறது.

(43) மனித மனத்துக்குள்ளே மாளாத சக்தி இருக்கிறது; அது மீண்டும் பிறவிக்கு மீளாத மார்க்கம்; தன்னுள் தானே தன்னையே மின்னுத்தாளாம் வாலையாகக் காணும் வாத வெற்றி; யாவருக்கும் எப்போதாவது இந்நிலை கிட்டும்; இதற்கு வழி காமம் விட்டுக் கம்பத்தில் தூங்குதல். கம்பம்-முதுகந் தண்டு, சுழுனைக் கோல்.

(44) தூக்கம் தள்ளித் தூங்காமல் தூங்கல்; இந்நிலை காண இயம நியமாதி தேக சுத்தி செய்து கொண்டு, ஆங்காரம் நீங்கி, வர்ணாஸ்ரம வகை யாவும் போக்கி, ஆதவன் துணைகொண்டு ஆன்ம தரிசனம் சாதிக்கவேண்டும். இவை அந்தணனுக்குச் சொல்லப்படுகின்றன. தூங்காமல் தூங்கல்-உடல் உறுப்புகள், பொறி புலன்கள், கரண வகைகள் யாவும் தூங்க ஆன்மா மட்டும் விழித்திருக்கும் யோகத் துயில்; அஞ்ஞானமற்ற ப்ரக்ஞாவம். ஆதித்தன்—சூரியன், ஆன்மா, ஓம் தத் ஸவிதா' தேவதா, அந்தர்யாமியான ஆன்ம சூரியன்.

(45) குப்பை-உடல். குப்பை போன்றது; கு + பை = குப்பை-குகை போன்ற இதய ஸ்தானம், அனுஹதம்; மின் மினுக்கி-மின்னுத்தாள்; வைத்யுதாங்கி, வித்யுன் மாலா, வித்யுன் லதா விக்ரஹமாகிய வாலை; ஸஹஸ்ரார சிகரப் பிறைகளின் மினு மினுப்பு; பொன் மேனி-மாயா விலாசம், 'மாயை பொன்னுறு வண்ணம்'-என்ப; தர்ப்பை-சுழுனை; சர்ப்பம்-குண்டலிப் பாம்பு; 'அர்ப்பை-அர்ப்பணம், பிள்ளைப் பூண்டு, குழந்தை. ஈண்டு அர்ப்பணம்; கர்ப்பை-கரு வழி, ஈண்டு மேல் ஸ்தானங்களின் சிறப்பும், விரிவும். கோலக் குமரியாம் வாலை விளையாட்டை இப்பாட்டு குறிப்பாகக் காட்டுகிறது.

(46) ''பற்று வரவுக் கணக்கு, விற்று முதல் விளைவு, வற்றிப் பாயும் வழக்கு'' என்னும் போக்கு வரவற்ற போத நிறைவே சித்தர் நெறி. நிற்றி-நிறுத்து என்பதின் குறுக்கம், நிறுத்தி நினைத்தால் பொன் வித்தை; நினைவில்லா நிலையம் போத வித்தை.

(47) துத்தி-ஒரு மூலிகை (பாற் பொடிக் கல்ப மூலி) தேமல், உண்ணல், தீ, கண் மருந்து, ஓரிசை, நாய்ப்பாகல், நீர்முள்ளி முதலிய; பனைத்துத்தி-காய கல்பக் குண்டலினி; இலை-குண்டலினிக் கொடியில் அலகுகள் விரிக்கும் ஆதார க்ரந்திகள். சாறு-அவைகளின் அணுபேத சாரம், வித்தென்னும் விந்து-ரேதஸ்; நாத-நாதாந்த நடன உக்மணிக் கலை; விந்து ரேதஸ்-ஓஜஸ்-தேஜஸ் என்று மென் மேற்சென்று யுக்மணியுடன் ஒன்றித் தூய்மை பெறும் ஞான வீர்யத்திலே துப்பறத் துப்புறவு பெறும் சந்தியாவந்தன சூக்கும். விரிக்கிற் பெருகும்.

(48) ஓம்-எம்மொழிக்கும் ஆதியந்தமாம் செம்மொழி. அந்தணன் ஓமறிந்து, ஓமில் நின்றிருந்து நிலைத்து ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறு தொழிலையும் செய்கிறான்.

(49) இது காய கல்பம்; நாவற் பழம், கடுக்காய், நெல்லிக்காய், ஆலின் விதை, அரசின் விதை, தான்றிக் காய், வல்லாரை, கரிசாலை, பொன்னுரை, முத்தக் காசு, இத்தி-இவற்றின் கலவையே கல்பம்.

ஆலும் வேலும் அரசும் முருங்கையும்
நாலும் நெல்லிக் கடுக்கையும் நாவலும்
சில மானமுங் ராத்தியும் சேத்தியும்
ஏறு முத்தமும் இத்தியும் கல்பமே

என்முூர் பிறரும். இதன் அந்தர் முக அர்த்தம். நாவல்-ஜம்புலிங்கஸ்தானக் குண்டலி மையம்; 'நவ்விரண்டு கால தாய்'-என்றபடி வல்+நா தலைகீழான நாவல்; கடு-கண்டம், கழுத்து; கடுக்காய்-கண்ட முடியாம் விசுத்தி ஸ்தானம்; நெல்லிக்காய்-நெற்றிப் பிறையொளி; 'கண்ணிரண்டின் மேலாம் கருநெல்லி' என்முூர் கைலாயக் கம்பளிச் சட்டையரும். நல்லால்-நல்+ஆல்=தக்ஷிணாமூர்த்தி ... என்றும், தத்யன் என்னும், அஸ்வினி தேவர்களின் ரகஸ்யம் என்றும், சோம பீடம் என்றும் மது வித்தையில் கூறப்படும் 'உன்னுக்கின்' மேலான மதிப்பிறைத்தலம்; ஆட்சி-அரசு; சுழுனைத் தலங்களிலெல்லாம் உயர்ந்தது வாய். ஸகஸ்ரார மத்ய ஸம்மோஹன மோகினி ஸ்தானம்; நாத்தி-சித்தர் பரிபாஷையில் கரிசாலை, வல்லாரை, பொன்னுரை என்ற மூலிகைகளுக்கு, நாத்தி என்று பெயர். அந்தர் முகத்தில் அநிருத்த வாணி, அநிருத்த காமன், அநிருத்த உமா என்னும் ஸகஸ்ரார்த்தின் மூன்று யோநிகளைக் குறிப்பதாகும். மேற்சொன்ன சரக்குகளை இம்மூன்று யோனிக்

குள்ளும் மேவும்படி எவ்வளவு செலுத்துகிறோமோ அவ் வளவுக்கு முத்தக்காவாகிய வாலாம்பிகையின் சித்தி (முத் தக்கா சித்தி) கிடைக்கும்: இதுவே வானமுதம், அழியா இளமையின் அரு மருந்து (85-86, 199-202, 276-279 முதலிய பாடல்களைக் காண்க.) 70

(50-51) ஆன்மானுபவ அடிப்படை ஒழுக்க நெறி. நாக்குளரல்-பேச்சு; நாவன்மை-மோனம்; நலன்-நன்மை யானது; ஈசனடி பணிதல்-ஈசனடியாம் உச்சிக் கோயிலைப் பணிதல்; மீக்குயரும் பழச்சாறு -'மாங்காய்ப் பால்'; மதி அமிர்தம்; வில்வத்தின் அடியிலே விருந்து-வில்+வம், வில்-சுழுனை; வம்-(வம் ஆப:) சுழுனை முடியின் ஆபோ ஜ்யோதி யாம் ஸோம பானம்; விருந்து-மதியமிர்தமும் ஜோதி விருந் தும் கொள்ளல் 'உண்ணாக்கின் மேலேறி' நிற்கும் யோகம் பெற்று 'ஆக்கமுற' தவம், அருள், நினைவு, என்னும் முக குணங்களும், கோயில் வழிபாடு, ஈகை, தயை, தானம் இன்சொல், நயம், தெய்விக நாட்டம், தன்மை புணர்வு, அத்துவித ஐக்ய பாவம், ஈசனென யாவைக்கும் அன்பு என்னும் அருங்குண நியமங்களும் அவசியம்.

(52) குருவைப் பணிந்தாலன்றிக் கருவாகிய ஜென்மம் குருவாகாது; உருவமே அழியாது குருவாய் விட்டால் உள்ள பொருள்கள் யாவும் ஒரு தனிச் சித்தாகத் தோன்றும்.

(53) அகத்தில் அகத்தைக் கண்டார்க்கு அகிலமெல்லாம் அகமாகிய ஆன்மாவாம்; அகநீங்கிப் புறம் காண்பார்க்கு அனைத்துமே மாயைதான்.

(54) இருப்பது ஒன்று; உலகாய் இயல்வது பலப் பல. யூகத்தால் அந்த ஒன்றும் ஆன்மாவாய் விளங்கும், அது யோகத்தின் திறல். உருவில்லை, அருவில்லை, ஒன்றே ஒன்றாய் ஒன்றுனது.

(55) தன்னை அறிந்தவனே தலைவனும் இறைவனைக் காண முடியும்; மற்றவர் செய்யும் யோகம், தவம் யாவும் வீணேயாகும்.

(56) சாகாக்கால் (சாகாத கால்)-வேகாத்தலை, போகாதே வாரதே புசித்திடாதே (போகாப் புனல் ஆகா வழி). ஆகாதே, அழியாதே என்பன சித்தர்கள் வழக்கில் பல் பொருள் ஒரு மொழிச் சொற்கள்; இடம்-வலம், இடகலை-பிங்கலை, மதி-ரவி, சீதம்-சூதம், கூப்பு-கூர்ப்பு, சளிப்பு-சுளிப்பு, போக்கு-வரவு, புகுதல்-விருதல், ஏறல்-இறங்கல், மிகுதல்-குருதல, கொள்ளல்-கொடுத்தல், ஆதல்-அழிதல் முதலான இருமைகள் யாவும் நீங்கி யாவுமாய், அனைத்து மான ஒருமையே ஆன்மா.

(57) தாதித்ரி-தாதுதரி, மூலனைக் காக்கின்ற வன்மை தரும் மாணி விரதத் தேவதை; செந்த்ரி-செதிர்த்ரி அக்னி- சூர்ய-சோம, மூலாதாராதி மணிபூரம்-அனாஹதாதி

ஆக்ஞை-லாலனாதி மோதினி மண்டலங்களைச்சேதித்து மேலே றிச் செல்லும் யோகாக்கினி; இவ்விரண்டையும், சாதனை செய்து காயித்ரி, சாவித்ரி, (சரஸ்வதி) என்னும் முத்தேவதைகளையும் வேத முறைப்படி பூசித்து; மாயித்ரி-மாயா மோஹினி, மாலத்ரி - (மால்-அவித்தை, ஆசை, மயக்கம்) அவித்யாராகினி இவைகளை வாதமிட்டு எரித்து, ஆய-உண்மையில் உள்ளதுவாய்; த்ரிகாலத்தும்- என்றும், எப்போதும், யாவற்றுள்ளும் அணைந்துள்ளது ஆன்மா.

(58) ஆதிமத்தியாந்தங் கடந்த அனாதி, வேதங்காணா வேதம், பேதம் அபேதம் என இரண்டையும் கடந்த போதம், நாதமற்ற பரநாத மோனம்-இவையே ஆன்மா.

(59) நினைவில் நினைவாய், நினைவுருவாய், நினைவற்று நிற்கும் நினைவு; நினைவற்ற நினைவுமற்ற நிறைவாய். நினைவின் உள்ளுக்குள்ளே 'தான்' என்னும் உண்மையாய் நிற்பது ஆன்மா.

(60) அழியும் உடலில் அழியாதது ஆன்மா: அழுக்கு மனத்தில் அழுக்கில்லாது அணைந்து நிற்பது ஆன்மா; பாவிகளுள்ளும் சாட்சியாகப் பார்த்திருப்பது ஆன்மா; வேதகிரி (கழுக்குன்றம்) உச்சியின் வேதாந்த விளக்காய், யாவைக்கும் கதியாய், எதுவும் கலவாமல் ஏகமாய்த் தனித்து நிற்கும் பெருஞ்சுடரே ஆன்மா.

(61) இது எளிய பாடல்; ஆதி, அந்தம், நடு யாதுமில்லாச் சோதி. அநாதி; ஓதற்கரிய உள்ளொளி, ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றாய் ஒன்றிய இரண்டற்ற ஒன்று; வேதம், வேள்வி, விண்மண் விரிவு, விருப்பு வெறுப்பற்ற வெளி, போத, போதமுற்ற நெஞ்சத்துப் பூரணம்; யாவைக்கும் காரணம்- ஆன்மா

(62) ஈசனை ஆன்மாவோடு இணைக்க எண்குணங்கள் வேண்டும்; அவை: தன்வயம், தூயஉடல், இயல்பிணைவு, முற்றுணர்வு, இயல்பிலேயே பற்றற்ற தன்மை, பொருள், முடிவிலாற்றல், வரம்பிலாற்றல் (வெறுமையான பாழ்) வெளியிருட்டிலே ஆன்ம ஒளியின் களியேற விண்குணமாம் சாகாத கல்வியாகிய அமரத்வ சாதனை வேண்டும். பெண் குணம் வேண்டும்; ஈசானுஜையாகிய ஈஸ்வரியிடம் அன்பு வேண்டும். அனுஜை-சோதரி; ஈஸ்வர சோதரி லக்ஷ்மி, திருமால் சோதரி உமை; பெரிய சாந்தம் வேண்டும்; 'சௌச' மாகிய ஆசாரங்கள் வேண்டும்; புறக்குணங்கள் நீங்கி அகக்குணங்கள் (உட்குணங்கள்) உருப்பெற்று ஒளியாகி, ஒளி உயர்ந்து வெளியானால் ஆன்மசித்தி கிடைக்கும்.

ஆன்ம வைப்பு முழுமையும் உலகத்தில் வாழ்வாங்கு வாழும் அந்தண்மையுள்ள இல்லறத்தோருக்கு உபதேசிக்கப்பட்ட சந்தியாவந்தன யோகமார்க்கம். 'வஜ்ர சூசி' யாதி உபநிடத உண்மையை உலக வாழ்வில் உருப்பெறச் செய்ய

வேண்டிய வழி; இன்றிருந்து நாளை மடியும் இல்லறத்தானுக்கு இது அநேகமாய் அசாத்யமாகையால் காயகல்பமும் கூறப்பட்டுள்ளது.

மணி வைப்பு

மணியிற்பலவகையுண்டு - நவமணி, உபநவமணி, வைத்தியமணி, வாதமணி, ரஸமணி, காந்தமணி, ராஜகாந்தமணி, வஜ்ரமணி முப்பூமணி, மும்மணி, லிங்கமணி, வீரமணி பூரமணி, காரமணி, சாரமணி, குமாரமணி, ருத்ரமணி, திருமணி, சிவமணி, சிரோமணி, சிந்தாமணி, நாதமணி, பிந்துமணி, ஸ்ரீமணி, கனகமணி, ககனமணி, கலாமணி, களாமணி, காராமணி மஞ்ஞன்மணி உன்மணி முதலியன. இவற்றுள், ஈண்டு முப்பூ மும்மணி, மௌனமணியாம் ககனமணி, சிந்தாமணி, ரஸமணி, வஸ்யமணி முதலியவை கூறப்படுகின்றன.

(63) மணி-உன்மணி; மணியைக் கண்டபின்தான் அதனைக் கட்ட முடியும்; யோக மூலம் தசவித நாதம் கேளாமல் மணியுள் உயர்ந்த உச்ச மணியாம் சிந்தாமணியைக் காணமுடியாது.

(64) உட்பொருளான மெய்ப்பொருளின் உண்மையைக் கண்டவர்க்கே பொய்ப்பொருளாம் பொன் வித்தை சித்தியாகும்.

(65) சித்தர்கள் உண்மையை மறைத்தாரென்பது பொய்; சித்தர் நூலைத் தொட்டதும் சித்தர்கள் சூழ்வர்; சித்தம் நிறைந்தவர்க்கு அருள்வர், இல்லையேல் உடனே விலகிப்போவர்.

(66) விந்து-அணு, வட்டம், புள்ளி, உரு, கோண், குளை, சொளை, சுக்ரம்; நாதம்-கால், காலம், நீட்சி, கூர்மை, கோடு, தொடர்பு, இயக்கம்; சோமகுண்ட மையம்: ஒரே வாக்கில் தேசாத்மகமான விந்துவை காலாத்மகமான நாதத்தோடு கலக்க விட்டவனுக்கே வாத வித்தை வரும். வாலை ரசம் வாதத்திற்கும், தாது (சுக்ரம்) ரஸம் யோகத்திற்கும் உதவியாம். எதுவாயினும் முப்பூ சாதனை இல்லாதவர்க்கு முடியாது—இம் முப்பூவும் யோக முப்பூ. பூநாகம்-பூவில், மூலாதார நாலிதழ்க் கமலத்தில் இருக்கும் நாகமாகிய குண்டலினி ; லவணச் சுண்ணம்=லவணம்-உப்பு, சுண்ணம்-பொடி; உப்புப் பொடி, மூலத்திலுள்ள அனுத்திரள்; (உவர் நிலத்தில் வாத வைத்ய முப்பூக்கள் முளைக்கின்றன ; அவைகட்கு ஆதாரம் பூநீறு ; அனுத்திரள் உப்புக்கூடிய மூலக்களத்தில் இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மதி, ரவி அக்னி சக்திகள் மூன்றும் யோக முப்பூவாகப் பூத்துள்ளன) இம் முப்பூவை வங்கென்று வாங்கி, சிங்கென்று பூரித்து ஓங்கி, வெறும் வாசியைச் சிவவாசியாக்கிச் சுழுனை முடியாகிய உன்மனக்கின்றேர்த்வ முகமாய் நாட்டு. இதுவே யோக மும்மணி முப்பூ சாதனாரம்பம். வங்கமென்றும்-கடலென்றும்; இவ்வுடலே

17

உப்பு நீர் கூடிய உவர் நிலை வைப்பு ; சிங்கம்-மலை உச்சி, ஸகஸ்ரார சிகரம் ; சிவ வாசி-ஸோகம், ஸாகம், ஷிவோஹம் பாவனை ஹம்ஸ நெறி; அஜபா காயித்ரி.

(67) முந்திய பாடலின் தொடர்பு, அந்தாதித்தொடை: 66 'நாட்டு' என்று முடிகிறது; 67 'நாட்டு' எனத் துவங்குகிறது; எதை நாட்டுவது? சடலந்தன்னை ? எதில் நாட்டுவது? 'சுழுனை நாட்டே' உடலை உடலுக்குள் ஓரிடத்தில் எப்படி நாட்டுவது ? உடல் என்பது என்ன ? 'நவாசாரமெனும் சடலம்'-(சாரம்-க்ஷாரம், 386-87 காண்க). ஒன்பது க்ஷாரங்களால், உப்புக்களால் ஆன உடல்; இதனை, 'நவநாத சித்தாக்கி'-புதுமையான நித்ய சித்தமாக்கி (க்ஷாரம்-க்ஷரிப்பது; நாதம்-அக்ஷரமான காலம் வெல்லும் கலை) இவ்வாறு மொத்தான உடலைச் சித்தாக்கிய சேதனத்தை, நான் நான் என்னும் அகந்தைப் பூட்டுள் மறைந்துள்ள தானும் தன்மயத்தை அறிந்து ஞானம் பெறில், 'கனகக் காட்சி'-கனக மணி, தொட்ட மாத்திரத்தில் தொட்டவை தங்கமாகும் வித்தை நிதர்ஸனமாய்த் தெரியும். (இது முப்பூ மும்மணியின் முதன் மணியான கனகமணிக் கட்டம்; இதுவே கல்ப மணியும் ஆகும்). அடுத்தபடி மேற்கூறிய மணிக்குக் காலப் பிரமாணம் கூறப்படுகிறது. ஒரு ஜாமம் (2 மணி 24 நிமிடம்) உடலாகிய உவர்க்களத்தில் ரவிமதி வன்னியாகிய மூவகை உப்பையும் நாதத்திற்கு ஊட்டிய ஒருப்பிலிட மூவுப்பும் கட்டிக் குளிகையாய் கல்பமணியாய்க் கனகமணியாய்க் கவின்தரும். இவ்வுடல் உப்பென்பதை,

"ஊத்தைச் சடலமடீ உப்பிருந்த பாண்டமடீ"

என்றார் அழுகண்ணிச் சித்தர். மச்சமுனியாரும் இதையே

"உப்பிலுள்ள உண்மை ஊரிலுள்ளோர் கண்டால்
செப்பரிய முப்பூ செய்வதற்குத் திண்ணம்."

என்று உறுதி கொடுக்கிறார்.

(68) அடுத்தபடி, தொடர்ந்து, கமன மணியைக் கூறுகிறார். சித்தர்கள் பரிபாஷையில் வாசி என்பது பரியாகவே பெரும்பாலும் பேசப்படுகிறது. (வாசி-மூச்சு, பிராணன் பரி-குதிரை) வாசிக் குதிரைமேல் ஏறி, அதனை இழுத்துப் பிடித்து அடக்கி, நடு வாயிலாகிய சுழுனைக்குள் செலுத்தி, உச்சி மனையாகிய சிரசோட்டின் சிந்தாமணிக் கிரகத்தில் குற்றமற்ற வேசியாகிய பாலாம்பிகையைக் கூடிய வை போகத்திலே, பருப்பொருளாம் தேகம் நுண்பொருளாம் சூக்கும தேகமாக, தேவருலகோடு உறவு கொள்ளும் ஒளி உருவாய் ஆகாய கமனம் செய்யும் சித்தாந்தமாம். சித்தாந்தம்-முடிவு; இந்த நிலை எய்திய ஒருவன் செத்தவனாகத் தோன்றுவான்; 'மாண்டான்' என்று உலகத்தாரும் பாடைகட்டி விடுவர்; ஆனால், அவன் சாகாமற் செத்துள்ளான்; ஊனுடல் விழ உயிருடல் உம்பருலகோடு உறவு கொண்டு ஆகாய கமனம் செய்கிறது. வாசிப் பரியைப்

பற்றி அழுகண்ணியாரும் :—'எட்டாப் புரவியடி ஈராறு காலடியோ' என்று கூறியுள்ளார். இப்பாடல் கமனமணியை விவரிக்கிறது.

72

(69) இது சிகாமணியாம் சிந்தாமணி மார்க்கத்தின் பொது விதிகளை 'மவுன மணி' முறையில் கூறுகிறது. ஆசைக்கடலைக் கடந்து, அகமும் முகமும், உள்ளும் புறமும் அறமும், அருளுமாய் வாழ்ந்து, அவைமுடித்து, முடிவில் யாதுமற்ற அசைவில்லா மவுனமணியைப் பெற்றவர்க்கே ககனத்தில் நடம்புரிய முடியும். இதுதான் லம்பகத்தின் மேலான யுக்மணி நிலை; இதையேதான் அழுகண்ணியாரும்

"கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்திமத்தில்
உண்ணுக்கு மேலேறி உன்புதுமை மெத்த உண்டு"

எனவும்;

'சந்திரரும் சூரியரும் நான் போந்த காவனத்தே
வந்து விளையாடியல்லோ – என் கண்ணம்மா
மனங்கொள்ள மாட்டேனே

எனவும் கூறியுள்ளார்.

(70) 66-ம் பாடலில் ஆரம்பமான தொடர் இப்பாடலோடு முடிவடைகிறது. பூரணமாகச் சொல்லுகிறேன்; சரியான முறையில் மேற்சொன்னபடி பூட்டைப் பூட்டினால் முழுமையைக் காணலாம். முழுமையிலிருந்து முழுமையாய் முழுமையைக் கழித்தும் மிச்சமாக முழுமையைக் கொள்ளும் பூரண கும்பகத்தில் தசவித நாதங்கள் முழங்க முக்தியடைந்த ஞான சித்தனுக்கே அண்டாண்டகோடி அகிலாண்ட முழுதுமாய் அகண்ட சஞ்சாரம் செய்யும் 'ககனமணிக் குளிகை' கிட்டும்.

இந்நான்கு பாடல்களிலும் மூன்று மணிகள் கூறப்படுகின்றன—கனகமணி, கமனமணி, ககனமணி; இவை மூன்றும் கூடியதே முழுமணியாம் சித்தமணியான சித்தயோகமாம்; இதனைத் தாயுமானூர்;

'இய லறிந்துவளர் மூல குண்டலியை
இனி திறைஞ்சியவ ளருளினால்
எல்லை யற்றுவளர் ஜோதி மூலஅனல்
எங்கள் மோனமனு முறையிலே
வய மிகுந்துவரும் அமிர்த மண்டல
மதிக்குளே மதியை வைத்துநான்
வாய்மடுத் தமிர்த வாரியைப் பருகி
மன்னுமா ரமிர்த வடிவமாய்
ஜெய மிருந்துவரும் சித்தயோக நிலை
பெற்று ஞானநெறி யடைவனோ?

என்று மேற்கூறிய சித்தநெறியைத் தமது "சிற்சுகோதய விலாச"த்தில் தெளிவாக்குகிறார்.

(71, 72) வேடம் போடும் எத்தர்களது ஏமாற்றங்களை வேரோடும் வீழ்த்துபவர்கள் சித்தர்கள்.

(73) ஞானம் பெற முக்கியமான குணங்கள்-பொறுமை, கருணை, அன்பு, செய்நன்றி.

(74) மந்திரம், யந்திரம், தந்திரம்-இவை யாவும் கட்டுப்பட்ட மார்க்கங்கள்; அந்தரம், அனந்தரம், அகந்தரம்-இவையே ஞான நெறியின் தராதரங்கள்.

(75) நாத்திறம், கோத்திரம், சூத்திரம் முதலிய வர்ண தர்மங்கள் வெறும் பேய்த் திறனே; ஆத்திரம் தரும் கண்பட்ட கயமையே; வெறும் பொம்மலாட்டமே. சூத்திரம்-சூத்ரம், வர்ண தர்மத்தின் ஒரு பாகுபாடு; சூத்திரம்-சூத்திரப்பாவை, பொம்மலாட்டம்.

(76) சோத்துத் துருத்தி, மூத்திரப் பை என்றெல்லாம் கூறும் உடலை சோத்திரமான புண்ணியம் என்பதேன்? இதே ஊத்தை உடல் ஆன்ம சைதன்யத்தின் ஆலயமாகும்போது சாத்திரங்கள் புகழும் மேன்மை பெறுகிறது.

(77) எழுத்து, சொல்-இவை மட்டும் கவிதையாகாது. அட்சரம், சொற்சுரம் இவைகள் மாத்திரமே கவிச்சரமாகிய தெய்வப் படைப்பாம் சீர்மையாகாது. கவிதை என்பது ரிகவேதப்படி, 'கவி : கவித்வ திவி ரூபம் ஆஸஜத்' ; தன்னைத்தானே தெய்விகமாக்கும் கவிதைச்சரம் மெய்ச்சரத்தால் உட்சரமாய் சொச்சுரம் காணல். அழுகண்ணியாரும்,

'அந்தரத்தை வில்லாக்கி ஐந்தெழுத்தை அம்பாக்கி
மந்திரத்தே ரேறியல்லோ மான்வேட்டை யாடுதற்கு

என்று விளக்கியுள்ளார்.

(78) 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், 18 சித்தர்கள், அருட்பெரும் ஜோதி வள்ளலார்-முதலியோர் கருவைப் பாடி-ஜன்மத்தைப் பாடி, வினைபாடி-விதிவினைகளைப் பாடிக் கத்துவதற்காகக் கவிபாட வில்லை; கருவைப்பாடி-யாவுக்கும் சாரமான உளவைப்பாடி, குரு காட்டி-ஞான குருவைக் காட்டிக் காப்பதற்காகவே பாடினர்.

(79) மேற்சொன்ன முறையில் இடையிலே சாயா புருஷ தரிசனமும், ஞான திருஷ்டியும் ஏற்படும். கார்மேக வண்ண மௌனப் பேச்சளவில் குறிக்கும் சூக்கும தேகத்தின் தூய்மையைக் காம தேவதையான காமன் (கதிரொளி-ஜீவ ரேணு காந்தம்-வசிகரம்) காம மயமான தூல தேகத் திச்சையால் இழுத்துப் பாழாக்குகிறான்; இதனால் கீழ் நோக்கி விந்து வீணாய் ஜன்ம ஹேதுவாகிறது. இதை மாற்றி, விந்துவை மேலேற்றி, வாசியை வலம்புரியாக்கி, மின்னூட்டி, யோகாக்னியால் சிரமத்ய வானத்துட் செலுத்த, நாதமென்னும் காலங்கடந்த கவிதா வித்தை சித்திக்கும்; மரன அமரனாவான், மரா' என்னும் மரணம் 'ராம' என்னும் அமிர்த

மாகும். இந்தத்தலை கீழ் மாற்றத்தையே அழுகண்ணி யாரும்;

ஊத்தைச் சடலமடீ உப்பிருந்த பாண்டமடீ
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊத்தைச் சடலம் விட்டே—என் கண்ணம்மா
உன்பாதம் சேரேனோ

என்று அங்கலாய்க்கிறார்.

(80) குப்பை மேனி-ஒரு மூலிகை; இதன் சாற்றைக் கொதிப்பித்துப் பொங்கவிட்டால் பொங்கி வரும் நுங்கு வெடித்து வெடியுப்பாகும் என்பர் (காய்ச்சுவது காந்தக் கிண்ணியில்). நாகம்-ஒரு உலோகம். நாலு பங்குச் செம்புக்கு ஒரு பங்கு நாகமும், காற்பங்கு மேற்சொன்ன வெடியுப்பும் சேர்ந்தால் செம்பு பொன்னாகும் என்ப-இது பகிர்முகம். குப்பை மேனி-குப்பை போன்று பயனற்ற மேனி; செம்பு-ஒரு கலம் (சொம்பு), ஈண்டு சிரம்; நாகம்-குண்டலியாம் பாம்பு; வெடியுப்பு-ஆதாராதி அணுக்கள் வெடித்து உப்பாம் உரமான மும்மூல யோக முப்பூ. நாககுண்டலியை குப்பை மேனிச் சாருகிய விந்துவுடன் கூட்டி யோகாக்னியால் கொழுப்பேற்றி, ஆதாராதி அணுத்திரள்கள் வெடித்த உரத்தோடு செம்பாம் சிரசேட்டில் செலுத்தி ஊத மாயை மறையும், வாதம் உறையும், ஞானம் துலங்கும், வம்புகள் தீரும், சித்திகள் சேரும்.

(81-82) கண்ணிமைப் போதிலே-ஞானம் வரின் இமைரென்று வரும், இல்லையேல் வராது. கருவான குறி-மூலாதாரம்; கானலுறும் கானல்-மூலாக்னி; தன்னுமை-குடமுழவு, வயிறு, மணிபூரம்; தன்னிருகை நடு-நெஞ்சு, அனாஹதம்; தலைமாறி வரு நாள்-குண்டலினி, தலைகீழாய் வால் மேலாய்த் தூங்கும் நாகம் வாலூன்றி மேலோங்கித் தலை நிமிர்ந்து செல்வது; என்னாளும் எழுத்து-குரல்வளை, வாய், விசுத்தி; பண்ணும் சுழுத்தி-ஆடுதுறையாம் உடலை ஆட்டுவிக்கும் ஆடாத்துறையின் தூக்கத்தின் ஊக்கமாகிய ஆக்ஞை; ஏணிமேலுச்சி-சுழுனை ஏணியின் உச்சிப்படியாம் ஸகஸ்ராரம்; கண்ணாத கண்-(கண்-இடம்) குறிப்பற்ற குறிப்பு; எண்ணாத எண்-நினைவற்ற நினைவு; காணாத காட்சி-கண்ணறியாக் காட்சி; வானே-அகண்டமே; வான் பெற்ற ஊன்-அகண்டத்திற் பிறந்த கண்டமாம் உடல்; மாடணியின் உள்ளுறை-சிந்தாமணிச் சிக்ரம்; நான்-அகங்காரம்; நான் பெற்ற நலிவு-அகங்கார மமகார நலிவு; நலிவற்ற நடை-மென்மேலும் வலிமை பெறும் யோக மார்க்கம்; கடை-முடிவில்; தான்-ஆன்மா, தானற்ற தனி தானற்று சர்வமும் தானாய்த் தழைந்த பரமான்மா: தவாவிலாத் தவநெறி நாயடியின் நாமமற்ற நலமாம் சமாதி; (ஜாதிக்குத் தலைமுதலாம் முயற்சிகளும் இல்லை) இதனாலேயே கண்ணுடைய வள்ளல் தம் ஒழிவிலொடுக்கத்தில் :—

> 'சும்மா விருக்க வைத்த சூத்திரமாம் சாத்திரத்தை
> விம்மாக் கதறுவதும் வேலைகளும்—தம்மறிவால்
> நீட்டிப் பிடித்திருக்கும் நிட்டைகளும் ஞானிகள் முன்
> காட்டும் பரியாசகம்'

என்றார். மீனிலே மின்னிலே மின்னிலா வெளியிலே-அக்னி, சூரிய, சோம மண்டலங்களுக்கு அப்பால் தார மண்டலத்தையும், அதனைத் தாங்கும் வித்யுன் மண்டலத்தையும், அதற்கும் மேலான மின்னற்ற விண்ணும் பரவெளியேறி அவ்வெளியும் நீங்கிய களியாம் சும்மா இருக்கும் சுகம் 'வெளியிலாக் களியினுள்ளே' என்னும் சகஜானுபவம் இதனையே ஸ்ரீ இராமலிங்க அடிகள்,

> 'வெம்மாயை யற்று வெளிக்குள் வெளி கடந்து
> சும்மா இருக்கும் சுகம்'

என்று விளக்குகிறார்.

(83) சாடு-தாக்கு; மடு-மூலாதார மடு; கூடு-குண்டலியோடு கூடு (இதையே 'பகிஸ்யா ஸ்தன மர்த்தனம்' என்று தந்திரங்கள் செப்பும்) - விடு-மூலத்தை விட்டுச்செல்; சாதமோடு-ப்ராணாக்னியில் வெந்த மூல சக்தியாம் சாதமாகிய ப்ரசாதத்தோடு; ஆடு, மேல்நோக்கி (குண்டலிப் படமெடுத்தாட) ஆடு; படு-ஆங்காங்கு ஆதார ரந்திரங்களில் மேலே பாய்வதற்காகப் பதுங்கு; தேடு-மேன்மேலும் ஆன்மாவைத் தேடு; கொடு-யாவற்றையும் ஆன்ம தரிசனத்திற்காக அர்ப்பணம் செய்; தாது நாடு-வேராகிய மூளையின் காமகுண்டத்தை நாடு; நாடி சூடு-அதைச் சுட்டெரி, கடு-கடிந்து; மூடு-மூடிவிட்டு; எடு-சோம குண்டத்தை எடுத்து; சோலையாடு-ஸகஸ்ரதளச் சோலையில் ஆடி; வீடுதரும்-முக்தி கொடுக்கும்; நாத நடு-காலமற்று மேலுள்ள கட்டற்ற அதிதி ஸ்தானத்தில்; விந்து-விந்துவை யிட்டு, தேடு ஈசனைத் தேடு-அதிதியாகிய அம்பாளுக்கு 'பிந்து தர்ப்பண ஸந்துஷ்டா' என லலிதா ஸகஸ்ரநாமம் கூறுவதுபோல் ஊர்த்வரேதஸின் பூஜை உயர்வானது.

(84) வேதம்-வித்தை; வாதம்-ரஸவாத வித்தை, காந்த வாதம்-காந்த வித்தை; சூதம்-கந்தகம், குண்டலி, மும்மூலம்; மோதம்-மோதினி, ஸகஸ்ராரத்தில் ரோதினிக் கம்பத்தின் மேலுள்ள மோதினிப் பிறை; ஐந்துபதமான வேதம்-ஐந்து படிகளை உடைய வித்தை, அப்படிகளாவன வஹ்னி, ரவி, மதி, தாரா, வித்யுத் என்னும் ஐந்து மண்டலங்களையும் தாண்டிப் பரமண்டலம் செல்லப் பலகாதங்கள் நடந்தும் பயனில்லை; 'பததான சூத'மாகிய குண்டலியைத் 'தந்து', மேலாம் மோதினியை அடைந்தால் யாருக்கும் அறியா எந்தை - [illegible] போது [illegible] வரும், கெந்தி-கந்தகம், நாதம் ரஸ சாரம், குண்டலி-ஸகஸ்ரம் கூடிய காந்தவாதம் சொந்தமாகும்.

(85) மேலே ஓரளவு விரித்துக் கூறிய விஷயத்தை இப் பாட்டில் தொகுத்துரைக்கின்றார். மூலாதாரக் கோயிலி லுள்ள முதல் மூர்த்தியாகிய லிங்கத்தை, உடல் முழுதும் நரம்பு விழுதுகள் விடும் ஆலமாகிய முதுகெலும்பாம் வஜ்ர தண்டத் தாடு, அண்டாண்ட அகிலாண்டங்கள் தாண்டி, சுழிமுனையின் கும்பமோன (கும்பகோணம், புருவமத்தி, நெற்றிக்கண், ரேபம், பிறைமத்தின்மேல், தலைஉச்சியி லுள்ள கைலாச சிகரத்தில் சதகோடி ஜன்மத்திற்கும் சாகாத ஸர்வ சித்திகளின் நிரந்தர முள்ளது.

(86) ஏகாந்தத்தில் ஏகமாய், சாகும் மனிதனுக்கும், சாகாத எமனுக்கும் அப்பாலாய், எக்காலத்தும் எவ்வகை யும் மாறாமல், குறையையும் குணமாய்க்கொண்டு; சோகம் நீங்கிய சுகப்பன்னையில், ஏர்பூட்டித் தூக்கமிலாத் தூக் கத்தில் அளவற்ற அந்தகாரத்தைத் தாண்டியுள்ள ஆனந்த மாகிய ஆன்மப் பசுவின் பாலை அருந்தவேண்டும்.

(87) சிக்கை-நோய், சிக்கையுறும் போகம்-நோய் தரும் போகம்; போகவுடல் சுடுகாட்டை அடையும் வெறுங்கட் டை; வாழ்க்கை பொய்யின் பொய்கை; தர்க்கம் வீண் குதர்க்கம்; யாவுமே வெறும் மாயை; இவற்றைப் போக்கி உள்ளிருக்கும் உண்மை கண்டால் சித்தபுரப் பொன்னுக லாம். இப்பாட்டில் லோகவேதத்திற்குப் பதில் ஜீவ வேதம் கூறப்படுகிறது.

(88) சித்த வர்க்கத்தின் சிறப்பு: அவர்கள் வானவர், அமரர், அந்தணர், குண்டலிப் பாம்பைச் சுழுனைக் கோலுக் குள் செலுத்திச் செத்தும் சாகாதவர்கள்.

(89) காந்தளாம் கர்மத்தின் மேலே, ககனத்துக்கு அப் பால், ஸர்வத்தையும் தாங்கும் மின்காந்த மயமாய்க் கருணையுடன், தட்ப வெப்பம் சாராமல், முச்சுடரின் வெப்ப மும், யாவற்றினும் பாகம் பூண்டு, மாறுதலற்றுப் பரமய மாய், தர்மவிடையாம் மாலேறிய சிவனானவனே சித்தன், சாகாக்கால் வேகாத்தலை (56-ம் பாடல் பார்க்க).

(90) கரு-உட்பொருள், குண்டலினி; கர்ணிகர்-காதோர மத்தியாம் லம்பக ஸ்தானத்தை அறிந்தவர்கள்:

> கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்திமத்தில்
> உண்ணாக்கு மேலேறி உன்புதுமை மெத்தவுண்டு.

என்று அழுகண்ணியார் கர்ணிக வித்தையைக் காட்டுகிறார். கர்ணம்-காது; கர்ணிகர்-காது மையத்தோர். குண்டலிக் கரு வைக் குறுக்கி மதிக்குழியாம் மூளை மையத்தில் போட்டு யோகக்கனலால் எரிக்க எருக்கன் பூ வண்ணமாக (சேகேறிய பிந்து வண்ணம்-எரு+கம்-வேருதயம்) வாதமில்லா, வாதம் சித்தியாகும்.

(91) நவ பாஷாணங்கள், பஞ்சசாரம், நவசாரம், நாவல் இலை, வெங்காரத் தைலம் - இவற்றை புடமிட்டெரித்துச்

செம்பில் வைக்கத் ... நிறம் மாறிப் பொன்னாகும். பாட்டி அவளைச் சுட்ட கனி-முருகனோடு வாதிட்ட ஔவைப் பாட்டியைச் சுட்ட கனிந்த நாவற்கனி. பாட்டிக்கே சொந்தமாகும்-இங்கு பாட்டி என்பது என்றென்று பத்தே வயதாய், எனினும் இறுதியற்ற பழங்கிழவிப் பாட்டி அன்னையாகிய வாலைக்கே இவ்வித்தை சொந்தம்; அவளருள் பெற்றவர்களுக்கே இது பலிக்கும்.

(92) கலக்கமில்லாமல் பொன் செய்யும் வித்தையைக் காட்டிவிட்டேன்; லக்ஷ்யமற்ற லக்ஷ்யத்தை லக்ஷ்யமாகக் கொண்டு உன்னுடிக் கண்ணாடியாம் அகத்திலே அகமாய், அதிலே ஜகமெல்லாம் உருளல் கண்டு கொண்டவர்க்குத் தொட்டதெல்லாம் பொன்னாகும்.

(93) ஓடிக்கெடா தழலி-சுழுனைக்கொடி; பாடித் தொடாத காடி-அமுரி; நாடிக் கொடாத நாடி மது-மதியமிர்தம், சோம பானம்; தேடப்படாத வெடியுப்பே-யோகமுப்பூ, ஆதார அணுப்பூ; மதி சூத நாதம்-பரிபூர்ணத்தின் மூன்று படிகள்.

(94) முன்பாட்டின் தொடர்ச்சி. கோடிவிடாத-உச்சிச் சிகர உன்மனி முனையைப் பற்றிய பற்று விடாமல்; நாடிவிட-சுழுனை நாடியை உலக வழிக்குக் கீழே விட; ஆடி அடாத தேவடியாள் அம்மை-ஆடும் வேசியாய ஆடாது அசையா துள்ள அம்பிகையாம் வாலை; காடியிலாத காடி-புளிப்பறியாத மதி அமிர்தம்: உச்சிமணியாம் உன்மணியைப் பற்றியுள்ள சுழுனையை மூலம் வரை நாலவிட்டுச் சித்தனுயச் சித்தத்தில் நின்று செயல் செய்தலை இப்பாடல் குறிக்கிறது; 'காமினி ககனக் கனகமிதே-(மதி சூத நாதத்தினை) காமினியாகிய கமேஸ்வரி வாலையின் அகண்ட ககனத்தின் அழியாப் பேரொளியாம் கனகவைப்பு இதுவே.

(95) அரியை அறிந்து அருள்பெற்று, அரனை அறிந்து குருவைப் பேணி, புரியாம் நாடிப் புணையலைத் தெரிந்து, தலையிடத்தே அப்புரி நுனியின் புதையல் கண்ட பிறகே எதைப் புடமிட்டாலும் பொன்னாகும். அரி-ஈஸ்வரி, மால்; அரன்-ஈஸ்வரன், குரு; புரி-இடகலை; பிங்கலை, சுழிமுனையின் நாடிப்புரி.

(96) திடமற்றவர், வெறும் வேடதாரிகள், வீணான கல்வி வெறியர்கள், மாடமாகிய ஸஹஸ்ரார மதியற்றவர்கள்-இவர்களுக்கு உண்மை தெரியாது. மாடமதியற்றவர்கள் உண்மையான மாடம் (சிரசேட்டின் உச்சம்) பெற, மகுட மன்னர் பதவியெலாம் தாமும் மகாராஜ பதவி ஏற்படும் அப்படி ஏற்படில் :—

(97) மாட மதியற்றவனும் மாடமதி பெற்றவனாகில் ஈசனுவான்; வலத்தில் நின்று வாலைப்பெண்ணை இடத்தில் வைப்பான்; எல்லாச் சாட்சிகளும், சார்புகளும், நாதாக்களும், அரி, அய குரு பரம்பரை நடப்புகளும், சகல லோக அகட விகடங்களும். யாவைக்கும் யாவுமாம் யாவையும் அங்கே விளங்கும்.

75

(98) குரு மகிமை-குரு தரும் பெருமையான மருந்து குகையாம் சுழுனை முடியின் மதியமிர்த மருந்து; குருவின் பதியான திரிகூட முக்கோணப் பீடத்தில் குறைவில்லாத ஊர்த்வ ரேதஸாம்விந்துவை மேலோங்கச் செலுத்த, சொல்ல முடியாச் சுககுணம் ஏற்படும்.

(99 100) சதுரக்கள்ளி, திருகு கள்ளி, படைக்கள்ளி, ஈட்டிக் கள்ளி, சடைக்கள்ளி, சப்பைக்கள்ளி, குடக்கள்ளி என்ற ஏழுவகைக் கள்ளிகளிலிருந்து பாலைச் சுரக்கவிட்டுக் கலந்து, கறந்து, வடிகட்டி, கலத்தின் வாயை மூடிக் கனலிட்டு எரிக்கவேண்டும். பின் கல்லுப்பையும், கல்லாலையும், கல் மதமாம் மல்லுப்பு மலத்தையும்|மேற்படிப் பாலோடு கலந்து பொறுமையுடன் புடமிட; தெள்ளு - பூநீறு ; பூச் சோதி-பூ வண்ணச் சுடர்; ஆமே - வீசிப் பொலியுமே.

மேற்சொன்ன சோதிச் சுடர் மிகுந்தால் வாதனையாம் - வாதம் சித்திக்கும்; சோகம் மிகவே வேதனையாம் - சோகம் பாவனை மேலோங்க வேதனமாம் வேதம் சித்திக்கும்; வேதத்தால் ரசகாந்தம் - காந்த இயல்புற்ற மின்ரசம் நிந்தனைப்பட்டு பஸ்மமாகும்; இப்பஸ்மத்தின் எடையிற் பாதி சுமிதிப்பிலி - சுக்கு மிளகு திப்பிலிப் பொடிகூட்டி; பாலி - அத்தி, துத்தி, சக்தி; இவை கடைந்த பாலூட்டியதும், வெறும் பொடியான ரசம் பூவண்ணப் பூம்பொடி ஐய நிராக நீறும்; இதனைச் சாதிலிங்கத்தில் கொடுக்க அது கட்டி மணியாகக் கெட்டிப்படும்.

இதுவரையில் பகிர்முகம், இனி அந்தர்முகம்:—கள்ளிப் பால் - சுக்ரம், ரேதஸ்; கல்லுப்பு - காமினீகுண்ட அணுமய ஜீவ ரேணுக்கள்; கல்லால் - ஸஹஸ்ராரம்; மல்லுப்பு மலம் - மதியமிர்த ஜவ்வு, ஐவகைத்து, பஞ்சாம்ருதம்; தெள்ளு - தெளிவு; பூச்சோதி - புருவ மைய்யப் பேரொளி; வெறும் பாத ரஸத்தை நிந்தனை செய்து, சுமிதிப்பிலியாகிய முத் தாதுக்களைச் சமனப்படுத்தி, பாலி என்னும் ஸகஸ்ரார க்ஷீர ஸமுத்திரத்தில் கரைக்க, காமினீ குண்டத்திலுள்ள காம லிங்கம் 'யுக்மணியாய்க் கட்டிப் போகும். இதையே தான் அழுகண்ணியார் ''மற்றிப் பிறக்க வகை'' என்றார்.

(101) கெட்டி வயதானதொரு குட்டி - என்றென்றும் இளையவளான வரம்பிலாது வயது முதிர்ந்த வாலை; லிங்கப் பட்டி மகன் - மாணி, சுக்ரம், காமன்; எட்டிரண்டு - வாசி, பூரக-ரேசகம்; அகாரம்-உகாரம் ; பரமான்மா - ஜீவான்மா; இதனையே

'அங்கென்று வாங்கிச் சிங்கென்று வீங்கி உங்கென்று நீங்கி அலைவில்லா மங்கென் றிருக்கும் மதமத்த சித்தர்' ,

என்று புண்ணாக்கீசரும்;

அகாரகா ரணத்துளே அநேகநேக ரூபமாய்
உகாரகா ரணத்துளே உருத்தரித்து நின்றனன்

என்று சிவவாக்கியரும்;

எட்டாயிரண்டாய் எட்டிரண்டாய் எப்போதும்
கொட்டார வாசியென்றும் தட்டாமல் கட்டிடடா.

என்று யூகி முனியும் கூறியுள்ளனர்; எட்டியதை - வசப்படாத வாசியை வசப்படுத்தி; தட்டிவிட - நெற்றிப் பிறைக்கேறத் தட்டிவிட்டால்; கட்டியென - வாசிப் பிராணனே இறுகிக் கட்டியாக, அக்கட்டியை மிகு சட்டியதில் - உச்சமான கபால பாத்திரத்தில்; திட்டமுடன் சுட்டு - யோக நெறிப்படி சுட்டெரித்து; முட்டையுடன் - காமகுண்டக் கருவுடன்; கொட்டி - கொட்டிக் கலந்து; மூடிட்டவுடன் உச்சமாம் உன் மணிச் சிமிழால் மூடியதும்; கட்டியதும் - மணியாக முன் கட்டியது ஒளி மிகுந்து வெளிப்பட்டு, எங்குமாய், எல்லாமாய்ப் பிரகாசிக்கும். இதுவே சிரோமணி, சிந்தாமணி.

(102) மேற்கூறிய சிந்தாமணி கைவந்த ஞானி உலகத்தில் எவ்வாறு சித்தனாய்ச் சஞ்சரிக்கிறான் என்பதை இப்பாடல் காட்டுகிறது.

கரகத்தான் - கபாலி, ஈஸன், சிவன்; ஊமத்தான் வேர் - மனத்தின் வேரான அகங்காரம், நான் எனது என்னும் பிரிவுணர்ச்சி; உதகத்தான்—உது + அகத்தான் = உச்சமாகிய அகமுடையான்; உதகம்-நீர்; ஆன்மிகக் கடலில்; கரையத்தான் - கரைந்து போக உறையப் போட்டு, அகங்கார மமகாரங்களை ஆன்மக்கடலில் கரைத்து; பரகத்தான் - பர + அகத்தான் - பரமே தன்னகமாய் அத்துவித நிலையில் நிற்கும் வேதாந்தியானவன்; உத்தாணிப் பூண்டு - உடலின் அச்சாணியாகிய சுழுனைப் பூண்டு; இப்பூண்டைப் பற்றி, பகரத்தான் - குரு கூற; களிப்பித்தான் - ஆனந்தப் பித்தனாய்; பதுமம் கூட்டே - ஸஹஸ்ரதள பத்மமாம் சிர உச்சியிற் சேர்ப்பாய் (இதுவரையில் மார்க்கம் - முந்நான்கு வரிகள் பயன். இவ்வாறு செய்பவன் பகவான் கண்ணனாகிறான்; கண்ணனாய் நடக்கிறான்; கண்ணனே சித்தர்க்கெல்லாம் சித்தனான பெருஞ் சித்தன் - அவதார புருஷன்.) உரகம் - பாம்பு, உரகத்தான்மேல் நடன மாடி - குண்டலினி, காளிங்கன் மேல் நடனமாடி; உயர் குடியான் - தெய்விகக் குலத்தவனாய் உலகத்தோடு உறவாடி; விரகத்தான் - மர்மமான வகையில்; வில் - முதுகம் தண்டு; வஜ்ரக்கோல், சுழுனைச் சுரிகை; விஜயன் - பிரம்ம தண்டாம் சுழுனையை உபயோகிப்பதில் வெற்றிகொண்ட யோகி; தேரை - உடலை; உயிருக்கு உடல் ரதம்; ஓட்டி - ஈசனே தம்மகமாய்த் தம் உடலை ஓட்டி; நூற்றுக்கணக்கான மாயா சக்திகளாம் கௌரவாதிகளை வெற்றிகொண்டு, எட்டுத் திக்கிலும் ஜயக்கொடி நாட்டிய கண்ணனாவான்.

(103-104) 'பதுமம் கூட்டே' - ஸஹஸ்ரார கமலத்தில் கூட்டி, அதனுடன் மர்ம மூலியையும் கூட்டவேண்டும். (மர்ம மூலி - குருமுகமாகத் தெளியவேண்டியது). பகிர்முகமாக இம்மூலிக்கு 9 அங்கங்கள் அமைபிந்து, அர்த்த சந்திரன், ரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபிகை,

ஸ்மனே, உன்மனி எனப் புருவ நடுமுதல் தலை உச்சி வரை யில் புள்ளி, பிறை, யோநி, விரை, ஏர், இருபுள்ளி ஒருகோடு, இருபுள்ளி இணைக்கோடு, கோட்டுப் புள்ளி என்ற வடிவங் களில் உள்ளன. இவைகளுக்கு மேல் த்ரிகூடம், சதுஷ்பதம் முதலியவற்றுடன், துவாதசாந்தப் பெருவெளியாய் மஹா பிந்து இருக்கிறது. இவைகளையும், இவைகளின் ஸ்வருபங் களையும் ஸ்வச்சந்த ஸங்கிரகத்தில் காண்க.) இம்மர்மமூலி காயகல்பம், எமனை வெற்றிகொண்டது, கண்ணன் கண்டது. இதன் சாற்றை (மதியமிர்தத்தை) பன்னிரண்டு மாதங்கள் ஆட்டவேண்டும் - அநுபவிக்க வேண்டும். இதற்கு ஆரம் பத்திலேயே பூர்ண லிங்கம் - பூர்ணி வாலையின் பொக்கமான வாலை ரஸத்தை வார்க்கவேண்டும். (லிங்க வகைகளை 124-ம் பாடலிற் காண்க.)

பன்னிருகை வேலோன் பாதம் - ஆறுமுகன்; ஆருதாரப் பன்னிரு கிரந்திச் சுழுனையின் பாதமாகிய மூலாதாரம்: மூலா தாரத்தைத் துணையாகக் கொண்டு, இடகலை பிங்கலைச் சங்கு களை நீக்கி தாரையாகிய சுழுனையில் தாக்கி, மேற்சொன்ன சிந்தாமணியைப் பெற்றவர்க்கு ஸர்வ லோகங்களும் வசிய மாகும்; தடையின்றித் தங்கம் செய்ய முடியும்; எனினும் இவ் வாறு செய்வார் அநேகமாய் இல்லை; இவற்றையே:—

'உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினா லிருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருட்தரித்த நாதர்பாத மம்மைபாத முண்மையே'

என்றும், தாரை சங்கு பரிபாஷையில்,

"சங்கிரண்டு தாரையொன்று சன்னபின்ன லாகையால்
மங்கிமாளு தேயுலகில் மானுடங்க ளெத்தனை
சங்கிரண்டை யுந்தவிர்த்துத் தாரையூத வல்லிரேல்
கொங்கைமங்கை பங்கரோடு கூடிவாழ லாகுமே

என்றும் சிவவாக்கியர் கூறியுள்ளது காண்க.

(105) சங்கை கொண்டான் - சிவன்; சிவன் மூலி - வில் வம், லிங்கம், வேம்பு, ஆல் முதலியன; சங்கையில்லா நெறி- சந்தேக மற்ற மார்க்கம்; சாத்திரங்கள் காணாத சேதி, பயங்கரமான பாமரர்க்குச் சொல்லக்கூடாத வித்தை; உலக மெல்லாம் நடுங்கும் வித்தை - உனக்கு மட்டுமேதான் உரைக்கின்றேன்.

(106-110) இவற்றில் உலக நெறியும் யோக நெறியும் இணைந்து, தேவ தேவியாம் வாலையின் வளம் கூறப்படுகிறது.

வேங்கை-வேங்கைப் புலி, வேங்கை மரம்; ரஸம் கட்டும் ரக்தவல்லி, ஒருவகை வன்னி; ஈண்டு, வேங்கை போல் சீறிப் பாயும் குண்டலினி; சிவக்கரந்தை-சிவ, விஷ்ணு, கொட்டை என்ற மூன்று கரந்தைகளில் அக்ருத்தோத்பவ சித்திக்கான முதன்மை பெற்ற மூலிகை; இங்கு, சிவ + அக்கரம் + தை=

சிவாட்சர நமச்சிவாயம் நடனமிடும் சுழுனை நாடி. (சிவ வாக்யம் 23, 24, 73, 97, 110, 174-176 பாடல்கள் காண்க- ஆருதாரமும் ஓம் நமச்சிவாயமே என்பது விளங்கும்).

வேரை-இச்சுழுனைச் செடி தலை கீழாய்த் தொங்குகிறது; தலையில் சோமகுண்டமும், காம குண்டமும், ஓம குண்டமும் இணையும் இணைப்பிலே பிடறிக் கண்ணில் வேர் கொள்ளு கிறது. இவ்வேரைக் கண்டாலன்றி யோக நெறியில் மேலேறிச் செல்ல முடியாது.

வேரைப்பற்றி மேலே சென்ருல் வெப்பான சிவப் பாகும்-வெந்து சிவந்து வீறிட்டெழும் தழலான; வேற்கண்- வேல் போன்று அலகுடைய; மாதா-வாலாம்பிகையின் (ஈண்டு ஈஸ்வரியின் மூன்ரும் கண்ணின் மூர்த்தன்யம் கூறப் படுகிறது.)

விங்கி நிற்கும் மார்பகத்தின் விலக்கை நீக்கி-வாலை முக்கண்ணி என்பதோடு மும்முலைச்சியுமாகும்; இம்மும் முலைகளே த்ரிகூட மென்றும், ஸ்ருங்கத்ரயம் என்றும், முப்பைந்தவ மும்மூல முப்பூவென்றும் கூறப்படும் ஸஹஸ்ரார மைய மாயா ரஹித மாயா ஸகித மூட்ட மாகும். இம்மூட்டமே மாயை; மாயையை விலக்கி வெருட்டி ஓட்டிஞல், வாலை நம்மேற் கருணை கொண்டு;

ஓங்கி நிற்கும்-உச்சத்துக்கெல்லாம் உச்சமாக நிற்கும் ஈஸ்வரனைக் காட்டுவாள்; அக்காட்சியில் உன்மத்தமாய் ஒடுங்கிப் போகாமல்;

வாங்கி நிற்கும்-அப்பர ஞானத்தைத் தனதாய் வாங்கி எப்போதும் விழித்திருக்கும் வாலையுடன் சுண்டு வாயே- சுறு சுறுப்பாக முப்போதும் முழித்திருப்பாயே.

இவ்வாறு முழித்திருந்தால் வித்தையெல்லாம், சித்தி யெல்லாம் பலிக்கும், இதை எவருக்கும் கூருதே; பாவிகள், பக்தியில்லார், பச்சை மோகக் காமிகள் இவர்கள் உன்னைச் சூழ்வர்: அவர்களது மண்டையிலடித்துப் பத்தியங்கள் கூறி வாத வைத்யச் சித்து விளையாட்டுகளைக் காட்டுவாயாக என்கிருர். (107)

ஸமத்தான் வித்து-ஸமத்தை விதை; ஸ+மத்தான்- உருவ நீட்சியில் பித்துற்றவன், அதாவது மனம், மனவித் தாம் ஞாப்தி; உரகத்தான்-குண்டலினி (உரகம்-பாம்பு); உதகத்தான்-உது+அகத்தான் = ஊர்த்வமுக யோகி; காமத் தான் சாறு-சுக்ரம், ரேதஸ், பிந்து; கரு-பிடறிக்கண்; உரு- காம குண்டமாம் பின்மூளை; கலந்து கொண்டு-யோக மார்க் கத்தால் யாவற்றையும் ஒன்ருக்கி; ஏமத்தான்-ஏ+மத்தான் = ஏ-யோநி; மத்தான்-இச்ஸையாம் பித்து; இச்சையாம் இரும்பைச் சமனெடையாய் இச்சையற்ற பொன்ஞேடு தூக்கி இழைத்தால் (இச்சையை இச்சையின்மையால் கொன்ருல்) பொன் செய்வித்தை தாஞக வரும்; வாமத்

தான்-சிவன், ஈஸ்வரன்; வாமத்தாள்-சக்தி, வாலை, ஈஸ்வரி; ஈஸ்வரனது சோதியிது சும்மா-சைதன்யம் சும்மாவாம் ஸகஜ ஸம்பத்து; இச்சம்பத்து வாமத்தாளது இயல்பான ஸகஜ நிலையாம் சும்மாவே. இதையே அருணகிரிநாதர்,

சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே

என்கிறார். (108)

சும்மா என்பது அம்மாவாகிய வாலையே; அவளே சுக நிலை; இவ்வுலகத்தில் மயங்கி விழக் கம்மாக்கள் (வளைவுகள், கமான்கள்) பலவுண்டு; இவைக்கப்பால் உம்மாத்தான்-ஊமை எழுத்தாகும்; உம்மாச்சி-உமையன்பன் சிவன் (உம்மா-உமை, சி-சிவன்); உறங்குகின்றான்-அவளது பேரின் பத்தி லுறங்குகிறான்; அவன் உறக்கத்தால் உலகத்திற்குப் பயனில்லை; எம்மாத்தான்-எம்மாதிரிதான்; எம்மாவை-என்னம்மாவாம் வாலையை, கேட்டாலும் மௌனமாய்த் தானிருப்பாள்; பொம்மாத்தான்-பொம்மலாட்ட ஜாலக்காரி; புவனங்களெல்லாம் பொம்மக்காளாம் அவளது ரூபமே. (109)

தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, முதலியவற்றைப் பாராயணம் பண்ணினாலும்; உருவாச் செய்து-கோயில் குளங்கள் கட்டி; போவார் வருவாரை வருந்தி வணங்க வைத்து; போக்கில்லாத பரதேசிகளுக்கும் ஒரு போக்குக் காட்டி; ராஜமரியாதை பூஜை மரியாதைகள் (கோவாரம் பூவாரம்) முதலியவை மிக; கோலமுற-கோயில்களை அழகு படுத்தினாலும் பூபாரம் குறையாது; அவளருளாலன்றி; எல்லாம் வாலையின் மகிமையே. கொங்கணரும் தம் 'வாலைக் கும்மியில் :—

''வாலைக்கு மேலான தெய்வமில்லை—சிந்தா
மணிக்கு மேலாம் மணியுமில்லை.''

என்று உறுதி கூறுகிறார்.

மை வைப்பு

(111-113) முன்னுரை; மை மகிமை; மெய்யான மை, பொய்யற்றது, இடமுற்றது, உய்விப்பது, உலகை வசிப்பது. வெண்ணெய் கரைந்தால் நெய், ஆணவம் மறைந்தால் ஆன்மா; பொய்யான உலகை உண்மையாக்கும் பொய்மை, மெய்மை, வாய்மை-இவை மறைந்நால் உள்ளது உள்ளபடியாம் உண்மை ஒளிரும்.

கருமை, உருமை-மோடி, சூன்ய, கண்கட்டு வித்தைகளில் பயன்படும் கருச்செத ஐங்கோலப்பின்னடமைகள்! இவற்றின் பலவகைகளைத் தேடிச் சில சித்தரென்போர உளுத்துப் போயினர். உண்மையான ஒரே ஒரு மை குரு மைதான்; மற்றவை அலுப்பான வெறும் கூத்தாட்டு; காமக்களி; அருவான

புழுவினத்தை-ஸுக்லப்புழுவாம் ஜீவ ஸபைந்தவ ரேணு (sperm) வை; மருவுக்குள்ளாம்-மருவான கருமுட்டை (ovum) யுள் செலுத்தி; அச்சான கருவினத்தை-வாழ்வுதைய அச்சாணியாம் யோநியை ஸ்த்ரீவஸ்ய மையென்று நாடும் பேய்வெறி.

இது பயங்கர வித்தை. விதியின் சித்திர விசித்திர விளையாட்டு; எவருக்கும் தெரியாது; எவருக்கும் சொல்லாதே; வேதம் பூசித்து, நீதிநெறி நின்று, ஓதி, கோதி, ஊதி எவ்வுலகும் போற்றும் இம்மையை நீ எடுத்துக்கொள்.

(114-117) பகிரங்கம்: ஒரு பிடித் தேரோடும் தெருப் புழுதி, ஒரு படி மருதுளசிச் சாறு; இவ்விரண்டையும் ஏர்ச்சால் கொழுவிட்ட இருப்புச் சட்டியில் காய்ச்சி, அது பொங்கி வழியும்போது (சிவத் தகடு) ரஸகாந்தப் பாத்திரத்தில் தாங்கி, ஆறவைத்து, அதனோடு மனோசிலை, வீரம், பூரம், கந்தகம், லிங்கம் முதலிய ஒவ்வொன்றினும் ஒவ்வொரு வராகனெடை தூவிக் கிளறி, சாம்பிராணிப் புகை ஏற்றி, 16 நாட்கள் வெய்யிலில் உலர்த்தி எடுத்து, கருந்துளசி, பேய்த்தும்பை, குருக்கத்தி, குப்பை மேனி, குருத்தொட்டி வேர், செம்பருத்தி இவைகளைச் சேர்த்துச் சுண்டி விட்டு மையாய் அறைத்து, சீலை செய்து, சாணளவு திரியாய்த் திரித்து, அறுகோணச் சக்கரம் தீட்டி, அதன் நடுவே அகல் வைத்து, பசுநெய் போட்டு எரித்து; அதன் புகை கபால பாத்திரத்தில் கரியாய்ப் படிய, முட்டைக் கருவும், ஜவ்வாதும், புனுகும் சேர்த்துக் குழைத்து, திருமால் நாமங்கள் ஆயிரம் செப்பி, வழித்த மையால் உலகம் முழுதும் வசமாகும்; உயர்வுக்கெல்லாம் உயர்ந்தது இது; காமனைகள் கைகூடும், காமனையும் வெல்லலாம்.

அந்தரங்கம்: குருமுகம்: பொதுவாய், தேரோடித் தெரு - சுழுனை வீதி, 'சுதர்க்கம் தெரு'; புழுதி-குண்டலினி சக்தியின் அணுத்திரள்; ஒருகை ஒரு பிடி (ஸ்வாதிஷ்டத்திற்குத் தூக்கி); வேரோடும்-மூல யோநியோடும்; மரு துளசி-மணிபூரம்; ஏரோடிக் கொழுவிட்டே யிருப்புச்சட்டி-அநாஹதம்; சிவத் தகட்டில்-மகேஸாட்சமாகிய பிடறிமேல் தட்டையான ஜவ்வு; அருஞ்சிலை-மனமாகிய சிலை, ஞாபநி; வீரம்-நினைவுகள்; ரஸம்-கற்பனை; கெந்தம்-சதுஷ்பதம்; லிங்கம்-த்ரிகூடம்; சாம்பனுடைய பிராணி-சாம்பிராணி, சர்வமும் சாம்பரான ஸ்மசான தூபம்; நிவர்த்தி யுச்சம்; கருந்துளசி, பேயின் தும்பை, குருக்கு, குப்பை மேனி, குருத்தொட்டி, செம்பருத்தி-இவை யாவும் ஆறு ஆதார சக்திகள்; அறு கோணம்-ஆதார கோணங்கள்; அகல்-இதயம், சாணளவு-விசுத்தி வரைத் திரி; பசுநெய்-மதியத் தமுரி, ஏற்றி ஆக்ஞை மேல் எற்றிய திரி. மண்டிட்ட தழலேறும்-மண்டையோட்டைப்பற்றி ஏறும் தழல்; அண்ட மண் முட்டை-கபாலத்தில் உச்சியான கைலையில் முட்ட; சவ்வாது-வாதசமனம்; புனுகு-புன்+உகு=புன்மைகள் நீங்கி; மால் நாமம்-பகவன் நாமம்; வாமப்பா-தேவியினுடையது அப்பா; இம்மையால் காமனை

வென்று விருப்பற்று, காமனைகள் கைவரச் சித்தனாய் 'வேண்டுதல் வேண்டாமை இலா'னாய் மாறும் மஹாமை.

(118-120) மேற்சொன்ன மையைப் பிரயோகிக்க வாலாம்பிகையின் மஹாமந்திரம் கூறப்படுகிறது. வாலையின் புகழ்ச்சி: திருவான; ஸ்ரீம்; எட்டும்எட்டா - ஹ்ரீம்; 108 தந்திரமும் - த்ராம்: வட்டமிட்ட - தேவி - ஹ்ரீம் ஸ்ரீம்; வாலை - ஊமை எழுத்து என்ற வகையில் த்வாதாஸாக்ஷர மந்திரம் (குருமுகம்) ஜபித்து மேற்கூறிய மையைப் பொட்டிட்டுக் கொண்டால் ஈசனைக் காட்டி அம்பிகை மோட்சம் தருவாள்.

(121-123) காஷாயம் தேவையில்லை; ஸர்வ ரோக ஹர சஞ்சீவியான ஒரு கஷாயத்தைக் கூறுகின்றேன். பாஷாணமில்லை, பலதுமில்லை; பாம்பின் விடமும் இறங்கும்; உயிரைக் காக்க ஒஷதிகள் பல உண்டு; ஆனால் மாய்கடல் - மாயக்கடலைக் கடக்கத் தோணியில்லை. (121) இரு மூன்று துப்பு - ஆறு தாரங்கள்; உள்ளடக்கி - அவற்றை உள்ளத்தே அடக்கி: அருகான பட்டை இடித்து - (அருகம்பட்டை இடித்து) அருகு + ஆன பட்டை - ஆக்ஞைக்கப்பால் அருகிலுள்ள லம்பக ஜவ்வை இடித்துச் சாறு கண்டு; கருமூன்று காலை முடக்கி - முப்பாழ் மண்டலங்களையும் முடக்கி; கருவாவின் பட்டை பொடித்து - கரு + ஆவின் பட்டை, அதாவது கருக் கொளும் ஜீவப்பசுவின் பட்டையாகிய சுக்ரபிந்துவைப் பொடித்து, அணுத்திரளாக்கி; அருமூன்று பாவம் - ஞாதுரு, ஞானம், ஞேயம்; அறம் மூன்று - விட்ட, விடாத, விட்டுவிடாத இலக்கணைகள்; தரு மூன்று வடிவம் - ஸ்தூல, சூக்கும, காரண தேகங்கள் என்ற மும்மூன்றையும் மடக்கி, ஒடுக்கி, அகற்றி, தவாக்னியினால் மேற்காட்டிய சரக்குகளைக்காய்ச்சத் துவங்கு. (122) மேற்கூறிய கஷாயத்தை கணைந்நிற்கோர் முறை கண்ணிற்போட காய்ச்சல், பேய், சுரம், சன்னி, வெப்பு, காமாலை, கருமேகம், பைத்யம், குஷ்டம், அங்கஹீனம், சோகை முதலிய தாழ்ச்சிகளை நீக்கி, நரைதிரை போக்கி நலம் தரும் - எனவே தவக்கமின்றி கஷாயத்தைத் துவக்குவாய்.

(124) அப்பு லிங்கம், சம்பு லிங்கம், சாதி லிங்கம், சோதி லிங்கம், வைத்தி லிங்கம், வயிற்று லிங்கம், கும்பலிங்கம்: குணலிங்கம் - என எட்டு லிங்கங்கள் ஈஸனது எட்டுவிதமான இயல்புகளைக் குறிக்கின்றன. இவ்வியல்புகளை அவையவைச்கேற்ற ஸ்தானங்களில் இருத்தி நிர்க்குண நிராலம்ப நிராமயமாம் நிஜலிங்க நவநீதத்தைப்பெறவேண்டும். (இதன் விரிவைக் குருமூலம் உணர்க.)

(125) அறவே - ஸர்வமும் அற்றுப் போகவே; பெறவே - பெற்றுல்; இறையே - ஈஸ்வரனும்: பொறையே - அமைதி: அணையில் - நம்மை அணைத்தால்; லோகத்தில் (தரையாய்) பிறவி எடுக்கும் சிறைப்படும் (சிறை) கட்டேது? அறை - அரற்றுகின்ற; மா - பெரிய; மறையே - வேதமும்; விரையே - விந்துவும்; சுரையே - கருப்பையும் அகன்று போனால் பாவ

மென்பதில்லை (பாவத்தின் தாய் காமமே); குறையே - குறை வென்பது; நிறையே - நிறைவான பூரணத்வமே, பறையே - பேச்சே; நிறையாய் - க்ஷணிக்கையாய் (முழுமைபெற்ற மோனமுற்றால்) குறைகள் ஏது; துறையே-சரியான வழியில்; துறவே-துறந்தவனாய்; பிறையே-மதியம்; பிணையே -பிணைந்த சிவனாய்; நறவே - மதி அமிர்தமே; கொளவே-சாப்பிடவே; நரை திரை மூப்பு சாக்காடு முதலிய இல்லை.

(126) கலை தாங்கும் நிலை ஓங்க - ரேதஸ் ஊர்த்வ ரேதஸாக; தலைவாங்கும்-அதன் தலையான காமகுண்டத்தை வாங்கிக்கொள்ளத் துணையாக இருப்பது யார்? குண்டலினி. இலை ஏங்கும்-பிடரிக்கண் அலகாகிய இலை ஏங்க; இடை தாங்க-காம, சோமகுண்டங்களை இணைக்கும் இடைக்கணு தாங்க; முலை விங்க-திரிகூட ஸ்ருங்கத் திரயங்கள் முனைப்பேறி வீங்க; விலைகூறு-உலகை யெல்லாம் விலை கூறிவிடு; தொலை ஏந்து-முடிவென்று தாங்கும் எல்லை; குலை சாய்ந்து - எல்லை சாய்ந்து இல்லையாய்; மலைபாய்ந்த-உச்சியிலிருந்து உடலுள் பாய்ந்த; வினையாறு - முன்வினை என்னும் ஆறு; அலை ஓய்ந்து-ஆரவாரம் நீங்கி; உலை தீய்ந்து - உள்ளுள்ள வெப்பம் வெந்து போக (அதாவது விதி வினைகள் மாள வாசி, குண்டலினி, பிந்து இவை பிடறிக் கண்ணுக்கப்பால் செல்ல) தலையேய்ந்து - தலை மேலான; பனை ஏறு - பனை என்பது லம்பக மேலாம் அமிர்த வாஹினி லிங்கத்தை (அமிர்தம் பருகிச் சித்த நிலையில் அமரனாவாய்.)

(127) வேல்விழி மாதர்களின் செயல்கள் சுடுகாட்டிற் சேர்த்துவிக்கும்; பால்விழிக் குடமாதார்-தாய்மார்களின் துணையை நாடு; சேல்விழி சேர் விலைமாதர்கள் சேர்வைக் குலைக்கும் பாழான மேடு பள்ளங்கள்; ஆல்விழி-அன்பும், கருணையும், அகண்ட நோக்கும் உடைய மாதர்களின் பாதத் துணையை அரும்பாடு பட்டாவது தேடிக்கொள். இப்பாட்டில் 'ஸ்த்ரிய: ஸமஸ்தா தவ தேவி பேதா:' என்ற வாக்கின் ப்ரபாவம் கூறப்படுகிறது. இதையேதான் ''ஸுவாசனி அர்ச்சன ப்ரீதா'' என்று லலிதா ஸஹஸ்ரநாமமும் கூறுகிறது.

வாத வைப்பு

(128) வேதம் அறியார் வாதம் வெறும் விவாதம், மாதர் மையலார் வாதம் கீல் வாதம், முடக்கு வாதம்; குருமுகமாய்க் குறைவற்றவர்க்கே வாதம் போதமாம்; இச்சையற்றவர்க்கே வாதம் சித்தியாம்.

(129) படைப்பின் பன்மையூடு ஒருமை காண்பவர்க்கே வாதம் பலிக்கும்; நடிப்பற்ற நல்லவராய் இருக்க வேண்டும்; உடைப்பாம் சுழுனை யூடேறி மோனமுற்றவர்க்கே வாதம் சக்தியாகும்; வெடைப்பாம் தலை யேட்டில் வேதம் கண்டவர்க்கே வாதம் வெற்றியாகும்.

(130) 'சரி' என்று எதையும் ஸகஜமாய்க் காண்பவர்க்கே பரிவுகொண்ட சித்தர்கள் வாத வித்தையைப் போதித்தனர்; பிரிவுள்ளம் பயனற்றது; என் வார்த்தை பிசகாது; பூரணத்தின் பூட்டைத்திறக்க வல்லாருக்கே சித்தர் வேதத்தைத் தரிக்கமுடியும்.

(131) வரிப்புள், சிரிப்புள், அரிப்புள், மரிப்புள், த்ரிப்புள், நெரிப்புள், எரிப்புள், பொரிப்புள் என்பன எட்டுப் புள்ளிகள், அல்லது ஸ்தானங்கள்; 1. மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம்; 2. மணிபூரம்; 3. அனாஹதம்; 4. விசுத்தி; 5. ஆக்ஞை; 6. லாலனை; 7. சதுஷ்பதம்; 8. த்ரிகூடம். இவைகளில் சிலை செய்து சிலை வாங்கி; அரி + தாரம் = மங்கலம் பூசி; வெம் + காரம் - வெம்மையான காரம் மிகுந்த யோகாக்னியை ஊதி; குண்டலிப் பாம்பை ஆக்ஞைக் குகைக்குள் செலுத்தி; லாலனையின் நெரிப்புக்குள்ளே அமிர்தரஸனையோடு ஒன்றி; சதுஷ்பதத்தில் ஒரு ஜாமம் யாகாக்னி போட்டெரித்து; த்ரிகூடத்தில் செம்மையான (செம் + தூ + ர் + அம் + தான்) செம்மையான தூய ஒளிவேரின் அழகான வாத வித்தையில் சித்திபெறல் (பொய்யுடலைப் பொன்னாக்கல் - இதன் வழியைக் குருமுகமாய் அறிந்து கொள்க).

(132) இதில் புராண ரூபத்தில் காலன் பிறப்பு கூறப்படுகிறது. அதிதியும் காசிபனும் கலந்து ஆதித்தனைப் பெற்றுக் கடலி விட்டனர்; மதியாம் மதியம் கடலை உருட்ட, ஆதித்தன் வேண்டக் காலன் பிறந்தான். (இக்கதை உருவக மூலம் சிருட்டியைக் கூறுகிறது-விரிக்கில் பெருகும்).

(133) காலத்தான், மாலத்தான், ஆலத்தான் - மும்மூர்த்திகள்; அயன், அரி, அரன், ஸ்வாதிட்டம், மணிபூரம், அனாஹதம்; காலனவன் நெய்-மூலகுண்டலியின் நைப்பு; கந்தகம், மால்கிரந்தி, ஆலினுடை விழுது-பிரஹ்ம, விஷ்ணு, ருத்ரக் ரந்திகள்; ஆழத்திலே-மூலாதார யோநி மண்டலத்திலே; சாலத்தான் - நன்முகத்தான்; காலின் கீழ் கால் = காற்று, வாசி, பிராணன், பிரான சக்தியின் அடியில்; கந்து + அகம் = கட்டு + உள் = கட்டுக் கழன்று காமமாய்ப் பாயும் விந்து கட்டிப்போகும். ரேதசை ஊர்த்வாமுகமாய்ச் செலுத்தி முன் மணியாக்கிக் காணும் வகை.

(134) நாயடக்கி, வாயடக்கி, நோயடக்கி = நாய் - நாயோட்டு மந்திரம், மஹாமனு; சிகரம், சிவமாக புவனம் கண்டு; வாய்மட்டுமின்றி மனவாய்ப் புந்திவாய்ப் புலவாய்ப் பொறிவாய் யாவும் அடங்கிய நிலையில் யாவையும் அறிந்தும் அறியாமல் அநுபவித்து, மாய் நிலை அடக்கி (மாய்-மாய்தல், மாயை, மாறல், மாற்று, அளவை) மதியமிர்தம் பருகி, நோய்களாகிய அவஸ்தைகள் நீங்கினால் ஒவ்வொரு நிலையிலும், நயனத்தையே மூடிக்கடனம், வழிமடக்கி வாசியதை வசித்து, மனைகட்டியே தெருவில் படுத்து, நுரையடக்கித் தயிர் கடையப் பாலம் தேரு-முகக்கண் மூடிய அகக்கண்

கவ்னமும், வாசிகட்டி மனமிறக்கக் கற்கும் வாசிப்பும், சுழு ஊத் தெரு தாண்டிய மனையைக் கட்டித் தெருவிலே உலகிய ஓூடு ஊட்டாடும் உறக்கமும் ; கலக்கமின்றியே காசினியின் கலக்கங்களைக் கடைந்து பாலமிட்டு அப்பால் அகண்டமாகும் நெறியைப் பரிபாஷையில் இப்பாடல் விவரிக்கிறது.

(135-137) பாலமிட்ட பின் வரும் பராபரியின் ரகசியம்; த்ரிகூடம் த்ரிசிரஸ் த்ரிவேணி, த்ரிச்ருங்கம் என்னும் மூனை ஸ்தானத்துக்கு மேலாம் மோகனம். இது முழுவதும் குரு முகம்.

(138-140) வாலாம்பிகை பாதப்போதமும், பெண்களை எல்லாம் சுகரூபமாய்ப் பணிதலும், சற்குணப் பெண்டிரின் பிட்சையும், மரணமில்லாதவள், மதிப்பிறை யணிந்த மதியப்பெண், மாயையென்னும் ஆகாயப்பூவை மலரவைக்கும் அம்பிகையின் அருள்வேண்டும். சாத்விகம், ஆத்மிகம், சத்ரு (காம க்ரோதாதி) சங்காரம், யாவினும் ஆன்மீக ரீங்காரம் காணல்; உலக மறப்பு, பேரின்ப வாயில் திறப்பு, கல்வித் துறப்பு, வேதாந்த சிந்தாந்த இணைப்பு; பாசபந்தக் குலைப்பு, பரலோக நிலைப்பு, என்றும் புன்னகை, என்றும் கருணை; மதி உண்மைக் கதியை நாடல், வேதநதியோடு விதியின் சதிகள் மாறிச்சிவ சதியாம் சிவகாமி வாலாம்பிகையின் திருவருள் பெற்றுச் சித்தனானவனே வாதப்பிர ித்தனுவான்.

(141) சித்தர்களில் பலவகையுண்டு-உயசித்தர், பயசித்தர், வயசித்தர், கயசித்தர்; அதாவது உயசித்தர் உலக மாயையை உதறும் உண்மையைப் பாடினர்; பயசித்தர் மனத்தின் வேர் காணாது மதி மருண்டு பாழாயினர்; வய சித்தர்கள் வாத வைத்யங்கள் தேடி வாடினர்; கயசித்தர் சித்தத்தின் கருவான நத்துவத்தை அறியாமல் திண்டாடினர்.

(142) பத்தியம், பழமை, பச்சிலை, பக்தியான துதி, நித்ய நைமித்திகங்கள், இவைகளா லெல்லாம் சத்தியங் கிட்டாது; அதற்கு வித்தை கண்டால் போதாது, வேதம் காண வேண்டும்; மனித மத்ய மர்மத்தை வெல்லவேண்டும். வைத்யம், பைத்யம் நீங்கிய வத்தியம்(வஸ்து-வத்து; இயம்-இயல்) தனை உளவால் (வாத்யம்-வாசி) வாத்தியத்தி னிசை காணார் வாழ்வ தெங்கே? வாசியறிந்து மன மடங்கி ைலன்றி வாதம் வராது.

(143) எத்தனை சொல்லியும் கேட்பாரில்லை; வேலவனும் சுழுனை வேலின் வேரில்; சித்தசித்தைச் சித்தாக்கி, தலை உச்சியாம் சிகரத்தில் ஏறி நின்று வித்தான சிவமறிந்தால் விதி விலகும், வினைபோகும், வேதாந்த-சித்தாந்த வெட்ட வெளி தோன்றும்; வாதத்தில் பத்தரைக்கும் குறையாத மாற்றுடைய பொன் கிட்டும்.

(144) விழி, மொழி, முழி, கழி, அழி, வழி, குழி, சுழி, பழி-என வரும் ஒன்பது ழகர ழிகரச் சொற்களே இப்பாட்டின் பொருள் வைப்பின் சூக்கங்கள். விழி-நாசிநுனிப் பார்

வை; மொழி-பரா. பஸ்யந்தி, மத்யமா, வைகரி வாக்குகளில் முதல் வாக்கு; முழி-நுதல் விழி, பிடறிக்கண்; கழி, கழித்தல்-கோல், சுழுனை, முதுகந்தண்டு. (அதைக் கழித்தல் வேண்டும்) வழி-பிரஹ்மரந்திர வழி; குழி-அம்ருதோத்பவ லம்பக பாத்திரம்; கழி-(தலையுச்சிக் கழித்தல்) தலையுச்சியாம் கைலாசத்தில் ஈசனோடிணைதல்; பழி-(பழிகண்டு பயனும் கண்டே) பாழ், (பாழி என்பதன் குறுக்கம்), முப்புரமெரித்தல். 80

''முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலும் பாழாய் அதற்கப்பால்''

உள்ளயாவும் கழிந்த அகண்டத்தைக் காணுமுன் கனகுருவின்; நாழி - நானழி நாட்டமான வாலைத் தோழியோடு தழைக்கவேண்டும்.

(145) தழைத்திட்டம், மழைத்திட்டம், கழைத்திட்டம், விழைத் திட்டம் - தழை + திட்டம்-வாதம் செய்யத் தழை தேடி அலைவது, கடலைக் கடைந்து நுரையைச் சலித்து நுண்டுளியைக் கொள்ளலே யாகும். (தற்கால விஞ்ஞானத் தங்கமும் இப்படித்தான்) ; மழை + திட்டம்-வெப்பம்-தட்பம், விந்து-நாதம். வெண்முகில்-கருமுகில் என விந்து நாத வட்டத்தை நிலைநிறுத்தி அப்பாலுள்ள வீதம்-மிச்சம்காட்டி; கழை + திட்டம்-கால் நடு முதல் தலைவரைக் கணுக் கணுவாய்ச் செல்லும் சுழுனைக் கரும்பைச் சுவையேற்றி மேற்சென்று தலைக்கள்ளிப் பாகாம் மதியமிர்தம் முடித்தவர்க்கே வாதம் சித்திக்கும் ; விழை + திட்டம்-வெறுமையான ஆசைத் திட்டங்கள் யாவும் வீணே ; ஊர்த்வாமுக உபநயனத்தால் விழித்தால் தொட்டது தங்கக் கட்டியாம்.

யோக வைப்பு

146 முதல் 170 வரை யோகத்தின் பொதுமை கூறப்படுகிறது; 171-யோகத்தின் நடை முறை; 172-174-ஞான யோகம்; 175-கர்ம யோகம்; 176-பக்தி யோகம்; 177-ராஜ யோகம், 178-ஹடயோகம்; 179-கடயோகம்; 180-பத்ம யோகம்; 181-யோகத்திற்குத் தக்கவர்கள்; 182-இன்றுள்ள நிலை என இப்பகுதி நடைபெறுகிறது.

(146) கந்தகம்-(கந்து-கட்டு, எல்லை, இணைப்பு, நெருப்பு, பொங்கு, கொதிப்பு + அகம்-உள், மனம், நினைப்பு, முனைப்பு), கயிறு திரிக்கப் பலநூல் வேண்டும், மனத்தைக் கட்ட ஒரு நூல் போதும்; அந்தகம்-குருட்டுத் தன்மை, முப்பாழ், முதற்பாழ், சூன்யம், ஆதி அறியாமை; அதை நீக்கும் ''பெருநூல்'' வேதம்; அந்தரம்-(நடு, உள், வெளி, இடை, நிராதரம்) 'அந்தரத்தை வில்லாக்கி ஐந்தெழுத்தை அம்பாக்கி' என்றார் அழுகண்ணியாரும் ; 'அகண்டத்தை அகத்துட் கட்டும், அருமையான நூல் குரு நூல். சிந்தகத்தை-(சிந்திக்கும் அகமாகிய) புத்தியை, இதுவரை மனம், சூன்யம், புத்தி-இவற்றைக் கட்டிப்பின், சித்தத்தை-சித்தமாம் சேதனத்தை, கட்ட என்றே-கட்டு + அ + என்றே = யாவைக்கும் ஆதாரமாய்

யாவையும் கட்டும் அது என்றே, சிவக்கயிற்றின் திரு நூலாகிய சிவனது அஞ்சக்கர மிணைந்த சுழுனையைச் சித்தர்கள் கூறினர்; விந்தகத்தை-விந்துவின் அகமாகிய காமினி குண்டச் சிறுமூளை; வாசியை ஒரு வழி நிறுத்தி, பிந்துவைச் சுழுனை முடிமேலேற்றிச் சென்று வேதாந்தம் காணும் யோக மார்க்கமே சிவ நூல்.

(147-150)-இந்நான்கு பாடல்களும் பார்த்த சாரதியாம் யோக குருவைப் பற்றியவை. பாரில்லை, பார்த்ததில்லை, பாவமில்லை, பற்றுண்டு, மனம் தளர்ந்தேன், பல நூல்கள் படித்தேன்; ஊரில்லை, காணியில்லை, உறவில்லை; ஊசிக் காந்தமான சுழுனை யுச்சியில் ஒளிமயமான பிடறிக் கண்ணின் கண்ணனை (147)

கார்முகிலூடு கதிர்வீசும் கண்மணி வண்ணனை; காற்றுக்குக் காற்றாய், வாசிக்கு உயிர் வளியாம் பிராணனும் உயிரின் கதியாக உடலாம் ரதத்தை ஓட்டி; ஏருள்ளே-ஏர் போன்ற கால தேச வர்த்தமான அங்குசத்திலே எனக்குள் என்னவனாயுள்ள எம்பிரான் என்னைக் காப்பானோ? காக்க மாட்டானோ? (148).

நினைத்தது செய்திலேன்; நீர்ப்பது (எரிப்பது) வாத மில்லை; மனத்தினால் மனமாயை போக்கி, மதியால் மதி தெளிந்து, தனிமையாம் தவத்தில் தன்மயச் சுழுனை முனையைப் பற்றிக் கனத்துக் கதி காணக் கதி கலங்கும் கதி யுள்ளேனாய் (149).

பனித்துளியிற் துளியாம் சுக்ரம் துள்ளிப் பலப்பல கருவுகளூடு நினைவுத் துளி துள்ளித் துள்ளி அழியா நிதியாய், நீர்த் துளிச் சுக்கிலத்தைக் காமமுகத்தால் சுரந்து கறந்து அனைத்துள்ளும் பிறந்து பிறந்து வந்த கரு வயத்தனாய் அரியாம் கண்ணன் துணையை நாடினேன்; வினைத் துளிகளாம் வினை வெள்ளத்தையே கண்டேன்; விழித்துப் பார்த்தாலும் தான் என்ன? பழியல்லால் வேறில்லை. (வினைக்கீடாய், வினை பூண்டு, வினையூடு) விழிப்பதாற் பயனில்லை; "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவ"னானவனுக்கே கண்ணனருள் பலிக்கும். (150)

(151-155)-பக்தர்கள் கண்மூடிப் பார்க்குமிடம் சித்தர்கள் கூடி நிற்கும் இடம்: புத்தகப் புரட்டில் வித்தகர்களின் வித்தையில்லை.

சித்தமில்லா வழிச் சீச்சீ வழி, சித்தமுறும் சிவ வழியே சீர் வழி; உத்தமர்கள் உடலுருக்கி உள்ளே கண்ட சுழுனைக் கருக்கே வாத வழியாம் (152)

தனக்குள் தன்னைக் கண்டு, தானே அகண்டமாம் வானாய்த் தவமூலம் தானே தன்னில் சர்வமாய்த் தனித்து. '...கிலே கிழக்கு மேற்கு இல்லை' என்பதுபோல போக்கு வரவற்ற பூர்ணமாய்ப் பொலிவது. (153)

அண்ணாக்கை உண்ணாக்கிட்ட அமிர்தமய மோனத்தில் அக்னி, சூர்ய, சந்திர, மண்டலங்கள் தாண்டிய வித்யுன் லதா மினனாய், மின் தாண்டிய பரமண்டல பரவெளியாவ ஞானிக்கு நிகர் ஞானியே (154)

81

கரசர-கரசரணங்கள்; மனம் புத்தி சித்தா ஹங்கார அந்தக் கரணங்கள்; கைகால் முதலிய அங்கங்கள்-இவற்றை வாசிக் கயிற்றால் (பிராணாயாமத்தால்) வசப்படுத்தலாம்; வர-அரு ளம்மையின் வரத்தால்; சர-சாரக் குறுக்கம்; பூரண நித் தியமே-அகண்டமான அமரத்வ வித்தை மேற்கூறியபடி வசப் பட்டு மனதை-(மன்+அதை-நிலையாய் நிற்கும் ஆன்மனை)க் கொண்டே அடக்கியாளலாம் (155)

(156-170) மனத்தேரை நேராகச் செலுத்தி நிலை நிறுத்துவதே ஞானம்; விதி வினைப்போரில் வேரான வினை பற்றி வெற்றிகொண்ட யோகமே கீதை காட்டும் வில் விஜய னது யோகமாகும்.

கண்ணிலே ஈசனைக் கண்டு, ஈசனே கண்ணாக மண்ணில் விண்ணைக்கண்டு, எண்ணத்தில் கடவுளைப்போல் தன்னில் தானாய்த் தானே தன்னந் தனியனாய்த் தனித்து, நண் ணியது நண்ணியபடியே நடப்பதே யோகம். (157)

உப்பினமாம் உடலுணர்ச்சி நீங்கி, உள்ளத்தில் தெளிந்து, சுழுனைத் தாரை யூதி, '**வேண்டுதல் வேண்டாமை**' கொண்டு, சாவை யகற்றி, தவச் சாவியால் சகஜ நிலையின் தாளைத் திறந்து சமாதியில் நிற்பவருக்கு ஒப்பற்ற குருநாதன் துணை யால் யோக நிலை கிட்டும். (158)

மரிப்பது, தெரிப்பது, மணப்பது, பிரிப்பது, விரிப்பது, பிணைப்பது, சிரிப்பது, பொரிப்பது, குறிப்பது, வரிப்பது, வளர்ப்பது, இருப்பது-என உள்ள எல்லா விவகாரங்களிலும் ஈடுபடுவது எது? (159)

மேற்பாட்டிற்கு விடை; நடப்பது, கொடுப்பது, தடுப்பது, படுப்பது, பிடிப்பது, விடுப்பது, அடுப்பது, அணைப்பது, தொடுப்பது யாவும் நடுப்பொது நடுவேயாம்; '**எல்லார்க்கும் பொதுவில் நடம் இடும்**' சிவமாம் ஆன்மாவே; பராஹந் தையே. (160)

லோகமெல்லாம் யோகக் காட்சியானல் போகமும் யோகமாம் (161)

யாகமெல்லாம் யோகமானல் கொள்வதும் கொடுப் பதும்கூட யோகமாம் (162)

நாக குண்டலியை ஊதி ஆசாபாசத் தாகங்கள் நீங்கி ஞல் யோகம் (163)

யோகம் ஞானமானல் யோகமே யோகத்தில் யோக மாகும் (164)

ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஒலி என ஐந்து, தன்மாத்திரைகளாம் உலகில் திரிந்து, விதிக்கடல் புக்கு, வினையலை நுரைத்திரைகளில் விளையாடி; ஆறு-வழி; வழியில் குருவருள் பெற்று, அண்டாண்ட அகிலாண்ட சாரத்தை அறிந்து; அச்சாரத்தின் சாருகிய மதி அமிர்தமுண்டு, மனம் புத்திக் கரணங்கள் குவிந்துவிட்ட ஸகஜநிலையே சமாதி நிலையாம் (165)

சிந்திப்பது பாவம்; சினுங்குவது காமம்; சந்திப்பு பந்தம்; பந்தத்தால் தொந்தம்; வந்தித்தால் வாதம்; வாதித்தால் விவாதம், விவாதத்தால் விமோஹம்; நிந்திப்பது நாசம், நினைப்பது விண் மாயையின் மயக்கு (166)

வருந்தினால் வலுப்போகும்; வாய் பேசினால் மௌனம் போகும்; அருந்திலவன் ருசி யறியான்; அமுதப்பால் குடித்தவனே அமரன்; என்று பொது நெறி கூறி அப்பால் ஆசன யோகம். வாணியான், சேணியான்-தடித்தவன், நொடித்தவன், பசி, பசியின்மை; இரண்டையும் நீக்கி நடு நிலை நின்று திருந்தியவன் பொருந்தி நிற்கும் நிலையே ஆசனம் (167)

ஊனிக்கில்-ஊன்றிப் பார்த்தால்; ஊன்+இக்கு+இல்-உடம்பின் கரும்பாம் வீடு-முதுகம் தண்டு: இனிமைக் கரும்பு, கணு ஏற ஏறக் களிப்பேறும் கரும்பு: இதன் வழி மேலேறும் யோகியின் உயிர்; அத்துடன் ஒளித்துச் சென்று வித்து உள்ளொளியாய் வெளியாய் சூதமாகும்: இச் சூதம் தான் பெண்களின் மர்மஸ்தானத்திற்கும் விருந்தாகிய சுக்ரம்; இதுவே உலகசோகத்தின் கருவாகும்: ஞானியும் இதைக் கொண்டுதான் யோகினியைப் போகம் செய்கிறான்-த்ரிகூட யோநியில் தேஜோமய ஓஜோமய ரேகையை லம்பிகா லிங்க மூலம் செலுத்தி, மாயாதீத மாயா மோஹினியான நாராயணியைக் கூடுகிறான். இவ்வாறு மண்ணும் காமத்திற்கும் விண்ணும் ஞானத்திற்கும் பாலமிட்டு வாழும் தாழ்வற்ற வல்லபமே யோகம் (168)

காணி-கைலாயம்; கோணி-உடல்; மாணி-ப்ரஹ்மசர்யம், மாதாவின் குலம்-பெண்கள்; சாணி - வெளிச் சுத்தம்; சுடுகாட்டுச் சாம்பல் பூறுவந்த-விபூதி, திருநீறு; ஸர்வ சங்கப் பரித்யாக ஸந்யாச யோகம்; தேனீ - ஒன்றுவிட் டொன்று பற்றி மாயையில் உழல்தல் (169)

யோகம் என்பது மலரில்லாத் தேன் எடுக்கும் மர்ம மார்க்கம் - தூய்மையானது. சோனகன் - விநாயகன், மூலமூர்த்தி; குடமாடும் குசவன்-ப்ரஹ்மா, ஸ்வாதிட்டமூர்த்தி; இடையன் - விஷ்ணு; மடையன் - ருத்ரன்: சடையன்; மகேஸ்வரன்; குடையன் - ஸதாசிவன் என்ற பஞ்ச ப்ரஹ்மாக்களையும் தாண்டி மடையனுகி - பித்தனுகி, கடமான கும்பத்துக் . கள்ளிப்பால் - உடன் சிரசான கும்பத்திலுள்ள மதியமிர்தத்தைக் கறந்து சுரந்து உண்பதே யோகமாம். கடம் - உடல்; கும்பம் - குடம். தலை; கள்ளிப்பால் - கள் + இ + பால் = கள்ளில் இகரச்சக்தி கலந்த பால், வாலையருள்; இதனையே,

'' ஆறு மனை யறுவர்க் கப்பாலே வாலையருட்
சாறுபெற நித்நம் ஸாஸ்வதமாம் ஸகஜநிலை ''

என்றார் பிறரும் (170)

(171) யோகம் செய்யும் நேரத்தைக் கோழி கூவும்; யோகத்தின் வேகம் ஆமை வேகம்; யோக நாடி நடப்பு பாம்பை ஒத்தது; யோகத்தின் பிடி பிடிவாதமான உடும்புப் பிடி; யோகத்தின் பின்னாக்கை - பிளப்புண்ட நாக்கை தாரையிற் காண்க; யோகத்தின் அடிமுடி மூலஞ்சேர்ந்து யோக தண்டமாம் முதுகந்தண்டேறி உச்சியிலுள்ள பரம ஹம்ஸக் குடும்பனுதல்.

(172-174) பிடி, நொடி, அடி, குடி, கொடி, துடி, முடி என்னும் ஏழுத்தானங்களிலும் பெண்மை, நுண்மை, அங்கா ணம்மை; கோமளாங்கக் கும்மை; கும்ப மார்பக் கொம்மை; சொர்ணமயப் பொம்மை என ஆருதாரத்தும் வளர்ந்து, ஏழாவதான முடியிலே முப்பாழுக் கப்பாலாம் மோனத்தில் சோமாம்ருத சொருசுக்காரியாய் வாலை நிற்பாள்.

இதுவும் வாலாம்பிகையின் பெருமையே. அவள் சோடியிலே ஒருத்தி; குலப் பெண்ணும் குலகுண்டலினி; ஸ்ருஷ்டியின் கோடி முனையிலே குடியிருப்பவள்; அவளை ஓடிப்போய் உள்ளத்துக்குள் பிடிக்க முயன்றால் ஒருவருக்கும் சிக்காமல் ஓடி ஒளிவாள்; மேற்காட்டிய ஏழு மாடிக் கப்பால் மாடி மச்சு முடியின் உச்சி மனையாம் கைலாசத்தில் அவளைக்காணலாம். அகுல குண்டலிக் கணிகையான அவ்வாலையை மதியமிர்த உன்மத்தத்தோடும், சுழுனை முடியின் இமையா நாட்டத்தோடும் ஞானக் காதலில் கட்டிக்கொள்ள வேண்டும். 'குலப் பெண்ணுத்தாள்' இதே பாடலில் 'கணிகை'யாகிருள். குண்டலினியில் மூவகை, குல, குலா குல, அகுல என; குலப் பெண்; குலாகுலப் பெண் கன்னி; அகுலப் பெண் - வேசி, கணிகை.

'வேசியென்று சொல்லி வெளியில் புறப்பட்டவளைத்
தாசியென்று சொல்லத் தகாதோ மனோன்மணியே'

என்றார் குணங்குடியாரும். (173)

இது தொடர்நிலை. 'கன்னித் தாயா'ம் வாலையைக் கட்டித் தழுவினால் வாதம் சித்தி, அமுதமுண்டு அமரனாகலாம்; பந்தம் தீரும், குறைகள் நீங்கும். வேறு வார்த்தையில், தான் சிவனைச் சிவனோடு இணைவதே மெய்ஞ்ஞான யோகம். கன்னி + தாய் — தாயுமானவரும்,

''அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும
ஆனந்தரூப மயிலே''

என்கிருர்; மின் வேகக் குமரி - வைத்யுதாங்கி, வித்யுன் மாலா, வித்யுன்வதா விக்ரஹம், வித்யுன் லதா மண்டல வாசினி (174).

(175) அமுதப் பொய்கையாடி, ஆதவனும் அஞ்ச, காலனும் நிலைமாறிக் கவலை கொள்ள; மன்மதனும் கதிகலங்கி மாண்டுபோக, வெறும் சாட்சி மாத்திரமாய் உலகத்தொழிலில் ஈடுபடுபவன் கர்மயோகி.

(176) கண்ணீரும் கம்பலையும் கண்ணுறங்காக் கங்குலுமாய் வேறொன்றையும் சிந்தியாது காராகிய கலக்கமற்ற ஒரே மூச்சில் பற்றற்று ஓர்ந்த ஓரிடத்திலேயே நிலையாய் உற்றதுணையில் உற்றுற்று நிற்பதே பக்தியோகம்.

(177) அங்கமெலாம் பங்கமிலாத் தங்கமாக—செத்து விழும் இத்தேகத்தையே நித்திய தேகமாக்க அமுதமுண்டு, சந்தேகமற்ற சுழுனைமுடி வலம்புரியில் நாதம் ஓங்க, தத்துவங்களான சுற்றங்கள் சுற்றிவர, பொறிபுலன்கள் போக்கற்ற பூரணத்தில் போக்குவரவாக; எங்கும் என்றும் எள்ளளவும் குறையாத நிறைவான ஜோதியில் ஜோதியாய் ற்பதே சித்தர்களின் 'ஜெயமிகுந்த' ராஜாங்க யோகம்.

(178) ஆன்ம ஞானம் பல நூல்கள் கற்றாலும் வராது. நேரிய ஜீவ நதியாம் நெருப்பாற்றில் குளித்து; மயிர்ப்பால நுனியில் தேத்துத் தெளிந்த மதியக் கேணியில் அமிர்தம் பருகத் தெரியாமல், அமுரியென்று நாவின் ஜவ்வையறுத்து, தேங்கிச் சிதறிச் சிந்திய சிறு நீருண்டு, மூச்சு முட்டி, முழி பிதுங்குவதே அவலமான அ(ஹ)டயோகம்.

(179) தலைவேறு கால்வேறாய்க் கரசரணங்களும் உடலும் துண்டிக்கப்பட்டும் உயிரோடு கிடப்பது கடயோகம். இதையே கண்ட யோகம், துர்த்துண்டியோகம் என்றும் சொல்வர். ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள் ஒரு முறை இவ்வாறு கிடந்தாராம். இது பரகாயப் பிரவேசக் 'கருவு பலவாகக் கொள்ளும்' ஸாதனை வழி; 'சிரஸாஸனத்தில் நின்று, வாசியைச் சிரத்துள் செலுத்தி; 'மத மண்டிப்பால் கறந்து'—முப்பூ மும்மூல மும்மதம் வீறி, எங்கும் பரவி இணைக்க உடலை அங்காங்கமாகக் கழற்றும் வித்தை (விரிக்கிற் பெருகும்.)

(180) இல்லறம் நல்லறம் என்றால் எப்போதும் போகம் என்பதல்ல; தொல்லை அறமாகிய துறவறம் என்பது யாவும் விட்டகலும் சந்யாசமல்ல, 'துறவாமல் துறப்பதே'; கண் பார்வையால் உண்டாவது காகினி (த்ருஷ்டி ஸ்ருஷ்டி வாதம்); ஸ்வர்க்கம், ஸ[illegible]கம் என்பதெல்லாம் மனத்தின் நோக்கு; கல்வித்தையே கனகமணி வித்தை; இவற்றில் ஒட்டியும் ஒட்டாமலும் ஸகஸ்ர கமலத்தைக் காப்பவன் பத்மயோகி.

(181) யோகம் செய்யும் முதல் உற்றார் பெற்றார் உறவினர் கடன்களையும், பற்று வரவுகளையும் செய்து தீர்த்துப் பின், புலன் பொறிகளை அடக்கி; சித்தத்தைச் சிவன்பால் செலுத்திப் பூஜிக்க வல்லவர்களுக்கே மேற்சொன்ன யோகங்கள் சித்தியாகும்.

(182) யுகம் மாறி விட்டது; யோகிகள் நெறி தவறுவர்: உலகம் மாறிவிட்டது; மக்கள் தம்மை விடப் பொன்னைப் பெரிதாய்ப் போற்றுகின்றனர்; உள்ள உணர்வுகள் மாறி விட்டனர்; காம க்ரோத லோப மோஹ மத மாச்சரியமாய், அறுவகைக் கொடுங்குணங்களும் மலிந்து விட்டன: எனவே, ஞானமடையப் புகல் வேண்டுமாயின், இன்னும் ஒருவரும் அறியாமல் மறைந்து நிற்கும் பூரண மகான்களைத் தேடிக் காணவேண்டும்.

நிர்நிலை வைப்பு

நிர்நிலை என்பது ஸூன்யம்; ஏகம் அநேகமாகும் இன்மை: தந்திரங்களில் பௌத்த தர்ஸனம், ஆவரணங்களில் ஸர்வாகர்ஷணை ஷோடஸ் தளம்; இயல்பில் இன்மை போன்ற அன்மையாம் இயல்பு, முப்பாழ் முதற்பாழ் என்றெல்லாம் கூறப்படும் அநாதியாம் பூஜ்யம், ஒன்றுமற்ற வெறுமை, ஆதிப் பொய்மை: ஆழ்ந்த காரிருள், அகண்டத் துயில், அகன்ற தேக்கம்; யாவும் மடியும் உணர்ச்சிகளற்று ஒய்ந்துறைந்து ஒடுங்குமிடம்-நிர்வாணம். இந்தச் சூன்ய நிலையிலிருப்போருக்கும் சில சித்திகளுண்டு-ஏனெனில், இது வெறும் இன்மையல்ல, இன்மையின் இருப்பு; இந்தச் சூன்ய சித்திகள் ஆபத்தானவை-செய்பவனுக்கும், செய்யப் படுபவனுக்கும் தீமை பயப்பவை. இன்மையாம் முப்பாழை யும், முதற்பாழாம் அப்பாழையும் தாண்டி, அப்பால் நிற்பவரே ஞான சித்தர். இப்பகுதியில் சூன்யமாம் பொய்மையும், அப்பாலாம் உண்மையும் காட்டப்படுகின்றன.

(183) முப்பாழில் முதற்பாழ்-பொன் வெய்யில், மின் மழை எனும் சாகாக்கால் வேகாத்தலையூடு தன், தனிமையில் தானே உருகி, ஒன்றுமில்லாமற் போகும் சூன்யம்.

(184) கண்வெளி, கதிர்வளி, விண்தெளி என அழிந்த அகந்தைப்பாழ், கண், விண், கதிர் எனும் இகந்தா உலகை வெறும் வெளி, வளி, தெளியெனும் இரண்டாம் பாழாம் வெறுமையாய்க் காண்கிறது. இவ்விரண்டையும் அகப் பாழ், புறப்பாழ் எனலாம்.

(185) உய்களி, பைவெளி, ஐயளி, என்ற உடல் உணர்வு என்னும் மேற்கூறிய இரு பாழ்களையும் இணைக்கும் இணைப் பாழாம் மூன்றும் பாழ்.

(186-191) அடி, அங்கம், முடி-கொப்பளம், அப்பளம்-பாலை என்பவை முப்பாழ் தாண்டிய அப்பரழாம் வெறுமைச் சூழல்; அப் பாலை வனப் பாழில் உண்மை வனச் சூழ் வேண்டித் (தண்ணீர்) தாகமெடுக்கிறது. இது முப்பாழும் தாண்டிய முதற் பாழ்.

தாகம்தீர மதிப் பொய்கையாம் தடாகம் கிட்டுகிறது. முன்கை-வெளிநாக்கு (வெளி நாக்கு மடிப்புப் பயிற்சியால் மதிப்பால் மன்டி, பாலை வறள விட்டுப் பாழாகும் ஊட

யோகம்) சுற்றில் "சிப்பியிலே முத்துமில்லை சப்பிடவே சத்துமில்லை" என்ற நிலைதான். மதியமுந்தை வெளி நாவால் சப்பிச் சப்பி மண்டை வற்றிப் பாழாவது தான் மிச்சம். கம்பம்-முதுகம் தண்டு: உலகத்தில் பாழ்நீங்கி நிலை நிற்கச் சுழுனைத் தண்டு தரும் சிவனும் அங்கு இல்லை.

(192-196) கற்பதும் கேட்பதும் சொற்பனம்; நிற்பது நெறியில், அற்புதக் குறியில்; இல்லையாம் பாழ் நீங்கி, இருப்பது கருத்துற குருப்பொது ஞானம் பெற்று, நாணம் விட்டு, மோனம் தொட்டு, 'நாம்' என்னும் சிற்றகந்தை நீங்கி 'நாமாம்' பேரகந்தையில போக்கு வரவற்ற பூரணமான வானத்தில் நல்குதல், நடப்பு, நடை, நலம், பலம், அல்குதல், அலகு, அமுதம், குமுதம், பல்குதல், பயன், பகுதி, விகுதி, புல்குதல், புலவு, போகம், யோகம், நாதம், வேதம், பாதம், போதம்; சோது குணம், குரு, கரு, பேதம், நீதம், பெண்மை, வண்மை, சூதம், (முன் கண்ட) சூன்யம், (சூன்யம் நீக்கும்) ஜோதி, ஆதி யாவும் நாமே என்னும் அகண்டாகார ஞானம் வரும். பட்டினத்தாரும்,

'மூப்பாழும் பாழாய் முதற்பாழ் முழுப்பாழாய்
அப்பாலே வந்தென்னை யறவிழுங்கிக் கொண்டாண்டி'

என்று நிர்நிலை காட்டி அதன் மேலாம் நிச்சயமும் பூட்டியுள்ளார்.

கனக வைப்பு

(197-202) இப்பகுதிக்கு மூவகையாகப் பொருள் கொள்ளலாம்-பகிர், அந்தர், பகிரந்தர் என இது நடைபெறுகிறது. முதல் மூன்று பகிர்முகம், பின் பகிரந்தர், கடைப் பாட்டு அந்தர்முகம்; யாவும் இரண்டும். குப்பைமேனிக்கு ஈரிரு கவசம் இரு முறை போட்டுத் துருசு செய்து, ஒன்றுக்கு ஒன்றரையாய் ரசம் கூட்டி, மூக்கான் சாற்றுலாட்டி, கஜபுட மிட்டு, மறுமுறை மாற்றிப் போடப் பொன் வண்ணச் சுண்ணம் பொங்கும். இச்சுண்ணத்தைச் சுட்டெரித்துச் சுத்தி செய்த செம்புக்கு ஏழுக்கொரு பங்காய்த் தாக்க, செம்பு முதலில் வெள்ளியாய்ப் பின் பொன்னும். இதுவே சரியான வாத வித்தை. இது பலிக்க வாசி மார்க்கத்தால் பூநாகமாம் குண்டலியை ஆட்டி விட்டால் உலகெல்லாம் வசப்பட்டு ஆடும்.

அந்தர் முகம் : இருகால் மேனி - இருகால்களை உடைய உடல் : இரு கவசம்-புலன்பொறிக் கவசமிடும் ஐம்பூடக யோகம் ; துருசு-துத்தம், துத்தி, மூலச்கண் குண்டலினிக் கொப்பு; மன்னிரக் கவசம் நான்கு-மன முதலாவு நான்கு அந்தக் கரணங்களால் கவசமிடல். அல்லது அவற்றை வசப்படுத்தல்: நாலுக்காறுக ரஸ நயபபு-கரணங்கள் நான்கையும் அடக்கியாண்டு, ஆறுதாரங்களூடு ரஸ நயப்பான சுக்ர பிந்துவை ஊர்த்வ ரேதஸாய்ச்செலுத்தி; மூக்கான் சாறு -

வாசி; கஜபுடம்-நம்பிக்கை. சுழுனை, அக்னி; அனுஹதம் வரை இரு பங்கும், அப்பால் ஒரு பங்கும்; புரட்டிப் போடல் -பங்குமாற ஊர்த்வாமுகம் மேலோங்கல்; பொட்டெனவே-பொட்டிடும் இடமாகிய புருவ மத்தியில்; சுண்ணம்-சுழியிட்ட ஜோதி, விந்து ஸம்யுக்த வி[illegible]ஞானி; பொன்போல் பொங்கும்-[illegible] பொங்கும். இச்சுண்ணத்தை வாட்டமறப் பொசுக்கிடநேரா-யோகாக்னியால் எரித்து வசப்பட்ட; செம்பு-தலை, சிரம், ஸகஸ்ராரம்; எழுக்கே-அர்த்த சந்திரன், ரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபிகை, ஸமனை முதலிய ஸ்தானங்களில் செலுத்த வெண்மை பொன்னும் வாதம் சித்திக்கும்; வாசி என்னும் பூநாக குண்டலியை ஸகஸ்ராதி ஸுஷும்ன ஸ்தானங்களில் ஆட்டிவிட அகிலமெல்லாம் நம் இஷ்டப்படி ஆடும். (197, 198)

நஜபுடம்: 30 அங்குல அகல - நீள - ஆழச் சதுக்கத்தில் மூன்றி லிரு பங்கு வாட்டி, மேல் முனை வைத்து மூன்றில் ஒரு பங்கு வரட்டியிட்டு மூடித் தீயிட்டெரித்தல் (பாவப் பிரகாசம்); புரட்டிப்போடு-பங்கு மாற்றல்.

பூநாக ஸத்துவம் பொங்கப் பொங்க, ஐங்கோல மையில் பொன்னுங் கன்னி, அமுரி, தேற்றான் வித்து, மணத்தக்காளி பேய்த்துமட்டி, குமட்டி, கிழவேம்பு கதலி, கல்தாமரை முதலியவை கூட்ட மேற்காட்டிய ரஸம் கட்டி மணியாகும்.

பூநாகமாம் குண்டலினி பொங்கப்பொங்க; ஐங்கோலக் கரு-மூலம், அகடு, நெஞ்சு, குரல், சிரமென்னும் ஐங்கோலமும் சுட்டெரித்த நிர்மலக் கரு; பொன்னுங் கன்னி-பிடரிக்கண்ணும் கன்னி; அமுரி என்னும் தேற்றான் வித்து-அமுரி எனனும் மதியமிர்தம் இறங்கித் தெறித் தெற்றெனத் தெளிந்துள்ள ஸம்பகத்தானம்: மணத்திட்டக் காளிப்பால்-மண + திட்ட + காளி ÷ பால் = ஜீவ ப்ரம்ம ஐக்யத் திருமணத் திட்டத்தில் காலங்கடந்த கா[illegible]லியாம் காளியின் கருணையான ஞானப்பால்: பேய்த்துமட்டிக் குமட்டிச்சாறு-இருவினை ஒப்பு மல பரிபாகம்; கிழவேம்பு-அதிதி ஸ்தானமாம் உன்மனி பதம்; கதலிக்கல்-கற்[illegible]ராம் ஊர்த்வஜோதி. இதைக் கிட்டினால் ரஸமணியென்னும் சிந்தாமணி கிட்டும் (199).

தீர்க்கமான வாசியுடன், இரேசகமாய், வாலை யெடுத்தெடுத்த ரஸத்திற்கு (வாலை-கோஷ்டி) கருந் துளசி, பிரம்மதண்டி, சிவன்வேம்பு முதலியவற்றால் காப்புக்கட்டி: பச்சை மோகினியாள் பிச்சான கந்தகத்தை அரைத்துப் பூசிய: மாமுகத்துக் காந்தச் செப்பில்-[illegible]தோமுகக் காந்தச் செப்பில், பால் ஊற்றி, [illegible] [illegible] மேலேறிப் பொங்கிக் கோபுரம்போல உயரும் பாய்ச்சலில் பதக்கம் செய்துகொள்.

[illegible] பிரமத்துடன் [illegible] மதியமிர்த குண்ட நிதேற்றி, பிரம்ம-விஷ்ணு-ருத்ர க்ரந்திகளால்

காப்புக்கட்டி, அதிதி ஸ்தான ஆர்த்தவமாம், ஸோமச் சாறு பூசிய உன்மணியாம் ஸர்வாகர்ஷண காந்தத்தில் மேற் சொன்ன ஸர்வாதார ஸம்மேளனப் பாலை வராகபுடமாம், ஹூங்காரத்தால் புடமிட, பால் கோபுரம் போல் மேலே பொங்கி 'சிகாய மத்யே பரமாத்மா வ்வயஸ்திதா' என்னும் மாஹாபிந்துவில் பதகமாம் (200)

ஸர்வதோமுக காந்கம்-ஏக, த்வி, த்ரி, சதுர், பஞ்ச ஸர்வதோ முகமெனக் காந்தங்கள் அறுவகைப்படும். பிரா மகம். சும்பகம், கர்ஷகம், திராவகம், உரோமம் என்னும் ஐவகையிலும் இவ்வறு வகை உண்டு. மாலாங்கள் ரஸ வைப்பில்,

கிட்டத்தில் நூருகும் முண்டங் கண்டாய்
கிட்டியதோர் தீக்ஷமதன் மேலே நூறும்
எட்டியதோர் காந்தமதினி லக்கமேலாம்
எம்முகமாம் காந்தமதற் கிணையே யில்லை

என்றுள்ளார். இக் காந்தத்தால் அகிலாண்ட சஞ்சாரம் செய்யலாம், சித்திகள் யாவும் கைகூடும், பரிச வேதனம்.

பன்றிபுடம்: முழச் சதுக்கத்தில் முங்கி ஊதும் புடம்.

இரும்புக்கு ஆறில்ஒரு பங்கு வாலைச்சாறும், கருநொச்சி யும், விளநச்சியுமாய்க் கலிக்கம் போட்டு, அண்டமூலி கூட்டி, ஆகாசக் கருடன் பால் அறைத்து மூடினால் மாற்றறியாத பொன்னாகும். பின் வாசித் தீ மூட்டி, சிரசோட்டில் உள்ள காந்த லிங்கத்தை எட்டிப்பற்றினால் இஷ்ட-மானபடி இவ் வுலகமெல்லாம் பொன்னாகும்.

கரும்பொன் - சூன்யம்; காரிருள்; வாலைச்சாறு - பிந்து வெள்ளம்; கருநொச்சி-ஜீவரேணு, பிராண தாரை ; விள நச்சி-காமினி குண்டரஸம்; அண்டமூலி-மூலக் குண்டல மூலி, ஆகாசக் கருடன் பால்-ஹம்ஸானந்த மதியமிர்தம் ; சிரை யோட்டில்-கபால பாத்திரத்தில்; காந்தலிங்கம்-துங்க உன் மணித் தானம்; வாசியெனும் வளத்தீ-யோகாக்னி (201).

வாசியிலாப் பூசைக்கு வாதம் வராது ; வாசியுள்ளானை வாசிக்கயிற்றால் கட்டி கன்னாம்பாள் வாலை வா சித்தனே என்று வரசித்திகள் கொடுப்பாள் (202).

ஞான வைப்பு

(203-242) இப்பகுதி காலநிலை கூறி, விஞ்ஞான மெய்ஞ் ஞானத் தாரதம்யங்கள் காட்டி, அணிமாதி சித்திகளை விளக்கு கிறது. எளிய தமிழ்; பரிபாஷைகள் அநேகமாய் இல்லை. என வே இப்பகுதியின் விஷய வைப்பு முறையை மட்டும் சுருக்க மாக விளக்குகிறோம். முதல் 5 பாடல்கள் தற்காலத்தின் தகையற்ற நிலைமை; அடுத்த 10 பாடல்கள் காரியமறிவான் விஞ்ஞானி, காரணமறிவான் மெய்ஞ்ஞானி என்பதை தெளி

வாக்குகின்றன; அத்த[illegible] சித்தென்னும்
சைதன்யத்தின் பெருமையைக் காட்டுகிறது. அடுத்து வரும்
பாடல்கள் (229-231) வெப்பமும் தட்பமும் வெத்துலக விதி,
பகுப்பும் தொகுப்பும் விஞ்ஞான விதி. யாதனையும் கூத
னையும் செத்துலக விதி, காமக்ரோதாதிகள் காசினி வாழ்வின்
விதி; ஸஹஜமும் சாந்தமும் [illegible]த்துலகம், சீரும் வேரும் சித்
துலகம்; வேர் மெய்ஞ்ஞானம், விளைவு விஞ்ஞானம்: சாரம்
மெய்ஞ்ஞானம், சார்பு விஞ்ஞானம்; ஓர்மை மெய்ஞ்ஞானம்
ஈர்மை விஞ்ஞானம்; போகம் மெய்ஞ்ஞானம், பேதம் விஞ்
ஞானம்; ஆரவம் பொய்ஞ் ஞானம் ஆசை அஞ்ஞானம்;
வெற்றறிவு விஞ்ஞானம், வேதாந்தத் தெள்ளறிவு மெய்ஞ்
ஞானம் என்றெல்லாம் கூறி சத்து, சித்து, ஆனந்த
சக்தியாம் வாலையே சித்தர்களின் ஞானம் என முடிவு
கட்டுகிறது. (232-234) இம்மூன்று பாடல்களும் சத்து சித்து
ஆனந்த சக்தியின் பெருமையைப் பாடுகின்றன. ஆதியில்
அவள் மட்டும் இருந்தாள்; அவளே அவனைப் புணர்ந்தாள்;
சிவனெனும் பெயரினைப் பெற்றாள்; [illegible]ஒடே விளையாடி
னாள்; வேதத்தின் தாயானாள்; வேதாந்தமாம் சிவனிதயத்து
மகளாய்த் தோன்றினாள்; பின் மகேசனுக்கு மனைவியுமானாள்;
சித்தர்கள் முடிமேல் ஏறிப் பார்த்தால் எல்லாம் அவளுடைய
லீலையாகும். இதனாலேதான் மணிவாசகரும்: ''எம்பெருமான்
இமவான் மகட்குத் தன்னுடைக்கேள்வன் மகன், தகப்பன் தமையன்''
என்கிறார். திருமூலரும் ''தாயும் மகளும் தாரமும் ஆமே''
என்கிறார். சித்தினி வாலையே வேதன் நாவில் வாணி:
மாயன் மார்பில் கமலை; சிவனது பாகத்தில் சிலை; மாணியை
அணைத்து, மாணிக்க மணிப்பீட சோதியான அன்னை;
அவளே காளிபத்னி; கௌமாரி; ராமாநுஜை; இவ்வகண்ட
மெல்லாம் அவளுடைய ஆட்டமும் பாட்டமுமே. (235-236)
சித்த மகிமையால் சிரஞ்சீவி யானவர்கள், முதல் சித்தன்
சிவன்; மார்க்கண்டேயன். சாவித்திரி, நசிகேதன், ஆஞ்ச
நேயன் முதலியவர்கள் சிவை அருளால் சிரஞ்சீவியான
சித்தர்கள்; விஞ்ஞானிக்கு காலதேச வர்த்தமானமே உலகம்;
மெய்ஞ்ஞானியோ காலமிலாம் காரண பூரணத்தில், ஸ்தித
ப்ரக்ஞனாக இருப்பவன். (237-242) என் சித்திகளைக் கூறு
கின்றன. மண் சித்தி, மன சித்தி, மதி சித்தி, கண் சித்தி,
கலை சித்தி, கனு சித்தி, கதி சித்தி, விதி சித்தி, கடி சித்தி
விண் சித்தி, வெளி சித்தி, வினை சித்தி, [illegible] சித்தி என
எல்லா சித்திகளையும் எட்டு நின்ற [illegible] சித்தன்; அணுவுக்குள்
அணுவாகும் அணிமா. மகத்துக்கும் மகத்தாகும் மகிமா,
லகுவுக்கும் லகுவாகும் லகிமா, கனத்துக்கும் கனமாகும்
கரிமா, நினைத்ததை நினைத்தபடி பெறும் ப்ராப்தி. வேண்டி
யதை வேண்டியவாறு பெறும் வசியம். [illegible] சிவனுக்கும்
ஈசத்துவம் என என் சித்திகளையும் [illegible]றது.

கடவுள் வைப்பு

(243-256) கடவுளைக் காணவில்லை கடவுளுடன் கலந்
தவன் சித்தன்; கடவுள் இல்லையென [illegible]வுமில்லை. கடவுள்

இல்லையென்பவன் நாய்க்குச் சமானம்; நாயும் கூட நன்றியுணர்ச்சியில் மனிதனைக் காட்டிலும் சிறந்தது; பேயும் மந்திரத்துக்கு வசப்படும்; மனிதன் எதற்கும் வசப்படாப் பேயாசைப் பித்தன்; தாயாம் ஈசனை வணங்காத் தறுதலை; தான்தோன்றி, தயவற்றவன்; நாயும் பேயும்கூட ஈசனை அறியும்; நாரணனார் பாதத்தை நம்புவோம். நீதி நெறிகள் நீங்கின; நிர்ணயங்கள் மாறின; சாதிமத பேதங்கள் வளர்ந்தன; தர்மங்கள் தளர்ந்தன; அந்தணர் ஒழுக்கங்கள் உளுத்தன; அகிலம் யாவும் அகங்காரத்தில் அடங்கின; ஆத்திகம் மறைந்தது; நாத்திகம் தழைத்தது; காமக்குரோதாதி தீக்குணங்கள் செழித்தன; கலியுகம் முற்றிக் கருத்தடையும் வந்தது. கலியுகத்தின் பொம்மலாட்டக் கயமைகளைக் கண்டு சித்தர்கள் புன்முறுவல் பூக்கின்றனர். (243-246)

மண் மிதிருக்கையிலே மலை பெரிதாகத் தோன்றும்; மலை மிதிருக்கையிலே மண் பெரிதாகத் தோன்றும்; இவ்விருமைகளின் எண்ணிக்கை ஏணியின் உச்சமடைந்து, இரக்கமிகுந்து, கண்மணிக்கும் கண்மணியாம் கடவுளைக் கண்டு, பிறப்பிறப் பற்று, விண்ணையெல்லாம் ஆளும் வேதநெறியைச் சித்தர்கள் செப்பினர்; அத்துடன் விஞ்ஞானத்துக்கும் விளக்கங் கூறினர். (247,

ஒன்றொன்றாய் மாறும் மாற்றத்தோடு ஒன்றாக நிற்பது தெய்வம்; என்றென்றும் இன்றாகி யிருப்பது தெய்வம்; மன்று, நாடகம், நடிப்போர், பார்ப்போர் யாவும் தானே தானாவது தெய்வம். (248)

கண்ணுக்குக் கண்ணான காட்சி; காண்பவன், காண்பது, காணப்படுவது, எண்ணுக்குள் எண்ணம், எண்ணுபவன், எண்ணப்படுவது, யாவும் ஈசனே; மண், நீர், தீ, வளி, வெளி, வண்ணம், பெண், ஆண், பேடி, பேச்சு, மவுனம், யாவும் தெய்வமே. (249)

அதனதனுள் அதுவதுவாய், அப்பாலாய், இதனிதனுள் இதுவிதுவாய், இப்பாலாய், எதுவெதென அதுவதுவாய், எல்லாமாய், அல்லதுவாய், எங்குமாய், கதி விதியற்ற காரணத்தின் காரணமாய், அத்துடன் கதி விதியுமாய் நிற்பதும் கடவுளே. (250)

சுத்தமுறத் தவஞ் செய்வாரும், உருவத்தையும் அருவத்தையும் கண்டாரும், சித்து, அசித்துத் தத்துவங்களைத் தேர்ந்தாரும், சத்துரு மித்ருக்களைக் கூர்ந்தாரும், சத்து அசத்தைப் பிரித்து எண்ணும் சதுரரும் இப்போது இல்லை. உண்மைக்கு அரிச்சந்திரர்களைக் காணோம்; கட்ட சட்டி சட்டத்தின் தத்துவம் கண்டாரில்லை; சகரச் சலத்தையும் [illegible] வெத்தையும் ஓர்ந்த உண்மையாளர் இல்லை. (251)

எத்தனை இருந்தாலும் இருப்பிடமே இருப்பிடமாம் சகஜ நிலையில்லையேல் பயமில்லை; மோனமில்லார்க்கு ஞான

யில்லை; வந்தனை, சிந்தனை யாவும் ஈசனருள் இல்லையேல் பாழாய்ப் போகும். (252)

காமத்தை அகற்றிக் கடவுளைப் பணி; கருத்தோடு பணி: மருக்கொழுந்து மணம்-முக்கூடல், சோம காமினி குண்டங்கள்; சுழுனையோடு கலக்கும் கொழுந் நலகான கூட்டக் [illegible]: [illegible]க்கலவியைப் பெற நாற்றெட்டுப் பஞ்சாட்சரத் தொடர்பு களைக் காண்பாய்: அப்போதுதான் வாமி அபிராம வல்லியாம் வாலை மர்மத்தில் தர்மத்தை வளர்த்துக் காட்டுவாய். (253)

உலகத்தில் நீதி என்று அநீதியும், காசுக்காகப் பொய்யை மெய்யாக்கும் வாதமும். குணத்தின்பேரால் குத்திரமும் கோளும் மலிந்துள்ளன; எனினும் ஆண்டவனைப் பணிவார்க்கு அச்சம் கிடையாது. (254)

மர்மத்தில் உள்ள கர்ம மார்க்கம், வையகத்தோர்க்கு அபாயமாகும். தலைவனாக வேண்டுமென்றால் வீண் பேச்சு வாயரட்டைகளில் கெட்டிக்காரனாகவும், உனக்குள் நீ உன் மையைக் கண்டு கொண்டால் உலகத்தின் வஞ்சகங்களெல் லாம் உன்னை ஒன்றும் செய்யாது. சிவாயவென்[illegible] யாவும் சிவசக்தி விளையாட்டாய்க் கண்டால் சர்வமும் [illegible]ப் போகும். (255)

இல்லற வைப்பு

(256-271) ஜீவக்குடும்பம், தாயர் ஐவர்-வாணி, லக்ஷ்மி, ருத்ரி, மகேஸ்வரி, மனோன்மணி: தந்தையர் ஐவர்-[illegible], விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன்; [illegible] ஐந்து-சுழுனை, தும்பை, துத்தி, தூதுவளை, [illegible] ([illegible] க்ராந்திகள்), மந்திரம் ஐந்தெழுத்து-நமசிவய, [illegible], சிவயசிவ, சிவ, சி; [illegible]ம் ஐந்து (குருமுகம்) [illegible] புண் ணாக்கீசர், பஞ்சகல்பத்தை

> கருநெல்லி வெருகுக்கால் கடுவன்கல் கீண்டுபனை
> அருகன்வே [illegible] தேயத்திப்பால் துத்திப்பால்
> மெருகல் நீர் [illegible] வல்லாரை வேங்கைப்பால்
> முருகன்பால் [illegible] யோடு முப்பூவே

என்று கூறியுள்ளார்.

வல்லார், அல்லார், நல்லார், கல்லார், எல்லோருக்கும் நல்லது வல்லாரை. (257)

[illegible] (258)

பசித்தால் புசி. [illegible]ப் புசியாதே. (259)

கடவுள் கோயிலைக்காணக் கடவுள் குணங்களைக் கடைப் பிடிக்கவேண்டும்; கடவுள் ஞானம் அழியா ஒளி, கடவுள் சக்தி எங்கெங்கும் கலந்தும் கலவாக் கவின்; கடவுள் வலிமை யாவற்றையும் தாங்குவது (260)

கட்டில்லாதவன், கட்டுகளை எல்லாம் கற்பிப்பவன்; அசைவில்லாமல் யாவையும் அசைப்பால்; மாறுதலூடு மாறான்; அழிவூடே அழியான்; கர்த்தா, எனினும் கர்த்தத்வ மற்ற ஸகஜன்; தர்ம கர்மங்களுக்கு அப்பாற்பட்டவன்; நிர்த்தன், நிர்த்தமற்ற நிமலன்; ஆனந்தன், சத்யன்-கடவுள். (261)

வேண்டல் வேண்டாமையில்; வேண்டினார் வேண்டிய் வேண்டாலாவான்; பசிதாகங்கள் மரணத்திற்கு விதிகள்; வேண்டுதலற்று வாழ்வுக்கு விளக்காய் வாழ்பவன் குடும்பன். (262)

வாழ்வான், வாழ்விப்பான், வாழ்விலார் வாழ வேண்டி வாழ்வாக வாழ்வான்; வாழ்வென்பது வாசியின் வீறு; வாழ்வது கடவுள் வாழ்வு. இப்படி 'வாழ்வாங்கு வாழ்ப'வனுக்கு வானமே கூரை, மண்ணே தரை. இத்தகைய வாழ்விற்கு வகையைச் சொல்லுகிறேன்-இதுவே இல்லறச் சேம நிதி. (263)

(264-271) இல்லறத்தானுக்கேற்ற பூசை முறைகளைச் சொல்லுகிறார். பொன் தகட்டின் நடுவில் வட்டம் சுழித்து, அதன் கீழ்ப் பிறையிட்டு, இவற்றைச் சுற்றி 6 அங்குல அளவில் 66 கோணச் சக்கரம் கீறி, அரை அங்குலச் சூலங்கள் நாட்டி, அம்பிகையின் ஏகாட்சரத்தால் எழுத்தாணி பூஜை செய்யவேண்டும்.

எழுத்தாணிபூஜையாவது-இளநீர் ஒன்றைத் தோலுங் குடுமியும் நீக்கி, துளையிட்டு, எழுத்தாணியை நட்டு, இளநீரால் கழுவி, மங்கல மனையாள் தூபம் காட்ட எடுத்து வைத்துக்கொண்டு, மேற்சொன்ன சக்கரத்தில், மந்திரங்களை எழுதினால், யந்திரம் சேதனமாகும். (265)

சிவவிஷ்ணு மந்திரங்களை முன் பின்னாய், இட வலமாய், மாற்றி மாற்றிப் போட்டு, கோணக் கூடங்களிலெல்லாம் வாலையின் மந்திரத்தை எழுதி அம்பிகையைப் பூஜிக்க அனைத்தும் சித்தியாகும் (266).

தேவி லலிதாம்பிகையின் த்ரிசதி (300) யையும், ஸகஸ்ர நாமத்தையும் (1000) கூறிப் பூஜிக்க பாக்யம், யோக்கியம், ஸ்லாக்கியம் யாவும் பெருகும், பாவங்கள் போகும், கிட்டாதும் கிட்டும்; உண்மை (267).

மனைவியிடம் உண்மை, [illegible] இன்சொல், கற வாழ்க்கை, யாவருக்கும் உபகாரம் இக்குணங்களுடன் அம்பிகையைப் பூஜிப்பாருக்கு ஆபத்[illegible] கிடையாது (268)

கோணங்களின் முனைகளில் நாட்டியுள்ள சூலங்களில் ஓம் நமசிவாய என்னும் ஆறெழுத்துக்களை மாறி, அறுபத்தாறு கோணங்களிலும் வெவ்வேறுக மாலின் அஷ்டாட்சரம், ஷண்முகனின் ஷடாட்சரம், பசுபதியின் பஞ்சாட்சரம், கணபதியின் சதுராட்சரம், சோமதியின் ரிங், உங், லங், வங் பீஜங்கள், லக்ஷ்மிக்கு ஓம் பீஜம் என மாறிப் பூஜை செய்யும் இல்லறத்தான் என்றும் நல்லநந்து நல்வாழ்வு வாழ்வான் (269-270)

மேற்படி சக்கரத்துக்கு மூன்று வரிகளாய்ப் பூபுரமென்னும் கோட்டை யிட்டு, கோட்டையின் எட்டுக்கோணங்களிலும் காயித்ரி, சாவித்ரி, ஸரஸ்வதி என்னும் தேவிகளைக் காவலிட்டுப் போற்றினல் அம்பிகை கேட்ட வரமெல்லாம் தருவாள்; கூடாத பலன்களை யெல்லாம் கூட்டுவிப்பாள்(271)

மந்திர வைப்பு

(272-356) ஓங்கார மூலத்திலிருந்து, உச்சிஷ்டம் வரை உள்ள ஸகல மந்திரங்களையும் இப்பகுதி வரிசையிட்டுக் கூறுகிறது. காயித்ரி, அஜபா காயித்ரி என்பவை முக்யத்வம் பெறுகின்றன. லய யோக மார்க்கம் முழுவதும் விளக்கமுறுகின்றன; இடையில்-305-327 வாலாம்பிகையின் மகிமையும் ரூப பேதங்களும், மந்திரங்களும் கூறப்படுகின்றன. 328 முதல் 334 வரை மாத்ருகா கண மந்திரங்கள், அப்பால் யோக நெறி மந்திரங்கள்; 343 முதல் முடிவு வரை ரகஸ்யத்திலெல்லாம் ரகஸியமான சித்த நிறைவாம் சித்தயோக மந்திர தந்திரங்கள் இடம் பெறுகின்றன. இம் மந்திரங்களில் அநேகம் குரு முகமானவை. இவற்றின் வரிசைகள் கூறும் பாடல்கள் எளிதானவை; எனவே, தனியே குறிப்புரைகள் எழுதப்படவில்லை.

சித்த வைப்பு

(357-390) இதில் பொதுவாகச் சித்தர்கள், அவர்களது ரஸவாதம் முதலியவற்றையும், சிறப்பாக வேதவிளக்கமும், நம் சித்தரின் சில தற்சிறப்பு செய்திகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

வேதத்தின் சாரத்தைச் சாற்றுகிறேன்; குருவைப் போற்றுகிறேன்; நித்திய ஜோதி தீபத்தை ஏற்றுகிறேன்; போக்கு வரவற்ற ஞானத்தைப் போற்றுகிறேன்; வாலாம்பிகையின் பாதமாய் போதத்தைக் கொண்ட சித்தர்கள், பாதத்தை வணங்கி, வேதம் பொருந்திய வாக்கத்தையும், சாந்தமயமான மெய்ஞ்ஞான ஞானத்தையும் போதிக்கிறேன் (357)

உள்ளங்கை நெல்லி போல, கண்டமைந்த உண்மையான உள்ளறையில் செய்யும் உமையவளைப் பூஜையைச் செப்புகிறேன். (358)

எட்டிக்கொட்டையிலிருந்து தைலம் வடித்து, அதன் எடைக்கு எடை எட்டி வேரும் உள்ளிப்பூண்டும் சேர்த்து, திருகுக்கள்ளிச் சாற்றால் அரைத்து, வராகனெடைத் துருசு கூட்டி, கெட்டிப்படும்படி கால் பலம் ரசகற்பூரம் கலந்து, அனுபானத்தின்படி மலையிலிருந்து விழும் அருவியைப்போல வடியும் தைலத்தை வாங்கிக்கொண்டு, நிழலில் உலர்த்தி, அப்புறம் ஆறுபடி பூநீரும், வௌவாலின் புழுக்கையும், குக்குடத்தின் மலமும், நாகக்கூடத்தில் நெளியும் நீர்ப்புழுக்கை மலமும் கூட்டி, சுண்ணும்புக் கவசமிட்டு துருசுமத்தியில் வைத்துக் குழியில் மூடி நாற்பத்தைந்து நாட்கள் சென்றபிறகு, தூயதொரு நல்ல நாளில் தீபமிட்டு இளக்க, அந்த வத்தி வழியாகக் காடி வழிந்துபோகக் கட்டியான துருசு சுத்தமாக, அத்துரிசை எடுத்துக்கொண்டு ஏழு முறை இலுப்பையிலைச் சாற்றுலே ஆட்டியாட்டி, ஏழுமுறை சிவன் வேம்புக் கவசமிட்டு, ஏழு முறைப் புடம்போட்டால் அடடாடா! தகத்தகமாய்த் தங்கம் பொங்கும்; அப்பால் குருபூசை செய்ய ரஸம் விரைத்துக் காந்தமணியாகும்; இது செப்படி வித்தையல்ல! தெய்விகமான வாதவித்தை (359-362)

வாதவழி தேடுவதில் பயனில்லை; வேதவழி நாடினுல் வாதம் சித்தி; ஆண்டிகள் பொருள் பறிக்க ஏதேதோ பேத வழிகளைக் கூறிச் சென்றனர்; வேதச்சாதனையே ஒருவனை வின்னவனுக்கும்; உலையும் ஒஷதிகளும் ஊதுவதும் பயனில்லை; உள் உள்ள உலையாம் உலையை அறிந்தவர்க்கே அமைதி கிட்டும்; வேத நெறிப்படி குருவின்பாதம் பணிந்து போதம் பெற்றுல் பேதவழிகள் சாகும்; நாத நெறி நாதரின் வேதை உருவாகும்; (363-366).

பித்தம் தலைக்கேறுமல், பீழை சிலேஷ்மம் ஆகாமல், வாதம் மாறி வாசியாய்ச் சுத்தமுற்று யோகஞான உத்தமருக்கே இதை உரைக்கின்றேன். தவமறியா காம உன்மத்தருக்கல்ல ; படித்த முட்டாள்களுக்கும் அல்ல ; பொய் நீங்கி, மெய் ஓங்கி யாவரும் உய்ய வேண்டும் என்றே இந்நூலைச் செப்புகின்றேன். (367,368)

அறமாம் விஞ்ஞானத்தையும், திறமாமாம் தெய்வத்திருவையும் அறியச் சொல்லுகிறேன், தெரியப் புரிந்து கொள்ளுவீர், என்று துவங்கி குருவருளால் ஊசிமுனை வாசல் திறப்பதும், தேசொளியில் தேவி வரந் தருவதும், நனவைக் கனவென்றும், கனவை நனவென்றும், நினைவை நினையாத நினைவாக்கி, நினைவற்ற சித்தத்தின் சிறப்பையும், கல்லாலின் கீழ் தக்கணுமூர்த்தி காட்டிய குறியை கருவை வில்லைக்கொண்டு சித்தினியாம் வாலைகாட்டும் சேகரத்தையும், பித்தம் நீக்கும் சித்தத்தின் சேர்க்கையையும், சிக்கும் போக்கே சிவன் போக்கு என்பதையும், வந்தனை வழிபாடுகளின் முடிவு, சிந்தனைச் சுழிமுனையேறித் தெளியும் முக்கண் நிலையையும் கூறுகிறார். (369-374)

நிந்தனை நீங்க நிறைமதி யோங்க, எந்தனைப் படைத்த ஈசனே இதனையும் எழுதுவிக்கிறான்; திருமூலரும்:—

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்றுள்ளார்; (375)

எவ்விடத்திலும் சென்று இழிவு தேடும் வெறும் ஈயாகாமல், செவ்விடமான சித்தத்தில் சென்றாதுட் தேனீயாவதே ஞானசித்தி. (376)

குருவின் துணை கொடிய விடத்தையும் நீக்கும் (377)

பிந்து நாதஜோதி கலைகளை மூலசக்தி குண்டலினியோடு ஆறு கஜோதிகளைக் கலந்து, மந்திர ரூபஜோதியில் பைந்தவ ராஜஸ வேதையாக வாலைப் பிரசாதம் பெற்ற சிந்துராதி சித்தவிலாசத்தைத் திருப்புகழாகப் பாடுகிறது இப்பாடல் (378)

இதுவும் வாலாம்பிகையின் பெருமையே; ரகசியமான கருநொச்சிக் கவசத்தின் கருவச்சியைக் காட்டுகிறது (379)

காமத்தை வெறு; கலகத்தை வெட்டு; கருநொச்சிக் கவசத்தில் காமினியைக் கட்டு; ஊமைச்சி அவள் அத்தை (மவுனத்தாய்) உலகோர்க்கு நத்தை அவள். (யோகத்தின் மெதுவான போக்கு) உரையெல்லாம் மித்தை; உண்மையில் அவள்தான் வித்தை; ஜாமத்தைக் காண், சர்மத்தை வெல்; சத்தியத்தில் நில், வாமத்தி அருள்வாள்; மண்ணெல்லாம் பொன்னும். (380)

மூலக்கனலை மூட்டி, மூதண்ட முப்பூவின் பாத்திரத்தில் கீழ்நெல்லிச் சாற்றைக் காய்ச்சி, சூதத்தில் நாதம் வாங்கி, நீர்மேல் நெருப்பைப் போட்டு, மலை தாங்கிக்குள்ளே ஒட்டி, ஆலம் விழுதின் அமுதத்தை நாட்டி ஆதார அறுகோணத்துக்கும் மேற்சென்று பிரும்மதண்டி, ஊமத்தங்காய், இவற்றின் வளங்கண்டு, விந்துவெல்லும் ஜெயநீரால் தேவிக்கு அபிஷேகம் செய்து சதுரக்கள்ளியைக் கண்டு, முக்கோணப் புளியங்காயை உண்டு தவத்தழல் ஏற்றிப் புடம்போட, வெப்பந்திரும், வினைபோகும்; சஹஸ்ராரத்தில் நவகோடி லிங்கங்கள் தோன்றும்; அந்த லிங்கங்களின் மேல் என் அன்னை பராசக்தி நடனமாடுகின்றாள்; துப்பு சுத்தி, துரிசுசுத்தி கப்பும் கவிப்பும் நீங்கும்; காமதேனு காயத்ரி யென்னும் பாலைக் கறந்து, கருதினதெல்லாம் கைவசம் செய்யும் அந்த உச்சமான கைலாசத்திலே சொக்கலிங்கம் தொக்கி நிற்கிறது; போகரஸப் பேட்டையில் பெண்ணோடு சம்போகம் செய்து புண்ணாகாமல், யோகரஸப்பேட்டையில் உயிரோடு சையோகம் செய்து, ஏகரஸப்பேட்டையில் எந்தாயான அம்பிகையின் இன்ப ரஸக் கோட்டையில் புகுந்து, நாகரஸப் பேட்டையில் நான் கண்டு உய்ந்த ஞான ரஸக் கோட்டை

எட்டிக்கொட்டையிலிருந்து தைலம் வடித்து, அதன் எடைக்கு எடை எட்டி வேரும் உள்ளிப்பூண்டும் சேர்த்து, திருகுக்கள்ளிச் சாற்றால் அரைத்து, வராகனெடைத் துருசு கூட்டி, கெட்டிப்படும்படி கால் பலம் ரசகற்பூரம் கலந்து, அனுபானத்தின்படி மலையிலிருந்து விழும் அருவியைப்போல வடியும் தைலத்தை வாங்கிக்கொண்டு, நிழலில் உலர்த்தி, அப்புறம் ஆறுபடி பூநீரும், வெளவாலின் புழுக்கையும், குக்குடத்தின் மலமும், நாகக்கூடத்தில் நெளியும் நீர்ப்புழுக்கை மலமும் கூட்டி, சுண்ணாம்புக் கவசமிட்டு துருசுமத்தியில் வைத்துக் குழியில் மூடி நாற்பத்தைந்து நாட்கள் சென்றபிறகு, தூயதொரு நல்ல நாளில் தீபமிட்டு இளக்க, அந்த வத்தி வழியாகக் காடி வழிந்துபோகக் கட்டியான துருசு சுத்தமாக, அத்துரிசை எடுத்துக்கொண்டு ஏழு முறை இலுப்பையிலைச் சாற்றாலே ஆட்டியாட்டி, ஏழுமுறை சிவன் வேம்புக் கவசமிட்டு, ஏழு முறைப் புடம்போட்டால் அடடாடா! தகத்தகமாய்த் தங்கம் பொங்கும்; அப்பால் குருபூசை செய்ய ரசம் விரைத்துக் காந்தமணியாகும்; இது செப்படி வித்தையல்ல! தெய்விகமான வாதவித்தை (359-362)

வாதவழி தேடுவதில் பயனில்லை; வேதவழி நாடினால் வாதம் சித்தி; ஆண்டிகள் பொருள் பறிக்க ஏதேதோ பேத வழிகளைக் கூறிச் சென்றனர்; வேதச்சாதனையே ஒருவனை விண்ணவனாக்கும்; உலையும் ஔஷதிகளும் ஊதுவதும் பயனில்லை; உள் உள்ள உலையாம் உலையை அறிந்தவர்க்கே அமைதி கிட்டும்; வேத நெறிப்படி குருவின்பாதம் பணிந்து போதம் பெற்றால் பேதவழிகள் சாகும்; நாத நெறி நாதரின் வேதை உருவாகும்; (363-366).

பித்தம் தலைக்கேறாமல், பீழை சிலேஷ்மம் ஆகாமல், வாதம் மாறி வாசியாய்ச் சுத்தமுற்று யோகஞான உத்தமருக்கே இதை உரைக்கின்றேன். தவமறியா காம உன்மத்தருக்கல்ல; படித்த முட்டாள்களுக்கும் அல்ல; பொய் நீங்கி, மெய் ஓங்கி யாவரும் உய்ய வேண்டும் என்றே இந்நூலைச் செப்புகின்றேன். (367,368)

அறமாம் விஞ்ஞானத்தையும், திறமாமாம் தெய்வத்திருவையும் அறியச் சொல்லுகிறேன், தெரியப் புரிந்து கொள்ளுவீர், என்று துவங்கி குருவருளால் ஊசிமுனை வாசல் திறப்பதும், தேசொளியில் தேவி வரந் தருவதும், நனவைக் கனவென்றும், கனவை நனவென்றும், நினைவை நினையாத நினைவாக்கி, நினைவற்ற சித்தத்தின் சிறப்பையும், கல்லாலின் கீழ் தக்கணாமூர்த்தி காட்டிய குறியை சுழுனை வில்லைக் கொண்டு சித்தினியாம் வாலைகாட்டும் சேகரத்தையும், பித்தம் நீக்கும் சித்தத்தின் சேர்க்கையையும், சிக்கும் போக்கே சிவன் போககு என்பதையும், வந்தனை வழிபாடுகளின் முடிவு, சிந்தனைச் சுழிமுனையேறுந் தெளியும் முக்கண் நிலையையும் கூறுகிறார். (369-374)

நிந்தனை நீங்க நிறைமதி யோங்க, எந்தனைப் படைத்த ஈசனே இதனையும் எழுதுவிக்கிறான்; திருமூலரும்:—

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்றுள்ளார்; (375)

எவ்விடத்திலும் சென்று இழிவு தேடும் வெறும் ஈயாகாமல், செவ்விடமான சித்தத்தில் சென்றூதும் தேனீயாவதே ஞானசித்தி. (376)

குருவின் துணை கொடிய விடத்தையும் நீக்கும் (377)

பிந்து நாதனாதி கலைகளை மூலகு[illegible]தி குண்டலினியோடு ஆறு கணாதிகளைக் கலந்து, மந்திர ரூபஜோதியில் பைந்தவ ராஜஸ வேதையாக வாலைப் பிரசாதம் பெற்ற சிந்துராதி சித்தவிலாசத்தைத் திருப்புகழாகப் பாடுகிறது இப்பாடல் (378)

இதுவும் வாலாம்பிகையின் பெருமையே; ரகசியமான கருநொச்சிக் கவசத்தின் கருவச்சியைக் காட்டுகிறது (379)

காமத்தை வெறு; கலகத்தை வெட்டு; கருநொச்சிக் கவசத்தில் காமினியைக் கட்டு; ஊமைச்சி அவள் அத்தை (மவுனத்தாய்) உலகோர்க்கு நத்தை அவள். (யோகத்தின் மெதுவான போக்கு) உரையெல்லாம் மித்தை; உண்மையில் அவள்தான் வித்தை; ஜாமத்தைக் காண், சர்மத்தை வெல்; சத்தியத்தில் நில், வாமத்தி அருள்வாள்; மண்ணெல்லாம் பொன்னாம். (380)

மூலக்கனலை மூட்டி, மூதண்ட முப்பூவின் பாத்திரத்தில் கீழ்நெல்லிச் சாற்றைக் காய்ச்சி, சூதத்தில் நாதம் வாங்கி, நீர்மேல் நெருப்பைப் போட்டு, மலை தாங்கிக்குள்ளே ஒட்டி, ஆலம் விழுதின் அமுதத்தை நாட்டி ஆதார அறுகோணத்துக்கும் மேற்சென்று பிரும்மதண்டி, ஊமத்தங்காய், இவற்றின் வளங்கண்டு, விந்துவெல்லும் ஜெயநீரால் தேவிக்கு அபிஷேகம் செய்து சதுரக்கள்ளியைக் கண்டு, முக்கோணப் புளியங்காயை உண்டு தவத்தழல் ஏற்றிப் புடம்போட, வெப்பந்திரும், வினைபோகும்; சஹஸ்ராரத்தில் நவகோடி லிங்கங்கள் தோன்றும்; அந்த லிங்கங்களின் மேல் என் அன்னை பராசக்தி நடனமாடுகின்றாள்; துப்பு சுத்தி, துரிசுசுத்தி கப்பும் கவிப்பும் நீங்கும்; காமதேனு காயத்ரி யென்னும் பாலைக் கறந்து, கருதினதெல்லாம் கைவசம் செய்யும் அந்த உச்சமான கைலாசத்திலே சொக்கலிங்கம் தொக்கி நிற்கிறது; போகரஸப் பேட்டையில் பெண்ணோடு சம்போகம் செய்து புண்ணாகாமல், யோகரஸப்பேட்டையில் உயிரோடு சையோகம் செய்து, ஏகரஸப் பேட்டையில் எந்தாயான அம்பிகையின் இன்ப ரஸக் கோட்டையில் புகுந்து, நாகரஸம் பேட்டையில் நான் கண்டு உய்ந்த ஞான ரஸக் கோட்டை

யிலே நிலை நாட்டுகின்றேன் என்று நம் சித்தர் தமது சித்த நெறியைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்; மூலக் கனல்-மூலாதாரத். தீ; முதண்டம்-மும்மண்டலம், கீழ் நெல்லி-சுக்ரம்; சூதத்தில் நாதம்-கற்பூரவித்தை (கற்பூராதி தோத்திரம் காண்க) நீர்மேல் நெருப்பு-ஒரு பூண்டு. நீர்மேல்பட்டால் புகையும், ஈண்டு ஸ்வாதிட்டத்தின் மேல் மணிபூரம்; மலை தாங்கி-விசுத்தி; ஆல்த்தான் விழுது-பிடரிக்கண்; அமுது-மதியமிர்தம், அறுகோணம்-ஆறு ஆதாரம்; பிரும்மதண்டி-முதுகந்தண்டு; ஊமத்தங்காய்-அந்தக்கரணச் செறிவு, பிந்து ஜெயநீர்-காமகுண்ட ரஸம்; சதுரக்கள்ளி-சதுஷ்பதம்; முக்கோணப் புளியங்காய்-த்ரிகூடம்; நவசோடி லிங்கம்-சஹஸ்ராரப் பிறை முனைகள்; துப்பு துரிசு-சஹஸ்ராரக் கருமையும் பழுமையும்; காமதேனு-மதிப்பிறை மடி; காயத்ரி கனிவாம் க்ஷீரம்-சந்த்யாவந்தன சஹஜானுபவம்; அவற்றின் மேல் ஆடுகின்முள் அன்னை அன்னை-சஹஸ்ராரத்தில் அதிஷ்டான உச்சம்; கைலாசச் சொக்கலிங்கம்-கேவல சிவம்; நாகரஸம் பேட்டை-நம் சித்தரின் சொந்த ஊர், குண்டலினி நாகத்தின் ரஸம் நிறைந்த நாகரஸக் கோட்டை. (381-384)

சேஷன், ஆதிசேடன், மிச்சன் யாவும் இறந்தும் இறவாது எஞ்சியிருக்கும் அகண்டாகார குண்டலினி, பிண்டத்தில் சுழுனை, சித்தன் யாவற்றையும் தாண்டி சேஷனிலே நிற்கிறான்; இவ்வித்தைக்குக் குரு கணேசன்; பட்டினத்தாரும்,

> ஐங்கரனைத் தெண்டனிட்டேன் அருளடைய வேண்டுமென்று
> துங்காமல் வந்தொருவன் தத்சொருபங் காட்டியெனை
> கொள்ளைப் பிறப்பறுக்கக் கொண்டான் குருவடிவம்
> கள்ளப் புலன் அறுக்கக் காரணமாய் வந்தாண்டி

என்று கணேசரது குருத்துவத்தைப் போற்றுகிறார். அவ்வாறே நம் சித்தரும் சேஷகணேசபுரத்தில் சித்தருளைத் திரட்டுகிறார். (385)

பஞ்ச சாரம், பஞ்ச ஆஜம், பஞ்ச கவ்யம், பஞ்ச மேதி' பஞ்ச அம்பலம், பஞ்சமித்திரம், பஞ்சம்ருத்தை, பஞ்ச அன்னம், பஞ்ச அக்கம், பஞ்ச பூதம், பஞ்ச மூத்திரம், பஞ்சரத்தினம், பஞ்சகாரம், பஞ்ச லவணம், பஞ்ச லோகம், பஞ்ச ச்ருங்கம், பஞ்ச ஆயம், பஞ்ச கந்தம், பஞ்ச காந்தம், பஞ்ச அக்னி, பஞ்ச அம்ருதம் என பஞ்சமெல்லாம் பஞ்சகங்கை சாரம் செய்த திருச்சேறையாம் சித்தவைப்பு க்ஷேத்திரத்தைக் குறிக்கிறார். இத்தலத்தில் தெய்வமும் தேவியும், தீர்த்தமும் விமானமும் எல்லாம் சாரம் தான். இங்கே பல சாரங்களின் கோப்பான குரு சாரத்தையும், [illegible] சாரத்தையும் [illegible] சித்தர் கூறுகிறார். அவ்வாறு நவசார உடலை கற்பூர திவ்யமாய் கூரைக் கோட்டைக்குள் காயக்ரோதாதி [illegible]

சிவயோகச் சித்தநிலையில் விரமாகி வெறும் வித்துப்பூவை வேதாந்த மூப்பூவாக்கி, விண்ணூறிய தீபமேற்றி, அண்டாண்ட அகிலாண்டங்களையெல்லாம் காரை போன்று கழுத்திலணியும் சித்தராய், காரைக்கோட்டையில் தான் சஞ்சரித்த வரலாற்றைச் சித்தர் குறிப்பிடுகின்றார். (384-388)

387-ம் பாட்டில் வரும் பஞ்சகங்களாவன: பஞ்ச சாரம் அல்லது க்ஷாரம்-பலாச, முஷ்கக, யவ, ஸர்ஜ, தில க்ஷாரங்கள்; பஞ்சாஜம், பஞ்ச கவ்யம், பஞ்ச மேதி-முறையே ஆடு, பசு, எருமை; இவற்றின் பால், தயிர், நெய், சிறுநீர், சாணம்; பஞ்சாம்லம்-இலந்தை, மாதுளை, புளி, கொம்மட்டி மாதுளை; பஞ்ச மித்ரம்-தேன், நெய், குன்றுமணி, வெங்காரம், குக்குலியம்; பஞ்ச ம்ருத்தை-செங்கல், காவிக்கல், உப்பு மண், சாம்பல், புற்றுமண்; பஞ்ச மூத்ரம்-பசு, வெள்ளாடு, செம்மறியாடு, எருமை, கழுதை இவற்றின் மூத்திரங்கள்; பஞ்சரத்னம்-பத்மராகம், இந்திர நீலம், மரகதம், புஷ்பராகம், வஜ்ரம்; பஞ்சலவணம்-ஸௌவர்ச்சம், ஸைந்தவம், விடாசலம், ஔத்பிதம், ஸாமுத்ரம; பஞ்ச லோகம் - வெண்கலம், தாமிரம், பித்தளை, அயம், நாகம்; பஞ்சான்னம், பஞ்ச பூதம், பஞ்சாக்ஷம், பஞ்சாயம், பஞ்ச காந்தம், பஞ்சாம்ருதம்-இவற்றை முன்பே கூறியுள்ளோம்.

பக்தன், சித்தன், பரமயோகி, பார் பிழைக்க வேண்டுமென்றே இந்நூலைப் பகருகின்றேன்; நான் பித்தன்; பித்தியான வாலையின் சித்தத்திலே நின்று பிதற்றுகின்றேன். நான் வித்தன்; வேதாந்த வித்தையை விரிவாகச் சொல்லுகிறேன்; இத்தரையில் இதைப்போல நூலில்லை; இதைக் கண்டவர் யாவும் கண்டார்; (389)

இப்பாடல் சித்தரது சில உறவுகளைத் தெரிவிக்கிறது: ராஜமன்னார் க்ஷேத்திரத்தில் வந்தேன்; ரங்கெண்ண-(ரம்-அக்கினி) ஞானப் பேரொளி, கமலினி ஜோதி, ரங்கெண்ண மாயையாகிய இருளைப் போக்க வந்தேன்; ராஜகோபாலன் செல்வம் தந்தான்; ராமநாதன் வித்தை தந்தான்; ராஜலக்ஷ்மி வளர்த்தாள்; ராகவன் என்பேர்; அது மாறிக் காரைச் சித்தனானேன்; ரஸவாதமும் யோகமும் கலந்த ரம்யமான இந்தக் கனக வைப்பைச் சொல்லுகிறேன். (390)

—·—